# கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா

# சிறப்பு மலர்



பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்

**2017**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா

# 2017

## சிறப்பு மலர்

வெளியீடு

**பண்பாட்டலுவல்கள் திணைக்களம்**

**கிழக்கு மாகாணம்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா- 2017
## சிறப்பு மலர்

**ஆலோசனை:**

கௌரவ சி. தண்டாயுதபாணி, அமைச்சர், கல்வி அமைச்சு, கிழக்கு மாகாணம்
திரு. ஜே.எஸ்.டி.எம்.அசங்க அபேவர்தன, செயலாளர், கல்வி அமைச்சு

**ஒழுங்கமைப்பும் நெறியாள்கையும் :**

திருமதி சிவப்பிரியா வில்வரத்னம், மாகாணப் பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

**விழாக்குழு**

திரு. கே.லவநாதன் (பிரதேச செயலாளர், கல்முனை தமிழ்)
திரு. மொஹமட் கனி (பிரதேச செயலாளர், கல்முனை முஸ்லிம்)
திரு. உமா வரதராஜன்
ஜனாப் சோலைக்கிளி அதீக்
திரு. எஸ்.அரசரெத்தினம்
திருமதி. ரீ.கே.பத்திரண (உதவி கல்வி பணிப்பாளர்)
திரு. வீ. பிரபாகரன் (அதிபர், உவெஸ்லி உயர்தர கல்லூரி, கல்முனை)
திரு.எஸ்.பேரின்பராஜா
திரு. கே. வரதராஜன் (உதவி கல்வி பணிப்பாளர்)

**மலர்க்குழு**

திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் (மாகாணப் பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம்)
திரு. வி. குணபாலா (சிரேஸ்ட கலாசார உத்தியோகத்தர்)
திருமதி. ம. சத்தியபாமா (சிரேஸ்ட கலாசார உத்தியோகத்தர்)
திரு. வி. கோணேஸ்வரன் (கலாசார உத்தியோகத்தர்)
திருமதி. தர்ப்பணா ஜெயமாறன் (கலாசார உத்தியோகத்தர்)
செல்வி. மா. கம்ஷாயினி

# பொருளடக்கம்


- ஆசிச் செய்திகள்
- பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் செயற்பாடுகள் 2016 ஆண்டை மையப்படுத்திய பார்வை
- வித்தகர் விருது - 2017
- சிறந்த தமிழ் இலக்கிய நூல் விருது - 2017
- இளங்கலைஞர் பாராட்டு - 2017
- அரச உத்தியோகத்தர்களுக்கான படைப்பாக்கப் போட்டி முடிவுகள் - 2017
- வித்தகர் விருது தேர்வுக்கான நடுவர்கள்
- சிறந்த தமிழ் இலக்கிய நூல் தேர்வுக்கான நடுவர்கள்
- கடந்த வருட இலக்கிய விழா நிகழ்வின் நிழல்கள்
- ஆய்வரங்கம் ஆய்வாளர்கள் விபரம் ஆய்வுச் சுருக்கம்
- கவியரங்கம்
- சிறப்பு கட்டுரைகள்
- மாகாண தமிழ் இலக்கிய விழா - 2017 அழைப்பிதழ்கள்
- அரங்கப் பெயர்கள்
- கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா - 2017 சிங்கள மொழி, ஆங்கில மொழிச்சுருக்கம்
- நன்றி நவில்கின்றோம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிழக்கு மாகாண கௌரவ ஆளுநரின் வாழ்த்துச்செய்தி

*"எமது பாரம்பரிய பண்பாடுகளை மேம்படுத்தி எமது இளைய சந்ததியினருக்கு கையளிக்க வேண்டியது எமது பொறுப்பு"*

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வருடாந்தம் முன்னெடுக்கும் தமிழ் இலக்கிய விழாவில் வெளியிடப்படும் சிறப்பு மலர்கள் கலை இலக்கிய துறைசார் திணைக்களத்தின் செயற்பாடுகளில் முக்கிய அங்கம் வகிக்கின்றது. அவ்வகையில் 2017 ஆம் ஆண்டில் அம்பாறை மாவட்டத்தில் இடம்பெறும் தமிழ் இலக்கிய விழாவில் வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு எனது உளப்பூர்வமான இதயம் கனிந்த நல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் கிழக்கு மாகாண ஆளுநர் என்ற ரீதியில் மிகவும் பெருமை அடைகின்றேன்.

இலங்கை வாழ் மக்களிடையே இன ஐக்கியம், புரிந்துணர்வு, இணக்கப்பாடுகள் காணப்படுவது மாத்திரமன்றி நமது பாரம்பரிய பண்பாடுகளை மறந்து விடாது அவற்றை மேம்படுத்தி எமது இளைய சந்ததியினருக்கு கையளிக்க வேண்டியது எமது பாரிய பொறுப்பாக உள்ளதெனக் குறிப்பிடலாம். தற்கால நவநாகரீக தன்மையினால் பாரம்பரியம், பண்பாடுகள் சீர்குலைந்து செல்வதை நாம் அவதானிக்க கூடியதாக உள்ளது. இதனால் சமுதாயம் பல சீர்கேடுகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. எனவே இவ்வாறான இலக்கிய விழாக்கள் இவற்றிற்கு நிவாரணம் வழங்கும் விழாவாக காணப்படும் என நம்புகின்றேன்.

பன்மைத்துவ கலாசார பெறுமதிகளை கொண்டுள்ள கிழக்கு மாகாணத்தின் தனித்துவ கலை இலக்கிய அம்சங்களை கொண்டதாக இவ்விழாவோடு தொடர்புடையதாக நடாத்தப்படும் ஆய்வரங்கு, சிறந்த இலக்கியத்துக்கான பரிசு வழங்கல், சிறந்த கலை இலக்கிய படைப்பாளர்களுக்கு விருது வழங்கல் மற்றும் கலை நிகழ்ச்சிகள் போன்ற விடயங்கள் கலை இலக்கியத்தின் புத்தெழுச்சிக்கும், புதுமை மிக்க கலை இலக்கிய படைப்பிற்கும் வித்தாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இவ் விழாவை முன்னெடுத்து நடாத்துகின்ற பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர், கலாசார அலுவலகர்கள், கலைஞர்கள், இலக்கியவாதிகள் மற்றும் அனைவருக்கும் எனது வாழ்த்தினை தெரிவித்து கொள்கின்றேன்.

**கௌரவ ரோஹித்த போகொல்லாகம**
ஆளுநர், கிழக்கு மாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிழக்கு மாகாண கௌரவ முதலமைச்சரின் வாழ்த்துச்செய்தி

*"தமிழ்மொழியை வளர்ப்பதற்கு தம்மை அர்ப்பணித்த இலக்கியவாதிகள் பலரை ஈன்றெடுத்த நற்பதி கிழக்கு மாகாணம்"*

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் தமிழ் இலக்கிய விழா – 2017 மலருக்கான வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மேலும் இவ்விழாவானது இம்முறை கல்முனை நகரில் நடைபெறுவது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.

தமிழ் இலக்கியமானது, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேல், பழைமை வாய்ந்த இலக்கியங்களில் ஒன்றாகும். இலக்கியங்கள் எமது வாழ்க்கையின் சமூகம், சமயம், கலாசாரம், பண்பாடு, தொழில், கலைகள் என்பனவற்றில் ஒன்றோடு ஒன்று இணைந்தவையாக காணப்படுகின்றன. இவ்வாறு பன்முகப்பட்ட பரிணாமங்களைத் தன்னகத்தே கொண்ட இலக்கியக் கலை ஒவ்வொரு காலகட்டத்திலும் பல வடிவங்களில் பரிணமித்து வளர்ச்சியுற்று வந்துள்ளது.

வள்ளுவன் தன்னை உலகிற்கீந்த வான்புகழ் கொண்ட மொழியாம் தமிழ் மொழி. இத்தகைய தமிழ்மொழியை வளர்ப்பதற்கு தம்மை அர்ப்பணித்த இலக்கியவாதிகள் பலரை ஈன்றெடுத்த நற்பதியாக கிழக்கு மாகாணம் திகழ்கின்றது. அவ்வகையில் சிறப்பு பெற்ற மொழியாக தமிழ் மொழி உயர்வடைந்தமைக்கு இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ சகோதரர் மகத்தான பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

தமிழ், முஸ்லிம் மக்கள் தமக்கென கொண்டுள்ள தனித்துவமான சமூக கலாசார விழுமியங்களையும், கலை இலக்கியப் பாரம்பரியங்களையும் வெளிக் கொண்டு வருவதற்கு இவ்விழா துணைபுரிவதோடு மனதிற்கு மகிழ்ச்சியையும் தருகின்றது.

வருடந்தோறும் வெளியிடப்படும் இந்நூல் வெளியீடானது மிகவும் பாராட்டத்தக்க ஒன்றாகும். இந்நிகழ்வு "இலை மறைகாய் போல்" இருக்கும் திறமைசாலிகளையும், அவர்களது அறிவு மற்றும் படைப்பாற்றல்களை வெளிக்கொண்டு வருவதற்கு பெரும் துணைபுரிகின்றது. மேலும் இவ்விழாவானது சிறப்பாக நடைபெற, அயராது உழைக்கும் திணைக்கள பணிப்பாளருக்கும், உத்தியோகத்தர்களுக்கும், தமது படைப்பாற்றல்களை வழங்கியவர்களுக்கும் இத்தருணத்தில் எனது உள்ளம் கனிந்த வாழ்த்தினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ நசீர் அஹமட்** (பொறியியலாளர்)
கிழக்கு மாகாண முதலமைச்சர்,



# கிழக்கு மாகாண கௌரவ கல்வி அமைச்சரின் வாழ்த்துச் செய்தி

*"இலக்கிய விழா எமது உயரிய பண்பாடுகளையும், மரபுகளையும் இளையோருக்கு எடுத்துச் சொல்வதற்கான ஒரு களம்"*

இவ்வாண்டு அம்பாறை மாவட்டத்தில் நடைபெறவுள்ள கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய நவீன உலகில் எமது பண்பாடுகளையும், பாரம்பரிய கலைகளையும் பாதுகாப்பது என்பது ஒரு சவாலாக அமைந்துள்ள போதும் கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்கள் தமது வழிவழியாக வந்த பாரம்பரியங்களையும், பண்பாட்டம்சங்களையும் பேணிப்பாதுகாப்பதுடன் அவற்றை வளர்ச்சிப் பாதைக்கு முன்னெடுத்து வருவதையும் நான் நன்கு அறிவேன். கலையும், இலக்கியமும் வெறும் இரசனைக்கும், பொழுது போக்கிற்கும் மட்டுமன்றி மனித மனங்களில் புதிய சிந்தனைகளையும், விழிப்புணர்வையும் தூண்டி சமூகத்தில் புதிய மாற்றங்களை ஏற்படுத்த உதவ வேண்டும். அப்போதுதான் கலையும், இலக்கியமும் உயிர் பெறும்.

பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கிழக்கு மாகாணத்தில் வாழும் பல்லின மக்களின் நல்விழுமியங்களையும், நல்லிணக்கத்தையும் நோக்காகக்கொண்டு தமிழ் மொழியிலும், சிங்கள மொழியிலும் இலக்கிய விழாக்களைப் பல வருடங்களாக நடாத்தி வருகின்றது.

இவ்வருட தமிழ் இலக்கிய விழாவில் கிழக்கு மாகாணத்திலுள்ள திறன்மிக்க கலை இலக்கிய படைப்பாளிகளுக்கு விருதுகள் வழங்கப்படுவதோடு, வளர்ந்து வரும் இளம் கலைஞர்களும் பாராட்டப் படவிருக்கினறனர். இவ்வாறான விழாக்கள் கலை இலக்கியப் படைப்பாளிகளை உற்சாகப்படுத்தி அவர்களது முயற்சிகளை மேம்படுத்தும் என்று நம்புகின்றேன். அத்தோடு எமது உயரிய பண்பாடுகளையும், மரபுகளையும் இளையோருக்கு எடுத்துச் சொல்வதற்கான ஒரு களமாகவும் அமைகின்றது.

இவ்விழாவின் ஏற்பாடுகளுக்கு உறுதுணையாக நின்று செயற்படுகின்ற பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்கள கலாசார உத்தியோகத்தர்கள், கலைஞர்கள், இலக்கியப் படைப்பாளர்கள் யாவருக்கும் எனது பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ சி.தண்டாயுதபாணி**
கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சர்
கிழக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிழக்கு மாகாண பிரதம செயலாளரின் வாழ்த்துச்செய்தி

*"பண்பாட்டு பாரம்பரிய அம்சங்களுக்கும் புத்துயிர் வழங்கும் நிகழ்வில் வெளிவரும் சிறப்பு மலர்"*

கிழக்கு மாகாணத்தின் பெருமை மிகு தமிழ் இலக்கிய விழா - 2017 அம்பாறை மாவட்டத்தில் கல்முனை பிரதேசத்தில் நடைபெறுவதனையிட்டு நான் பெருமிதம் அடைகின்றேன்.

காலத்திற்குக் காலம் இலக்கிய ஆர்வலர்கள், கலைஞர்கள் மற்றும் படைப்பாளிகளை ஊக்கப்படுத்தி கௌரவப்படுத்தும் விதத்தில் இந்நிகழ்வினை கலாசாரத் திணைக்களம் ஒருங்கிணைப்பது பாராட்டுக்குரிய செயற்பாடாகும்.

இலைமறை காயாக மறைந்து வாழும் கலைஞர் பெருமக்களை இனங்கண்டு அவர்களை வெளி உலகிற்கு அறிமுகப்படுத்தும் விதமாக பல்வேறு இயலுமைகளைக் கொண்ட உயர் தகைமை மிகு படைப்பாளிகளை உருவாக்குவதில் இத் திணைக்களம் அரும்பெரும் பணியாற்றுகின்றது.

தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்காய் தனித் தன்மையுடன் ஒவ்வொரு கலைக்கும் முன்னுரிமை வழங்கும் வகையில் அழிந்து போகும் கலைகளுக்கும், பண்பாட்டு பாரம்பரிய அம்சங்களுக்கும் புத்துயிர் வழங்கும் பெருமை மிக்க நிகழ்வில் இத்தகையதொரு சிறப்பு மலர் வெளிவருவது ஓர் அடையாளச் சின்னமாகும்.

இப் பெரும் பணி சிறப்புற வழிவகுக்கும் மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளரிற்கும், ஊழியர் அணிக்கும் மற்றும் அனைத்துக் கலைஞர் பெருமக்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன், இவ்விழா சிறப்புற்று அமைய எனது இனிய வாழ்த்துக்களையும் கூறி நிற்கின்றேன்.

**திரு. டி.எம்.எஸ்.அபயகுணவர்தன**
பிரதம செயலாளர்
கிழக்கு மாகாணம்.



# கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

*"கிழக்கு மாகாண மக்கள் தம் வாழ்வில் கலைக்கும் பண்பாட்டிற்கும் இலக்கிய செயற்பாட்டிற்கும் முக்கியத்துவம் வழங்கி வருகின்றனர்."*

இயற்கை எழில் மிக்க கிழக்கு மாகாணத்தில் இவ்வருடம் 2017 இல் நடைபெறவுள்ள கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா ஞாபகார்த்த நினைவு மலருக்கு கல்வி செயலாளர் என்ற வகையில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

மனித சிந்தனையை நல்வழிப்படுத்தவும், ஆளுமை மிக்க மனித வலுவை உருவாக்குவதிலும் கலையும் இலக்கியமும் பெரும் பங்கு வகிக்கின்றன. நீண்ட காலமாக கிழக்கு மாகாண மக்கள் தம் வாழ்வில் கலைக்கும் பண்பாட்டிற்கும் இலக்கிய செயற்பாட்டிற்கும் முக்கியத்துவம் வழங்கி வருகின்றனர். ஒரு நாட்டின் வரலாற்றை எடுத்துக் கூறுவது அந் நாட்டின் இலக்கியவாதிகளால் படைக்கப்படும் இலக்கியங்களும், கலைஞர்களால் ஆற்றப்படும் கலைகளுமே ஆகும். இவை காலத்தால் அழியாத பொக்கிஷங்கள் என்றால் மிகையாகாது. இவற்றை மேம்படுத்தவும், முன்னேற்ற பாதைக்கு இட்டுச் செல்வதற்கும் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கு பாரிய பொறுப்பு உண்டு. இதனைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு வருடமும் இவ்வாறான விழாக்களை நடாத்தி வருவது கலைஞர்களுக்கும், இலக்கியவாதிகளுக்கும் ஒரு வரப்பிரசாதமாகும்.

கிழக்கு மாகாண எழுத்தாளர்களிடமிருந்து தெரிவு செய்யப்பட்ட சிறந்த நூலிற்கான பரிசு, திறமை மிக்க கலை இலக்கியவாதிகளை கௌரவித்தல், இலை மறை காயாக வளர்ந்து வரும் இளங் கலைஞர்களைத் தெரிவு செய்து பாராட்டுதல், ஆய்வரங்கு மற்றும் பண்பாட்டம்சங்களை வெளிப்படுத்தும் கலை நிகழ்ச்சிகள் போன்ற சிறந்த நிகழ்வுகளை மலர் தாங்கி வருகின்றது. இவை யாவும் சமூகத்திற்கு புத்துணர்ச்சியையும், எழுச்சியையும் ஏற்படுத்துமென்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

கடந்த வருடங்களை விட இவ் விழா மலர் மென்மேலும் சிறக்க வேண்டுமென்ற சிந்தனையை சிரமேற்கொண்டு இவ்விழாவை நடாத்தி வரும் மாகாணப் பணிப்பாளர், திணைக்கள உத்தியோகத்தர்கள், கிழக்கு மாகாணத்தில் வாழும் அனைத்து கலைஞர்களுக்கும் இலக்கியவாதிகளுக்கும் மற்றும் அனைவருக்கும் இவ்விழா சிறப்புற அமைய எனது நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு.ஜே.எஸ்.டி.எம்.அசங்க அபேவர்தன**
செயலாளர், கல்வி அமைச்சு
கிழக்கு மாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாணப் பணிப்பாளரின் அணிந்துரை

*"அறிவு பூர்வமான சிந்தனைத் தெளிவுடன் மானிட பண்பாட்டுக் கோலங்களை உள்வாங்கி மெருகூட்டி பேணிப் காப்பதில் சமூகம் முக்கிய கவனம் செலுத்த வேண்டியுள்ளது"*

"மதியின் வலிமையினால் மானிடம் ஓங்குக" என்ற மகாகவி பாரதியாரின் பாடல் வரியானது அறிவு பூர்வமான சிந்தனைத் தெளிவுடன் மானிட பண்பாட்டுக் கோலங்களை உள்வாங்கி மெருகூட்டி பேணிப் காப்பதில் சமூகம் முக்கிய கவனம் செலுத்த வேண்டியுள்ளது என்பதை உணர்த்தி விளம்புகின்றது. கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இதனையே இலக்காக வைத்து பணியினை மேற்கொண்டு வருவது யாவரும் அறிந்த விடயமாகும். வருடா வருடம் நடைபெற்று வரும் தமிழ் இலக்கிய விழாவானது தமிழ் இலக்கியத்தின் மறுமலர்ச்சிக்கும் செழுமைக்கும் புத்தாக்கம் அளிக்கின்றது.

தற்காலம் நாளுக்கு நாள் அறிவியல், தொழில்நுட்பம் போன்றவை தன் முழு ஆதிக்கத்தினையும் செலுத்தி சமூகத்தை தன்பால் கவர்ந்திழுத்து மேலோங்கி காணப்பட்டாலும், கலையும், இலக்கியமும் பழமையிலும், புதுமையை போர்த்தி பழமையும் மாறாது புதுமையையும் புறக்கணிக்காது தன் போக்கில் சற்றும் தளராது வெற்றி நடைபோட்டுக் கொண்டு வளர்ச்சிப்பாதையில் முன்னோக்கி சென்று கொண்டிருப்பதை நாம் கண் கூடாக பார்க்கலாம். தமிழ்மொழி, செம்மொழியாக உலக அரங்கில் தன் இருப்பை நிலைநாட்டியிருப்பது தமிழ்மொழி பேசும் மக்களை பெருமிதம் கொள்ளச்செய்கின்றது. இவற்றுக்கு மென்மேலும் மெருகூட்டுவது கலை இலக்கிய விழாக்களேயாகும்.

சுழற்சியாக மூன்று மாவட்டங்களிலும் இடம்பெறும் இவ்விழா இவ்வருடம் இயல், இசை, நாடகம் போன்ற முத்தமிழுக்கும் வித்திட்ட உலகம் போற்றும் உத்தமராம் "முத்தமிழ் வித்தகர்" சுவாமி விபுலானந்த அடிகளார் அவதரித்த இடமான அம்பாறை மாவட்டத்தில் நடைபெறவிருப்பதை மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாக நான் கருதுகின்றேன். இவ்விழாவும் சிறந்த முறையில் நடைபெற அடிகளாரின் ஆசியை வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

மாகாண தமிழ் இலக்கிய விழாவுக்கு இணையாக வெளியிடப்படும் சிறப்பு மலர் சென்ற வருடம் போல் இவ்வருடமும் புதுமை மிக்க பல்வேறு விடயங்களை ஏந்தி தங்களின் கரம் தழுவ காத்து நிற்கின்றது. இம்மலரானது திறன் மிக்க இலக்கியவாதிகளின் விவரங்களை அறிவிப்பதோடு மட்டுமன்றி முன்னோடி ஏற்பாட்டுக்கும் ஏதுவாக அமையும் என நான் நம்புகின்றேன். இம் மலர் தங்களிடம் விளம்புவது, கிழக்கு வாழ் கலை இலக்கியவாதிகள் தங்களின் திறமையை வெளிப்படுத்தி விருது பெறவிருப்பதும், பற்பல எதிர்பார்ப்புக்களோடு வலம் வரும் இளம் கலைஞர்கள் பாராட்டப்படுவதும், படைப்பின் உச்சத்தை தொட்ட சிறந்த நூற் பரிசு பெறவிருப்பவர்கள், சுய நலமின்றி நடுநிலை வகித்த நடுவர்கள், அரங்கை அலங்கரிப்பவர்கள், கவிஞர்களின் ஆக்கத் திறமைகள் என பல்வேறு வகையிலும் பெருமைப்படத்தக்க விடயங்களை சீர்தூக்கி சுமந்து வந்து மலரவுள்ளது.

இவ்விழாவானது செம்மையான முறையிலும், பல்வேறு விடயங்களில் மற்றவர்களுக்கும் பயன்பெற வேண்டும் என்ற ஆதங்கத்துடன் செயற்பட்ட கௌரவ கிழக்கு மாகாண கல்வி அமைச்சர், வழிகாட்டியாக நின்று ஆலோசனை வழங்கிய கல்விச் செயலாளர், அம்பாறை மாவட்டத்தில் இவ்விழா நடைபெறுவதற்காக ஆக்கத்தோடும், ஊக்கத்தோடும், அர்ப்பணிப்போடும் செயற்பட்ட கலைஞர்கள், இலக்கியவாதிகள், கல்முனை முஸ்லிம் மற்றும் தமிழ் பிரதேச செயலாளர்கள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள், கமு/உ வெஸ்லி கல்லூரி அதிபர், மலர் அழகான முறையிலும், பயன்பெறும் வகையிலும் அமைய அரும்பாடுபட்ட மலர்க்குழுவினர், திணைக்கள கலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் அனைவருக்கும் எனது மனங்கனிந்த வாழ்த்தினையும் நன்றியினையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி. சிவப்பிரியா வில்வரத்னம்**
மாகாணப் பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் செயற்பாடுகள் 2016ஆம் ஆண்டை மையப்படுத்திய ஓர் பார்வை.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய 03 மாவட்டங்களும், 45 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் தமது செயற்பாட்டை வினைத்திறன் மிக்க வகையில் ஆற்றிவருகின்றது. 01.01.2016ம் ஆண்டு பிரிவாக (Unit) இருந்து திணைக்களமாக (Department) உயர்வு பெற்றது. காத்திரமானதும், காலத்திற்கு தேவையானதுமான பல செயற்றிட்டங்களை உள்வாங்கியும், உருவாக்கியும் திணைக்களம் வீரியம் மிக்க செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது.

**திணைக்களத்தின் தொலைநோக்கு**

நல் விழுமியங்களும், சமாதானமும், நல்லிணக்கமும் செறிவூட்டப்பட்ட நிலைபேறான பன்மைத்துவ கலாசார பேணுகை

**திணைக்களத்தின் பணிக்கூற்று**

நிலைபேறான வகையில் சம்மந்தப்பட்ட நிறுவனங்களின் திறனை வலுவூட்டுவதனூடாக பராம்பரிய விழுமியங்களையும். கலாசார பெறுமதிகளை பாதுகாத்தலும் பன்மைத்துவ





இயல்பினை மதிக்கச் செய்யும் வகையில் சமுதாயத்தினை மாற்றுதலும்.

**முன்னுரிமையான கடமைகள்**

1. பல்லின கலாசார விழுமியங்களைப் பாதுகாத்தலும் மதிப்பளித்தலும்
2. கலைஞர்கள், எழுத்தாளர்கள், கலை இலக்கிய மன்ற அங்கத்தவர்கள் மற்றும் கலாசாரக் குழுக்களின் ஆற்றலையும், வலிமையை மேம்படுத்தல்
3. அழிவடைந்து செல்லும் கலாசார விழுமியங்களையும், பெறுமதிகளையும் பாதுகாத்தல்.
4. பல்லின சமூங்களிடையே நல்லிணக்கத்தை மேம்படுத்தல்.

மேற்கூறிய பின்னணியில் வழமையான செயற்பாடுகளை வருடாந்தம் செயற்படுத்தி வருவதுடன் இச் செயற்பாடுகளுக்கு அப்பால் காலத்திற்கு காலம் வெவ்வேறு பிரதேசங்களில் வெவ்வேறு விதமான ஆற்றுகை நிகழ்வுகளையும், போட்டிகள் மற்றும் கௌரவிப்பு நிகழ்வுகள் போன்ற பண்பாட்டியல்சார் செயற்பாடுகளில் திணைக்களம் ஈடுபட்டு வருகின்றது.

வருடாந்த செயற்பாடுகளில் உழவர் திருநாளாம் தைப் பொங்கல் தின நிகழ்வு, தமிழ், சிங்கள சித்திரைப் புத்தாண்டு விழா என்பன மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகின்றது. மூவின பண்பாட்டியல் பின்னணியைக்கொண்ட அரச உத்தியோகத்தர்கள் ஏனைய சமய, சமூகத்தவர்களின் பண்பாட்டு அம்சங்களை அறிந்து கொள்வதற்கும் நல்லிணக்கத்தினை மேம்படுத்தவும் இந்நிகழ்வுகள் பேருதவியாக அமைகின்றன. இஸ்லாமிய சமூகத்தவர்களின் முக்கிய கடமைகளில் ஒன்றான நோன்பு காலத்தில் "இப்தார்" நிகழ்வு, கல்வி, செல்வம், வீரத்தினை வேண்டி இந்து சமயத்தவர்களால் கொண்டாடப்படும் முக்கிய விழாவாகிய "நவராத்திரி" தினவிழா, மற்றும் கிறிஸ்த்தவர்களின் "ஒளிவிழா" (பாலன் பிறப்பு) நிகழ்வு, பௌத்த சமயத்தவர்களின் "வெசாக்", "பிரித்" நிகழ்வுகளையும் திணைக்களம் ஒழுங்கு செய்து நடாத்தி வருகின்றது.

மூவின பண்பாட்டுப் பாரம்பரிய கலை வடிவங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளம் காணுதல், பேணுதல், ஆற்றுகை செய்தல், ஆவணப்படுத்தல் செயற்றிட்டத்தின் கீழ் தமிழ் மக்களின் பாரம்பரிய கலை வடிவங்களான கூத்து, வசந்தன், கரகம், கும்மி, காவடி போன்ற கலைகள் தொடர்பான போட்டிகளும், சிங்கள மக்களின் பாரம்பரிய "தெபஸ் முத்தரா" நாடகம் தொடர்பான போட்டிகளும், முஸ்லிம் மக்களின் பாரம்பரியக் கலைகளான பொல்லடி, றபான், வாள் வீச்சு, கம்பு வீச்சு, சீனடி, கஸீதா, நாட்டார்கவி போன்ற கலை வடிவங்கள் தொடர்பான போட்டிகளும் நடாத்தப்பட்டு வெற்றி பெற்றவர் களுக்கு பரிசில்களும், கௌரவிப்புக்களையும் வழங்கி வருகின்றது. 2016ஆம் ஆண்டு சித்தாண்டி முருகன் ஆலய திருவிழாவில் தமிழ் பாரம்பரிய நிகழ்வுகளும், "தெபஸ் முத்தரா" நாடகம் தொடர்பான போட்டிகள் கந்தளாய் வானெலவிலும், முஸ்லிம் பாரம்பரிய விழா கல்முனை (முஸ்லிம்) பிரதேச செயலகப்பிரிவிலும் வெகுவிமர்சையாக இடம்பெற்றது. இத்தகைய பாரம்பரிய கலை வடிவங்களின் ஆற்றுகை, இக்கலைகள் தொடர்பான விழிப்புணர்வினை பொதுமக்களிடமும், கலைஞர்களிடமும் ஏற்படுத்துவதுடன் இக்கலைகள் தொடர்பான புரிதல் எதிர்கால சந்ததியினரிம் இலகுவாக ஏற்பட வாய்ப்பேற்படும்.

கிழக்கு மாகாணத்தில் வாழ்கின்ற தமிழ், சிங்கள மொழி பேசுகின்ற மக்களின் பண்பாட்டியல் சார் செயற்பாடு களையும், கலைகளையும் ஆவணப்படுத்துவதையும் இத்துறையில் ஈடுபடும் கலைஞர்களை கௌரவிப்பதையும் நோக்காகக் கொண்டு தமிழ், சிங்கள இலக்கிய விழாக்கள் நடாத்தப்பட்டு வருகின்றது. 2016 இல் தமிழ் இலக்கிய விழா மட்டக்களப்பிலும் சிங்கள இலக்கிய விழா தெஹியத்தக் கண்டியிலும் நடைபெற்றது.

பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கிழக்கு மாகாண எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் நூலாக்க செயற்றிட்டத்தை செயற்படுத்தி வருகின்றது. தமது கையெழுத்துப்பிரதிகளை நூலாக்கம் செய்வதற்கு பொருளாதார ரீதியாக இடர்படும், எழுத்தாளர்களின் கையெழுத்துப் பிரதிகள் 07 இவ்வாறு அச்சுருவாக்கம் செய்து 2016இல் வெளியிடப்பட்டன. கிழக்கு மாகாண எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தும் முகமாக அவர்களால் வெளியிடப்பட்ட



நூல்கள் திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது.

கலை இலக்கியத்துறையில் ஈடுபடும் கலைஞர்கள் தமது ஓய்வு காலத்தில் கௌரவிக்கப்படுவது கட்டாயமாகும். இந்த வகையில் திணைக்களத்தினால் மூவினக் கலைஞர்கள் 45 பேருக்கு ரூபா 2000/= உதவித் தொகையாக வழங்கப்பட்டு வந்தது. இவ்வாண்டு (2017) முதல் 60 கலைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு மாதாந்தம் ரூபா 3000/= உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகின்றது.

பண்பாட்டியல் சார் செயற்பாடுகளில் ஈடுபடும் கலை மன்றங்களில் நிர்வாக ரீதியாக ஒரு கட்டமைப்பை சீராக பேணும் நோக்கில் புதிய மாதிரி யாப்பு, உப விதிகள் உருவாக்கப்பட்டு சகல மன்றங்களுக்கும் வழங்கப்பட்டன. இவற்றுக்கமைய தமது செயற்பாடுகளை அமைத்துக் கொண்ட கலைமன்றங்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு அவற்றிற்குரிய பதிவு இலக்கங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. நவீன கலை வடிவங்கள் தொடர்பாக துறைசார் வல்லுனர்கள் மூலம் கலை இலக்கிய மன்ற உறுப்பினர்கள், கலைஞர்களுக்கான வாண்மை விருத்திச் செயற்பாடுகள் நடாத்தப்பட்டு வருகின்றன. அரங்கியல் சார் பயிற்சிகள், குறுந்திரைப்பட பயிற்சிப் பட்டறைகள், நடனப் பயிற்சிப்



பட்டறைகள் போன்ற துறைகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

கலை இலக்கிய மன்றங்களின் வருடாந்த செயற்பாடுகள் மதிப்பீடு செய்யப்பட்டு சிறந்த திறனை வெளிப்படுத்திய கலைமன்றங்களின் செயற்றிட்டங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. செயற்பாடுகளுக்கு அவசியமான வாத்தியக்கருவிகள், உடை ஒப்பனைப்பொருட்கள் துறைசார் வாண்மை விருத்தி பயிற்சிப்பட்டறைகள் என்பவை வழங்கப் பட்டு வருகின்றன. 2016 இல் குறித்தொதுக்கப்பட்ட அடிப்படை நிதி மற்றும் கௌரவ ஆளுநர் அவர்களின் நிதி என்பவற்றின் மூலமும், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் மூலமும் கௌரவ மாகாண சபை உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீடு மற்றும் நிதிப்பங்களிப்புடனும் கலைமன்றங்கள் சக்திமயப்படுத்தப்பட்டது.

திணைக்களத்தின் செயற்பாடுகளை பிரதேச ரீதியாக செயற்படுவதற்காக பிரதேச செயலகங்களில் நியமிக்கப்பட்டுள்ள கலாசார உத்தியோகத்தர்கள் தத்தம் பிரதேச செயலக பிரிவுகளுக்குள் காத்திரமான பல பண்பாட்டியல்சார் செயற் பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களின் துறைசார் வாண்மையை விருத்தி செய்யும் நோக்கில் மாகாணங்களுக் கிடையேயான பண்பாட்டு பரிமாற்றத் திட்டத்தின் கீழ் மத்திய மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து வரலாற்று துறைசார் இடங்கள், பாரம்பரிய சடங்கு முறைமைகள் என்பவற்றை நேரில் கண்டறியும் வகையில் மத்திய மாகாண கலாசார மற்றும் சுற்றுலாத்துறை திணைக்களத்தின் ஒழுங்கமைப்பில் 03 நாட்கள் பண்பாட்டு பரிமாற்று நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

கிழக்கு மாகாண கலைஞர்களின் இயங்குநிலையை சக்திமயப்படுத்தும் செயற்பாடுகளில் துறைசார் திணைக் களங்கள், துறைசார் ஆளுமைகளின் ஒத்துழைப்புடன் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தொடர்ந்தும் வீரியத்துடன் செயற்படும்.

**திருமதி சிவப்பிரியா வில்வரத்னம்**
மாகாணப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாணம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





# வித்தகர் விருது

மாகாணத்திலுள்ள மூத்த கலைஞர்களைக் கௌரவிக்கும் வகையிலும், அவர்கள் கலைத்துறைக்கு ஆற்றிய சேவைகளைப் பாராட்டும் வகையிலும் இவ் விருது வழங்கப்பட்டு வருகின்றது. முன்னர் முதலமைச்சர் விருது, ஆளுநர் விருது என வெவ்வேறு பெயர்களில் வழங்கப்பட்டு வந்த இவ் விருது 2014ம் ஆண்டு தொடக்கம் **வித்தகர் விருது** எனும் பெயரில் வழங்கப்பட்டு வருகின்றது.

**விண்ணப்பங்கள் கோரப்பட்டமை :-**

வீரகேசரி பத்திரிகை மூலம் 2017ம் ஆண்டு, மார்ச் மாதம் 12ம் திகதி மூலம் பொது அறிவித்தல் விடுக்கப்பட்டதுடன் கலாசார உத்தியோகத்தர்கள் ஊடாகவும் கலைஞர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. விளம்பரப்படுத்தப்பட்ட திகதியில் இருந்து ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டது. குறித்த கலைஞரால் பூரணப்படுத்தப்பட்டு பிரதேச செயலாளரது சிபார்சுடன் கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டு தேர்வுக்கு உட்படுத்தப்பட்டன.

**விருது வழங்கப்படும் துறைகள்**

1. ஆக்க இலக்கியம் (கவிதை, சிறுகதை, நாவல், நாடகவுரு)
2. சிற்பம்
3. ஓவியம்
4. சாஸ்திரிய நடனம்
5. நாடகம்
6. சிற்பம்
7. கூத்து
8. இசைத்துறை
9. ஊடகத்துறை
10. கிராமியக் கலை
11. சுதேச வைத்தியம் ஆகிய துறைகளில் பாண்டித்தியம் பெற்றவர்களுக்காக இவ்விருது வழங்கப்படுகிறது

**விருதுகளுக்கானோர் தெரிவுசெய்யப்பட்ட விதம் :-**

முறையாக கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களில் இருந்து விருதுக்குரியவர் நடுவர்களால் தெரிவு செய்யப்பட்டனர். விருதுக்கு தகுதியானவர்களை தெரிவு செய்யும் பொருட்டு மாவட்டத்திற்கு மூவர் எனும் அடிப்படையில் கலை இலக்கிய செயற்பாடுகளில் ஈடுபாடும், அறிவும், அனுபவமும் மிக்க, பக்கச்சார்பற்றவர்களாக இருக்கும் வகையில் நியமிக்கப்பட்டனர்.

**மதிப்பீட்டு நியமங்கள்**

அனைத்து துறைகளுக்கும் ஏற்ற வகையில் மதிப்பீட்டு நியமங்கள் வகுக்கப்பட்டு புள்ளித்திட்டம் தயாரிக்கப்பட்டு நடுவர்களிடம் வழங்கப்பட்டது.

**மதிப்பீட்டு குழு**

நடுவர்கள் வழங்கிய புள்ளிகள் முறையாக திறக்கப்பட்டு புள்ளிகளையும் ஸ்தானங்களையும் கவனத்தில் கொண்டு வித்தகர் கௌரவம் பெறும் கலைஞர்கள் அடையாளப்படுத்தப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனாப். ஆதம்பாவா மீராகிபு (அசனார்)
(இலக்கியம்)

2017ம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண உயர் விருதான வித்தகர் விருது பெறும் ஜனாப்.ஆதம்பாவா மீராகிபு 1943ம் ஆண்டு பங்குனி மாதம் 5ம் திகதி பிறந்தார். இவர் திருகோணமலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர்.

இலங்கை விமானப் படையில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற இவர் கல்வி கற்கும் காலத்திலேயே கலை, இலக்கியம், நாடகம் போன்ற துறைகளில் மிகுந்த ஈடுபாடுடையவர். ''இந்திரா மணாளன் ''சி.பி.மணிவண்ணன்'', ''சிவாஜிப்பித்தன்'' எனும் புனைபெயர்களில் தனது ஆக்கங்களை எழுதி வெளியிட்டுள்ளார். சமுதாயத்தில் நடக்கும் அவலங்கள், சமூக பிரச்சனை போன்ற விடயங்களை எவ்வித தயக்கமுமின்றி கவிதை வடிவிலும், சினிமா, நாடக விமர்சனங்களாகவும் வெளிப்படுத்துவதில் முன்னிற்பவர். ஈழத்து பிரபல்யமான பத்திரிகைகளான வீரகேசரி, தினக்குரல், சுடர்ஒளி, தினபதி ஆகியவற்றில் நீண்ட காலமாக தனது படைப்புக்களை வெளியிட்டு வந்துள்ளார். திருகோணமலையில் 'நீங்களும் எழுதலாம்'' சஞ்சிகையிலும் தனது ஆக்கங்களை பிரசுரித்துள்ளார்.

கடந்த காலங்களில் கலை இலக்கிய நாடக முயற்சிகள் வளர்ச்சி காணாத காலங்களில் இவரது எழுத்துத் திறமையால் பல்வேறு வகையான ஆக்கங்களை படைத்து வெளியிட்டு கலை ஆர்வலர்களுக்கும், இளங்கலைஞர்களுக்கும் ஊக்கமளித்த பெருமை இவருக்குண்டு. திருகோணமலையில் நடைபெறும் கலை இலக்கிய நிகழ்வுகளில் கலந்து கொண்டு இளம் கலைஞர்களுக்கு ஊக்கமளித்து வருவது குறிப்பிடத்தக்கது. நல்ல நடிகனாய், கவிஞனாய், ஊடகவியலளாராய், அறிவிப்பாளராய் பல்துறை சார்ந்து இன்றுவரை ஊக்கத்தோடும் ஆக்கத்தோடும் உழைத்து வரும் இவர் ஒரு சமாதான நீதவானும், சமூகசேவையாளருமாவார்.

இவரது கலை இலக்கியச் சேவையினை பாராட்டி திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்தினாலும், திருகோணமலை 'நீங்களும் எழுதலாம்''வாசகர் வட்டத்தினாலும் பாராட்டி கௌவிக்கப்பட்டார். கலாசார அலுவல்கள் திணைக்களம் 'கலாபூஷண விருது'' வழங்கி இவரை கௌரவித்துள்ளது.

ஜனாப். ஆதம்பாவா மீராகிபு (அசனார்) அவர்கள் கடந்த 40 வருட காலமாக கலை இலக்கியத்துறைக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி ''இலக்கியத் துறையில்'' வழங்கிய அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்புக்காக கிழக்கு மாகாண கல்வி, தகவல் தொழில்நுட்பக் கல்வி, முன்பள்ளிக் கல்வி, விளையாட்டு பண்பாட்டலுவல்கள், இளைஞர் விவகாரம், புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்தும் 2017 ஆம் ஆண்டுக்கான தமிழ் இலக்கிய விழாவிலே கிழக்கு மாகாண வித்தகர் விருது – 2017 வழங்குவதில் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தகர் விருது கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா 2017



**திருமதி. தேவிகாராணி முருகுப்பிள்ளை**

**(இசைத்துறை)**

2017ம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண உயர் விருதான வித்தகர் விருது பெறும் திருமதி.தேவிகாராணி முருகுப்பிள்ளை 1944ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 14ம் திகதி பிறந்தார். இவர் திருகோணமலை மாவட்டம் தம்பலகாமத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர்.

ஆசிரியர் சேவையில் உதவிப் பணிப்பாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற இவர் சிறுவயதில் இருந்தே தாய் வழி மூலமாக இசையில் ஈடுபாடு கொண்டிருந்தார். 1961இல் கர்நாடக இசையில் ஆசிரியர் தகைமை பெற்று 'கலா வித்தகர்" பட்டம் பெற்றுள்ளார். 1963இல் வானொலி இசைக் கலைஞராகவும், 1966இல் வயலின் வித்தகராகவும் இசைத்துறைக்கு சேவையாற்றி வந்துள்ளார். தேசிய கல்வி நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட தொலைக்கல்விப் பாடநெறி கற்றல் சாதனத்தில் "கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்கள்" மற்றும் "சங்கீதத்தின் கற்பித்தல் முறைகள்" எனும் நூல்களிற்கு எழுத்தாளராகவும், ஏனைய கற்றல் சாதனங்களுக்கு நூலாக்கக் குழு அங்கத்தவராகவும், தரம் 6 தொடக்கம் 11 வரை சங்கீதப் பாட ஆசிரியர் வழிகாட்டி நூலாக்க குழுவிற்கு எழுத்தாளராகவும், தொலைக்கல்வி பாடநெறி, கற்றல் சாதனம் தயாரித்தும், தரம் 11, 12, 13, சங்கீதப் பாட ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலிற்கு பாட நிபுணத்துவ குழுவில் கடமையாற்றியும், முன்பள்ளி ஆசிரியருக்கான டிப்ளோமா கற்கை நெறியின் கைநூல் எழுதியும் இவரால் மேற்கொள்ளப்பட்டுள்ள பல ஆற்றல்மிக்க செயற்பாடுகள் பாராட்டப்பட்டதுடன் இசைத்துறை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் செய்துள்ள மகத்தான சேவையும் பலராலும் போற்றப்படுகின்றது.

பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற "கலையின் ஊடாக சமாதானம்" எனும் நடன நிகழ்வுக்கு இசையமைத்து வயலின் வாசித்தமையையும், வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சிறுவர் பாடல்கள், நாட்டார் பாடல் போன்றவற்றிற்கு மெட்டமைத்து, ஸ்வரப்படுத்தி ஒலி நாடாக்களில் பாடல்களை வெளியிட உதவியமையையும், இலங்கைக்கான ஆடல் தயாரித்த திரு. வேல் ஆனந்தன் அவர்களுடன் இணைந்து பாடல்கள் பாடி இசையமைத்தமையையும், திருகோணமலை வலயக் கல்வி அலுவலகத்தில் "திருகோணமலை வலய கீதம்" ஒலிநாடா தயாரித்தமையையும் கலைத்துறைக்கு இவர் ஆற்றிய பணிகளெனக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

இசைத்துறையில் திருகோணமலை மாவட்டத்திலும், இலங்கையில் பல பாகங்களிலும் இசைக்கச்சேரிகளில் பங்குபற்றி கலை நிகழ்ச்சிகளில் பக்க வாத்தியம் வாசித்தும், மற்றும் மாணவர்களுக்கு இலவசமாக வாய்ப்பாட்டுச் சங்கீதம், பண்ணிசை கற்பித்து வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைக்கு தோற்ற வைத்தமையும் இவர் இசைத் துறைக்காற்றிய மாபெரும் பங்களிப்புகள் என குறிப்பிடலாம். ஆலய கும்பாபிஷேக மலர்களிற்கு கட்டுரைகளையும், பல நூல்களிற்கு அணிந்துரையும் வழங்கியுள்ளார்.

இவர் இசைத்துறைக்கு ஆற்றிய சேவையை பாராட்டி 2014 ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தின விழாவின் போது பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்தினால் 'சிறந்த பெண்மணிக்கான விருதும்', திருகோணமலை நகராட்சி மன்றத்தினால் 'நகர முதல்வர் விருதும்', வட இலங்கை சங்கீத சபையினால் 'மூத்த கலைஞர் விருதும்' 2016 ஆம் ஆண்டு கலாசார அலுவல்கள் திணைக் களத்தினால் 'கலாபூஷண விருதும்" வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

திருமதி.தேவிகாராணி முருகுப்பிள்ளை அவர்கள் கடந்த 30 வருட காலமாக கலை இலக்கியத்துறைக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி "இசைத் துறையில்" வழங்கிய அரப்பணிப்பு மிக்க பங்களிப்புக்காக கிழக்கு மாகாண கல்வி, தகவல் தொழில்நுட்பக் கல்வி, முன்பள்ளிக் கல்வி, விளையாட்டு பண்பாட்டலுவல்கள், இளைஞர் விவகாரம், புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்தும் 2017 ஆம் ஆண்டுக்கான தமிழ் இலக்கிய விழாவிலே கிழக்கு மாகாண வித்தகர் விருது - 2017 வழங்குவதில் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தகர் விருது கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா 2017



**டாக்டர் மாசிலாமணி கந்தசாமி**
**(சிற்பம்)**

2017ம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண உயர் விருதான வித்தகர் விருது பெறும் டாக்டர் மாசிலாமணி கந்தசாமி அவர்கள் 1945ம் ஆண்டு பங்குனி மாதம் 03ம் திகதி பிறந்தார். இவர் சின்ன ஊறணியை பிறப்பிடமாகவும், அமிர்தகழியை வசிப்பிடமாகவும் கொண்டவர்.

இவர் ஒரு பல்துறை விற்பனர் என்றால் மிகையாகாது. சிறு வயது முதல் சிற்பம், நாடகம், கூத்து, கட்டுரை, பேச்சு, கவிதை, சிறுகதை, நாட்டார் இலக்கியம் என தன்னை முழுமையாக கலை இலக்கியத்தின்பால் அர்ப்பணித்து சேவை புரிந்தார். சிற்பத் துறையில் மகாத்மா காந்தி, மகாகவி பாரதியார், புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை, அமரர் நல்லையா மாஸ்டர் ஆகியோரின் உருவங்களை வடிவமைத்ததுடன் ஆலய சிற்பங்களையும், அழகிய சிற்பங்களையும் படைத்துள்ளார்.

நாடகத்துறையை பொறுத்தவரையில் கதை, வசனம், நெறியாள்கை மூலமும் சமூக வரலாற்று நாடகங்கள் பலவற்றை தயாரித்தும் வழங்கியுள்ளார். இவற்றுள் 'வாழ்க்கை புயல்', 'இதுவா நீதி?', 'துரோகியே தூரப்போ!' ஆகிய நாடகங்களும் வரலாற்று நாடக வரிசையில் 'கர்ணனின் கடைசி ஆசை', 'பாஞ்சாலி சபதம்', 'இலங்கேஸ்வரன்', 'குந்தி கேட்ட வரம்', 'பண்டாரவன்னியன்' என்பனவும். கூத்துக் கலையைப் பொறுத்த வரையில் 'சுபத்திரை கலியாணம்', 'பரதன் பாதுகை', 'பட்டாபிஷேகம்', 'ஆரவல்லி நாடகம்' என்பனவும் குறிப்பிடத்தக்கவை. இலங்கை ஒலிபரப்பு கூட்டுத் தாபனத்தின் நேரடி நிகழ்வுகள் பலவற்றில் கலந்து கொண்டு பல நிகழ்வுகளை ஆற்றியுள்ளார். ரூபவாஹினி கூட்டுதாபன உதய தரிசன நிகழ்விலும் கூத்துக் கலை பற்றி மிகவும் பயனுள்ள பேட்டிகளை வழங்கியுள்ளார்.

இவரது படைப்புகள் மற்றும் ஆக்கங்கள் பல வீரகேசரி, தினக்கதிர், செங்கதிர், கதிரவன், தென்றல் போன்ற பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்தன. அவற்றுள் வித்துவான் F.X.C. நடராஜா, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, வீ.சீ.கந்தையா, அமரர் டி.எஸ்.கே.வணசிங்க அவர்களது நினைவு மலர் கட்டுரைகளும் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் வித்துவான் தமிழ் ஒளி க.செபரெத்தினம் அவர்களுக்கான பாராட்டு விழா சிறப்பு மலர்களிலும் இவரது படைப்புக்கள் வெளி வந்தன. வானொலி கிராம சஞ்சிகை நிகழ்ச்சி, மட்டக்களப்பு பாரம்பரிய கலை நிகழ்வுகள் தொடர்பான பல நேரடி ஒலிபரப்புகளிலும் கலந்து கொண்டார்.

கலை இலக்கியத்தின்பால் இவர் வழங்கிய சேவையைப் பாராட்டி பல கௌரவிப்புக்களையும் பாராட்டுக்களையும் பத்திரிகை ஆசிரியர்கள், கனடா எழுத்தாளர் இணையம், தமிழர் தகவல் மையம் என்பன வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இவர் மட்டக்களப்பு மாவட்ட இந்து சமய அபிவிருத்திச் சங்கத்தினால் "சிற்பக் கலைமாணி" என்னும் பட்டத்தையும் முன்னாள் இந்து சமய கலாசார அமைச்சர் திரு.செல்லையா இராசதுரை அவர்களினால் "கிழக்கின் இளம் சிற்ப சுடர்" எனும் விருதினையும் மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக கலாசார பேரவையினால் "கலைச்சுடர்" என்னும் விருதையும் 2008 இல் கலாசார அலுவல்கள் திணைக்களம் "கலாபூஷணம்" என்னும் விருதையும் அமரர்.எஸ்.ஜே.வீ.செல்வநாயகம் சிலையமைத்து கொடுத்தமைக்கு இராசதுரை நற்பணி மன்றம் "சிற்ப விஸ்வகர்ம சிந்தாமணி" எனும் பட்டமும் வழங்கி கௌரவித்தது.

டாக்டர் மாசிலாமணி கந்தசாமி அவர்கள் கடந்த 50 வருட காலமாக கலை இலக்கிய துறைக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி "சிற்பத் துறையில்" வழங்கிய அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்புக்காக கிழக்கு மாகாண கல்வி, தகவல் தொழில்நுட்பக் கல்வி, முன்பள்ளிக் கல்வி, விளையாட்டு பண்பாட்ட லுவல்கள், இளைஞர் விவகாரம், புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்தும் 2017 ஆம் ஆண்டுக்கான தமிழ் இலக்கிய விழாவிலே கிழக்கு மாகாண வித்தகர் விருது – 2017 வழங்குவதில் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தகர் விருது கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா 2017



**ஜனாப் காசி முஹம்மது முஹம்மத் பாறூக்**
**(இலக்கியத் துறை)**

2017ம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண உயர் விருதான வித்தகர் விருது பெறும் ஜனாப் காசி முஹம்மது முஹம்மத் பாறூக் அவர்கள் 1948ம் ஆண்டு சித்திரை மாதம் 14ம் திகதி பிறந்தார். இவர் காத்தான்குடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர்.

1967 இல் தினகரனில் வெளியான கட்டுரை மூலமும், 1970 இல் தினபதியில் வெளியான கவிதை மூலமும் இலக்கிய உலகிற்கு அடையாளப்படுத்தப்பட்டார். தனது சொந்தப் பெயரிலும் 'கலை நதி' என்னும் புனைப் பெயரிலும், பதியத்தலாவை பாறூக் என்னும் பெயரிலும் கட்டுரை, கவிதை, உருவகம், விமர்சனம், நாடகம் என 600 இற்கு மேற்பட்ட இவரது படைப்புக்கள் இலங்கையின் தேசிய நாளிதழ்களான தினகரன், தினக்குரல், வீரகேசரி, சுடரொளி, விடிவெள்ளி என்பவற்றிலும் விடியல், ஞானம், சாளரம் என்னும் சஞ்சிகைகளிலும் பல சிறப்பு மலர்களிலும், நினைவு மலர்களிலும் வெளிவந்துள்ளன. இலங்கை வானொலியிலும் இவரது படைப்புக்கள் பல வெளிவந்தன. 1972 இல் மலையகத்தில் ஹொப்டனில் மேடையேற்றிய ''சர்வதேச நிதி'' என்னும் இவரது சமூக நாடகம் பலரது பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டது. 2010 ம் ஆண்டில் 'நபியமுதம்' எனும் நூலும் 2011 இல் 'நல்லறங்கள்' எனும் நூலும் 2014 இல் 'கைவிளக்கு' எனும் நூலும் 2015 இல் 'குருதிக்கொழுந்து' எனும் நூலும் இவரால் இதுவரை வெளியிடப்பட்டுள்ளது.

2007 இல் சென்னையில் இடம் பெற்ற அனைத்து உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மகாநாடு, தமிழ் இலக்கிய மகாநாடு, மலேசிய இலங்கைத் தமிழர் இலக்கிய மகாநாடு, இந்திய காயல் பட்டணம் உலக இஸ்லாமிய மகாநாடு என்பவற்றிலும் பங்குபற்றி தனது கட்டுரைகளையும் சமர்ப்பித்திருந்தார். இவரது இலக்கியப் பணியைப் பாராட்டி 2008 இல் செங்கதிர் சஞ்சிகை முன் அட்டையில் இவரது புகைப்படத்தைப் பிரசுரித்து கௌரவித்திருந்தது.

இலக்கியத்துறைக்கு இவர் வழங்கிய அர்ப்பணிப்பு மிக்க சேவையை பாராட்டி 2006 இல் ''கலைத் தீபம்'' என்னும் பட்டமும், 2007 இல் காத்தான்குடி பிரதேச சாகித்திய விழாவில் ''கவிப்பருதி'' என்னும் பட்டமும், 2008 இல் ''சாம ஸ்ரீ தேசமாணி'' பட்டமும், 2009 இல் கலாசார அலுவல்கள் திணைக்களம் 'கலாபூஷண' விருதையும், 2012 இல் மாகாண கலாசார சங்கமம் ''கலைச் செம்மல்'' என்னும் பட்டத்தையும், 2015 இல் கொழும்பு தடாகம் கலை இலக்கிய வட்டம் ''தமிழ் மாணி'' எனும் பட்டத்தையும், 2015 இல் அகில இலங்கை நல்லுறவு ஒன்றியம் ''தேசமானி'' எனும் பட்டத்தையும், தடாகம் இலக்கிய வட்டம் ''கவியருவி'' எனும் பட்டத்தையும், 2016 இல் காத்தான்குடி இஸ்லாமிய கலைக் கழகம் ''கவித்திலகம்'' என்னும் பட்டத்தையும், 2012 இல் அகில இன நல்லுறவு ஒன்றியம் ''சாம ஸ்ரீ'' எனும் பட்டத்தையும் வழங்கி கௌரவித்துள்ளதுடன் 'இராஜேஸ்வரி சண்முகம்' விருதையும், 2016 இலக்கியச் சுடர் மலேசிய விருதுகளையும் தனதாக்கிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

ஜனாப் காசி முஹம்மது முஹம்மத் பாறூக் அவர்கள் கடந்த 50 வருட காலமாக கலை இலக்கிய துறைக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி ''இலக்கிய துறையில்'' வழங்கிய அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்புக்காக கிழக்கு மாகாண கல்வி, தகவல் தொழில்நுட்பக் கல்வி, முன்பள்ளிக் கல்வி, விளையாட்டு பண்பாட்டலுவல்கள், இளைஞர் விவகாரம், புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்தும் 2017 ஆம் ஆண்டுக்கான தமிழ் இலக்கிய விழாவிலே கிழக்கு மாகாண வித்தகர் விருது – 2017 வழங்குவதில் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தகர் விருது — கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா 2017



திரு. கதிர்காமத்தம்பி மயில்வாகனம்
(கூத்து, கிராமிய கலைத் துறை)

2017ம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண உயர் விருதான வித்தகர் விருது பெறும் திரு. கதிர்காமத்தம்பி மயில்வாகனம் அவர்கள் 1948ம் ஆண்டு வைகாசி மாதம் 3ம் திகதி பிறந்தார். மட்டக்களப்பு சேற்றுகுடாவை பிறப்பிடமாகவும், கரவெட்டி நாவற்காட்டை வசிப்பிடமாகவும் கொண்டவர்.

கூத்துக் கலை, பாடலாக்கம், சிற்பம், ஓவியம், கவிதை நாடகம், சோதிடம் மற்றும் அம்மன் மேற்பாடப்பட்ட அகவல், காவியம், கும்மி, காவடியாட்டங்கள் என தன்னை பல்கலைகளிலும் இலக்கியத்திலும் ஈடுபடுத்திக் கொண்டாலும், இவரது பிரதான துறையாக கூத்து கலையே விளங்குகிறது. 1976ஆம் ஆண்டு முதல் இன்று வரை சுமார் 40 ஆண்டு காலமாக வடமோடி, தென்மோடி என 20 இற்கும் மேற்பட்ட கூத்துக்களை நெறிப்படுத்தி அரங்கேற்றமும் செய்துள்ளார். 2010ஆம் ஆண்டு கரவெட்டி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய உற்சவத்தின் போது 'சிசு பாலன் சண்டை' என்னும் வடமோடி நாட்டுக் கூத்தையும், 2010 இல் மண்முனை மேற்கு பிரதேச செயலகம் ஏற்பாடு செய்து நடாத்திய நாட்டுக் கூத்து போட்டியில் 'இரணிய சங்காரம்' என்னும் தென்மோடி நாட்டுக் கூத்தையும் அரங்கேற்றினார். இவரது 'இரணிய சங்காரம்' என்னும் கூத்து, கூத்துப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு வண்ணத்து பூச்சி சமாதான பூங்கா நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப கடந்த பல வருடங்களாக இசை நடன பயிற்சி, மேடை நாடகங்கள் மற்றும் சமாதானப் பூங்காவில் வெளியிடப்படும் காற்றாடி என்னும் சஞ்சிகைக்கு பாடலாக்கத்தையும் தொடர்ந்தும் வழங்கி வருவதுடன் கழிவுப் பொருட்களைக் கொண்டு உருவங்கள் செய்தல் தொடர்பான பயிற்சிகளையும் பூங்கா மாணவர்களுக்கு வழங்கிக் கொண்டு வருகின்றார். இவரால் படைக்கப்பட்ட சிற்பங்கள், ஓவியங்கள் என்பன கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் கண்காட்சிக்கு பெரிதும் ஊன்றுகோலாக அமைந்திருந்தன. இதன் பயனாக 2011 இல் கிழக்கு மாகாண விவசாய அமைச்சினால் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

கிழக்கு பல்கலைக்கழக நுண்கலைத்துறை வாழ்நாள் பேராசிரியர் மௌனகுரு அவர்களின் வேண்டுகோளிற்கு அமைவாக நுண் கலைத் துறை மாணவர்களுக்கு வடமோடி, தென்மோடிக் கூத்து ஆட்ட முறைகளையும் பாடல்களையும் பயிற்றுவித்து வளவாளராக செயற்பட்டுள்ளார். 2012 இல் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியை முன்னிட்டு மட்டக்களப்பு பிரபல பாடசாலைகளான சிவானந்தா தேசிய பாடசாலை, மகாஜன கல்லூரி, இந்துக் கல்லூரி மாணவர் களுக்கு வடமோடி, தென்மோடி நாட்டுக் கூத்து பயிற்சியையும் வழங்கி, நாட்டார் பாடல், கவிதை, ஆக்கம், இசை என்பவற்றையும் பயிற்றுவித்தார் என்பதுடன் தேசிய மட்டத்தில் பாடல், கவிதை போட்டியில் மட்/மகாஜனக் கல்லூரி மாணவி முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்படத்தக்கது.

தமிழ்த்துறைக்கு இவர் வழங்கிய சேவையை பாராட்டி மட்டக்களப்பு வலயக்கல்வி அலுவலகத்தின் பண்பாட்டுப் பிரிவு "மத்தள வித்தகன்" எனும் விருதினையும், 2012 இல் மட்டக்களப்பு மாவட்ட செயலகம் நடாத்திய அண்ணாவியர் மகாநாட்டில் கூத்துக் கலைக்கு வழங்கி வரும் அர்ப்பணிப்புடைய பங்களிப்பை கருத்திற் கொண்டு "செய்யப்படும் மாண்பு" என்னும் விருதினையும் வழங்கி கௌரவப் படுத்தியது. 2014 ம் ஆண்டு கலாசார அலுவல்கள் திணைக்களம் "கலாபூஷணம்" அரச விருது வழங்கி கௌரவித்திருந்தது.

திரு. கதிர்காமத்தம்பி மயில்வாகனம் அவர்கள் கடந்த 40 வருட காலமாக கலை இலக்கியத் துறைக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி "கூத்து, கிராமிய கலைத் துறையில்" வழங்கிய அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்புக்காக கிழக்கு மாகாண கல்வி, தகவல் தொழில்நுட்பக் கல்வி, முன்பள்ளிக் கல்வி, விளையாட்டு பண்பாட்டலுவல்கள், இளைஞர் விவகாரம், புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்தும் 2017 ஆம் ஆண்டுக்கான தமிழ் இலக்கிய விழாவிலே கிழக்கு மாகாண வித்தகர் விருது – 2017 வழங்குவதில் பண்பாட்டலு வல்கள் திணைக்களம் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தகர் விருது

## கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா 2017



திரு. சிதம்பரப்பிள்ளை நவரத்தினம்
(திருமலை நவம்)
(பல்துறை)

2017ம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண உயர் விருதான வித்தகர் விருது பெறும் திரு.சிதம்பரப்பிள்ளை நவரத்தினம் 1948ம் ஆண்டு ஆடி மாதம் 01ம் திகதி பிறந்தார். இவர் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்டவர்.

அரச சேவையில் அதிபராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற இவர் கல்வி கற்கும் காலத்தில் வாசிப்பிலுள்ள ஈடுபாட்டின் காரணமாக எழுத வேண்டும் என ஆர்வம் ஏற்பட்டு எழுத்துலகில் பிரவேசித்தார். "திருமலை நவம்" எனும் புனைபெயரில் சிறுகதை, கவிதை, விமர்சனம், ஆய்வு, நாடக நெறியாள்கை, அரசியல் கட்டுரைகள், ஊடகம் என பல்வேறு துறைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். 'பாச விளக்கு', 'ஆட்டுமாமா', 'மரத்தடி ஜோதிடம்' போன்ற சிறுகதைகளும் 'ஒரு நாயகனின் பயம்', 'நீயும் நானும்' 'சவப்பெட்டியிலே', 'புயல் வருகிறது', 'கோணேஸ்வரம்' போன்ற கவிதைத் தொகுப்புகளும் இவரால் படைக்கப்பட்டு ஈழத்து பிரபலமான பத்திரிகைகளில் வெளிவந்துள்ளது. 'தர்மு சிவராமுவின் 'நட்ஷத்திரவாசி', 'நெருப்பு விழா', 'பூக்காத நட்சத்திரங்கள்', 'பிச்சாப் பாத்திரம்', 'விடிய இன்னும் நேரம் இருக்கிறது', 'புதியதொரு வீடு' போன்ற நாடகங்களை எழுதி நெறியாள்கை செய்துள்ளார்.

கடந்த மூன்று தசாப்த காலமாக மேற்கொண்ட ஆய்வின் பயனாக 400 வருட கால கலை இலக்கிய வரலாற்றைத் தொகுத்து "திருகோணமலை கலை இலக்கிய வரலாறு" எனும் ஆய்வு நூலை வெளியிட்டமை திருகோணமலை கலை இலக்கியத்தை அறிய ஆர்வமுள்ளவர்களுக்கும், இளம் கலைஞர்களுக்கும் பெரியதொரு வரப்பிரசாதம் என்று கூறினால் மிகையாகாது. ஈழநாடு, வீரகேசரி, தினபதி, சுடரொளி போன்ற ஊடகங்களுக்கு நிருபராகவும் கடமையாற்றியுள்ளார். தற்போது 'திருகோணமலை மாவட்ட அரசியலின் பிரதிநிதித்துவம் ஒரு வரலாற்றுப் பார்வை' பற்றிய தொடர் கட்டுரையை இன்றுவரை எழுதி வருகின்றமை ஒரு சிறப்புக்குரிய விடயமாகும். இவரது கலை இலக்கியத்துறை சேவையைத் தாண்டி கல்விச் சேவையிலும் பல சாதனைகளை நிலை நாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. "திருகோணமலை முன்னோடிகள் கலை இலக்கிய அமைப்பு", "பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம்", "திருகோணமலை கலை இலக்கிய ஒன்றியம்", "இசைக் குழு" மன்றங்கள் என்பனவற்றிற்கு தலைவராகவும், அங்கத்தவராகவும், நிகழ்ச்சி தொகுப்பாளராகவும் இன்றுவரை சேவையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

இவரது இலக்கிய ஆக்கத் திறமையை பாராட்டி கடல் கடந்தும் உலகளாவிய ரீதியிலும் பல பரிசில்களும், பாரட்டுக்களும் பெற்றுள்ளார். 1990 இல் நோர்வே தமிழ்ச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட நாடகமொன்றில் இரண்டாம் இடத்தையும், அவுஸ்ரேலியா தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் இரண்டாமிடத்தையும், கனடா உலகத்தமிழர் இயக்கம் நடாத்திய நாடகப் போட்டியில் பரிசில்களும், ஊடகத்துறைக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி திருகோணமலை உள்ளூராட்சி மன்றத்தினால் "நகர முதல்வர் விருதும்", 2013 ஆம் ஆண்டு கலசார அலுவல்கள் திணைக்களத்தினால் "கலாபூஷண விருதும்" வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். அதிபராக கடமையாற்றிய போது இருமுறை சிறந்த அதிபருக்கான தேசிய விருதையும், ஜனாதிபதியினால் பாராட்டையும் பெற்றார்.

திரு. சிதம்பரப்பிள்ளை நவரத்தினம் அவர்கள் கடந்த 35 வருட காலமாக கலை இலக்கியத் துறைக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி "பல்துறை இலக்கியத் துறையில்" வழங்கிய அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்புக்காக கிழக்கு மாகாண கல்வி, தகவல் தொழில்நுட்பக் கல்வி, முன்பள்ளிக் கல்வி, விளையாட்டு பண்பாட்டலுவல்கள், இளைஞர் விவகாரம், புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்தும் 2017 ஆம் ஆண்டுக்கான தமிழ் இலக்கிய விழாவிலே கிழக்கு மாகாண வித்தகர் விருது – 2017 வழங்குவதில் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனாப். அப்துல் காதர் முகம்மது இப்றாஹீம்
(இலக்கியம்)

2017ம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண உயர் விருதான வித்தகர் விருது பெறும் ஜனாப் அப்துல் காதர் முகம்மது இப்றாஹீம் 1948ம் ஆண்டு புரட்டாதி மாதம் 8 ஆம் திகதி பிறந்தார். இவர் திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியாவை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர்.

அரச சேவையில் ஓய்வு பெற்று தற்போது சட்டத்தரணியாக பணிபுரிந்து வரும் இவர் இளமைக் காலம் முதல் இலக்கியத் துறையில் மிக்க ஈடுபாடுடையவராக கவிதை, கட்டுரை, சிறுகதைகள், ஆய்வு போன்றவற்றை எழுதுவதில் மிகுந்த ஆர்வத்தைக் காட்டினார். இவருடைய முதலாவது ஆக்கமாக 'சீனாவின் அமைதி வழி அபிவிருத்தியும் அதன் இரகசியமும்' என்ற கட்டுரைத் தொகுப்பு வெளிவந்ததுடன் 'என் இதயம் பேசுகின்றது' என்ற கவிதைத் தொகுப்பும் வெளிவந்துள்ளது. மேலும் 'தூரத்துச் சொந்தம்', 'துறவு', 'கலைந்து சென்ற கனவு', 'மக்காப் பயணம்', 'பொறுப்புணர்ச்சி', 'புன்னகையும் பொன்நகையும்', 'பிரயத்தனம்' போன்ற சிறுகதைகளை எழுதி அவை பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டது. இலங்கை அரசாங்கத்தின் இராஜ தந்திர அதிகாரியாக சீனா, தாய்லாந்து, சிங்கப்பூர் போன்ற பல்வேறு நாடுகளிற்கு பயணம் மேற்கொண்டதன் பயனாக "இன உறவுகளைக் கட்டியெழுப்புவதில் இலக்கியத்தின் பங்களிப்பு" என்னும் ஆய்வு நூலை எழுதி வெளியிட்டுள்ளார். இந் நூலில் பல்வேறு நாட்டு கலை கலாசார இன ஒற்றுமையை இலக்கியத்தின் வாயிலாக எடுத்துகாட்டுவது இலக்கியத்துறை வளர்ச்சிக்கும், இளம் சந்ததியினருக்கும் பெரும் வரப்பிரசாதம் என்றே கூறலாம்.

இவர் இலக்கிய துறைக்கு ஆற்றிய சேவைக்காக 2016 ஆம் ஆண்டு 'இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வகம்' உலக இஸ்லாமிய தமிழ் மாநாட்டில் கௌரவித்து சான்றிதழ் வழங்கியது. அத்தோடு, காத்தான்குடி கலை கலாசார பேரவை, திருகோணமலை சமூக சேவைத் திணைக்களம், கிண்ணியா பிரதேச செயலகம் என்பன பாராட்டு வழங்கி இவரை கௌரவித்துள்ளன.

ஜனாப்.அப்துல் காதர் முகம்மது இப்றாஹீம் அவர்கள் கடந்த பல வருட காலமாக கலை இலக்கியத்துறைக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி "இலக்கியத் துறையில்" வழங்கிய அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்புக்காக கிழக்கு மாகாண கல்வி, தகவல் தொழில்நுட்பக் கல்வி, முன்பள்ளிக் கல்வி, விளையாட்டு பண்பாட்டலுவல்கள், இளைஞர் விவகாரம், புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்தும் 2017 ஆம் ஆண்டுக்கான தமிழ் இலக்கிய விழாவிலே கிழக்கு மாகாண வித்தகர் விருது – 2017 வழங்குவதில் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. சுப்பிரமணியம் அரசரெத்தினம்
(இலக்கியம்)

2017ம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண உயர் விருதான வித்தகர் விருது பெறும் திரு. சுப்பிரமணியம் அரசரெத்தினம் 1952 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 17 ஆம் திகதி பிறந்தார். இவர் களுவாஞ்சிக்குடியை பிறப்பிடமாகவும் கல்முனையை வசிப்பிடமாகவும் கொண்டவர்.

தனது ஆரம்பக் கல்வியை மட்/பட்டிருப்பு மகா வித்தியாலயத்திலும் உயர் கல்வியை மட்/அரசினர் கல்லூரியிலும் (தற்போது இந்துக் கல்லூரி) பயின்றார். இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் முகாமைத்துவத்தில் டிப்ளோமா கல்வி கற்ற இவர் இளம் வயதிலேயே வங்கிச் சேவையில் இணைந்து கொண்டார். சுமார் 25 வருடங்களுக்கு மேலாக எழுத்து துறையில் ஈடுபட்டு வரும் இவர் இலக்கியம், ஆன்மீகம், அரசியல், வரலாறு எனப் பல்துறை சார்ந்த நூல்களை வெளியிட்டுள்ளார். 'வளமான வாழ்வைத்தேடி', 'வழிகளால் கதை பேசி', 'இலங்கையின் பாராளுமன்ற அரசியலும் பன்னிரெண்டாவது பொதுத் தேர்தலும்', 'இலங்கையின் அரசியல் வரலாறும் பதின்மூன்றாவது பொதுத் தேர்தலும்', 'சாம்பல் பறவைகள்' என்பன இவரது படைப்புகளாகும். இவற்றுள் "சாம்பல் பறவைகள்" என்னும் நாவலுக்கு 2010 இல் கிழக்கு மாகாண சிறந்த இலக்கிய விருது கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. இலங்கையில் இருந்து வெளிவரும் சஞ்சிகைகளுக்கும் தேசிய நாழிதழிற்கும் தொடர்ந்தும் அரசின் ஆன்மீக இலக்கியம் சார்ந்த ஆக்கங்களை வழங்கி வருகின்றார்.

கல்முனை சைவமகா சபையின் தலைவராகவும், சித்தி விநாயகர் ஆலய சபை உறுப்பினராகவும், கல்முனை கலை இலக்கிய நண்பர்கள் அமைப்பின் செயலாளராகவும், வெளி விளையாட்டுக் கழகத்தின் ஆலோசகராகவும் செயற்பட்டு வருகின்றார். இவரது சமய சமூக இலக்கிய சேவையினை கருத்திற் கொண்டு கல்முனை உவெஸ்லி பாடசாலையின் கல்விச் சமூகத்தினால் "ஞான சாரியன்" என்ற பட்டமும், 2016 இல் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினரால் அறநெறிக் கல்வி விருத்திக்கு வழங்கி வரும் அளப்பரிய சேவையை கருத்திற்கொண்டு "தேசிய சேவைகள் மேன்மை விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டார். இவர் ஒரு 'அகில இலங்கை சமாதான நீதவான்' என்பதும் குறிப்பிடத்தக்கது.

திரு. சுப்பிரமணியம் அரசரெத்தினம் அவர்கள் கடந்த 25 வருட காலமாக கலை இலக்கியத் துறைக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி கலை இலக்கியத்தில் "இலக்கியத் துறையில்" வழங்கிய அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்புக்காக கிழக்கு மாகாண கல்வி, தகவல் தொழில்நுட்பக் கல்வி, முன்பள்ளிக் கல்வி, விளையாட்டு பண்பாட்டலுவல்கள், இளைஞர் விவகாரம், புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்தும் 2017 ஆம் ஆண்டுக்கான தமிழ் இலக்கிய விழாவிலே கிழக்கு மாகாண வித்தகர் விருது - 2017 வழங்குவதில் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தகர் விருது கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா 2017



**திருமதி கமலேஸ்வரி தவராஜரெட்ணம்**
**(சாஸ்திரிய நடனத்துறை)**

2017ம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண உயர் விருதான வித்தகர் விருது பெறும் திருமதி.கமலேஸ்வரி தவராஜரெட்ணம் அவர்கள் 1954ம் ஆண்டு ஆவணி மாதம் 16ம் திகதி பிறந்தார். இவர் ஹப்புத்தளையை பிறப்பிடமாகவும், தாமரைக்கேணியை வசிப்பிடமாகவும் கொண்டவர்.

தனது ஆரம்பக் கல்வியை மட்/அரசடி ம.வி., இடைநிலைக்கல்வியை மட்/ கோட்டைமுனை ம.வி. ஆகிய பாடசாலைகளில் கற்றுத் தேர்ந்தவர். சிறு வயதிலேயே நடனத் துறையில் ஈடுபாடு கொண்டிருந்தமையினால் அமரர் மா. கைலாயபிள்ளை அவர்களிடம் நடனம் பயின்று, அவரால் நெறியாள்கை செய்யப்பட்ட பல்வேறு நடன நிகழ்வுகளில் பங்குகொண்டிருந்தார். 1977 இல் யாழ்/ இராமநாதன் நுண்கலைக் கல்லூரியிலும், செல்வி சாந்தா பொன்னுத்துரை, திருமதி கிருசாந்தி ரவீந்திரன் ஆகியோரிடம் நடனம் பயின்று மட்டக்களப்பு மாவட்டத்தின் முதலாவது நடனக்கலைமாணிப் பட்டம் பெற்றவராக வெளியேறினார்.

நடன ஆசிரியராக மட்டக்களப்பு கல்லடி விவேகானந்தா மகளிர் பாடசாலையில் தனது பணியினை ஆரம்பித்து, பாடசாலை மட்டத்தில் நடைபெறும் தமிழ்த்தினப் போட்டிகளில் மாணவர்களை கலந்து கொள்ளச் செய்து நடனப் போட்டியில் தங்கப் பதக்கங்கள் பெற வகை செய்ததுடன். 1992 இல் அதிமேதகு ஜனாதிபதி விருது பெறுவதற்கு இவரது நெறியாள்கை காரணமானது. தேசிய இளைஞர்கள் சேவை மன்றத்தால் நடாத்தப்பட்ட போட்டிகளுக்காக மாணவர்களைப் பயிற்றுவித்து அதிமேதகு ஜனாதிபதி விருது பெறுவதற்கு வகை செய்தார். 1991 இல் ஆசிரிய ஆலோசகராக பதவி உயர்வு பெற்று 1999 வரை சேவை புரிந்து பின் உதவிக் கல்வி பணிப்பாளராக (அழகியற் கல்வி) கல்குடா வலயத்தில் கடமை புரிந்ததுடன் மட்/ அரசினர் ஆசிரியர் கலை சாலை, மட்/ தேசிய கல்வியியற் கல்லூரி, மட்/ தொலைக்கல்வி பிராந்திய நிலையம் என்பவற்றில் பகுதி நேர நடன விரிவுரையாளராகவும் கடமை புரிந்தார். 1988 முதல் தேசிய கல்வி நிறுவகத்தின் வளவாளரும், ஆசிரியர் கைநூல் மற்றும் ஆசிரியர் அறிவுரை வழிகாட்டி என்பவற்றின் ஆக்கக்குழு உறுப்பினராகவும் செயற்பட்டார்.

மட்/ கலாசார மத்திய நிலையத்தில் பகுதி நேர விரிவுரையாளராக கடமையாற்றி கலாசார அமைச்சினால் தேசிய ரீதியில் நடாத்தப்பட்ட பிரதீபா நடனப் போட்டிகளில் முதலாம் இடத்திற்குரிய 6 தேசிய விருதுகளை பெற்றுக் கொடுத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவரால் ஆரம்பிக்கப்பட்ட "நவ நடனாலயம்" என்ற அமைப்பினூடாக பல மாணவர்களுக்கு சிறப்பாக பயிற்சியளித்து அரங்கேற்றமும் செய்வித்தார். கல்குடா கல்வி வலயத்தில் கடமையாற்றிய காலத்தில் பல மாணவர்களுக்கு பயிற்சியளித்து சிறுவர் நாடக விழாக்களையும், அழகியல் தின விழாக்களையும் நடாத்தினார் "புவுணு" நிறுவனத்தின் அனுசரணையுடன் பயிற்றுவிக்கப்பட்டு அரங்கேற்றம் செய்யப்பட்ட "கலிங்கத்துப் போர்" வடமோடிக் கூத்து நிகழ்ச்சியின் நெறியாளராக செயற்பட்டு பலரது பாராட்டுக்களை பெற்றுக் கொண்டார்.

இவரது சேவையினை பாராட்டி 1992 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்ட கல்வித் திணைக்களமும் 2009 இல் மட்டக்களப்பு மாவட்ட கலாசார பேரவையும் 2012 இல் மண்முனை வடக்கு பிரதேச கலாசார பேரவையும் 2016 இல் கிழக்கு பல்கலைக் கழக சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கை நிறுவகமும் சான்றிதழும், விருதும் வழங்கி கௌரவித்திருந்தது. நடனத்துக்காகவே தன்னை அர்ப்பணித்து தன் சிஷ்யைகளுக்கு சிறந்த குருவாகவும் விளங்கினார்

திருமதி.கமலேஸ்வரி தவராஜரெட்ணம் அவர்கள் கடந்த பல வருட காலமாக கலை இலக்கிய துறைக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி "சாஸ்திரிய நடனத் துறையில்" வழங்கிய அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்புக்காக கிழக்கு மாகாண கல்வி, தகவல் தொழில்நுட்பக் கல்வி, முன்பள்ளிக் கல்வி, விளையாட்டு பண்பாட்டலுவல்கள், இளைஞர் விவகாரம், புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்தும் 2017 ஆம் ஆண்டுக்கான தமிழ் இலக்கிய விழாவிலே கிழக்கு மாகாண வித்தகர் விருது - 2017 வழங்குவதில் பண்பாட்டலு வல்கள் திணைக்களம் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தகர் விருது கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா 2017



ஜனாப். ஹாமிது லெவ்பை அப்துல் குத்தூஸ்
(பல்துறை இலக்கியம்)

2017ம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண உயர் விருதான வித்தகர் விருது பெறும் ஜனாப்.ஹாமிது லெவ்வை அப்துல் குத்தூஸ் 1956ம் ஆண்டு வைகாசி மாதம் 12ம் திகதி பிறந்தார். இவர் அம்பாறை அக்கரைப்பற்றை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர்.

அக்கரையூர் அப்துல் குத்தூஸ் எனும் புனைபெயரில் கவிதை, சிறுகதை, நாடகங்கள், விமர்சனங்கள், கட்டுரைகள் போன்ற ஆக்கங்களை இலங்கை தேசிய பத்திரிகைகளிலும், பல சஞ்சிகைகளிலும், பல சிறப்பு மலர்களிலும் 40 வருடங்களுக்கு மேலாக எழுதி வருகின்றார். இவர் ஒரு பல்துறை விற்பன்னர் என்றால் மிகையாகாது. இதுவரை 04 நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். 1999 இல் 'ஸ்ருதி தேடும் சந்தங்கள்', 2000 ஆம் ஆண்டில் 'சம்மதமில்லாத மௌனம்' 2001 இல் 'கேளாத தேர்வு நாடி'இ 2016 இல் 'வெற்றுக்கண்' என்பன இவரது படைப்புகளாகும்.

இதுவரை 600 மேற்பட்ட இசைப்பாடல்களையும் இயற்றியுள்ளார். 1980களில் இலங்கை வானொலியில் இசையமைத்து ஒலிபரப்பப்பட்ட மெல்லிசைப் பாடல்களை குறிப்பிட்டுக் கூறமுடியும். அதுமட்டுமன்றி உள்ளூரிலும் வெளியூரிலும் பல கவியரங்குகளில் கவிதை படித்ததோடு தலைமை வகித்தும் உள்ளார். கல்வி உயர் கல்வி அமைச்சினால் நடாத்தப்படும் தமிழ் மொழித்தின நிகழ்ச்சிக்கான சுற்றுநிருபங்களையும் 1999ஆம், 2000 ஆம் ஆண்டுகளில் தயாரித்து வழங்கியுள்ளார்.

மேலும் பல அரச நிறுவனங்களால் நடாத்தப்படுகின்ற கலை இலக்கியப் போட்டிகளுக்கு நடுவராகவும், பல பயிற்சிச் செயலமர்வுகளுக்கு வளவாளராகவும், பல சிறப்பு மலர்களுக்கு ஆசிரியராகவும் செயற்பட்டுள்ளார். தற்போது அக்கரைப்பற்று கலாசார மத்திய நிலையத்தின் உறுப்பினராகவும் செயற்பட்டுக் கொண்டும் வருகின்றார்.

ஜனாப் ஹாமிது லெவ்வை அப்துல் குத்தூஸ் கடந்த 40 வருட காலமாக கலை இலக்கியத் துறைக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி கலை இலக்கியத்தில் "பல் துறையில்" வழங்கிய அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்புக்காக கிழக்கு மாகாண கல்வி, தகவல் தொழில்நுட்பக் கல்வி, முன்பள்ளிக் கல்வி, விளையாட்டு பண்பாட்டலுவல்கள், இளைஞர் விவகாரம், புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்தும் 2017 ஆம் ஆண்டுக்கான தமிழ் இலக்கிய விழாவிலே கிழக்கு மாகாண வித்தகர் விருது – 2017 வழங்குவதில் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தகர் விருது

## கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா 2017



திரு. மாணிக்கம் வரதராஜா
(இலக்கியத் துறை)

2017ம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண உயர் விருதான வித்தகர் விருது பெறும் திரு.மாணிக்கம் வரதராஜா 1956ம் ஆண்டு கார்த்திகை மாதம் 19ம் திகதி பிறந்தார். இவர் கல்முனை பாண்டிருப்பை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர்.

'உமா வரதராஜன்' எனும் புனை பெயரில் 46 வருடங்களுக்கு மேலாக கவிதை, விமர்சனம், பத்தி எழுத்து, நாவல், நாடகப்பிரதி, தொலைக்காட்சி நிகழ்ச்சி தொகுப்பு, நினைவேடுகள், இலக்கியச் செயலமர்வுகள் எனத் தன்னை முழுமையாக எழுத்துலகில் ஈடுபடுத்தி அர்ப்பணித்து கலை, இலக்கிய வளர்ச்சிக்கு பெரும்பணியாற்றுகிறார்.

தனது 15 வது வயதில் எழுத்தாளர் (ஜெயகாந்தனின் சில நோக்கில் சில மனிதர்கள் நாவல் பற்றியது) முதன் முதலாக தமிழ் நாட்டில் இருந்து வெளிவரும் ''தீபம்'' எனும் சஞ்சிகையில் பிரசுரமானது. அதனைத் தொடர்ந்து இன்று வரை எழுத்துலகில் ஈடுபட்டுக் கொண்டு வருகின்றார். 1974 இல் ''காலரதம்'' எனும் சிற்றிதழையும், 1988 இல் வியூகம் இலக்கிய சஞ்சிகையையும், 1996 இல் ''களம்'' சிற்றிதழையும், 1988 இல் 'உள்மனயாத்திரை' சிறுகதைத் தொகுப்பையும், 2009 இல் 'மூன்றாம் சிலுவை' நாவலையும், 2011 இல் 'உமா வரதராஜன் கதைகள்' சிறுகதைத் தொகுப்பையும் வெளியிட்டுள்ளார். ''உள்மன யாத்திரை'' சிறுகதைத் தொகுப்பு 1988/1989 ஆம் ஆண்டுகான வடக்கு கிழக்கு மாகாண சிறந்த இலக்கிய நூலுக்கான சாகித்திய மண்டலப் பரிசினை பெற்றுக்கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

டாக்டர். முருகேசுப்பிள்ளை, கவிஞர்.வீ.ஆனந்தன், மூத்த படைப்பாளி மருதூர் கொத்தன் ஆகியோர் நினைவு மலர்களையும் மறைந்த அருட்சகோதரர் எஸ்.ஏ.மத்தியூ அவர்களது சேவையை விதந்துரைத்து ''பகீரதம்'' என்ற சிறப்பு மலரையும் இவர் வெளியிட்டமை இவரது எழுத்து பணியில் மைல்கற்களானது. பல நூல் வெளியீட்டு விழாக்களில் அறிமுக உரை, சிறப்புரை, விமர்சன உரை என வழங்கி பல இலக்கிய மேடைகளை அலங்கரித்த ஒரு உன்னத எழுத்தாளர்.

ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் இவரது படைப்புக்கள் வெளியாகியுள்ளன. இலங்கையின் தேசிய பத்திரிகைகளான வீரகேசரி, தினக்குரல், தினகரன் என்பவற்றிலும் அலை, திசைக் கீற்று, களம், மனுசர், ஜீவநதி, முனைப்பு என்ற சஞ்சிகைகளிலும் தமிழ்நாட்டில் கால், கணையாளி, இந்தியா டு டே, காலச்சுவடு, தினகரன், தீபாவளி மலர் என்பவற்றிலும் வெளியான படைப்புகள் காலத்தால் மேன்மை பெற்றவை. மல்லிகை ஆசிரியர் திரு.டொமினிக் ஜீவா மற்றும் செங்கதிர் ஆசிரியர் திரு.க. கிருஸ்ணமூர்த்தி ஆகியோர் தங்களின் நூலின் முக அட்டையில் இவரது புகைப்படத்தை பிரசுரித்து இவரை கௌரவித்திருந்தனர்.

இவரது இலக்கிய சேவைக்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ''தமிழ் மணி'' எனும் பட்டம் வழங்கி கௌரவித்தது. 2002 இல் இஸ்லாமிய ஆய்வு மையமும் இலங்கைக்கான தென்கிழக்கு ஆய்வு அமைப்பும் இணைந்து இலக்கிய துறைக்கான விருதையும், 2002 இல் கல்முனை சாலுபம் சமூக செயற்பாட்டு அமைப்பு இவரது கலை இலக்கிய சேவையை பாராட்டி திரி கூடல் பெருவிழாவில் பாராட்டும் விருதும் வழங்கி கௌரவித்தது.

திரு. மாணிக்கம் வரதராஜன் கடந்த 46 வருட காலமாக கலை இலக்கியத் துறைக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி ''இலக்கியத் துறையில்'' வழங்கிய அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்புக்காக கிழக்கு மாகாண கல்வி, தகவல் தொழில்நுட்பக் கல்வி, முன்பள்ளிக் கல்வி, விளையாட்டு பண்பாட்டலுவல்கள், இளைஞர் விவகாரம், புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்தும் 2017 ஆம் ஆண்டுக்கான தமிழ் இலக்கிய விழாவிலே கிழக்கு மாகாண வித்தகர் விருது - 2017 வழங்குவதில் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தகர் விருது — கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா 2017



ஜனாப் உதுமா லெவ்வை அதீக்
(இலக்கியத் துறை)

2017ம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண உயர் விருதான வித்தகர் விருது பெறும் ஜனாப் உதுமா லெவ்வை அதீக் 1957ம் ஆண்டு தை மாதம் 3ம் திகதி பிறந்தார். இவர் கல்முனையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர்.

இவர் 'சோலைக்கிளி' எனும் புனைப்பெயரில் பல கவிதைகளைப் படைத்துள்ளார். இவரது கவிதைகள், தமிழ்க் கவிதை உலகிற்கு புதிய பரிமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன என்றால் மிகையாகாது. இவரால் இதுவரை 'பாம்பு நரம்பு மனிதன்', 'பனியில் மொழி எழுதி', 'என்ன செப்பங்கா நீ', 'வாத்து', 'அவனம் (பெருந்தொகை), 'பகல் தண்டவாளத்தில் ரயில்' போன்ற கவிதை நூல்களைப் படைத்துள்ளார்.

இவர் எழுதிய இலக்கிய நூல்களுக்காக பல சான்றிதழ்களையும் பல விருதுகளையும் பெற்றுள்ளார். இவரது "பாம்பு நரம்பு மனிதன்" என்ற நூல் சிறந்த கவிதை நூலுக்காக 1995 ஆம் ஆண்டு அரச இலக்கிய விருதும், வடக்கு கிழக்கு மாகாண அளவில் சாகித்திய விருதும் "பனியில் மொழி எழுதி" கவிதைத் தொகுதிக்கு தேசிய சாகித்திய மண்டலப் பரிசும், ஜப்பானிய அரசின் "புங்கா" விருதும், கம்பன் கழகத்தின் "மகரந்தச் சிறகு" விருதும் கிடைக்கப்பெற்றது.

"எட்டாவது நரகம்" கவிதைத் தொகுப்புக்கு "காகம் கலைத்த கனவு" கவிதைத் தொகுதிக்கும் "விபவி" விருதும், வழங்கி கௌரவிக்கப்பட்டது. "பொன்னாலே புழுதி பறந்த பூமி" என்ற நினைவுக் கட்டுரைத் தொகுப்பையும் எழுதி வெளியிட்டுள்ளார். "மண் கோழி" என்ற கவிதைத் தொகுப்பும் "நெடுப்பமாய் இழந்த பந்தல்" என்ற உரைநடைத் தொகுப்பும் விரைவில் வெளிவர உள்ளன.

இவரது கவிதைகள் பாட நூல்களிலும் சேர்க்கப்பட்டுள்ளன. கல்வி பொது தராதர சாதாரண தர தமிழ்ப் பாடத்திலிருந்து "சீறி ஓடாத வருங்கால மனித நதி" கவிதை பாடமாக சேர்க்கப்பட்டுள்ளது. இவரது கவிதைகள் ஆங்கிலம், சிங்களம், கன்னடம், ஜேர்மனி போன்ற பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

2016 ம் ஆண்டு சமாதானத்திற்கான CPS தூதுவர் விருது மற்றும் ஜப்பான், இலங்கை நட்புறவு கலாசார நிதியத்தின் "Bunka" விருது என்பன இவர் இதுவரை இலக்கியத்துறைக்காக பெற்றுக் கொண்ட விருதுகளாகும்.

ஜனாப் உதுமா லெவ்வை அதீக் கடந்த பல வருட காலமாக கலை இலக்கியத் துறைக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி "இலக்கியத் துறையில்" வழங்கிய அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்புக்காக கிழக்கு மாகாண கல்வி, தகவல் தொழில்நுட்பக் கல்வி, முன்பள்ளிக் கல்வி, விளையாட்டு பண்பாட்டலுவல்கள், இளைஞர் விவகாரம், புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்தும் 2017 ஆம் ஆண்டுக்கான தமிழ் இலக்கிய விழாவிலே கிழக்கு மாகாண வித்தகர் விருது – 2017 வழங்குவதில் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறந்த தமிழ் இலக்கிய நூல் பரிசு தேர்வு

மாகாணத்தினுள் வாழும் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில் வருடாந்தம் நடைபெறும் இலக்கிய விழாக்களின் போது விழா நடைபெறும் ஆண்டுக்கு நேர் முன்னைய ஆண்டில் கிழக்கு மாகாணத்தை பிறப்பிடமாக அல்லது வசிப்பிடமாக கொண்ட எழுத்தாளர்களால் வெளியிடப்பட்ட நூல்களுக்காக இப் பரிசு வழங்கப்பட்டு வருகின்றது.

**விண்ணப்பங்கள் கோரப்பட்டமை**

2016ம் ஆண்டு ஜனவரி 01ந் திகதி முதல் 2016 டிசம்பர் 31ந் திகதி வரையிலான காலப்பகுதியில் முதலாம் பதிப்பாக வெளியிடப்பட்ட கிழக்கு மாகாண எழுத்தாளர்களுடைய நூல்கள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டன. வீரகேசரி தேசிய பத்திரிகை மூலம் 2017ம் ஆண்டு மார்ச் 12ம் திகதி பொது அறிவித்தல் வழங்கப்பட்டதுடன் அனைத்து பிரதேச செயலகங்களிலும் அவ் விளம்பரம் காட்சிப்படுத்தப்பட்டது. 28.04.2017 வரை எழுத்தாளர்களிடம் இருந்து நேரடியாக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

**விருது நூல் பரப்புகள்**

விருது வழங்கலுக்கான நூல்களை மதிப்பீடு செய்வதற்கு கீழ்க் காணும் பிரிவுகளைச் சார்ந்த தமிழ் மொழியில் பிரசுரமான நூல்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

1. சுய நாவல்
2. சுய சிறுகதை
3. சுய கவிதை
4. சுய நாடகம்
5. சிறுவர் இலக்கியம்
6. அறிவியலும் தொழில்நுட்பமும்
7. புலமைத்துவ மற்றும் ஆய்வுசார் படைப்பு
8. சமய நூல்கள்
9. வரலாற்று நூல்கள்
10. நானாவிதவிடய நூல்கள்
11. மொழிபெயர்ப்பு நூல்கள் (தமிழ்)

**நூல் மதிப்பீட்டு நியமங்கள்**

ஒவ்வொரு விடயபரப்புக்கும் ஏற்ற வகையில் மதிப்பீட்டு நியமங்கள் வகுக்கப்பட்டு புள்ளித்திட்டம் தயாரிக்கப்பட்டு நடுவர்களிடம் வழங்கப்பட்டது.

**நூல் மதிப்பீட்டுக் குழு**

துறை சார்ந்த வல்லுனர்களை கொண்டதாக நடுவர் குழு தெரிவு செய்யப்பட்டது. நடுவர்கள் வழங்கிய புள்ளிகள் முறையாக திறக்கப்பட்டு புள்ளிகளையும் நிலைகளையும் கவனத்தில் கொண்டு விருது பெறும் நூல்கள் அடையாளப்படுத்தப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த தமிழ் இலக்கிய நூல் விருது - 2017 பெறுவோர்



**அறிவியற் தொழிநுட்பம்**

பாடசாலை முகாமைத்துவம்

பேரா. மா. செல்வராஜா



**நானாவித இலக்கியம்**

ஆயிரம் வேரும் அருமருந்தும்

கணபதிப்பிள்ளை விஸ்வலிங்கம்



**புலமைத்துவம்/ஆய்வுசார்**

கெட்டியாரபுரப்பற்று முதுசங்கள்

வைத்திய கலாநிதி அருமைநாதன் ஸதீஸ்குமார்



**சமய நூல்**

இறையின்பப் பாவாரம்

மூத்ததம்பி அருளம்பலம்



**சிறுகதை**

சொர்க்கபுரிச் சங்கதி

எம். எம். நௌஷாத்



**சிறுவர் இலக்கியம்**

சிறுவர் பூங்கா

இந்திராணி புஷ்பராஜா



**சுய கவிதை**

பொன்னகம் மீட்போம்

சோ. இராசேந்திரம்



**சுய நாவல்**

குலைமுறிசல்

ஜே வஹாப்தீன்



**வரலாற்று நூல்**

மட்டக்களப்பு தேசம் வரலாறும் வழக்காறும்

சீ. கோபாலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2017 கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா - 2017

# இளங்கலைஞர் பாராட்டு

மாகாணத்திலுள்ள இளம் கலைஞர்களைக் பாராட்டும் வகையிலும், அவர்கள் கலைத் துறைக்கு ஆற்றி வரும் பணிகளைப் பாராட்டும் வகையிலும் தொடர்ந்தும் கலை, பண்பாடு சார் பணிகளில் ஈடுபட ஊக்குவிக்கும் வகையிலும், சமூகத்திற்கான தன்னலமற்ற பணிகளை முன்னெடுக்க தூண்டும் வகையிலும் 2016ம் ஆண்டு முதன் முறையாக இப் பாராட்டு அறிமுகப்படுத்தப்பட்டது. குறிப்பாக வளர்ந்து வரும் இளங்கலைஞர்கள் தம்மை மட்டும் வளர்த்துக் கொள்பவர்களாக இராது சமூக அக்கறையுடனும் அழிந்து வரும் கலைப் பாரம்பரியங்களை பாதுகாக்க முயற்சிப்பவர்களாக செயற்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்புடனும் சர்வதேச ரீதியாக தாய்நாடு தாண்டி முத்திரை பதித்த இளம் கலைஞர்களை பாராட்டும் வகையிலும் இவ் வருடம் முக்கியத்துவம் வழங்கப்பட்டது.

**விண்ணப்பங்கள் கோரப்பட்டமை**

வீரகேசரி பத்திரிகை மூலம் 2017ம் ஆண்டு, மார்ச் மாதம் 12ம் திகதி பொது அறிவித்தல் விடுக்கப்பட்டதுடன் கலாசார உத்தியோகத்தர்கள் ஊடாகவும் 40 வயதிற்கு உட்பட்ட கலைஞர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. விளம்பரப்படுத்தப்பட்ட திகதியில் இருந்து ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டது. குறித்த கலைஞரால் பூரணப்படுத்தப்பட்டு பிரதேச செயலாளரது சிபார்சுடன் கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டு தேர்வுக்கு உட்படுத்தப்பட்டன.

**விருதுகளுக்கானோர் தெரிவுசெய்யப்பட்ட விதம்**

முறையாக கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களில் இருந்து விருதுக்குரியவர் நடுவர்களால் தெரிவு செய்யப்பட்டனர். விருதுக்கு தகுதியானவர்களை தெரிவு செய்யும் பொருட்டு கலை இலக்கிய செயற்பாடுகளில் ஈடுபாடும், துடிப்பும், அறிவும் மிக்கவர்களாயும், பக்கச்சார்பற்று இருக்கும் வகையில் நடுவர்கள் நியமிக்கப்பட்டனர்.

**மதிப்பீட்டு நியமங்கள்**

அனைத்து துறைகளுக்கும் ஏற்ற வகையிலும் சமூக அக்கறையை கருத்தில் கொள்ள தக்க வகையிலும் மதிப்பீட்டு நியமங்கள் வகுக்கப்பட்டதுடன் புள்ளித்திட்டம் தயாரிக்கப்பட்டு நடுவர்களிடம் வழங்கப்பட்டது.

**மதிப்பீட்டுக் குழு**

நடுவர்கள் வழங்கிய புள்ளிகள் முறையாக திறக்கப்பட்டு புள்ளிகளையும் ஸ்தானங்களையும் கவனத்தில் கொண்டு இளங்கலைஞர் பாராட்டு வழங்க தகுதியான கலைஞர்கள் அடையாளப்படுத்தப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இளங்கலைஞர் பாராட்டு 2017

### திரு. லக்ஸ்மன் சஞ்ஜித்

1991 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 30ம் திகதி பிறந்த திரு. லக்ஸ்மன் சஞ்ஜித் மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர். தனது ஆரம்பக் கல்வியை கோட்டமுனை கனிஷ்ட வித்தியாலயத்திலும் உயர்கல்வியை புனித மிக்கேல் தேசிய பாடசாலையில் கணிதப் பிரிவில் கற்று தகவல் தொழில் நுட்பத்தில் டிப்ளோமா பட்டத்தையும் தொடர்ந்து ஈ சொப்ட் மெட்றோ கெம்பியூட்டர்ஸ் இல் Bcsit PGD பட்டத்தையும் பெறுவதற்காக கற்று கொண்டு வருகின்றார்

தனது நான்காவது வயது முதல் கர்நாடக இசையை செல்வி. சாந்தாதேவி, திருமதி. வட்சனா, திருமதி. சாந்தினி தர்மநாதன் ஆகியோரிடம் முறையாகக் கற்று வட இலங்கை சங்கீத சபை "இசைக் கோட்பாடு" மற்றும் "செயற்பாட்டுப் பரீட்சை" யில் தரம் 2 வரை கற்றுத் தேறினார். மேற்கத்தேய இசையான கிட்டார் பயிற்சியை திரு.பாய்வா ஆஷா அவர்களிடமும், வயலின் பயிற்சியை திருமதி.வத்சலா அவர்களிடமும் முறைப்படி பயின்றார். தொடர் இசைப் பயிற்சிக்காக "Sound Engineering Music Technology" இசையமைப்பளர் டிரோன் பெர்னான்டோ அவர்களிடமும் Thorsten Muller ஆல் நடாத்தப்பட்ட Audio Engineering பயிற்சிச் செயலமர்விலும் கலந்து கொண்டு பயிற்சி பெற்றார் இதன் பயனாக பல பாடல்களுக்கும், பல குறும்படங்களுக்கும் இசையமைப்பாளராக செயற்பட்டு 2001 இல் யாழ்பாணத்தில் இடம்பெற்ற உலக இசை விழாவில் Thestrn Mulles இடம் பணிபுரியும் வாய்ப்பும் இவருக்கு கிடைக்கப் பெற்றது பெரும் பேறாகும்.

மட்டக்களப்பில் 2016 இல் வெளியிடப்பட்ட மாவட்ட உத்தியோகபூர்வ கீதமான "உயிரியல் வாசம்" என்னும் பாடலில் இசையமைப்பாளராகவும் வெளிவரவிருக்கும் இந்திய திரைப்படமான "டுமில்" திரைப்படத்தின் ஒலிக்கலவையாளராகவும் பணிபுரிந்துள்ளார். மட்டக்களப்பு வைத்திய சங்கத்தின் உத்தியோகபூர்வ கீதமான "மாட்சிமை துணைச் சேவை" யின் இசையமைப்பாளராகவும் மட்/பட்டிருப்பு மகா வித்தியாலயத்தின் உத்யோகபூர்வ பாடசாலை சமூகத்தின் இசையமைப்பாளராகவும், தேசிய விருது பெற்ற "இதயம் நினைத்ததில்" சிறுவர் உரிமை மற்றும் விழிப்புணர்வு சார்ந்த பாடலில் இசையமைப்பாளராகவும் செயற்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இதுவரை அவர் காவடிச் சிந்து, கும்மி, தாலாட்டு, காவியம், பக்திப் பாடல் என ஐம்பதிற்கும் மேற்பட்ட பாடல்களுக்கும் இருபத்தேழு குறும்படங்களுக்கும், 25 இற்கும் மேற்பட்ட தனிப்பட்ட பாடல்களுக்கும் இசையமைத்து இசைத்துறையின் வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்கி வருகின்றார்.

இவர் 2014 இல் "அப்பர்" என்னும் குறுந்திரைப்படத்திற்காக சிறந்த இசையமைப்பாளருக்கான "வேல்ஸ்" விருதும், 2015 இல் பாலுகேந்திரா விருது வழங்கும் நிகழ்வில் காணொளிப் பாடலுக்காக "சிறந்த காணொளிப் பாடல்" மற்றும் "தயாரிப்பிற்கான விருதும்" 2015 இல் ருத்ரம் "மரபாட்சி பொம்மை" தனிப்பாடலுக்கான சிறந்த பாடலுக்கான விருதும் 2016 ஆம் ஆண்டுக்கான தேசிய அரச இசை விருதுகள் நிகழ்வில் "காற்றே என் வாசம்" என்னும் பாடலுக்காக சிறந்த இசையமைப்பாளருக்கான "தேசிய விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டார். 2012 இல் அரச இசை விருதுகள் நிகழ்வில் "பட்டாம் பூச்சி" என்ற பாடலுக்காக சிறந்த குரலுக்கான விருது, சிறந்த கிராமியப் பாடலுக்கான விருதும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது

தாய்நாட்டைத் தாண்டி சர்வதேச ரீதியாகவும் புகழ்பூத்து, நாட்டின் பெருமையையும் கடல் கடந்து பறைசாற்றிக் கொண்டிருக்கும் இவ் இளம் கலைஞனின் ஆற்றல்கள் போற்றுதலுக்குரியவை. மட்டக்களப்பு மாவட்டத்தில் கலைத் துறையில் தடம் பதித்துள்ள திரு.லக்ஸ்மன் சஞ்ஜித் கலை இலக்கியத்தில் "இசைத் துறையில்" ஆற்றிக்கொண்டிருக்கும் அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்புகளைக் கருத்திற் கொண்டு கிழக்கு மாகாண கல்வி, முன்பள்ளிக்கல்வி, விளையாட்டு, பண்பாட்டலுவல்கள் இளைஞர் விவகாரம், புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்தும் 2017 ம் ஆண்டுக்கான தமிழ் இலக்கிய விழாவிலே கிழக்கு மாகாண இளங் கலைஞர் பாராட்டு – 2017 வழங்குவதில் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மகிழ்ச்சி கொள்கின்றது.



## இளங்கலைஞர் பாராட்டு 2017

### செல்வி. யோகேஸ்வரன் ஜகதாரினி

1991 ம் ஆண்டு மார்கழி மாதம் 10 ஆம் திகதி பிறந்த செல்வி. யோகேஸ்வரன் ஜகதாரினி கனகர் வீதி, அக்கரைப்பற்று, 7/4 இனை வசிப்பிடமாகக் கொண்டவர்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை அக்கரைப்பற்று இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயத்தில் கற்று தனது பட்டப்படிப்பினை சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கை நிறுவகத்தில் பூர்த்தி செய்தார். நடனத்துறையில் நான்கு வருட கற்கை நெறியை பூர்த்தி செய்து முதலாம் வகுப்பில் சித்தியடைந்துள்ளார்.

இவர் பாடசாலையில் கற்கும் காலத்திலேயே 2008 ம் ஆண்டு வலய மட்டத்தில் நடைபெற்ற கலாசாரப் போட்டியில் குழு நடனத்தில் பங்கு பற்றி முதலாம் இடத்தையும், 2009 ஆம் ஆண்டு சமுர்த்தி கெக்குழு சிறுவர் கழகங்களுக்கிடையிலான கலாசார சாகித்தியப் போட்டியில் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தினூடாக பங்குபற்றி முதலாம் இடத்தையும் பெற்றுக் கொண்டார்.

மேலும் பிரதேச செயலாளர் பிரிவில் நடைபெறும் சமய சமூக நிகழ்வுகளிலும் குறிப்பாக மகளிர் தினம், ஆலய திருவிழாக்கள், பிரதேச கலை இலக்கிய விழாக்கள், மட்டக்களப்பு மாவட்ட சன சமூக நிலையம் நடாத்திய நிகழ்வுகள் என்பவற்றிலும் தனது நடன நிகழ்வை வழங்கி பிரதேசத்திற்கும் மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்தார். மாகாண கல்வித் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சிப் பட்டறைகளில் - பன்மைத்துவ கலை நிகழ்வான யாழ்ப்பாண பல்கலைக்கழகம், இந்திய Pappus Academy இணைந்து நடாத்திய 'நாட்டிய சாஸ்திரர்' எனும் பயிற்சிப் பட்டறை நிகழ்வுகளிலும் கலந்து தனது ஆற்றலை மென்மேலும் வளர்த்துள்ளார்.

இலங்கை நாட்டில் மட்டுமல்லாது சர்வதேச ரீதியிலும் தனக்கென ஒரு தனி இடம் பிடித்துக் கொண்ட கலாசூரி ஸ்ரீ ரங்கநாதனின் Aru Sri Art Theatre ஊடாக "சம்பிரதாயம்" என்னும் நிகழ்ச்சியை கொழும்பு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தில் மேடையேற்றினார். இந்நிகழ்விலும் பங்குபற்றி பிரதேசத்திற்கும் மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்தார்.

2012 ஆம் ஆண்டு கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கை கலைக்கழகம் நடாத்திய அரச நடன போட்டித் தொடரில் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகம், கிழக்கு பல்கலைக்கழகத்தில் கிராமிய உழவர் நடனத்திற்கு வழங்கப்பட்டது. இந் நடனக் குழுவில் பங்கு பற்றி முதலாம் இடத்தை அகில இலங்கைரீதியாக பெற்றுக் கொண்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. வட இலங்கை சங்கீத சபை நடாத்திய தராதரப் பரீட்சையில் 2008 இல் தரம் (2) முதலாம் பிரிவிலும் (சரிமுறை) 2013 இல் தரம் 3 முதலாம் பிரிவிலும் (சரிமுறை) சித்தியடைந்துள்ளார் என்பதும் பெருமை கொள்ளத்தக்கது.

அம்பாறை மாவட்டத்தில் கலைத் தறையில் தடம் பதித்துள்ள செல்வி யோகேஸ்வரன் ஜகதாரினி கலை இலக்கியத்தில் "நடனத்துறைக்கு" ஆற்றிக் கொண்டிருக்கும் பங்களிப்புக்களை கருதிற்கொண்டு கிழக்கு மாகாண கல்வி, தகவல் தொழில் நுட்பக் கல்வி, முன்பள்ளிக் கல்வி, விளையாட்டு, பண்பாட்டலுவல்கள் இளைஞர் விவகாரம், புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்தும் 2017 ம் ஆண்டுக்கான தமிழ் இலக்கிய விழாவிலே கிழக்கு மாகாண இளங்கலைஞர் பாராட்டு - 2017ம் ஆண்டில் வழங்கி கௌரவிப்பதில் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மகிழ்ச்சி கொள்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளங்கலைஞர் பாராட்டு 2017

## திரு. தில்லைநாதன் பவித்ரன்

1990ம் ஆண்டு ஐப்பசி மாதம் 20ம் திகதி பிறந்த திரு.தில்லைநாதன் பவித்ரன் மூதூரை பிறப்பிடமாகவும், திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்டவர்.

திருகோணமலை உவர்மலை விவேகானந்த கல்லூரியின் பழைய மாணவனும், அக்கல்லூரியின் இலக்கிய மன்றத் தலைவரும் ஆவார். சிறுவயதிலிருந்தே இலக்கியத்துறையில் ஈடுபாடு கொண்ட இவர் கவிதைத் துறையில் தனக்கென ஒரு இடத்தை தான் பிறந்த மண்ணில் பதித்துள்ளார். ஈழத்தின் சிறப்பு மிக்க பத்திரிகைகளான வீரகேசரி, தினக்குரல், தினமுரசு, சுடர்ஒளி போன்றவற்றிலும், முதன்மை சஞ்சிகைகளான மல்லிகை, ஞானம், மறுகா, மறுபாதி, மகுடம் போன்றவற்றிலும் தனது கவிதைகளை படைத்து வெளியிட்டுள்ளார். நீண்ட காலமாக கவிதைத் துறையில் ஈடுபட்டு வந்த இவர் அதன் வெளியீடாக 2011ல் 'ரசவாதம்' எனும் கவிதை நூலையும் 2012ல் 'குறிஇடல்' எனும் கவிதை நூலினையும் வெளியீடு செய்துள்ளார். இவரின் கவிதைகளில் தமிழர்களின் சிந்தனைகள், போக்குகள், அவலங்கள், அபிலாஷைகள் போன்ற பல விடயங்கள் சிறந்த முறையில் கவிதைகளாக வடிவமைத்திருப்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

திருகோணமலையில் 2013 மற்றும் 2014ம் ஆண்டுகளில் நடைபெற்ற தமிழ் விழா இவரது தலைமையில் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. திருகோணமலை மாவட்டம் மட்டுமன்றி வெளிமாவட்டங்களிலும் பல கவியரங்குகளிலும், நூல் விமர்சன அறிமுக கருத்தரங்குகளிலும் மற்றும் தொகுப்புரைகளிலும் பங்குபற்றியுள்ளார். பல இலக்கிய நிகழ்வுகளுக்கு தலைமையேற்று நடாத்தி வருகின்றமையும், உப்புவெளி பிரதேச நூலக வாசிப்பு மாத நிகழ்வுகளில் இரு வருடங்களுக்கு மேலாக நடுவராக கடமையாற்றி வருகின்றமையும், 2015ம் ஆண்டு கிழக்கு மாகாண இலக்கிய விழாவில் 'சம காலப் போக்கில் கிழக்கிலங்கையின் சிறுகதைகள்' எனும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பித்தமையும் இவர் இலக்கிய துறைக்கு ஆற்றிய சேவைகளாகும்.

"ஜீவநதி - 75" கவிதைச் சிறப்பிதழ் வெளியிட்ட ஈழத்து கவிஞர்கள் பட்டியலில் 2000ம் ஆண்டுகளுக்குப் பின்னரான கவிஞர்களுள் ஒருவராக இவரையும் இணைத்துக் கொண்டுள்ளது. அத்தோடு 2012ல் வெளியிடப்பட்ட 'குறிஇடல்' எனும் கவிதை நூலுக்கு 15வது "கொடகே தேசிய சாகித்திய விருதும்", இலங்கை இலக்கிய பேரவையினால் "தமிழியல் விருதும்" வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். இலங்கையின் இரண்டாவது இளைஞர் பாராளுமன்றத்தில் மனிதவள மற்றும் மூலதனவள பிரதி அமைச்சராக செயற்பட்டமைக்கான சான்றிதழும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் கலை இலக்கியத் துறையில் தடம் பதித்துள்ள திரு.தில்லைநாதன் பவித்ரன் அவர்களுக்கு கலை இலக்கியத்தில் "இலக்கியத் துறைக்கு" ஆற்றிக்கொண்டிருக்கும் அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்புகளைக் கருத்திற் கொண்டு கிழக்கு மாகாண கல்வி, முன்பள்ளிக்கல்வி, விளையாட்டுஇ பண்பாட்டலுவல்கள் இளைஞர் விவகாரம், புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்தும் 2017 ம் ஆண்டுக்கான தமிழ் இலக்கிய விழாவிலே கிழக்கு மாகாண இளங் கலைஞர் பாராட்டு – 2017 வழங்குவதில் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மகிழ்ச்சி கொள்கின்றது.





# இளங்கலைஞர் பாராட்டு 2017

## திரு. வெற்றிவேல் சசிகரன்

1990ம் ஆண்டு ஆனி மாதம் 15ம் திகதி பிறந்த திரு. வெற்றிவேல் சசிகரன் வந்தாறுமூலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர்.

தனது ஆரம்பக் கல்வியை மட்/வந்தாறுமூலை கண்ணகி வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை மட்/சிவானந்தா தேசிய பாடசாலையிலும் கற்றுக்கொண்டார். தனது பாடசாலைக் காலத்திலேயே பாடசாலைகளுக்கிடையிலான பேச்சு, கவிதை, வில்லுப்பாட்டு, விவாதம், கவியரங்கு, பட்டிமன்றம் ஆகிய கலை இலக்கிய துறைகளில் பங்குபற்றி பிரதேச மட்டம், மாவட்ட மட்டம், மாகாண மட்டம் வரை வெற்றி பெற்று பல சான்றிதழ்களையும் பரிசில்களையும் பெற்றுக்கொண்டார்.

தனது உயர்கல்வியை கிழக்கு பல்கலைக்கழகத்தில் வெளிமாணவனாக தொடர்ந்து கொண்டிருக்கும் இவர் அகில இலங்கை இந்து மாமன்றத்தினாலும், இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தினாலும் நடாத்தப்பட்ட சைவ வித்தகர் பட்டப்படிப்பு நெறியை பூர்த்தி செய்திருந்தார். இதன் பயனாக ஆலயங்கள் மற்றும் அறநெறிப் பாடசாலைகள் தோறும் சொற்பொழிவுகளை நிகழ்த்தி சைவ சமய வளர்ச்சிக்குரிய பணிகளில் ஈடுபட்டிருந்தார்.

வந்தாறூமூலை அம்மன் அறநெறிப் பாடசாலை ஆசிரியராகவும், நியூட்டன் சிறுவர் கழக ஆலோசகராகவும், பாரதி மக்கள் அபிவிருத்தி சங்கத்தின் தலைவராகவும், ஸ்ரீ சிவமுத்து மாரியம்மன் சன சமூக நிலைய செயலாளராகவும், கிராம அபிவிருத்திச் சங்க பொருளாளராகவும், வந்தாறுமூலை கலாசார மேம்பாட்டுச் சங்கத்தின் கலை நிகழ்ச்சிக்கான பயிற்றுவிப்பாளராகவும், கிராமியக் கலைகளான வில்லிசை, நாடகம், கோலாட்டம் போன்ற கலை நிகழ்வுகளுக்குரிய வளவாளராகவும் விளங்குகின்றார்.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் ஊழியர் சங்க அரையாண்டு வெளியீடாகிய "கிழக்கொளி" என்னும் சஞ்சிகையில் பிரதம ஆசியராக பணியாற்றியுள்ளதுடன் இந்து ஒளி, அருள் ஒளி, நானிலம், சிவானந்தன் ஆகிய சஞ்சிகைகளில் எழுத்தாளராகவும் விளங்குகின்றார். இவரது பேச்சாற்றலின் மூலமாக பல்வேறு துறைசார்ந்த நிகழ்வுகளில் சிறப்புரை, நயவுரை, வாழ்த்துரை, கருத்துரைகளை நிகழ்த்துவதுடன் சமயம் சார்ந்த ஸ்தலங்களில் பிரசங்கம், சொற்பொழிவு, சிந்தனைக் களம், பட்டிமன்றம் என்பவற்றில் பங்குபற்றி ஆன்மீகம் மற்றும் கலை இலக்கியத் துறைக்கு அயராது பங்களிப்பை வழங்கி வருகின்றார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கலை துறையில் தடம் பதித்துள்ள திரு.வெற்றிவேல் சசிகரன் கலை இலக்கியத்தில் "ஆக்க இலக்கிய துறையில்" ஆற்றிக்கொண்டிருக்கும் அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்புகளைக் கருத்திற் கொண்டு கிழக்கு மாகாண கல்வி, முன்பள்ளிக்கல்வி, விளையாட்டு, பண்பாட்டலுவல்கள் இளைஞர் விவகாரம், புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்தும் 2017 ம் ஆண்டுக்கான தமிழ் இலக்கிய விழாவிலே கிழக்கு மாகாண இளங் கலைஞர் பாராட்டு - 2017 வழங்குவதில் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மகிழ்ச்சி கொள்கின்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



## இளங்கலைஞர் பாராட்டு 2017

### திரு. மகேந்திரன் கேதீஸ்வரன்

1989 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 09 ம் திகதி பிறந்த திரு. மகேந்திரன் கேதீஸ்வரன் அவர்கள் மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை முனைக்காட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர்.

மட்/ பட்டிருப்பு முதலைக்குடா மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற இவர் தனது பதின்நான்காவது வயதிலேயே கூத்து கலையில் கால் பதித்து கூத்துக்கலை வளர்ச்சிக்கு பங்களிக்கின்றார். இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணி கற்கையை பூர்த்தி செய்ததுடன் கிழக்கு பல்கலைக்கழக நுண்கலைத்துறை வருகைதரு விரிவுரையாளாவும் கடமையாற்றுகின்றார். கூத்துக்கலையில் மட்டுமன்றி கவிதைத் துறையிலும் ஆர்வமுடைய இவர் இதுவரை 11 கூத்துக்களில் ஆடியுள்ளதுடன் 8 கூத்துக்களை பழக்கியும் 6 கூத்துக்களை எழுதியும் உள்ளார். பிரதேச சிறுவர்களை ஆர்வமுடன் ஈடுபடுத்தி வசந்தன், கும்மி, கரகம், வில்லுப்பாட்டு போன்ற கலை வடிவங்களை அவ்வப்போது அரங்கேற்றி வருகின்றார். பஜனைப் பாடல்களை இசை கூட்டிப்பாடும் சிறந்த குரல் வளம் உடையவர். இவ் ஆர்வத்தால் 'பஜனை பாமாலை' என்னும் கவிதை நூலினை 2016இல் எழுதி வெளியிட்டார்.

2011, 2012, 2013ம் ஆண்டுகளில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் எழுவானில் கலை விழாவை முன்னிட்டு மாகாண மட்டத்தில் நடாத்திய நடனப்போட்டியில் முதலாம் இடத்தையும், 2012ம் ஆண்டு நடாத்திய நடனப் போட்டியில் பங்குபற்றி முதலாம் இடத்தையும், 2013 இல் நடைபெற்ற மாகாண மட்ட கூத்து விழாவில் வடமோடி கூத்துப்போட்டியில் பங்குபற்றி முதலாம் இடத்தையும் பெற்றுக் கொண்டார். 2012, 2013 ஆகிய ஆண்டுகளில் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலக கலாசார பேரவையினால் நடாத்தப்பட்ட நாடகப் போட்டியில் "நாகசக்தி" கலை மன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி முதலாம் இடத்தினையும் 2013 இல் வடமோடி கூத்துப் போட்டியில் முதலாம் இடத்தையும் பெற்றுக் கொண்டார்.

'கும்பகர்ணன் வதை' (2008), 'அரிச்சந்திரன் நாடகம்' (2009), 'சராசந்தன் போர்' (2010), 'நல்லதங்காள்' (2011), 'பகாசூரன் சண்டை' (2012), 'அலங்கார ரூபன்' (2013), 'பவளக்கொடி' (2014), 'நச்சுப்பொய்கை' (2015), 'அபிமன்னன் சண்டை' (2016), 'வள்ளியம்மன் நாடகம்' (2017) ஆகிய கூத்துக்களை அரங்கேற்றியுள்ளார். 'உலகநாச்சியும் கொக்கட்டிச்சோலையும்', 'உழவர் பெருமை', 'மதுவின் கொடுமை', 'மனிதன் இருக்கிறான்' 'மனிசி எங்கே', 'முனைக்காடு நாகதம்பிரான் வரலாறு' போன்ற கூத்துக்களை எழுதி வெளியிட்டுள்ளார். 2015 இல் மண்முனைப்பற்று பிரதேச செயலகமும் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் இணைந்து நடாத்திய கூத்துக்கலை பயிற்சி பட்டறைக்கும் வளவாளராக செயற்பட்டார். மேலும் 2013 இல் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் நடாத்தப்பட்ட கலாசார விழாவில் இவர் கலைஞர்களுக்கான பாராட்டினைப் பெற்று கௌரவிக்கப்பட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கலை துறையில் தடம்பதித்துள்ள திரு. மகேந்திரன் கேதீஸ்வரன் கலை இலக்கியத்தில் "கூத்து, கிரமியக்கலை துறைக்கு" ஆற்றிக்கொண்டிருக்கும் அர்ப்பணிப்பு மிக்க, பங்களிப்புக்களை கருத்திற் கொண்டு கிழக்கு மாகாண கல்வி, தகவல், தொழில்நுட்பக்கல்வி, முன்பள்ளிக்கல்வி, விளையாட்டு, பண்பாட்டலுவல்கள், இளைஞர் விவகாரம், புணர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்தும் 2017 ம் ஆண்டுக்கான தமிழ் இலக்கிய விழாவிலே கிழக்கு மாகாண இளங்கலைஞர் பாராட்டு – 2017 வழங்குவதில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மகிழ்ச்சி கொள்கிறது.



## இளங்கலைஞர் பாராட்டு 2017

### ஜனாப். பிர்தௌஸ் ஹஸன் அகமட் ஷிப்லி

1985 ம் ஆண்டு தை மாதம் 31 ம் திகதி பிறந்த ஜனாப். பிர்தௌஸ் ஹஸன் அகமட் ஷப்லி அவர்கள் 144, அமீர் மேர்சா வீதியை வசிப்பிடமாக கொண்டவர்.

நீண்ட நாட்களாக நிந்தவூர் ஷிப்லி எனும் புனைப்பெயரில் பத்திரிகைகளில் கவிதை மற்றும் கட்டுரைகளை எழுதி வெளியிட்டுள்ளார். இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ தகவல் முறைமையில் விசேட பட்டத்தை பூர்த்தி செய்த இவர் களனி பல்கலைக் கழகத்திலும், இலங்கை தகவல் தொழில்நுட்ப கல்லூரியிலும், தகவல் தொழிலநுட்ப முதுமாணி பட்டத்தை பூர்த்தி செய்து தற்போது தகவல் தொழில் நுட்ப விரிவுரையாளராக தென்கிழக்கு பல்கலைக் கழகத்தில் பணியாற்றுகின்றார்

இவரது கவிதை, கட்டுரை, பத்திரிகை, சஞ்சிகைகள் என்பவற்றில் வெளிவந்தது போன்று இணையத்தளத்தை பொறுத்தவரை கீற்று, வாய்ப்பு, தமிழ் மன்றம், தமிழ் ரைற்றரஸ் என்பவற்றிலும் கூடுதலான ஆக்கங்கள் இவரால் படைக்கப்பட்டுள்ளது. கொழும்பு ரெல்கிறாஸ் போன்ற முன்னனி இணையத்தளங்களிலும் அரசியல், சமூகம் சார்பான பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

இதுவரை இவர் 'விடியலின் விலாசம்', 'நிழல் தேடும் கால்கள்', மற்றும் 'தற்கொலைக் குறிப்பு' ஆகிய கவிதை நூல்களையும், 'Informational System', 'Development Project with online', 'Accessibility for Hotel Riviera' மற்றும் 'Electronic waste management System' ஆகிய ஆங்கில மொழி மூல ஆய்வு நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

பல சர்வதேச ஆய்வரங்குகளில் பங்குபற்றி இலக்கியம், சமூகம், கலை சார்ந்த பிரதான ஆய்வுக் தலைப்புக்களில் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளார்.

இலங்கையின் தென்கிழக்கு பல்கலைக்கழகம் இளம் ஆய்வாளர்களுக்கான "உப வேந்தர்" விருதினை இவருக்கும் வழங்கி கௌரவித்தது. அத்துடன் இலத்திரனியல் கழிவுகளை முகாமை செய்வதற்கான மென்பொருள் செயற்திட்டம் ஒன்றை வடிவமைத்தார். இத்திட்டம் தெற்காசியாவின் சிறந்த 10 ஆய்வு கருத்திட்டங்களுள் ஒன்றாக தெரிவானது. இதனை உலகின் முதன்மை முன்ணனி தகவல் தொழில்நுட்ப நிறுவகமான (IEEE) நடாத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதற்குரிய நிதிப் பரிசையும் இவர் பெற்றுக்கொண்டார். 2017ல் நடைபெற்ற இஸ்லாமிய இலக்கிய மகாநாட்டில் இலக்கிய பணிக்கான விருதும் சான்று பத்திரமும் வழங்கி கௌரவிக்கப்பட்டார். தடாகம் கலை இலக்கிய கல்வி, கலாசார சர்வதேச அமைப்பு நடாத்திய சர்வதேச கவிதைப் போட்டியில் இவரது கவிதை முதலிடம் பெற்றதோடு அவ் அமைப்பினால் "கவியருவி" பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அம்பாறை மாவட்டத்தில் கலை துறையில் தடம் பதித்துள்ள ஜனாப். பிர்தௌஸ் ஹாஸன் அகமட் ஷிப்லி கலை இலக்கியத்தில் "ஆய்வுசார் செயற்பாட்டு துறைக்கு" ஆற்றிக்கொண்டிருக்கும் அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்புக்களைக் கருத்திற் கொண்டு கிழக்கு மாகாண கல்வி, முன்பள்ளிக் கல்வி, விளையாட்டு, பண்பாட்டலுவல்கள் இளைஞர் விவகாரம், புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்தும் 2017 ம் ஆண்டுக்கான தமிழ் இலக்கிய விழாவிலே கிழக்கு மாகாண இளங்கலைஞர் பாராட்டு – 2017 வழங்குவதில் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மகிழ்ச்சி கொள்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இளங்கலைஞர் பாராட்டு 2017

### திருமதி. கலைமகள் சக்தீபன்

1980ம் ஆண்டு கார்த்திகை மாதம் 29ம் திகதி பிறந்த திருமதி. கலைமகள் சக்தீபன் திருகோணமலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர்.

தற்பொழுது திருகோணமலை மெதடிஸ்த மகளீர் கல்லூரியில் நடன ஆசிரியராக கடமையாற்றி வருகின்றார். கலைத் துறையில் சிறந்து விளங்கிய இவர் கல்வித் துறையில் இலங்கையிலும், இந்தியாவிலும் பரதம் போன்ற கலைகளை கற்று தேர்ச்சி பெற்றதன் பயனாக "இளநுண்கலைமாணி", "முதுநுண்கலைமாணி" போன்ற பட்டங்களை பெற்றுள்ளார். பரதம், மோகினியாட்டம், கிராமிய கலை மற்றும் வயலின் போன்ற துறைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். "ஸ்ரீ சக்தி கலாலயா" நடன கலாமன்றத்தின் இயக்குனராகவும், ஆசிரியராகவும் கடமையாற்றி வருகின்றார். 3 தொடக்கம் 12 வயதுடைய நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்டு கிராமிய இசையின் மண்வாசனை மாறாமல் பாமர மக்களும் கற்றோரும், மற்றோரும் வியக்கும் வண்ணம் எத்தனையோ கிராமிய நடன நிகழ்வுகளை தான் பிறந்த மண்ணுக்கு ஆற்றிய பெருமை இவருக்குண்டு. பரதம் பரதமாகவும் நவீனம் நவீனமாகவும், கிராமியம் கிராமியமாகவும் சாஸ்த்திரியங்களுக்குட்பட்ட நடன வடிவங்களை சமூகத்திற்கு வெளிக்கொணர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தின விழா, சுதந்திர தின விழா, பாடசாலை விழாக்கள், வட இலங்கை சங்கீத சபை பரீட்சை போன்றவற்றிற்கு மாணவர்களை பங்கேற்று வெற்றி பெறச்செய்து பரிசில்களையும் சான்றிதழ்களையும் பெறவைத்தார். இவற்றுடன் உள்ளூரிலும் வெளி மாவட்டங்களிலும், ஆலய உற்சவங்களிலும், வங்கிகள், நேத்ரா தொலைக்காட்சி, சக்தி தொலைக்காட்சி போன்றவற்றிற்கு கலை நிகழ்ச்சிகளை வழங்கியுள்ளார். சம காலத்திலேயே மோகினியாட்டம், வயலின் போன்றவற்றினை கற்றுக் கொண்டதாக குறிப்பிடும் இவர் சின்னஞ் சிறிய மாணவர்களை வைத்து புதிய வித்தியசமான ஜனரஞ்சகமான சாஸ்த்திரியத்திற்குட்பட்ட நடன வடிவங்களை சமூகத்திற்கு முன்வைப்பது என்பது இவரது சவாலாகும்.

இவரது கலைத்திறமையை பாராட்டி திருகோணமலை நகராட்சி மன்றத்தினால் "நகர முதல்வர் விருது" திருகோணமலை மாவட்டத்தில் சமூக அமைப்பு ஒன்றியத்தினால் "கர்மயோகா" விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டார். திருகோணமலை கோணேஸ்வர ஆலய பரிபாலன சபை, இளைஞர் விவகார அமைச்சுஇ கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், சாம்பல்தீவு அருள்மிகு வடலியம்பதி மகா கணபதிப்பிள்ளையார் ஆலயம் போன்றவற்றினால் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

திருகோணமலை மாவட்டத்தில் கலைத் துறையில் தடம் பதித்துள்ள திருமதி. கலைமகள் சக்தீபன் அவர்களுக்கு கலை இலக்கியத்தில் "பரதத் துறைக்கு" ஆற்றிக்கொண்டிருக்கும் அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்புகளைக் கருத்திற் கொண்டு கிழக்கு மாகாண கல்வி, முன்பள்ளிக்கல்வி, விளையாட்டு, பண்பாட்டலுவல்கள் இளைஞர் விவகாரம், புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்தும் 2017 ம் ஆண்டுக்கான தமிழ் இலக்கிய விழாவிலே கிழக்கு மாகாண இளங் கலைஞர் பாராட்டு – 2017 வழங்குவதில் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மகிழ்ச்சி கொள்கின்றது.



## இளங்கலைஞர் பாராட்டு 2017

### ஜனாப். அகமது லெவ்வை அன்ஸார்

1978 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 30 ஆம் திகதி பிறந்த ஜனாப். அகமது லெவ்வை அன்ஸார் 181, காரியப்பர் பாடசாலை வீதி, வொலிவோரியன், சாய்ந்தமருது - 16 இனை வசிப்பிடமாகக் கொண்டவர்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை கமு/அல்-ஜலால் வித்தியாலயத்திலும், உயர் கல்வியை கமு.: சாஹிரா தேசிய பாடசாலையிலும் கற்றுக் கொண்டார். இவர் தனது இளமைக் காலத்திலேயே கவிதை, கட்டுரை, சிறுகதை, அறிவிப்பு, பத்திரிகை என தன்னை அர்ப்பணித்து முழுமையாக செயற்பட்டவர். இதன் பயனாக 2006 இல் இவரால் 'வளரும் மொட்டுக்கள்' எனும் கவிதைத் தொகுதியும் அதனைத் தொடர்ந்து 'உன்னை நினைப்பதற்கு' எனும் கவிதை தொகுப்பும் இவரால் வெளியிப்பட்டது.

மருதூர் செல்வன், கலைச் செல்வன், கலைக் குயில், தென்றல் இளவரசன், எனும் புனைப் பெயர்களிலும் மருதூர் அன்சார் எனும் சொந்தப் பெயரிலும் பல ஆக்கங்களை வெளியிட்டுள்ளார். இவை இலங்கையின் தேசியப் பத்திரிகைகளான வீரகேசரி, சுடரொளி, மித்திரன், தினகரன் என்பவற்றிலும் வெளிவந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

2014 இல் இவரால் 'மனிதம்' எனும் குறுந்திரைப்பட இறுவெட்டு வெளியிடப்பட்டுள்ளதுடன் இந் நிகழ்வு பலரது பாராட்டுக்களையும் பெற்றுக்கொண்டது. தற்போது இவர் இமயம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியராகவும், வெளியீட்டாளராகவும் செயற்பட்டுக்கொண்டு வருகின்றார்.

மேலும் இவர் சிறந்த அறிவிப்பாளர் என்பதற்கு 2006, 2007 ஆகிய ஆண்டுகளில் தேசிய இளைஞர் சேவை மன்றம் நடாத்திய அறிவிப்புத் துறைப் போட்டியில் தேசிய இளைஞர் சேவை விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

தற்போது கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஊடாக வலைப்பின்னல் அமைப்பின் தலைவராக செயற்படுவதுடன் இவ் அமைப்பின் ஊடாக பல நூல் வெளியீடுகளையும், பாராட்டு விழாக்களையும், கண்காட்சி, இலக்கிய போட்டி என்பவற்றையும் நடாத்தி வளரும் படைப்பாளிகளுக்கும், கலைஞர்களுக்கும் களத்தை அமைத்து கொடுத்து ஊக்கப்படுத்துகின்றார்.

அகில இலங்கை சமாதான நீதவானாகவும் கல்முனை மாநாட்டுக் கலையில் முன்னாள் உறுப்பினராகவும் செயற்பட்டார். வாராந்த பத்திரிகைகளில் பிரதேச செய்தியாளராகவும் 2002 தொடக்கம் 2004 வரை பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் பல அமைப்புக்களில் தொடர்ந்தும் தலைவராகவும், உறுப்பினராகவும், செயற்பட்டு பல ஆக்க பூர்வமான செயற்பாடுகளை மக்களுக்கு வழங்கி வருகின்றார்.

அம்பாறை மாவட்டத்தில் கலை துறையில் தடம் பதித்துள்ள ஜனாப். அகமது லெவ்வை அன்ஸார் கலை இலக்கியத்தில் "கலை இலக்கிய பல்துறைக்கு" ஆற்றிக்கொண்டிருக்கும் அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்புக்களைக் கருத்திற் கொண்டு கிழக்கு மாகாண கல்வி, முன்பள்ளிக் கல்வி, விளையாட்டு, பண்பாட்டலுவல்கள் இளைஞர் விவகாரம், புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்தும் 2017 ம் ஆண்டுக்கான தமிழ் இலக்கிய விழாவிலே கிழக்கு மாகாண இளங்கலைஞர் பாராட்டு - 2017 வழங்குவதில் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மகிழ்ச்சி கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## இளங்கலைஞர் பாராட்டு 2017

### டாக்டர் தங்கராசா ஜீவராஜ்

1978ம் ஆண்டு கார்த்திகை மாதம் 28ம் திகதி பிறந்த திரு.தங்கராசா ஜீவராஜ் தம்பாலகாமத்தை பிறப்பிடமாகவும், திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்டவர்.

இவர் தம்பலகாமம் ஆதிகோணேஸ்வரா மகா வித்தியாலத்திலும், திருகோணமலை இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியிலும் கல்வி பயின்று யாழ் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தில் வைத்திய கலாநிதி பட்டமும், குடும்ப நல வைத்தியத்திற்கான டிப்ளோமாவையும் நிறைவு செய்து தற்பொழுது கப்பல்துறையில் வைத்தியராக கடமையாற்றி வருகின்றார். சிறுவயது முதல் வாசிப்பிலும், எழுத்திலும் ஏற்பட்ட ஆர்வம் இலக்கியத்துறையில் தனக்கென ஒரு இடத்தை தக்கவைத்துக் கொண்டார். நீண்ட காலமாக வீரகேசரி நாளிதழில் நிருபராக கடமையாற்றி வந்துள்ளதாகக் குறிப்பிடும் இவர் 1991 முதல் ஈழத்து முதன்மை பத்தரிகைகளான வீரகேசரி, மித்திரன், வாரமலர், தினமுரசு போன்றவற்றிலும், சங்குநாதம், இளவரசி, கலைக்கேசரி போன்ற சஞ்சிகைகளிலும், யாழ் மருத்துவபீட ஆண்டிதழான நாடி மற்றும் மாவட்ட மாகாண இலக்கிய மலர்களிலும் இவரது படைப்புக்களான கவிதை, சிறுகதை, வரலாற்றுக் கட்டுரைகள் என்பன வெளிவந்துள்ளன.

கடந்த 5 வருட காலமாக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திருகோணமலை பிராந்தியத்து ஆதியான தம்பலகாமம், கந்தளாய், கழனிமலை முதலான இடங்களிலே தமிழிலில் வாசகம் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள், நறும்பூகைட்டும் பானையொன்று, மற்றும் குகைகள் போன்றவற்றை ஆலய வளாகங்களிலும், வேறு இடங்களிலும் கண்டெடுத்து பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்று பேராசிரியர் கலாநிதி சி. பத்மநாதன் அவர்களிடம் ஒப்படைத்துள்ளார். கலைக்காவேரியில் 'கள்ளிமேட்டில் கல்வெட்டுக்கள்' எனும் சிறப்புக் கட்டுரையையும், மாலைமுரசில் 'திருகோணமலையிற் சோழர்கள்', 'இது குளக்கோட்டன் சமூகம்', 'இருமரபுந்துய்ய எதிர்வீரசிங்க நல்ல பூபால வன்னியத்தின் உயில்', 'தம்பலகாமத்து அண்ணாவிமார்கள் பற்றிய ஒரு ஞாபகமூட்டல்', 'மூதூர் பட்டித்திடலில் நவீன யுகக் கல்வெட்டுக்கள்','இராஜராஜ சதுர்வேதி மங்கலம் (கந்தளாய்)', 'திருஞானசம்பந்தரின் தமிழ் பக்தி இயக்கத்தில் திருக்கோணேஸ்வரம்' போன்ற தொடர் ஆய்வுக் கட்டுரைகள் இவரால் எழுதி வெளியிடப்பட்டுள்ளன. திருகோணமலை மாவட்ட மண்ணின் பெருமையை வெளிப்படுத்திய ஒரு மண்ணின் மைந்தன் என்று கூறினால் மிகையாகாது.

மக்களுக்காக இலவச மருத்துவ முகாமும், கருத்தரங்குகளும் பாடசாலை மாணவர்களுக்காக கருத்தரங்குகள், அறநெறிப் பாடசாலை உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள் போன்றவற்றை வழங்கி அரிய பல சேவைகளை ஆற்றி வருவது சிறப்பாக குறிப்பிடத்தக்கதொன்றாகும். மக்கள் நலம் கருதி "நீங்களும் உதவலாம்" செயற்றிட்டம் ஒன்றினை ஜீவநதி வலைப்பதிவினூடாக இயக்கி வருகின்றார். மொத்தத்தில் குறிப்பிட்டு சொன்னால் ஒரு வரலாற்று ஆய்வாளனும், சமூக சேவையாளனும் கூட. இவரது சமூக சேவையை பாராட்டி அகில இன நல்லுறவு ஒன்றியம் "சாம ஸ்ரீ தேசமானிய விருதினை" 2013ம் ஆண்டு வழங்கி கௌரவித்துள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் கலைத் துறையில் தடம் பதித்துள்ள திரு.தங்கராசா ஜீவராஜ் அவர்களுக்கு கலை இலக்கியத்தில் "ஆவணமாக்கல் ஆய்வுத் துறைக்கு" ஆற்றிக்கொண்டிருக்கும் அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்புகளைக் கருத்திற் கொண்டு கிழக்கு மாகாண கல்வி, முன்பள்ளிக்கல்வி, விளையாட்டு, பண்பாட்டலுவல்கள் இளைஞர் விவகாரம், புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்தும் 2017 ம் ஆண்டுக்கான தமிழ் இலக்கிய விழாவிலே கிழக்கு மாகாண இளங் கலைஞர் பாராட்டு - 2017 வழங்குவதில் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மகிழ்ச்சி கொள்கின்றது.



## இளங்கலைஞர் பாராட்டு 2017

### ஜனாப். கமால்தீன் நௌஷாத்

1977ம் ஆண்டு சித்திரை மாதம் 1ம் திகதி பிறந்த ஜனாப். கமால்தீன் நௌசாத், ஏறாவூர் - 02 இனை வசிப்பிடமாக கொண்டவர். இவர் தனது ஆரம்பக் கல்வியை மட்டக்களப்பு அலிகார் கனிஷ்ட வித்தியாலயத்திலும், உயர் கல்வியை மட்டக்களப்பு அலிகார் மத்திய கல்லூரியிலும் பயின்று கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலைப்பட்டதாரியாக பட்டம் பெற்றவர். தற்போது மட்டக்களப்பு ஏறாவூர் அலிகார் மத்திய கல்லூரியில் ஆசிரியராக கடமை புரிகின்றார்.

"ஏறாவூர் நிவேதா" எனும் புனைப்பெயரில் கவிதை, மெல்லிசைப்பாடல், பாடலாக்கம், விவரணம், ஓவியம். சிறுகதை, விவாதம், பட்டிமன்றம், அரட்டை அரங்கம் போன்ற கலை இலக்கிய போட்டிகள் பலவற்றில் பங்குபற்றி பல சான்றிதழ்களையும், விருதுகளையும் பெற்றுக்கொண்டவர். இவர் "மௌனத்தின் சத்தங்கள்" எனும் கவிதைத் தொகுப்பினை 2015ல் வெளியிட்டுள்ளார். தற்போது மத்திய கிழக்கில் புலம்பெயர்ந்து வாழ்வோரின் வாழ்வியலைக் காட்டும் "பாலைவனம்" நூலினை வெளியிடவுள்ளார்.

தனது மாணவர்களை கவிதை, பேச்சு, ஓவியம் வரைதல் தொடர்பான பயிற்சியினை வழங்கி தேசிய மட்டம் வரை சென்று பல பரிசில்களையும், சான்றிதழ்களையும் பெறுவதற்கு சிறந்த ஒரு வழிகாட்டியாக செயற்படுகின்றார். மாகாணமட்டம் "மதர் ஸ்ரீ லங்கா" போட்டியில் மாணவர்களை சிறப்பாக பயிற்றுவித்தமைக்கான சான்றிதழையும் "சிக்ஸ் எஸ்" திட்டத்தின் தேசிய போட்டியில் சிறந்த கலைத்துவமிக்க சூழலை உருவாக்கியமைக்காக தேசிய மட்ட சான்றிதழையும் விருதையும் பெறுவதற்கு தன்னலான முயற்சியினை இறுதி வரை மேற்கொண்டிருந்தது மட்டுமன்றி பேராதனை பல்கலைக்கழக சாகித்திய உப ஏற்பாட்டுக்குழு சார்பாக தேசியப் போட்டியில் பாடலாக்கத்தில் முதலாம் இடத்தையும் கவிதைப் போட்டியில் அதிவிசேட சான்றிதழையும் பெற்றுக்கொண்டமை இவரது தேசிய மட்ட சாதனைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

2016ல் ஏறாவூர் ஆடைத் தொழிற்சாலை நிகழ்வுக்கு அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் வருகை தந்த போது வரவேற்பு கீதத்தை வழங்கி கௌரவித்ததோடு ஏறாவூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் கலாசார கீதத்தையும் ஏறாவூர் கோட்டத்தின் இலச்சினையையும், புற்றுநோயாளர் பராமரிப்பு நிலைய நிதி சேகரிப்புக்கான பாடலையும், விளையாட்டு விழாவுக்கான வரவேற்பு பாடலையும் வழங்கியிருந்தார்.

இவர் கலை இலக்கியத் துறை வளர்ச்சிக்கு வழங்கி வரும் பங்களிப்பை பாராட்டி 2011ல் ஏறாவூர் நகர கலாசாரப் பேரவையின் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வில் விருது வழங்கி கௌவிக்கப்பட்டார். அத்தோடு நல்லிணக்கம் மற்றும் வலுவூட்டல் நிறுவனத்தினால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். இந்தியாவின் நிலாமுற்றக்குழுமத்தால் "நிலாக் கவிஞர்" பட்டமும், ஜீவா கவிதைப் பூங்காவினால் "கவித்திலகம்" பட்டமும். தமிழக கருத்துக்களத்தால் 'கவியருவி" பட்டமும், வழங்கி கௌரவிக்கப்பட்டார். மற்றும் தமிழ்நாட்டின் பல்வேறு கவிதைத் கழகங்களினால் நூற்றுக்கு மேற்பட்ட சான்றிதழ்களையும் "கிராமியக் கவிஞன்", கவித்தென்றல்" எனும் பட்டங்களையும் முகநூல் ஊடாகப் பெற்றுக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கலைத் துறையில் தடம் பதித்த ஜனாப். கமால்தீன் நௌஷாத் அவர்களுக்கு கலை இலக்கியத்தில் "பாடலாக்கத் துறைக்கு" ஆற்றிக் கொண்டிருக்கும் அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்புக்களைக் கருத்திற் கொண்டு கிழக்கு மாகாண கல்வி, முன்பள்ளிக் கல்வி, விளையாட்டு, பண்பாட்டலுவல்கள் இளைஞர் விவகாரம், புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்தும் 2017 ம் ஆண்டுக்கான தமிழ் இலக்கிய விழாவிலே கிழக்கு மாகாண இளங்கலைஞர் பாராட்டு – 2017 வழங்குவதில் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மகிழ்ச்சி கொள்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரச உத்தியோகத்தர் கலை இலக்கிய படைப்பாக்க போட்டி

| இல | போட்டிப் பிரிவு (துறை) | இடம் | ஆக்கத்தின் பெயர் | வெற்றியீட்டிய உத்தியோகத்தர் பெயர் | பதவி | திணைக்களம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | **புதுக்கவிதை** | முதலிடம் | வல்லமை தாராயோ | திருமதி. எம்.ஐ.எப் சர்மிளா | பட்டதாரி ஆசிரியர் | தி/மூ/புனித அந்தோனியார் மகா வித்தியாலயம், மூதூர் |
| | | இரண்டாமிடம் | வல்லமை தாராயோ | திருமதி. ஜெயமதி சந்திரசேகரம் | ஆசிரியை | கமு/கமு/சண்முக மகா வித்தியாலயம், காரைதீவு |
| | | மூன்றாமிடம் | வல்லமை தாராயோ | திரு. எம்.எம். அப்துல் அனஸ் | தொழில் உறவு அதிகாரி | இலங்கை துறைமுக அதிகாரசபை, சீனன்குடா |
| | | | வல்லமை தாராயோ | திரு. முகம்மது அபூபக்கர் முகம்மது றமீஸ் | ஆசிரியர் | அக்/ அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை, அட்டாளைச்சேனை |
| 2 | **மரபுக்கவிதை** | முதலிடம் | ஏன் மாறிப் போனதுவோ? | திரு. திருப்பாலசிங்கம் சிவலிங்கம் | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | பிராந்திய சுகாதார பணிப்பாளர் பணிமனை, மட்டக்களப்பு |
| | | இரண்டாமிடம் | புதுயுக மாற்றம் | திரு. எம்.எச். அலியார் | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | கட்டடங்கள் திணைக்களம், நிறைவேற்று எந்திரி காரியாலயம், கல்முனை |
| | | மூன்றாமிடம் | மரபும் மாற்றமும் | திரு. அருளானந்தம் சுதர்சன் | அபிவிருத்தி உத்தியோகத்தர் | பிரதேச செயலகம், சம்மாந்துறை |
| | | | காலம் நவின்ற பதில் | திரு. எம்.ஐ. அச்சிமுகம்மட் | ஆசிரியர் | கமு/சது/முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம், சம்மாந்துறை |
| 3 | **பாடலாக்கம்** | முதலிடம் | இயற்கையோடு இசைந்து வாழ்வோம் | திருமதி. ரதி தனஞ்செயன் | முகாமைத்துவ உதவியாளர் | பிரதேச செயலகம், மண்முனைப்பற்று, ஆரையம்பதி |
| | | இரண்டாமிடம் | சூழலைப் பேணுவோம், உயிர் காப்போம் | திருமதி. எம்.ஐ.எப் சர்மிளா | பட்டதாரி ஆசிரியர் | தி/மூ/புனித அந்தோனியார் மகா வித்தியாலயம் |
| | | மூன்றாமிடம் | சூழலைப் பேணுவோம், உயிர் காப்போம் | திரு. இலட்சுமணன் நாகலிங்கம் | ஆசிரியர் | தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி, திருகோணமலை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | சிறுகதை | முதலிடம் | ஹெக்டர் | திரு. சி. வீரசுதாகரன் | முகாமைத்துவ உதவியாளர் | விவசாயத் திணைக்களம், கிழக்கு மாகாணம் |
| | | இரண்டாமிடம் | கூடைக் கனவுகள் | முகம்மது சித்தீக் ஸீரின் சித்தாரா | முகாமைத்துவ உதவியாளர் | மாநகர சபை, கல்முனை |
| | | மூன்றாமிடம் | விடியலை நோக்கிய பயணம் | அஹமது முஹைதீன் முஹம்மட் ஸரினூஸ் | உதவி விடுதி அத்தியட்சகர் | மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரி |
| 5 | குறுநாடகம் | முதலிடம் | முயற்சி திருவினையாக்கும் | திரு. எம். ஐ. அகமட் லெவ்வை | ஆசிரியர் | கமு/சது/அல் - அர்சத் மகா வித்தியாலயம், சம்மாந்துறை |
| | | இரண்டாமிடம் | தொடர்பும் தொடர்பின்மையும் | திரு. நாராயணப்பிள்ளை நாகேந்திரன் | பிரதி அதிபர் | மட்/பட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம், களுவாஞ்சிக்குடி |
| | | மூன்றாமிடம் | மாடிக் கனவுகள் | திரு.ஜே.வஹாப்தீன் | ஆசிரியர் | அக்/அல் - ஹம்றா மகா வித்தியாலயம், ஒலுவில் |
| 6 | ஓவியம் | முதலிடம் | மாண்புறும் கிழக்கு மண் | திரு. நவரெத்தினம் வெஸ்லி அருள்சீலன் | அதிபர் | மட்/மட்/மஞ்சந்தொடுவாய் சாரதா வித்தியாலயம், மட்டக்களப்பு |
| | | இரண்டாமிடம் | கிழக்கு மாகாணத்திற்கே உரித்தான கலாசார விழுமியங்கள் | திரு.ஜயாத்துரை பகலவன் | முகாமைத்துவ உதவியாளர் | பிரதேச செயலகம், மண்முனை தென்மேற்கு, பட்டிப்பளை |
| | | மூன்றாமிடம் | வாழ்வியல் அம்சங்கள், இயற்கை வளங்கள் | திரு. இலியாஸ் அமீர் | திணைக்கள தொழிலாளி | கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், வாகரை |
| 7 | புகைப்படம் | முதலிடம் | ஏக்கம் | திரு. கோபாலப்பிள்ளை மோகனராஜன் | அபிவிருத்தி உத்தியோகத்தர் | பிரதேச செயலகம், பட்டினமும் சூழலும், திருகோணமலை |
| | | இரண்டாமிடம் | மட்டக்களப்பு நீர் வளம் | திரு. கோபாலப்பிள்ளை மோகனராஜன் | அபிவிருத்தி உத்தியோகத்தர் | பிரதேச செயலகம், பட்டினமும் சூழலும், திருகோணமலை |
| | | மூன்றாமிடம் | மயக்கும் மாலைப் பொழுது | திரு. சிவநேசராஜா கார்த்திகேயன் | அபிவிருத்தி உத்தியோகத்தர் | முதலமைச்சர் செயலகம், கிழக்கு மாகாணம் |
| | | | இயற்கை | திரு. ஆனந்தன் பாலமுரளிதரன் | ஆசிரியர் | மட்/கது/ திகிலிவெட்டை அ.த.க. பாடசாலை, சந்திவெளி, மட்டக்களப்பு |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வித்தகர் விருது தேர்வுக்கான நடுவர்கள்



## திரு. அருணாசலம் பரசுராமன் (சைவப் புலவர்)

ஆசிரிய சேவையில் உதவிப் பணிப்பாளராக கடமையாற்றி ஓய்வு பெற்ற இவர் சமயப் பணியினூடாக இலக்கியத் துறையில் காலடி வைத்தார். இந்து மத சிந்தனைகளை இன்றைய சமூதாயத்திற்கு உணர்த்தும் பல நூல்களை எழுதியுள்ளார். அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் திருகோணமலை வெளியீடான "சைவ நாதம்" நூலுக்கு ஆசிரியராவும் கொழும்பு மகரகம தேசிய கல்வி நிறுவகத்தின் பகுதி நேர எழுத்தாளராகவும், சைவசித்தாந்தம் (1,2), திருவாசகம் காட்டும் சைவநெறி, இருவினை ஒப்பு மலவரிபாகம், சக்தி நிவாதம், சைவசமயம் கற்பித்தல் முறை போன்ற நூல்களையும் "அஞ்ஞான இருளகற்றி மெய்ஞான ஒளியூட்டும் தீபத்திருநாள்", "பராசக்தியை பணிந்து போற்றி ஈடேற்றம் பெறுவோம்" "வினை தீர்க்கும் வெருகலம்பதி வேலவன்", "பசு வதையை தடை செய்வது குறித்து பொது விழிப்புணர்வு" போன்ற கட்டுரைகள் இவரது கட்டுரைகள் பல வீரகேசரி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. சைவப் புலவர் மணி, சைவப் புலவர், கலாபூஷணம், தேசகீர்த்தி, திருக்குறள் திலகம், சித்தாந்த பண்டிதர், வித்தகர் ஆகிய பட்டங்களையும் விருதுகளையும் பெற்றவர். இவர் அகில இலங்கை சமாதான நீதவானும் கடந்த கால மாகாண சபை உறுப்பினருமாவார்.



## திரு.பி. கனகரெத்தினம் (ஷெல்லிதாசன்)

தமிழ் இலக்கிய உலகில் தனக்கென தனித்துவமான இடம் வகித்து சுமார் நான்கு தசாப்த காலங்களுக்கு மேலாக எழுத்து உலகில் ஓயாது பயணித்து வரும் கனகரெத்தினம் எனும் இயற்பெயரையும் ஷெல்லிதாசன் எனும் புனைபெயரையும் கொண்ட இவர் மரபுக் கவிதை, சிறுகதை, மெல்லிசைப்பாடல், சிறுவர் பாடல் போன்ற பல்வேறுபட்ட கலை இலக்கியத் துறைகளில் தனது எழுத்தாற்றலை வெளிப்படுத்தி வருகின்றார் இவரது முதலாவது நூலான "செம்மாதுளம் பூ" எனும் நூல் கிழக்கு மாகாண இலக்கிய விருதை (2010) பெற்றுள்ளதுடன் சிறந்த கவிதை நூலாக அதே ஆண்டு "ஹொடகே" நிறுவனத்தினால் தேர்வு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். 2015இல் இவரால் வெளியிடப்பட்ட "வண்ண வண்ண பூக்கள்" எனும் சிறுவர் பாடல் நூல் சிறந்த சிறுவர் இலக்கியத்துக்குரிய அரச சாஹித்திய விருதையும், வவுனியூர். இரா.உதயணன் இலக்கிய விருதையும் தனதாக்கி சிறப்புப் பெற்றது. கிழக்கு மாகாண முதலமைச்சர் விருது, கலாபூஷணம் விருது, நகர முதல்வர் விருது பெற்ற இவர் சென்ற காலங்களில் பல்வேறுபட்ட இலக்கியப் போட்டிகளுக்கு நடுவராகவும் செயற்பட்டு வருகின்றார்.



## ஜனாப். ஜதுருஸ் அப்துல் ஹஸன்

கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகம், சிறுவர் இலக்கியம், நாவல். நாட்டாரியல், ஆய்வுக்கட்டுரை போன்றவற்றில் ஈடுபாடு கொண்ட இவரது ஆக்கங்கள் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வானொலியிலும் வெளிவந்துள்ளது. இவரது கவிதைத் தொகுப்பாக "நெஞ்சில் மலர்ந்த கவிதைகள்" வெளியீடு செய்யப்பட்டது. சமூக நல கலாமன்றம் ஒன்றினை அமைத்து பத்திற்கு மேற்பட்ட மேடை நாடகங்கள் எழுதி, நெறியாள்கை செய்து மேடையேற்றியுள்ளார். (சினிமாப் பாணி)யில் "இரு பயணங்கள்" திரைக்காவியத்திற்கு கதை, வசனம், இயக்கம் என்பவற்றுடன் நடிக்கவும் செய்து "அரங்கத்தாரகை", கலைச்சுடர்", "கலைத்தீபம்", போன்ற பட்டங்களையும், உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் "கிண்ணியா நாட்டார் பாடல்களின் இலக்கியத்தின் பங்களிப்பு" எனும் ஆய்வுக் கட்டுரைக்காக கடல் கடந்த இலக்கியத்திற்கான விருதினை இலங்கை முஸ்லீம் அமைப்பினால் வழங்கி இவரை கௌரவித்துள்ளது. மேலும் "சாதனையாளர்" "கலாபூஷணம்","வித்தகர்" போன்ற விருகளையும் பெற்றுள்ளார்.



## திரு. அழகையா இருதயநாதன்

மட்டக்களப்பினை பிறப்பிடமாக கொண்ட நடிகர், கவிஞர், எழுத்தாளர் எனப் பன்முக ஆளுமை கொண்டவர். கலைக்கோட்டன் எனும் புனைபெயரில் கவிதை, சிறுகதை, அம்மானை, கூத்து, மேடை நாடகம், தொலைக்காட்சி நாடகம், குறுந்திரைப்படம் ஆகிய அளிக்கைகளை முன்னெடுத்துள்ளார். "கலாபூசணம், வித்தகர்", "கலைக்கோட்டன்", "தேனக கலைச்சுடர்", "கொடகே விருது", "அதியுயர் ஜனாதிபதி சாரணர் விருது", "இயக்குநர் இமயம்" பாரதிராஜா விருது ஆகிய விருதுகளை தன் கலைப்பயணத்தில் பெற்றுள்ளார்.இவரது கலைப்படைப்புக்கள் மட்டக்களப்புப் பட்டணம் இன்னும் ஊரூராக அதன் குக்கிராமங்களில் மட்டுமல்ல வானொலி நிகழ்ச்சிகளிலும் தொலைக்காட்சிகளினூடாகவும் பிரபல்யமாயின. இவரது கலைப்பணியில் சைவ புராண நாடகங்களில் பக்த பிரகலதா, கண்ணப்ப நாயனார், சிலம்புச் செல்வி, கழுமரம் வென்ற காவலன் போன்ற நாடகங்களும், வரலாற்று நாடகங்களில் கடலோரக்காரிகை, சமூக நாடகங்களில் தெய்வத்தின் விழியில் நாடகம் குறிப்பாகக் கூறக் கூடியவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருமதி. யோகா யோகேந்திரன் (திருக்கோவில் யோகா யோகேந்திரன்)

திருக்கோவிலை பிறப்பிடமாக கொண்ட இவர் தினகரன் பாலர்கழக உறுப்பினராக ஆக்கங்களை எழுதியுள்ளதுடன் இளைஞர் மன்ற உறுப்பினராக சிறுவர் கதைகள், பாடல்கள், பொன்மொழிகளையும் எழுதினார். இவரது முதலாவது சிறுகதை "அங்கத்திலே ஒரு குறையிருந்தாலும்" என்னும் பெயரில் "சிந்தாமணி" வார இதழில் பிரசுரமானது. 1999 இல் இன விவகார பண்பாட்டு அமைச்சினால் இன ஒற்றுமை பற்றி எழுதிய சிறுகதைக்கு தேசிய ரீதியிலான 5ம் இடமும் சர்வதேச ரீதியில் அவுஸ்திரேலியத் தமிழ்ச் சங்கம் நடாத்திய போட்டியில் முதலாம் இடம் பெற்றார். சர்வதேச மட்டத்திலேயே இவர் மூன்று தடவைகள் முதலிடம் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. சர்வதேச பெண்கள் அமைப்பினால் சிறந்த பெண் எழுத்தாளர் விருது, திருக்கோவில் உதயசூரியன் விளையாட்டுக் கழக விருது, தம்பிலுவில் திருநாவுக்கரசர் விளையாட்டுக் கழக விருது, திருக்கோவில் "சோஷியல் விஷன்" அமைப்பினால் இலக்கிய சாதனையாளர் விருது, கிழக்கு மாகாண "முதலமைச்சர்" விருது, "கலாபூஷணம்" விருது ஆகியவற்றை பெற்றுள்ளார். பல்வேறு சிறுகதைத் தொகுப்புக்களையும், சிறுவர் பாடல் தொகுப்பினையும், புலமைப்பரிசில் பரீட்சைக்கான நூலினையும், நாவலையும், கவிதைத் தொகுப்பினையும் எழுதி வெளியிட்டுள்ளார்.



## திரு. மூத்ததம்பி அருளம்பலம் (ஆரையூர் அருள்)

ஆரையூர் அருள் எனும் புனைப்பெயரில் கலை இலக்கியத்துறையில் பிரவேசித்த இவர் கூத்து, நாடகம், இலக்கியம், கிராமியக் கலைகள் என பல்துறை விற்பனராக செயற்பட்டார். கலைத்துறையில் கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகங்கள், வில்லுப்பாட்டு, நாட்டுக்கூத்து, ஒலிப்பேழை, பாடலாக்கம், நூல்வெளியீடு, சார்ந்த ஆக்கப்படைப்பாளியாக வெளிப்பட்டவர். இவரது ஆக்க இலக்கியப் படைப்புகள் இலங்கையின் தேசியப்பத்திரிகைகள், சஞ்சிகைகளில் இடம் பிடித்து பரிசினைப் பெற்றுக் கொண்டன. 18 இற்கும் மேற்பட்ட நாட்டுக்கூத்துக்களில் நெறியாழ்கையாளராக செயற்பட்டுள்ளதுடன் இறைப்பரத்துவத்தை எடுத்தியம்பி கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆலயங்களின் ஆன்மீக நெறி தொடர்பில் ஒலிப்பேழை, இசைத்தட்டினூடாக இறையின்பப் பாவாரங்களைப் பாடலாக்கம் செய்த ஆன்மீக நெறியாளர், கிராமத்து உள்ளங்கள் (நாட்டாரியல்) உள்ளிட்ட 9 நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். "கூத்துக் கலைஞர்", "அண்ணாவியார்", "கலைஞானி", "இறைஞான தேசிகர்", "இறைக்கவிமாணி", "கலைச் செம்மல்", கவியரசர்", "பல்கலைமாமணி", "சமூக தீபம்", "கலைமாமணி", "செம்மொழிப்புலவர்" முதலான பட்டங்களுடன் "கீர்த்திசிறி", "முதலமைச்சர் விருது", "கலாபூ'ணம்", "சாதனையாளர்", "திறமைக்கான தேடல்" முதலான விருதுகள் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



## ஆசுகவி அன்புடீன்

அட்டாளைச்சேனையை பிறப்பிடமாகக் கொண்ட இவர் கவிதை, சிறுகதை, வானொலி, மேடை நாடகங்கள், விமர்சனம் போன்ற துறைகளில் ஈடுபாடுடையவர். கலாபூஷணம் விருது, முதலமைச்சர் விருது, சாகித்திய திகாமடுல்ல அபிமானி விருது, ஆசுகவி விருது, கவிமாமணி விருது, கவிச்செம்மல் விருது, உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு முதுகலைஞர் கௌரவிப்பு ஆகியவற்றின் சொந்தக்காரர். 'அன்னை மகிழ்கிறாள், முகங்கள் உள்ளிட்ட ஆறு கவிதை நூல்களையும் "நெருப்பு வாசல்" எனும் சிறுகதைத் தொகுதியையும் வெளியிட்டுள்ளதுடன் இலங்கை வானொலி கலைக் கோலம் முத்துப்பந்தல், இன்றைய அதிதி போன்ற நிகழ்ச்சிகளில் இவரது நேர்காணல்கள் ஒ(லி)லிபரப்பாகியுள்ளது. தினகரன், தினக்குரல், வீரகேசரி, முஸ்லிம் குரல், இசை உலகம், இடி போன்ற பல பத்திரிகைகளிலும் மல்லிகை சஞ்சிகையிலும் வெளிவந்த இவரது இலக்கிய பேட்டிகள் காத்திரமானவை. சமூகத்தில் இவர் ஆற்றிவரும் இலக்கியப் பணிகள் மிகவும் கனதியானவை.



## பாவாணர் அக்கரைப்பாக்கியன்

அக்கரைப்பற்றைப் பிறப்பிடமாகவும், பெரிய நீலாவணையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பாக்கியராஜா (அக்கரைப்பாக்கியன்) 1971 இல் சுதந்திர பத்திரிகையில் முதல் கவிதை பிரசுரமானதைத் தொடர்ந்து பல பத்திரிகைகளில் கவிதை வெளிவந்ததன் பிற்பாடு 1975 இல் "அக்கரை" என்னும் கவிதை நூலை வெளியிட்டார். அகில இலங்கை ரீதியாகவும் மாகாண மாவட்ட ரீதியாகவும் நடைபெற்ற பல போட்டிகளில் பங்குபற்றி பரிசுகளையும் பெற்றிருக்கின்றார். 2016 இல் ஏனாதிநாய நாயனார் அறப்பணி மன்றம் இவரது "மறைந்து போன அரசகுல மான்மியம்" என்னும் வரலாற்று நூலை வெளியிட்டது. கலாபூஷணம், முதலமைச்சர் விருதுகளை பெற்றுள்ள நூற்றிற்கும் மேற்பட்ட மெல்லிசைப் பாடல்களையும் இயற்றி பாவாணர், கலாஜோதி, கவிச்செல்வர், இரத்தின தீபம், கலைச்செம்மல், மெல்லிசைக் கவிஞர், வில்லிசைத் திலகம் முதலிய பட்டங்களையும் தனதாக்கியுள்ளார்.



## திரு.S.L.M.ஹனீபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த இலக்கிய நூல் தேர்வுக்கான நடுவர்கள்



## கலாநிதி அகளங்கன் (நா. தர்மராஜா)

ஓய்வு பெற்ற ஆசிரியரான இவர் நாற்பத்து ஆறு நூல்களை எழுதி வெளியிட்டவர். ஐநூறிற்கும் மேற்பட்ட கட்டுரைகளை தேசிய, மற்றும் பிராந்தியப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் எழுதியவர். நாற்பது ஆண்டுகால இலக்கிய அனுபவம் பெற்ற இவர் "கலாபூஷணம்", "தமிழ் மணி" முதலான இருபதிற்கும் மேற்பட்ட பட்டங்களை அரச, கலை இலக்கிய, சமூக, சமய அமைப்புக்களிடமிருந்து பெற்றவர். வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் விருது பெற்றவர். "அன்றில் பறவைகள்" வானொலி நாடக நூலுக்காகவும் "சின்னஞ் சிறிய சிறகுகள்" சிறுவர் இலக்கிய நூலுக்காகவும் அரச இலக்கிய விருது பெற்றவர். "அலைக்குமிழ்" நாவலுக்கும், "கங்கையின் மைந்தன்" நாடக நூலுக்கும் அரச இலக்கிய சிறப்புச் சான்றிதழ் பெற்றவர். மாகாண சிறந்த நூற் பரிசை தனது ஏழு நூல்களுக்காகப் பெற்றவர். தமிழ் நாட்டின் இலக்கிய விருதை "முற்றத்துக் கரடி" என்ற சிறுகதைத் தொகுப்புக்காகவும் கலை இலக்கிய பெருமன்றத்தின் "அறந்தை நாராயணன் பரிசை" "கங்கையின் மைந்தன்" என்ற நாடக நூலுக்காகவும் பெற்றவர். யாழ் இலக்கிய வட்டத்தின் "முத்தமிழறிஞர் சொக்கன்" விருதையும், "கலைப்பேரரசு எ.ரி. பொன்னுத்துரை விருதையும்", கொழும்பு கம்பன் கழக "நுழைபுலம் ஆய்வு" விருதையும் தனது ஆய்வுகளுக்காகப் பெற்றவர். கொடகே தேசிய சாகித்திய மண்டலம், தமிழியல் விருதுகள் என தனது நூல்களுக்கு விருது பெற்றவர். சமூக நாடகம், இலக்கிய நாடகம், நாட்டிய நாடகம், பா நாடகம், கவிதை, இசைப் பாடல், புனை கதை, சிறுவர் இலக்கியம், ஆய்வு, கட்டுரை, சொற்பொழிவு, புராண படனம் என பல துறைகளில் ஓயாது இயங்கிக் கொண்டிருப்பவர்.



## கலாநிதி எஸ். யோகராஜா

இவர் கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறை ஸ்தாபக உறுப்பினராகவும் அத்துறை முன்னை நாள் தலைவருமாக செயற்பட்டு வருபவருமாவார். ஈழத்து நவீன கவிதைகள் தொடர்பில் கலாநிதி பட்டத்திற்காக ஆய்வு மேற்கொண்டவர். 8 நூல்கள், 6 தொகுப்பு நூல்கள், 50ற்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளைப் படைத்துள்ளார். வெளிநாடுகளிலும் கருத்தரங்கு கட்டுரைகள் வாசித்துள்ளார். தமது நூல்களுக்கு பிரதேச மற்றும் சாஹித்திய விருதுகள் பெற்றுள்ளார். கருணையோகன் என்னும் பெயரில் படைப்பிலக்கியத் துறையில் பிரசித்தமானவர்.



## உமா வரதராஜன்

ஜெயகாந்தனின் "சில நேரங்களில் சில மனிதர்கள்" நாவல் பற்றிய விமர்சனக் கட்டுரை மூலம் 1973 இல், தன்னுடைய 17 வது வயதில் இலக்கிய உலகுக்கு அறிமுகமான இவர் தொடர்ந்து சிறுகதை, கவிதை, விமர்சனம், பத்தியெழுத்து, நாடகப்பிரதி, நடிப்பு, தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பு, மேடைப் பேச்சு, நாவல் ஆகிய துறைகளில் கடந்த பல வருடங்களாக இயங்கி வருபவர். தன் சிறந்த சிறுகதைத் தொகுப்புக்கான சாகித்திய மண்டல பரிசை பெற்றார். இந்து சமய, கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சு, "தமிழ் சாகித்திய விழா - 1993 இன் போது, கொழும்பில் "தமிழ் மணி" பட்டம் வழங்கி கௌரவித்தது. 2002 இல் இஸ்லாமிய ஆய்வு மையமும், ஸ்ரீலங்காவுக்கான தென் கிழக்கு ஆய்வமைப்பும் இலக்கியத் துறைக்கான விருதை வழங்கியது. இவரது படைப்புக்கள் ஆங்கிலம், ஜேர்மன், சிங்கள மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. வீரகேசரி "சமகாலத்தில்" இவர் எழுதிய திரைப்பட இரசனைக் கட்டுரைகள் 2015 ல் வெளியாகியுள்ளன. அண்மையில் தினக்குரல் பத்திரிகையில் இவருடைய புதிய நாவலில் இரண்டு பாகங்கள் வெளியாகின. தற்போது தினகரன் வார மஞ்சரியின் "பிரதிபிம்பம்" எனப்படும் கலை இலக்கிய விவகாரங்களுக்கான பக்கத்துக்குப் பொறுப்பாகவுள்ளார்.



## கனகர் இரத்தினம் கமலநாதன்

யாழ் தேசிய கல்வியில் கல்லூரி விரிவுரையாளரான இவர் நாடக இயக்குனராகவும், 8 குறும்படங்களின் இயக்குனராகவும் இருந்துள்ளதுடன் அவற்றின் கதை, எழுத்துகளையும் மேற்கொண்டுள்ளார். இவரால் 3 நாடகப் புத்தகங்கள் எழுதி வெளியிடப்பட்டுள்ளன. இவர் நாடக கலா வித்தகர் விருது பெற்றுள்ளதுடன் "ஆச்சி அச்சாப் பாட்டி" என்ற நூலை எழுதி கிழக்கு மாகாண விருதையும் பெற்றுள்ளார். "முதுசொம்"இ "குழந்தைகள் குதூகலிக்கும்" ஆகிய இவரது நாடகப்புத்தகங்கள் மாகாண விருதுகளை பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பேராசிரியர். அருணாசலம் சண்முகதாஸ்

யாழ் பல்கலைக்கழக தகைசார் வாழ்நாட் பேராசிரியரான இவர் விரிவுரையாளராக, பேராசிரியராக, முதுநிலை பேராசிரியராக பேராதனை மற்றும் யாழ் பல்கலைகழகங்களிலும், விருந்து நிலை பேராசிரியராக நைஜீரியா, ஜப்பான் பல்கலைகழகங்களிலும் பணியாற்றியுள்ளார். உலக தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளிலும் சர்வதேச கருத்தரங்குகளிலும் உலக பண்பாட்டு கருத்தரங்குகளிலும் பங்கேற்றுள்ளார். 1987 ஆம் ஆண்டு தமிழ் மொழி இலக்கண இயல்பு நூலுக்கு பரிசு பெற்றதுடன் இத்தி மரத்தாள் என்னும் நூலுக்கு "யாழ் இலக்கிய வட்டப் பரிசும் பெற்றார். மேலும், "சம்பந்தன்" விருது, "வடக்கு கிழக்கு மாகாணப் பரிசு", 2001 இல் "வட-கிழக்கு மாகாண ஆளுநர் விருது", 2008 இல் "சாகித்திய ரத்னா" விருதும் பெற்று கொண்டார். இவர் 25 இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளதுடன் 75 இற்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதியுள்ளதுடன் 200 இற்கும் மேற்பட்ட ஆய்வுகளுக்கும் ஆய்வு மேற்பார்வையாளராகவும் செயற்பட்டுள்ளார்.



## திரு. சின்னத்துரை சந்திரலிங்கம் (திருமலை சுந்தா)

சிறந்த இலக்கியவாதியான இவர் தனது பதினைந்தாவது வயதில் இருந்து இன்று வரை இலக்கிய ஆக்கங்களை எழுதி வருபவர். 250 இற்கு மேற்பட்ட சிறுகதைகளையும், கவிதைகளையும் ஈழத்தில் இருந்து வெளிவந்த சஞ்சிகை, பத்திரிகைகளில் எழுதியுள்ளதுடன் ஊடகவியலாளராக பல ஊடகங்களில் பணியாற்றி பலரை நேர்காணலும் செய்துள்ளார். இவரது கதைகள், சின்னஞ்சிறு கதைகள், நாடகங்கள், தினகரன், வீரகேசரி, சிந்தாமணி நாள் இதழ்களில் வெளிவந்துள்ளன. சிறந்த பேச்சாளரான இவர் அம்மா பதிப்பகத்தின் மூலம் 26 நூல்களை வெளியிட்டுள்ளார். வடக்கு கிழக்கு கல்வி, விளையாட்டுத்துறை அமைச்சு இவரின் "விழியோரக் கனவுகள்" என்ற சிறுகதைத் தொகுப்பினை 2004 ஆம் ஆண்டு வெளியிட்டது. "வேங்கி" என்கின்ற சிறுகதைத் தொகுப்பு மித்திரன் சஞ்சிகை வெளியிட்டது. எழுத்தாளராக, கவிஞராக பேச்சாளராக, நூலாசிரியராக பல் துறை சார்ந்து இலக்கிய சேவையாற்றி வரும் இவர் கலாபூஷணம் விருதினையும் நகர முதல்வர் விருதான " கலா வித்தகர் விருதும்" கிழக்கு மாகாண கல்வியமைச்சின் "வித்தகர்" விருதும் பெற்றுள்ளார்.



## பேராசிரியர் கி. விசாகரூபன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மேனாள் தமிழ்த்துறைத் தலைவர். நாட்டார் வழக்காற்றியல் - ஓர்அறிமுகம், சங்க இலக்கியம், தமிழில் அகத்திணைக் கவிதை மரபு, யாப்பிலக்கண மரபில் கலிப்பா, தொடர்பாடல், ஈழத்துத் தமிழ் நாவல்களில் நாட்டார் பண்பாட்டுக் கூறுகள், ஈழத்துத் தமிழ் நாட்டுப்புறக்கதைகள், புலம்பெயர் கவிதை முதலான பல்வேறு நூல்களின் ஆசிரியர். கணிசமான ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ள இவர், கனடா, இலண்டன், ஜேர்மனி, டென்மார்க், சுவீடன், இந்தியா முதலான நாடுகளில் நடைபெற்ற சர்வதேச ஆய்வரங்குகளில் பங்குபற்றியுள்ளார். பழந்தமிழ் இலக்கியம், நாட்டார் வழக்காற்றியல், தமிழர் பண்பாடு தொடர்பாகத் தொடர்ந்தும் ஆய்வுகளை நிகழ்த்தி வருகிறார்.



## திரு. கே.ஆர்.டேவிட்

இவர் ஆரம்ப காலத்தில் இலக்கியத்துறையிலும், நாடகத்துறையிலும் ஆர்வமுடையவராக இருந்து பின்னர், ஓவியம், சிற்பம், போன்ற துறைகளில் சிறந்து விளங்கினார். இன்றும் இவரது ஓவியங்கள் வட பகுதில் உள்ள சனசமூக நிலையங்கள், வீடுகளில் காணப்படுகின்றன. 1966 ஆம் ஆண்டு சுதந்திரத்தின் பத்திரிகையில் வெளியான முதலாவது சிறுகதையான புகலிடம், செங்கை ஆழியான், க.குணராசா அவர்களினால் தொகுக்கப்பட்ட சிறுகதைகளும் இடம்பெற்று இருந்தது குறிப்பிடத்தக்க விடயமாகும். இவரது சிறுகதைகள் வீரகேசரி, தினகரன், தினபதி, தினக்குரல், ஈழநாடு, ஈழநாதம், முரசொலி போன்ற பல பத்திரிகைகளிலும், வெளிவந்துள்ளதுடன், மல்லிகை, சிரித்திரன், சுடர், களனி, கலைமுகம், ஞானம் முதலிய சஞ்சிகைகளிலும், வானொலி மஞ்சரி போன்ற வானொலி நிகழ்ச்சிகளிலும், ஒலிபரப்பப்பட்டுள்ளன. கல்வி அமைச்சினால் 2009 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட புதிய பாடத்திட்டத்தில் ஆண்டு எட்டு தமிழ் மொழியும் இலக்கியமும் என்ற நூலில் "எழுதப்படாத வரலாறு" என்ற இவரது சிறுகதை இடம்பெற்றுள்ளது. இவர் "கனகசெந்தி கதா விருது", "கலாபூஷணம்", "தமிழியல் விருது", "சான்றோர் விருது", "கொடகே சாகித்திய விருது" போன்ற பல விருதுகள் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குழந்தை. ம. சண்முகலிங்கம்

ஈழத்துத் தமிழ் நவீன அரங்க வரலாற்றில் நாடகத்துறையினுள் நுழைந்த அன்றிலிருந்து (1950) இன்று வரைக்குமான நடிகராக, நாடகாசிரியராக, நெறியாளராக, தயாரிப்பாளராக, ஆய்வாளராக, நாடகப்போதானாசிரியராக, நாடகக் களப்பயிற்சியாளராக, விமர்சகராக, உலக நாடக வரலாற்றாசிரியராக, மொழிபெயர்ப்பாளராக, நாடக அரங்கக் கல்லூரி நிறுவுனராக என பல்பரிமாணமுடையவராக விளங்குகின்றார். நாடகத்துறைக்காற்றி வரும் பணிக்காக கிழக்குப் பல்கலைக்கழகம் கலாநிதி (முனைவர்) பட்டம் வழங்கியிருந்தது. இவர் ஈழத்துத் தமிழ் நாடக உலகில் நூற்றி ஐம்பதிற்கு மேற்பட்ட நாடக எழுத்துருக்களை எழுதியுள்ளார். ஈழத்துத் தமிழ் நாடக அரங்க வரலாற்றில் முதன் முதலில் உளவியல் நாடகங்களையும் சிறுவர் நாடகங்களையும் எழுதிய பெருமை இவரையே சாரும். ஏழு நாடகத் தொகுப்பில் உள்ள சண்முகலிங்கத்தின் நான்கு நாடகங்களாக மாதொருபாகம், தாயுமாய் நாயுமானார், புழுவாய் மரமாகி, எங்கள் தவப்பயன் என்பன உள்ளன. "நாடகத்தை நோய்தீர்க்கும் முறையாக (Theraphy) பாவிக்கும் முறையினை ஈழத்து தமிழ் நாடக உலகில் சண்முகலிங்கம் கையாள்கின்றார்.



## திருமதி. சாந்தி கேசவன்

யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தில் இளமாணிப் பட்டத்தைப் பெற்று, ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றி பட்டப்பின் படிப்பு கல்வியல் டிப்ளோமா(PGDE), தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முதல் தர சித்தியுடன் (Distinction) முதுமாணிப் பட்டம் பெற்று, கொழும்புப் பல்கலைகழகத்தில் உயர்கல்வி கற்பித்தல் முறைக்கான சான்றிதலையும் (HETC) பெற்றார். கலாநிதி(PhD) பட்ட ஆய்வினை பேராதனைப் பல்கலைகழகத்தில் சமர்ப்பித்துள்ளார். இந்து சயமம், இந்து நாகரிகம் எனும் தலைப்பில் பதினொரு நூல்களை வெளியிட்டுள்ளார். தேசிய சர்வதேச மட்டத்தில் (இலங்கை, இந்தியா, மலேசியா, சுவிற்சலாந்து) 55 ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளார். இந்தியா பச்சையப்பன் கல்லூரியும், காஞ்சிபுரம் தமிழ் ஐயா மகளிர் கல்லூரியும் இணைந்து நடத்திய சிறந்த ஆய்வுக் கட்டுரைக்காக "அயல் நாட்டறிஞருக்கான தெய்வத் தமிழ் அருளொளி" விருதினையும் பெற்றவர். கல்வியமைச்சு, இசுறுபாயாவில் கல்வி ஆலோசணைக்குழு உறுப்பினர்களுள் ஒருவராக கடமையாற்றும் இவர் கொழும்பு தேசிய நூலகத்து ஆய்வு நூல்களுக்கான மதிப்பீட்டு உறுப்பினர்களுள் ஒருவராகவும் சேவையாற்றுகின்றார்.



## திருமதி றூபி வலன்ரீனா பிரான்சிஸ்

கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றும் இவர், ஈழத்துப்பூதந்தேவனார் தமிழ்க் கழகத்தினால் 'செம்மொழிப் புலமையாளர்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். இவர் இலங்கையிலும் தமிழ்நாடு, மலேசியா, சிங்கப்பூர், இலண்டன் ஆகிய இடங்களிலும் நடைபெற்ற தேசிய மற்றும் சர்வதேச கருத்தரங்குகளில் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார். 'குடும்ப நல்லுறவு' என்னும் இவரது சிறிய கதைகள் (45) அடங்கிய தொகுப்பு 2015இல் வெளிவந்தது. கவிதை, சிறுகதை ஆகிய துறைகளில் ஆக்கங்களைப் படைத்துள்ள இவர், விமர்சனத் துறையிலும் பெரும் பங்களிப்பினைச் செய்து வருகின்றார். சுமார் 75இற்கும் மேற்பட்ட இலக்கிய நூல்களுக்கான விமர்சனவுரையினை இவர் ஆற்றியுள்ளார். இலங்கை தேசிய கல்வி நிறுவகத்தில் வளவாளராக விளங்கும் இவர், மட்டக்களப்பு கிறிஸ்தவ கலை இலக்கியப் பேரவையின் செயற்குழு உறுப்பினராகவும், மட்டக்களப்பு பொது நூலக ஆலோசனைச் சபையின் உறுப்பினராகவும் செயற்பட்டு வருகின்றார்.



## கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்

சிறந்த பேச்சாளர், கவிஞர் என பல தளங்களில் இயங்கும் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் முதுநிலை விரிவுரையாளரான இவர், முன்பு ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளராகக் கடமையாற்றியவர். அகில இலங்கைக் கம்பன் கழக அமைப்பாளராக மிகச்சிறப்பாக செயற்பட்டு வரும் இவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றவர். மிகச்சிறந்த பெறுபேறுகளுக்காக "ஆறுமுகநாவலர் புலமைப்பரிசில்," பேரா.கணபதிப்பிள்ளை பரிசில், கிங்ஸ்பெரி பரிசில் முதலிய பரிசில்களைப் பெற்றவர். இலங்கைத் துணைவேந்தர்கள் சங்கத்தினால் மிகச்சிறந்த 'இளம் ஆய்வாளர் விருது' வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். உயர் கம்பன் முதலிய 5 நூல்களின் ஆசிரியர். 'நிமிர்நடை' முதலிய 3 கவிதைத் தொகுப்புக்களைத் தந்தவர். இவர் தொகுத்த இருபதாம் நூற்றாண்டு ஈழத்துக் கவிதைகள் எனும் தொகுப்பு தமிழுலகின் பரவலான கவனத்தைப் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### திரு. முத்து இராதாகிருஷ்ணன்

சிறுகதை எழுத்தாளர், ஓவியர், நாடக அரங்கவியலாளர், கல்வியிலாளர், உளவள வழிப்படுத்துனர் என பன்முகப்பட்ட ஆளுமையுடன் திகழும் இவர் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் சிரேஷ்ட அதிகாரியாவார். மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளராக கடமையாற்றிய காலத்தில் முன்பள்ளிக் கல்வியில் அரங்கியல்சார் செயற்பாடுகளுக்காக காத்திரமான பங்களிப்பை வழங்கியவர். இவரது 'மானிடச்சிக்கல்' என்ற நாடகநூல் 1998இலும், 'சிறுவர் அரங்கு' என்ற நூல் 2002 இலும், 'துயரப்பாறை' என்ற நாடக நூல் 2008இலும், 'பசுமைத்தாயகம்' என்ற சிறுவர் இலக்கிய நூல் 2009இலும் தேசிய சாகித்தியப் பரிசில்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அரங்கியல் ஊடாக மாணவர் கல்வி செயற்பாட்டை முன்னெடுத்து வரும் இவர் பாடசாலை சிறுவர் நாடக செயற்பாடுகளையும், நாடகங்களையும், நெறியாழ்கை செய்துவருபவர். கற்றல், கற்பித்தல், தொடர்பாகவும் சிறுவர்களின் சுயாதீனம், சுதந்திர செயற்பாடு பற்றியும் ஆழமான புரிதல்களை கொண்ட ஒரு ஆய்வாளராக இவர் கலையுலகில் இயங்கி வருகின்றார்.



### திரு.S.L.M.ஹனீபா

ஓட்டமாவடியை பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஒரு வாசகரும், விமர்சகருமாவார். 1992 இல் தமது "மக்கத்துச் சால்வை" சிறுகதைத் தொகுதிக்காக தமிழ் நாடு "லில்லி தேவசிகாமணி" விருதும் இலங்கை அரசின் "சாகித்திய" விருதையும் பெற்றவர். இவரது "மக்கத்துச்சால்வை" சிறுகதை இலங்கை அரசின் தமிழ் மொழிப்பாடத்திட்டத்தில் 15 வருடங்களாக இடம் பிடித்து பல இலட்சம் மாணவர்களால் வாசிக்கப் பட்டுள்ளது. சில வருடங்களுக்கு முன் இவரின் மிகச்சிறந்த இருபத்தைந்து (25) கதைகள் கொண்ட "அவளும் ஒரு பாற்கடல்" தொகுதியை தமிழ் நாடு "காலச்சுவடு" பதிப்பகம் வெளியிட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. பிரதேச கலாசார சஞ்சிகைகளுக்கு இவர் தொடர்ந்தும் தனது எழுத்துத் துறைப் பங்களிப்பை நல்கி வருகிறார். எழுத்துத்துறை தவிர இஸ்லாமிய பாரம்பரிய கலைகளின் நுணுக்கங்களில் தேர்ந்த இவர் அறிவு கொண்டவராக விளங்குகிறார். இலங்கையில் மட்டுமல்லாது சர்வதேச மட்டத்தில் மிகவும் அறியப்பட்ட எழுத்தாளர்களில் இவரும் ஒருவர்.



### கலாநிதி வல்லிபுரம் கனகசிங்கம்

திருகோணமலை வளாக முதல்வரும் கிழக்கு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரும் ஆவார். தனது 22 வருட கற்பித்தல், ஆய்வு, நடவடிக்கைகளுடன் நிறுவன ஆலோசனை யாளராகவும் கடமையாற்றியுள்ளார். இரு தடவைகள் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ துறையின் துறைத்தலைவராக சேவையாற்றியதுடன், வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதியாகவும் கடமையாற்றிள்ளார். இவர் எழுதிய நூல்களில் "நவீன முகாமைத்துவ நடைமுறைகள்", "சமகால முகாமைத்துவம்" நூல்கள் என்பவை பிரபல்யமானவையாகும். "முகாமைத்துவ ஆய்வுகளில் உள்ள தற்போதைய பிரச்சனைகள்" (2017) என்ற ஆய்வு நூலின் இணை ஆசிரியரும், "இலங்கை இந்திய பொருளாதாரம்" (2015) என்ற நூலின் துணை ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், தாய்லாந்து, இந்தியா, மலேசியா, நோர்வே அடங்கலாக 15 க்கும் மேற்பட்ட சர்வதேச ஆய்வு மாநாடுகளிலும் 40க்கும் மேற்பட்ட உள்நாட்டு, சர்வதேச ஆய்வு கருத்தரங்குகளிலும் பங்குபற்றி உள்ளார். இவரின் 30 க்கு மேற்பட்ட ஆய்வு கட்டுரைகள், உள்நாட்டு மற்றும் சர்வதேச சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளது.



### பேராசிரியை (திருமதி) அம்மன்கிளி முருகதாஸ்

தமிழ்த்துறைப் பேராசிரியையான இவர் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மொழித்துறை தலைவராக கடமையாற்றுகின்றார். 'சங்கக் கவிதையாக்கம் மரபும் மாற்றமும்' எனும் நூலை எழுதி வெளியிட்டுள்ளதுடன், 'இலங்கை தமிழரிடையே வாய்மொழி இலக்கியம்', 'ஈழத்து நாடக அரங்கப் பாரம்பரியம்' (பேராசிரியர் சிவத்தம்பி நாடக நூல்களுக்காக எழுதிய முன்னுரைகளின் தொகுப்பு), 'திருக்குற்றால குறவஞ்சி' உள்ளிட்ட ஏழு நூல்களை பதிப்பித்துள்ளார். 'பண்டைத்தமிழ் சமூகத்தில் நாடகம்', 'பெண்களின் நிலம்' உள்ளிட்ட 5 நூல்களை மொழிபெயர்த்துள்ளார். பல்வேறு நூல்களிலும் சஞ்சிகைகளிலும் ஆக்கங்களை எழுதியுள்ள இவர் பல்வேறு உள்நாட்டு மற்றும் சர்வதேச கருத்தரங்குகளிலும் ஆய்வுக் கட்டுரைகள் பலவற்றை சமர்ப்பித்துள்ளார். பண்டைத்தமிழ் சமூகத்தில் நாடகம் எனும் நூலை மொழிபெயர்ப்புச் செய்தமைக்காக 2005இல் 'தமிழ்நாடு மாநில அரச' விருதினையும், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சிறந்த கலாநிதிப்பட்ட ஆய்வுக்காக 'தி.த. கனகசுந்தரம்பிள்ளை' விருதினையும் பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## டாக்டர்.தி.ஞானசேகரன்

பல்துறை ஆளுமை மிக்க இவர் சிறுகதையாசிரியர், நாவலாசிரியர், பயண இலக்கிய ஆசிரியராக, தொகுப்பாளராக, வெளியீட்டாளராக, பதிப்பாசிரியராக இலக்கியத்தின் பல தளங்களில் இயங்கி வருபவர். ஈழத்து இலக்கிய உலகில் தனக்கென புதிய வியூகம் அமைத்து செயல்படும் இவர் கடந்த 52 வருடங்களாக தான் பெற்ற இலக்கிய உலக அனுபவங்களின் வெளிப்பாடாக பல காத்திரமான பணிகளை ஆற்றிவருகின்றார். அவுஸ்ரேலிய பயணக்கதை, வடக்கிந்திய பயண அனுபவங்கள் போன்றவற்றை இலக்கிய பூர்வமாக எமக்கு தந்துள்ளார். ஞானம் பதிப்பகத்தின் ஸ்தாபகராக இருந்து இவர் ஆற்றும் பணி அளப்பரியது. இதுவரை 43 நூல்களைத் தொகுத்தும், பதித்தும் அவர் வெளியிட்டுள்ளார். ஈழத்து நவீன இலக்கிய சிறப்பிதழ், ஈழத்துப் போர் இலக்கிய சிறப்பிதழ், ஈழத்து புலம்பெயர் இலக்கிய சிறப்பிதழ், ஈழத்து தமிழ் நவீன இலக்கியவெளி நேர்காணல்கள் என்பவை ஈழத்து தமிழ் இலக்கியத்துக்குரிய ஆவணங்களாகும்.



## பேராசிரியர். பரமு புஷ்பரட்ணம்

சிரேஷ்ட பேராசிரியரான இவர் யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையிலே தொல்லியல் இணைப்பாளராகக் கடமையாற்றி வருகிறார். வட மாகாணத்திற்கான மத்திய கலாசார நிதியப் பணிப்பாளரும் மற்றும் இலங்கைத் தொல்லியற் திணைக்கள யாழ்ப்பாணக் கோட்டை மீள்புனரமைப்புத் திட்டத்தின் பிரதான ஆலோசகர்களில் ஒருவரும் ஆவார். தென்னாசியாவின் தலைசிறந்த தொல்லியல் அறிஞர்களில் ஒருவரான பேராசிரியர் வை.சுப்பராயலுவின் வழிகாட்டலில் தனது கலாநிதிப் பட்டத்தைப் பெற்றவர். தமிழரின் பூர்வீக வரலாற்றைத் தொல்லியல் அகழ்வாய்வின் மூலம் வெளிக்கொணர அயராது உழைத்து வரும் இவர் அந்த ஆய்வுகளின் மூலம் முன்வைத்த முடிவுகள் பல இன்று அறிஞர்கள் பலரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இவர் எழுதிய பூநகரி - தொல்பொருளாய்வு, தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு, இலங்கைத் தமிழரின் பண்டைய கால நாணயங்கள், தொல்லியல் நோக்கில் ஈழத் தமிழரின் மதமும் கலையும், இலங்கையில் தமிழும் தமிழரும், தமிழ் எழுத்தின் தோற்றம் ஈழத்தில் இருந்து தமிழகத்திற்கு முதலான நூல்களும் ஈழத்தமிழர் வரலாற்றை ஆய்வு செய்ய விரும்புபவர்களுக்கு மேலும் பயனுள்ளதாக உள்ளது.



## ஜனாப்.உ.ஆ.புஹாரி மௌலவி

இலங்கையில் மிகச் சிறந்த கவிஞர்களில் ஒருவர். மிக இயல்பாக கவி வடிப்பதிலும், பாடல்களை வடிப்பதிலும் வல்லவர். கடந்த பல தசாப்தங்களாக இலங்கை வானொலி முஸ்லீம் சேவையில் "வரலாற்றில் ஓர் ஏடு" நிகழ்ச்சியை வழங்குபவர். புலவர் மணி அல்ஹாஜ் ஆ.மு.' ரீப்தீன் நூற்றாண்டு நினைவாக அண்மையில் நடாத்தப்பட்ட சர்வதேச மரபுக் கவிதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றவர். புகழாரம், மூத்தாரம், முழுமதி, நபிமொழி, சாந்தி மார்க்கத் தீர்ப்புக்கள், வரலாற்றில் ஓர் ஏடு, தேன் துளிகள், நன்நெறி கூறும் நபிமொழி நூறு போன்ற பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். ஸஹீஹ் புஹாரியில் உள்ள 500 ஹதீஸ்களை தமிழ் மொழியில் கவிதையாக்கி "புஹாரியின் பொன் மலர்கள்" என்னும் நூல் வெளியீட்டுக்கு தயாராக உள்ளது. பல இஸ்லாமிய இலக்கிய மாகாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளையும் இவர் சமர்ப்பித்துள்ளார்.



## பேராசிரியர் றமீஸ் அப்துல்லா

இவர் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முதுநிலை விரிவுரையாளராகக் கடமையாற்றுவதோடு மொழித்துறையின் தலைவராகவும் செயற்படுகின்றார் பொதுசனத் தொடர்பாடல் துறையில் கலாநிதிப் பட்டத்தை ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்டார். "கிழக்கிலங்கை கிராமியம்" எனும் நூலினை எழுதிய இவர், பல்வேறு சஞ்சிகைகளினதும், வெளியீடுகளினதும் ஆசிரியருமாவார். தமிழ் இலக்கியம், சமூக நல்லிணக்கம், அரசியல், இதழியல் தொடர்பாகப் பல்வேறு கட்டுரைகளைச் சர்வதேச, தேசிய மாநாடுகளில் சமர்ப்பித்துள்ளார்.

# கடந்த வருட இலக்கிய விழா - 2016 நிகழ்வின் நிழல்கள்















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வரங்கம்

## ஆய்வரங்க தலைப்பு : கிழக்கின் சமகால இலக்கிய முயற்சிகள்

### ஆய்வாளர்களின் விபரம்

**தலைமை : கவிஞர். சோ. பத்மநாதன், ஓய்வு நிலை அதிபர், பலாலி அரசினர் ஆசிரியர் கலாசாலை**

| இல | ஆய்வுத் தலைப்பு | ஆய்வாளர் பெயர் | பதவி |
|---|---|---|---|
| 1 | "கிழக்கிலங்கை பின் - நவீனத் தமிழ்ச் சிறுகதை வெளி" | திரு.எம்.ஜி.்ப்ரி ஹாஸன் | ஆசிரியர் |
| 2 | "மட்டக்களப்பின் அண்மைக்கால புதிய அரங்கச் செயல்நெறிகள்" | கலாநிதி.சு.சிவரெத்தினம் | விரிவுரையாளர்,<br>சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம், |
| 3 | "எமக்கான சினிமாவும் கிழக்கு மாகாணமும்" | திரு. காசிநாதர் ஞானதாஸ் | திரைப்பட படைப்பாளி |
| 4 | "சமூக மாற்றமும் கிழக்கிலங்கைத் தமிழ் பேசும் மக்களின் நாட்டார் கலை இலக்கியங்களும்" | கலாநிதி. எஸ். சந்திரசேகரம் | சிரேஷ்ட விரிவுரையாளர்,<br>கிழக்கு பல்கலைக்கழகம் |

**தலைமை : திருமதி. றூபி வலன்ரினா பிரான்ஸிஸ், சிரேஷ்ட விரிவுரையாளர், மொழித்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்**

| இல | ஆய்வுத் தலைப்பு | ஆய்வாளர் பெயர் | பதவி |
|---|---|---|---|
| 1 | "இரண்டாயிரத்திற்கு பின்னரான கிழக்கிலங்கைச் சிறுகதைகளும், சிறுகதை எழுத்தாளர்களும் - ஒரு பார்வை" | திரு.ஏ.எம்.றியாஸ் அஹமட் | சிரேஷ்ட விரிவுரையாளர், கிழக்கு பல்கலைக்கழகம் |
| 2 | "மூடு திரை விலக்கி: கிழக்கின் சமகால பெண்ணெழுத்து" | செல்வி. கே.எல்.பாத்திமா ந.்ப்லா | துணை விரிவுரையாளர், தென்கிழக்கு பல்கலைக்கழகம் |
| 3 | "கிழக்கிலங்கையின் சமகால நாவல்கள் - ஒரு நோக்கு" | திரு. அப்துல் றஸாக் | ஆசிரியர் |
| 4 | "கிழக்கின் சமகால கவிதைகளின் புனைவும், யதார்த்தமும்" | செல்வி. த. உருத்திரா | ஆசிரியை |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆய்வரங்கம் - ஆய்வுச்சுருக்கம்

## எமக்கான சினிமாவும் கிழக்கு மாகாணமும்

**திரு ஞானதாஸ் காசிநாதர்**

நீண்ட காலத்துக்கு முன்னரே ஆரம்பித்து விட்ட இலங்கைத் தமிழ்ச் சினிமா அல்லது எமக்கான சினிமாவுக்கான முயற்சியானது இன்று ஒரு காத்திரமான, காரசாரமான பேசுபொருளாக பரிணமித்துள்ளது. சினிமா எனும் நவீன கலையானது பல கலைகளின் கூட்டு வடிவமாகும். இது ஒரு கலைமட்டுமல்ல. கைத்தொழில் புரட்சிக் காலகட்டத்தில் தோன்றிய ஒரு கலைப்புரட்சியும் ஆகும். இந்தியா இலங்கை போன்ற நாடுகளைப் பொறுத்தவரை இந்த நவீன கலையின் வருகை ஒரு பெரும் சமூகம் புரட்சியும் கூட.

மேட்டுக்குடியினருக்கும் உயர் சாதியினருக்கும் தனியான கலை நிகழ்ச்சிகளும் சபாக்களும், இயங்கி கொண்டிருந்த காலத்தில் சாதி வேறுபாடு, அந்தஸ்து வேறுபாடு, படித்தோர் - பாமரர் வேறுபாடுகளை எல்லாம் களைந்து அனைத்து தரப்பினரையும் ஒரே குடையின் கீழ், ஒரே கொட்டகைக்குள் இருந்து கலையை சுதந்திரமாக அனுபவிக்க வைத்தது சினிமாதான்.

எனவே ஒரு சமூகம் அல்லது இனம் தனக்கான சினிமாவை உருவாக்கிக் கொள்வதற்கு இரண்டு அடிப்படைப் பண்புகளை அந்த சமூகம் அல்லது இனம் கொண்டிருக்க வேண்டியுள்ளது. ஒன்று சினிமா ஒரு கூட்டுக்கலை என்னும் வகையில் அதற்கு தேவையான வளமான பாரம்பரிய கலைப்பின்புலம். மற்றது சமூகத்தின் பழைய சமூக இறுக்கங்கள், ஒடுக்குமுறைகள், குறுகிய மனோபாவங்களைக் கடந்து செல்லக் கூடிய சமூக, பண்பாட்டு, பொருளாதரப் பின்புலம்.

இந்த அடிப்படையில் நோக்கும் போது எமக்கான சினிமாவை உருவாக்கும் முயற்சியில் கிழக்கு மாகாணம் முக்கியத்துவம் பெறுகிறது. மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இன்றும் நடைமுயில் இருந்து வரும் பாரம்பரிய கலைப்பண்பாடுகளும், அந்த பண்பாடுகளுடன் இணைந்த மக்களின் வாழ்வியலும், திருகோணமலைப் பிரதேசத்துக்குரிய நிலமானிய வாழ்க்கை முறை மனோபாவங்களில் விடுவித்துக் கொண்ட நகர வாழ்வியலும் மனோபாவங்களும் எமக்கான சினிமாவை வளர்த்தெடுக்கக் கூடிய மிகப் பொருத்தமான கேந்திரமாக கிழக்கு மாகாணத்தை அடையாளப்படுத்தி நிற்கிறது.

"எமக்கான சினிமாவும் கிழக்கு மாகாணமும்" எனும் இவ் ஆய்வானது சினிமா வேர்விட்டு தளைக்கும் வகையில் கிழக்கு மாகாணம் இயல்பாக கொண்டுள்ள தட்ப வெப்ப நிலைமைகள், தகைமைகள் பற்றியும் இதுவரை கிழக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் சினிமா முயற்சிகள் பற்றியும் ஆராய்வதுடன் மேற்கொண்டு எமக்கான சினிமா முயற்சியை முன்னெடுப்பதற்கான எதிர்கால செயற்திட்டத்திட்டத்தையும் முன்மொழிகின்றது.

## கிழக்கிலங்கை பின் - நவீனத் தமிழ்ச் சிறுகதை வெளி

**ஜிஃப்ரி ஹாஸன்**

இன்றைய தமிழ்ச் சிறுகதைகளை அதன் வடிவம் (form) (பெரும்பாலும் கூறுமுறை) மற்றும் உள்ளடக்கம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மூன்று வகையினமாகக் குறிக்கலாம்.

1. தனி நவீன கதைகள்.
2. நவீனத்துவம் மற்றும் பின்நவீனத்தும் எனும் இரு பண்புகளையும் கொண்ட கதைகள்
3. தனிப் பின்-நவீனக் கதைகள்.

தமிழின் நவீன சிறுகதை எழுத்தாளர்கள் எல்லோரும் நவீனத்துவம் (*modernism*) வரைந்த எல்லைக்குள்ளேயே மிக நீண்ட காலமாக நின்று கொண்டு தம் எழுத்துச் செயற்பாட்டை முன்னெடுத்தனர். ஏறத்தாழ நூறு ஆண்டுகள் எனும் ஒரு நீண்ட யுகம் தமிழில் தனி நவீன கதைகளின் காலமாகவே இருந்து வந்தது.

பின்னர் அந்த நிலைமை தமிழவன், ரமேஷ்-பிரேம், எம்.டி. முத்துக்குமாரசாமி, எம்.ஜி. சுரேஷ், சாரு நிவேதிதா போன்றவர்களால் மீறப்பட்டு தமிழ்ச் சிறுகதைகள் நவீனத்துவத்தைத் தாண்டி கொண்டு செல்லப்பட்டன. அவர்கள் தெளிவாக நவீனத்துவத்தின் எல்லைக்கோடுகளை மீறி தமிழில் புதிய கதை உலகுக்கான பாதையை வரைந்தனர். நவீன இலக்கிய விமர்சகர்களின் கடுமையான தாக்குதலை வெற்றிகரமாக முகங்கொடுத்தே தமிழில் அந்தப் புதிய உடைப்பு நிகழ்த்தப்பட்டது.

இலங்கையைப் பொறுத்தவரை வடக்கு-கிழக்குப் படைப்பாளிகளே பின்-நவீனச் சிறுகதைகளை பரிசோதனை முயற்சிகளாக எழுதத் தொடங்கினர். கிழக்கிலங்கையில் பின்-நவீன தமிழ்ச் சிறுகதை முயற்சிகள் இரண்டாயிரத்தி ஐந்துக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் அதற்கு முன்னரே நவீன தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்களின் ஓரிரு சிறுகதைகள் பின்-நவீனத் தன்மை கொண்ட கதைகளாக தோற்றங்கொண்டிருந்தன. எஸ். நஸிருத்தீன், தீரன் ஆர். எம். நௌஸாத் போன்றோரின் கதைகளிலும், உமாவரதராசனின் எலியம் போன்ற கதைகளிலும் இந்தப் பண்பு அப்போதே வெளிப்படத் தொடங்கி இருந்தது. ஆயினும் அவர்கள் நவீனச் சிறுகதைகளின் எல்லைக்குள் நிற்பவர்களாகவே இருந்தனர். இரண்டாயிரம் காலப்பகுதியில் அதிகமாக எழுதப் புறப்பட்ட கிழக்குப் படைப்பாளிகளே கூடுதல் பின்நவீனத் தன்மை கொண்ட கதைகளை கிழக்கிலங்கையில் எழுதினர்.

அக்கரைப்பற்றிலிருந்து வெளிவந்த "பெருவெளி" என்ற சஞ்சிகை இதற்கான களத்தை தீவிரமாக கிழக்கிலங்கைப் படைப்பாளிகளுக்கு உருவாக்கிக் கொடுத்தது. "பெருவெளி"யிலும், பெருவெளிக்கு வெளியிலுமாக இரண்டாயிரத்தி ஐந்துக்குப் பின்னர் கிழக்கில் தமிழ்ச்சிறுகதைகளின் ஒரு புதிய அலையாக பின்-நவீனச் சிறுகதைகள் எழுச்சியுறத் தொடங்கின. இதில் திசேரா, மஜீத், மலர்ச்செல்வன், பர்ஸான் ஏ.ஆர், ஜி.்.ப்ரி ஹாஸன், மிஹாத் போன்றோரின் பங்களிப்புள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கிலங்கையின் சமகால நாவல்கள் - ஒரு நோக்கு

**எம். அப்துல் றஸாக்**

கிழக்கிலங்கையின் இலக்கிய மரபு தொன்மையும் நீட்சியும் கொண்டது. மிகப் பிரசித்திபெற்ற வாய்மொழி இலக்கியப் பாரம்பரியம் தொடக்கம் நவீன இலக்கியங்கள் வரை இங்கு பல சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. கவிதை, சிறுகதை, நாவல், திறனாய்வு என்று விரியும் தளங்களில் இங்குள்ளவர்களின் பங்கும் பணியும் விதந்து போற்றத்தக்கன. அவ்வகையில் கிழக்கிலங்கையின் சமகால நாவல்கள் குறித்த பார்வையொன்றினை இவ்வாய்வுக் கட்டுரை முன்வைக்க முயற்சிக்கிறது.

சமகாலம் பற்றிய பிரக்ஞை இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்பு என்ற காலவரையறை கொண்டியங்கி வருவது பொதுவான மரபாகும். எனினும் விரிவஞ்சி இரண்டாயிரமாம் ஆண்டுகளுக்கு பின்வந்த கிழக்கிலங்கையரின் நாவல்கள் குறித்து பேசுவது இவ்வாய்வுக்குச் சாலப் பொருத்தமுடையதாகும்.

இலக்கிய வடிவங்களில் காவியங்களுக்கு அடுத்து மிகப்பெரிய வாழ்க்கைத் திட்டத்தை முன்வைக்கும் வடிவமாக நாம் நாவல்களைப் பார்க்கலாம். உலகமொழிகளிலும், தமிழிலும் கூட நாவல்கள் இவ்வாழ்க்கைத் திட்டத்தை பல்வேறு அனுபவக் களங்களினூடாக பரிசோதித்துக் கொண்டும், தம்மைப் புதுப்பித்துக் கொண்டும் வருகின்றன. வணிக நாவல்கள் மீதான வாசிப்புமோகம் வாசகப் பரப்பில் நிலைபெற்றுள்ள நிலையில் கிழக்கிலங்கைப் பரப்பில் சமூகப் பிரக்ஞையுள்ள நாவல்களின் வருகை மிகுந்த சவால்களுக்குரியதென்றாகவே பார்க்கப்படுகிறது.

போருக்குப் பின்னரான வாழ்வு, பல்லின சமூகம்சார் நெருக்கடிகள், தனிமனித உணர்வுப் போராட்டங்கள், சாதியம், தொழில் ரீதியான ஒடுக்குதல்கள் போன்ற பாடுபொருட்கள் கிழக்கிலங்கை நாவல்களில் உச்சம் கொள்கின்றன. ஒப்பீட்டளவில் நாவல்களின் வெளிப்பாடு இங்கு குறைந்தளவே நிகழ்ந்திருக்கிறது எனினும் சொல்லும்படியான பரிசோதனை முயற்சிகள் பலவும் நாவல்களினூடே இடம்பெற்றிருக்கின்றன. கிழக்கிலங்கைக்கே உரித்தான தனித்துவ மொழி வெளிப்பாடும், கதைசொல்லும் பாங்கும், கதைக்களங்களும் பலரையும் இங்குள்ள நாவல்களின்பால் ஈர்க்கச் செய்திருக்கிறது.

தமிழ்மொழி பேசும் இரு சிறுபான்மைச் சமூகங்கள் அடுக்கடுக்காக வாழுகின்ற கிழக் கிலங்கைப் பரப்பில், அவர்களுக்கிடையே இடையிடையே நிகழ்ந்த கசப்பூட்டும் நிகழ்வுகளை இங்கு தோன்றிய பெரும்பாலான நாவல்கள் சமரசம் கொள்ளவைக்க முனைவது, நாவல் இலக்கியத்தினூ டாக வெளிப்படும் 'பகைமறப்பு' என்ற அடிப்படையில் பேசப்படவேண்டியதாகும். இது சமூகப் பணியொன்றை நிறைவேற்ற முனையும் இலக்கியத்தின் பெருந்தன்மை எனக்கொள்ளலாம்.

ஏனைய இலக்கிய வடிவங்களை விடவும் நாவல், தான் உட்பொருளாகக் கொண்டிருக்கும் வாழ்க்கைத் திட்டத்தை மிக நுணுக்கமாகவும் அதேவேளை விரிவாகவும் எடுத்தியம்புகிறது. இப்பணியை கிழக்கிலங்கை நாவல்கள் வெளிப்படுத்தியிருக்கின்றனவா என்ற கேள்விக்கு நாவல்கள் மீதான பன்முக வாசிப்பு ஒன்றே துணைபுரியும். இவ்வாய்வானது இக்கேள்வியை நன்கு புரிந்து கொண்டு கிழக்கிலங்கையின் சமகால நாவல்கள் பற்றிய பார்வையை நேர்மையாக முன்வைக்க விரும்புகிறது.

## மூடுதிரை விலக்கி : கிழக்கின் சமகால பெண் எழுத்து

**கே.எல்.பாத்திமா நப்லா**

'எழுத்து' என்பதை ஒரு பொதுவான தளத்தில் வைத்து நோக்கப்படும் இலக்கியச் சூழல் உருவாகியிருப்பினும் 'பெண் எழுத்து' என்ற ரீதியிலான தனித்துவ ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவது தவிர்க்க முடியாததும் அவசியமானதுமாகும்.

ஏனெனில் பெண் எழுத்துப்பரம்பலின் தோற்றமும் வளர்ச்சியும் சாதாரணமாக கடந்து வரப்பட்டதல்ல. பெண் எழுதுவதே சர்ச்சையானதாக பார்க்கப்பட்டது போல், பெண் எழுத்துக்கள் கட்டமைக்கப்பட்ட வரையறைக்குள் அமைய வேண்டும் என்ற கட்டுப்பாடுகளும் இருந்த கால வரலாறுகள் உண்டு. சமூக ரீதியாக உருவாக்கப்பட்ட பாலின வேறுபாடே இதற்குக்காரணமாகும் என்ற கருத்தும் இங்கு நோக்கத்தக்கது. பெண் எழுத்துக்கள் மீதான தீர்மானங்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு பேசுபொருளை மையப்படுத்தியவாறாக நோக்கப்பட்டு வந்திருக்கிறது.

அத்தகைய அமைப்பில், கிழக்கிலங்கை இலக்கிய வரலாற்றின் தொடர்ச்சியில் சமகால இலக்கியப்போக்கு தனித்துவமான இடத்தை வகிக்கிறது. அதில் கவிதைப் படைப்பிற்கான வடிவமும் நீட்சியும் ஒவ்வொரு காலகட்டத்திலும் தன் மீதான திரை நீக்கிய வளர்ச்சி நோக்கி பயணத்திருப்பது அவதானிக்கத்தக்கதாகும். அவ்வகையில் இவ்வாய்வானது அதன் இலகு கருதி கிழக்கின் சமகால 'பெண் கவிதை எழுத்துக்கள்' பற்றிய வரையறைக்குட்பட்டதாக அமைகின்றது. சமகாலத்தில் பெண் கவிதைகள் தனித்துவ அடையாளத்தைக் கொண்டவையாகவும், அடையாளமற்ற வெளிக்குள் பயணிப்பவையாகவும் வெளிப்படுத்தப்படுமாற்றை அனார், பெண்ணியா, சலனி, உருத்திரா, நஸீஹா முஹைதீன், நப்லா, எம். ஏ. சகி, அமைரா சஸ்னா போன்றோரின் எழுத்துச் செயற்பாடுகள் எவ்வாறு சாத்தியப்படுத்துகின்றன என்பதை நோக்குவதாக இவ்வாய்வு அமைகிறது.

அத்தோடு குறியீடு, படிமம், உத்தி, பின்னணி, அணுகுமுறை, பேசுபொருள், மொழியமைப்பு, வரையறை, அடையாளம் என்பவற்றுடனான தொடர்ச்சியான பின்பற்றல் மற்றும் விலகிப் பயணித்தல் அல்லது எதிர்வினையாற்றல்கள் நிகழுமாற்றையும் இக்கட்டுரை பேச முற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இது ஒப்பீட்டு மற்றும் விபரணப்பகுப்பாய்வு முறையில் அமைந்த ஆய்வாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாயிரத்திற்கு பின்னரான கிழக்கிலங்கைச் சிறுகதைகளும், சிறுகதை எழுத்தாளர்களும். ஒரு பார்வை.

**ஏ.எம். றியாஸ் அகமட்**

**அறிமுகம்:** தமிழில் நாவல் இலக்கியம் (1876) தோன்றிய பல ஆண்டுகளுக்குப் பின்னர்தான் சிறுகதை இலக்கியம் (1881-1928) தோன்றி வளர்ச்சி பெறத் தொடங்கியது. தமிழில் முதல் சிறுகதையை எழுதிய வ.வே.சு. ஐயருடன் தமிழ்ச் சிறுகதை வரலாறு பிறக்கின்றது. தமிழ்நாட்டைப் போலவே, இலங்கையிலும் நாவல்கள் தோன்றியதற்குப் பின்னர்தான் சிறுகதைகள் தோன்றி வளர்ச்சிபெறத் தொடங்கின. ஆரம்பத்தில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட சிறுகதை விழிப்புணர்வின் காரணமாகவே இலங்கையிலும் சிறுகதைகள் தோன்றியதாகக் கருதப்படுகின்றன. எனினும் காலம் போகப் போக உருவ, உள்ளடக்க, உத்திகள் போன்றவற்றில் வித்தியாசமான பண்புகளை இலங்கைச் சிறுகதைகள் பெற்றுக்கொள்ளத் தொடங்கின.

இலங்கையர்கோன், சிவபாதசுந்தரம், சம்பந்தன், வைத்திலிங்கம், நடேசையர் போன்றோர் இலங்கைச் சிறுகதைகளின் முன்னோடிகளாகக் கருதப்படுகின்றனர். 1940 களின் ஆரம்பத்தில் அவர்கள் தொடக்கிவைத்த இந்த சிறுகதைச் செயற்பாடுகள் அல்லது விழிப்புணர்வு இலங்கையெங்கும் பரவத் தொடங்குகின்றது. அதேபோன்று கிழக்குப் பகுதிகளுக்கும் வந்துசேருகின்றது கிழக்கிலங்கை யைப் பொறுத்தவரை புரட்சிக்கமால், வ.அ. இராசரெத்தினம், அ.ஸ. அப்துஸ் சமது, இராஜேஸ்வரி, மருதூர்க் கொத்தன் போன்றவர்களை சிறுகதைகளின் முன்னோடிகளாக கூறலாம்.

இந்தக் கட்டுரையின் நோக்கம், இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரான கிழக்கிலங்கைச் சிறுகதைகளையும், அந்த முயற்சியில் ஈடுபட்ட எழுத்தாளர்களையும் பற்றிய ஒரு பார்வையை முன்வைத்தலாகும். சிறுகதை முயற்சி எனும் போது இதில் இரண்டு தரப்பினர் இருக்கின்றார்கள். முதலாவது தரப்பினர், தாங்கள் எழுதிய சிறுதைகளை தொகுப்பாக வெளியிட்டோரும், இரண்டாவது தரப்பினர் ஓரிரு சிறுகதை முயற்சிகளில் ஈடுபட்டோரும், தற்போதும் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும், இணையத்தளங்களிலும், சமூக வலைத்தளங்களிலும் உதிரியாக முயற்சிப்போரும் இருக்கிறார்கள். இரண்டாயிரத்திற்கு முன்னரான பெரும்பாலான சிறுகதைகள் குடும்ப உறவு, கிராமிய மண்வாசைன. கிராமிய வாழ்வியற் போலங்கள், மெல்லிய உணர்வுகள், சலனம், சபலம். மதம், சாதி, வர்க்க, இனப் பாகுபாடு, தேசிய ஒற்றுமை போன்ற விடயங்களைப் பேசினாலும், இரண்டாயிரத்திற்குப் பின்னரான சிறுகதைகள் யுத்த சூழல், அச்சுறுத்தல், போர் இழப்புக்கள், மத, இன ரீதியான காரணிகளால் சமூகங்களுக்கிடையேயான உறவில் ஏற்பட்ட சிக்கல்கள் போன்றவற்றைப் பேசின, பேசுகின்றன.

**முடிவுரை:** இரண்டாயிரத்திற்குப் பிறகு சிறுகதைகளின் வளர்ச்சிப் போக்கை நோக்குமிடத்து, இரண்டாயிரத்திற்கு முன்னுள்ள போக்கைவிட நலிவான போக்கையே காட்டுகின்றது. ஏனெனில் சிறுகதை இலக்கிய முயற்சிகளில் ஈடுபடுகின்றவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக காண்படுகின்றது. எனவே தற்போதைய எழுத்தாளர்கள் கவிதை செயற்பாடுகள் போன்ற இலக்கிய முயற்சிகளில் அதீத ஆர்வமும், ஈடுபாடும் காட்டுவது போல ஓரளவு சிறுகதைத் துறையிலும் கவனம் எடுப்பது அவசிய மாகின்றது. இதன் மூலம் இரண்யிரத்திற்கு முன்னிருந்த நிலைகள் கொண்டுவரப்படலாம். சிறுகதைச் செயற்பாடுகள் நலிவடைந்ததற்கு பத்திரிகைகளும், சஞ்சிகைகளும், சிறுகதைகளுக்கு அதிகம் முக்கியதம்துவம் கொடுத்து, முன்னரைப் போன்று பக்கங்களை ஒதுக்காததும், சிறுகதைகளை வெளியிடும் பதிப்பகங்கள் குறைவடைந்தது போன்றவைகளும் இன்னொருவகையில் காரணங்களாக இருக்கலாம். இதன் காரணமாக ஏறக்குறைய ஐந்து வருடங்களுக்கு ஒரு சிறுகதைத் தொகுதி வெளியாகும் நிலையே கிழக்கிலங்கிலங்கையில் தற்போது காணப்படுபடுகின்றது. இந் நிலை மாற்றப்பட வேண்டும்.

## சமூக மாற்றமும் கிழக்கிலங்கைத் தமிழ் பேசும் மக்களின் நாட்டார் கலை இலக்கியங்களும்

**எம். அப்துல் றஸாக்**

ஒவ்வொரு சமூகத்திலும் பண்பாட்டிலும் மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டேயுள்ளன. மாற்றம் என்பது இயற்கையின் நியதி. அந்த வகையில் 1980 இல் இருந்து ஏற்பட்ட பல்வேறுபட்ட சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களின் ஊடாக கிழக்கிலங்கைத் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பயிலப் பட்டு வந்த நாட்டார் கலை இலக்கியங்கள் எத்தகைய மாற்றங்களைப் பெற்றுவந்துள்ளன என்பதை எடுத்துக் காட்டுவதாக அந்த ஆய்வு அமையும். இந்த ஆய்வு மட்டக்களப்பு, அம்பாறைப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட கள அய்வுத் தகவல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.

1970 களின் பிற்கூற்றிலே இருந்து ஏற்பட்ட பாரிய சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்கள் நாட்டார் கலை, இலக்கியங்களில் கூடிய தாக்கத்தை ஏற்படுத்தின. இத்தகைய மாற்றங்களிலே பிரதானமானது 1978 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கையாகும். இக்கொள்கை காரணமாக இலங்கையின் ஏற்றுமதி, இறக்குமதி தொடர்பாக இருந்த பல கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. இதனால் தொழில்நுட்ப மற்றும் பல்வேறுபட்ட ஆடம்பரப் பொருட்கள் மக்களின் பாவனைக்கு வந்தன. இவற்றை மையப்படுத்தியதாகவே மின்சார விநியோகம் மக்களுக்கு வழங்கப் பட்டது. மின்சாரத்தின் வருகை பாரம்பரிய கலை, இலக்கியங்களில் பாரிய தாக்கத்தைச் செலுத்தியது. திறந்த பொருளாதாரக் கொள்கை நுகர்ச்சிப் பொருள் பிரயோக மனப்பான்மையினை அதிகரித்தது.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் வீடியோ திரைப்படக் காட்சிகளும் மக்களுக்குக் கவர்ச்சி யானவையாகவும் புதியனவாகவும் அமைந்ததால் அவற்றிலே தம் பெரும் பொழுதைக் கழித்தனர். இவை நாட்டார் கலை, இலக்கியங்களின் மீதிருந்த மக்களின் ஈடுபாட்டை அழிப்பனவாக அமைந்தன. கோயில்களிலே திருவிழா அல்லது சடங்கு நடைபெறும் காலங்களில் அங்கு கூத்து, கரகம், கும்மி முதலிய கலைகள் நிகழ்த்தப்படுவது முக்கியமானதொரு வழக்காக இருந்தது. ஆனால் வீடியோ படக்காட்சி வந்த பின்னர் அந்த இடத்தை வீடியோ படக்காட்சிகள் ஆக்கிரமித்துவிட்டன. மற்றும், 1980 களில் இருந்து முனைப்புற்ற யுத்தச் சூழல் நாட்டார் கலை, இலக்கியப் பயில்வில் மேலும் தாக்கத்தைச் செலுத்தியது. அச்சம் நிறைந்த சூழலில் நாட்டார் கலை, இலக்கியங்களை அளிக்கை செய்வதும் பயிற்றுவிப்பதும் சாத்தியமற்றதாக இருந்தது. இத்தகைய பல சந்தர்ப்பங்களில் கலைஞர்களும் மக்களும் இராணுவத் தாக்குதல்களுக்கு உள்ளானார்கள். இரவு வேளைகளில் வண்டில் பிரயாணம், வயல் காவல் முதலான சந்தர்ப்பங்களில் பாடல்களைப் பாடி பொழுது போக்கும் இயல்புச் சூழல் யுத்தநிலை காரணமாக இல்லாமல் போனது.

இத்தகைய பின்புலங்கள் காரணமாக நாட்டார் கலை இலக்கியங்களின் சமூகப் பெறுமானம் படிப்படியாகக் குன்றத் தொடங்கிய அதேவேளை அவற்றின் உள்ளடக்கத்தைச் சமூகச் சார்புடையதாக மாற்றுகின்ற ஒருசில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக கன்னன்குடா பிரதேசத்திலே கூத்துக்கள் அதிகம் சமூகத் தன்மைக்கு உட்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. முக்கியமாக ஆட்ட முறைகளிலும், பாடலமைப்பிலும் இசையிலும் இசைக் கருவிகளிலும் மாற்றங்களை அவர்கள் விரும்பாத போதும் சமூக மாற்றத்திற்கு ஏற்ப பொருள் மாற்றங்களைச் செய்துள்ளார்கள். இன்று ஆய்வுத் தேவை, பண்பாட்டு மீட்டுணர்வு என்பவற்றின் காரணமாக நாட்டார் கலை இலக்கியங்களைப் பயிலுகின்ற, ஆவணப்படுத்துகின்ற முயற்சிகளும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பின் அண்மைக்கால புதிய அரங்கச் செயல்நெறிகள்.

கலாநிதி. சு.சிவரெத்தினம்

மட்டக்களப்புக்கென்று ஓர் நீண்ட அரங்கப் பாரம்பரியம் உண்டு வடமோடி, தென்மோடி எனும் செந்நெறிப்பாரம்பரியத்துடன் வசந்தன், கரகம், மகிடி, பறைமேளக் கூத்து எனும் அரங்க வடிவங்களும் அவற்றின் அரங்கச் செழுமையுடன் பயில் நிலையில் இருந்தன/இருக்கின்றன. இதன் பின்பு 1970களில் நவீன அரங்கப் போக்குகள் என்கின்ற சினிமாப்பாணி நாடகங்கள், யதார்த்தவாத நாடகங்கள் அறிமுகமாகின்றன. 1990களில் பாடசாலைகளில் நவீன சிறுவர் நாடகங்கள் அறிமுகமாகின்றன. அதன் பின்பு 1992களில் இருந்து கிழக்குப் பலகலைக்கழக நுண்கலைத்துறையை அடிப்படையாகக் கொண்டு பல்வேறுவகையான அரங்க ஆற்றுகைகள் மேற்கொள்ளப்பட்டன/மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வகையான அரங்க கற்பித்தல் நிறுவனங்களெல்லாம் பாரம்பரிய அரங்கு, குறியீட்டு அரங்கு, தெருவழி அரங்கு, அனைத்தும் உட்கொண்ட அரங்கு, சிறுவர் அரங்கு, அபத்த அரங்கு, கண்ணுக்குப் புலனாகா அரங்கு என ஓரளவு இன்றைய உலக அரங்கப்பாணிகள் பலவற்றை பரிசோதனை முயற்சியளவிலாயினும் மட்டக்களப்பில் அரங்கேற்றிக் கொண்டிருக்கின்றன. இவ்வகையான அரங்கப் பாரம்பரியத்தையும் போக்குகளையும் கொண்ட மட்டக்களப்பில் அண்மைக்கால அரங்க ஆற்றுகைகள் எத்தகைய தன்மையினையினைக் கொண்டிருக்கின்றன. என்பதனை மூன்று அரங்க ஆற்றுகைகளை அடிப்படையாகக் கொண்டு இவ் ஆய்வு இடம் பெறுகின்றது.

ஓர் அரங்க ஆற்றுகை இரு நிலைகளில் பார்வையாளர்களின் செயல் முனைப்பை அதிகரிக்கின்றது.
1. அரங்க ஆற்றுகையின் காண்பியம் 2. அரங்க ஆற்றுகை பேசும் அரசியல்

அரங்க ஆற்றுகையின் காண்பியமாக அந்த அரங்கு கொண்டிருக்கின்ற புலன்களுக்கு புலப்படுகின்ற சடப்பொருட்கள், சடப்பொருள்கள் அல்லாத இசை, வாசம் என்பவற்றுடன் நிகழ்த்துவோரின் உடல் மொழியும், பேச்சும், சத்தங்களும் முக்கிமாகின்றன. இவையே ஓர் அரங்க ஆற்றுகையுடன் சுவைஞன் இரண்டறக்கலக்கின்ற மையங்களாக விளங்குகின்றன.

அரங்க ஆற்றுகை பேசும் அரசியல் என்பது கலைஞன் தான் எதிர்கொள்கின்ற சமூக அவலங்களையும் மனித முரண்பாடுகளையும் தன்னளவில் நின்று சகித்துக்கொள்ளாது பிறருடனும் அந்தத் துன்பத்தை அல்லது இன்பத்தை பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறான். இந்தப் பகிர்தல் ஓர் உளவியல் ஆறுதலாக இருந்தாலும் அந்த துன்பம் அல்லது இன்பத்துக்கான காரணங்களையும் மற்றவர்கள் அறியவேண்டும் என்கின்ற ஓர் அவாவும் அதற்குள்ளால் ஊடுபாய்ந்திருக்கின்றது. அரங்கு ஒரு விடயத்தை ரசனை நிலையில் நின்று ரசிப்பதற்கு மாத்திரமல்ல அந்த ரசனைக்குள்ளால் இருக்கும் மனித மகிழ்ச்சியை, துயரத்தை மனிதனாக நின்று எம்முடன் பகிர்ந்து கொள்கின்றது இதனால் சுவைஞன் அந்த மனித நிலையினைக் தனக்குரியதாகப் பார்த்து அனுபவிப்பதால் செயல்முனைப் புள்ளவனாகின்றான். இந்த செயல் முனைப்புதான் அது பேசும் அரசியலை வன்வமுடையதாக்ககின்றது. காண்பியக் கலைகள், சொல்வழிக் கலைகளுக்கில்லாத சமூக ஊடாட்டமும் சமூக அசைவியக்கத்துக்கான உந்துசக்தியும் அரங்க ஆற்றுகைகளுக்கு நிறையவே உண்டு இவைதான் அரங்கின் வலிமையும் கூட. அந்தவகையில் பின்வரும் அரங்க ஆற்றுகைகள் அவற்றின் காண்பியல் வெளிப்பாட்டிலும், அரசியலிலும் முக்கியமானதாகக் கருதுகின்றேன்.

1. காண்டவதகனம் - பேராசிரியர். சி. மௌனகுரு 2. கட்டவிழ்ப்பு – திரு.தர்மா
3. சவால்கள் - திரு விவானந்தராசா

## கிழக்கின் சமகால கவிதைகளின் புனைவும், யதார்த்தமும்

செல்வி. த. உருத்திரா

கிழக்கின் சமகாலக் கவிதைகளின் புனைவும், யதார்த்தமும் என்னும் தலைப்பில் பின் வரும் விடயங்களை ஆய்வுக்குட்படுத்தியுள்ளேன்.

1. கிழக்கின் சமகாலக் கவிதை வெளி / படைப்புலகம் (2000-2017) பொதுவாக எவ்வாறு இயங்குகின்றது? கவிதைகளின் படைப்பு சூழலில் உள்ள ஆரோக்கிய மற்றும் அசௌகரிய நிலைப்பாடுகள் எவை? இத் துறையில் இயங்குவோர் எவ்வகையினர்?
2. "இலக்கியம் காலத்தின் கண்ணாடி" எனில் கிழக்கின் சமகாலக் கவிதைகள் யதார்த்தவாதப் பிரதி பலிப்புகளைக் கொண்டிருக்கின்றனவா? பல கவிதைகள் யதார்த்தத்திலிருந்து விலகி புனைவு நிலை ஒன்றை நோக்கி நகர்ந்ததன் காரணங்கள் எவை?
   "தற்காலம் என்பது கடந்த காலத்தின் திரட்சி" என்ற வகையில் நமக்கு ஓர் இலக்கியப் பாரம்பரியம் உள்ளது. சமுதாய வளர்ச்சி, விழிப்புணர்வு, சிந்தனை மாற்றம் என்பவையெல்லாம் இலக்கியத்தில் பிரதிபலித்திருப்பதைப் போலவே இலக்கியத்தில் நிகழ்த்தப்பட்டுமுள்ளன. அந்த வகையில் கிழக்கின் சம காலக் கவிதை இலக்கியத்தின் யதார்த்தம் ஏது?
3. ஒரு படைப்பு முயற்சி நிகழும் போது அது நிகழாதிருத்தலின் அல்லது நிகழ்த்தப்பட வேண்டிய விடயமொன்றின் மீதான அவசியத் தன்மையும், அவசியமற்ற தன்மையும் ஆராயப்படல் வேண்டும். யதார்த்தவாத அல்லது சமூக நிலையைப் பிரதிபலிக்காத கவிதைகளின் பாடுபொருட்கள் எவையாகவுள்ளன? தனிமனித உணர்வுகளையும், அதீத கற்பனைகளையும் தீவிரமாக முன்னிலைப்படுத்துகின்றன. இவற்றுக்கான காரணிகளான தற்கால வாழ்வியல் முறை, மொழிப்புலமையின் வீழ்ச்சி, சொற்களின் பஞ்சம், கற்பனை வரட்சி போன்றவற்றை இக் கட்டுரை ஆராய முயல்கின்றது. ஒரு மிதப்பு மனோபாவம், வெறும் உணர்வெழுச்சி, கவன ஈர்ப்பு, அடையாள வேட்கை என்ற அம்சங்களின் பின்னணியில் கிழக்கின் கவிதையுலகம் ஓர் உற்பத்திசாலை போலியங்குவது இங்கே சுட்டிக் காட்டப் படுகின்றது. நாம் கடந்து வந்த கிழக்கின் கவிதைகள் இதன் பொருட்டு இங்கே ஒப்பீடு செய்யப்படுகின்றது.
4. காலத்தைப் புறந்தள்ளி வெறும் தனிமனித உணர்வுகளையும், அதைப் பூசி மெழுகும் விதத்தில் கற்பனாதீத சொற்களின் மேற்கட்டுமானத்தையும் கொண்டு தயாரிக்கப்படும் படைப்புகள் எதிர்காலத் தலைமுறைக்கு எடுத்துக் காட்டப் போவது எவற்றை? தமிழின் தனித்துவ அடையாளங் கொண்ட படைப்புகள் எனக் கைமாற்றப் போவது எவற்றை?
   உலகளாவிய ரீதியில் கவிதை என்பதுவும் ஒடுக்கப்பட்டோரின் ஒரு போராட்ட வடிவம். (பலஸ்தீனக் கவிதைகள், கா்மீர் கவிதைகள், இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தின் பாரதி கவிதைகள், ஈழத்தின் பெண் போராளிகளின் கவிதைகள்).
   எனினும் கிழக்கின் சமகாலக் கவிதைகளில் வெளிப்படும் தனிமனித உணர்வுகள், வலிந்த படிமங்கள், அதீத கற்பனைகளின் அபத்தமான அடுக்குகள் கவிதைக் கலையின் ஓர்மத்தை மழுங்கடிக்கும் நுண்ணரசியலைத் தன்னகத்தே கொண்டுள்ளதா?
5. புனைவின் மயக்கமும் யதார்த்தத்தின் தெளிவும் சமகோட்டில் / சமதளத்தில் பயணிப்பது சாத்தியமா? மாயா உலகமொன்றில் இயங்கிக் கொண்டிருக்கும் படைப்பு வெளியைப் பாதுகாப்பது சாத்தியமா? யார் பாதுகாப்பது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2017

கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா - 2017

# கவியரங்கம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாங்களும் பாடுவோம் - எங்கள் நா வரண்டு விடவில்லை

தலைமை
**கவிஞர். 'சோலைக்கிளி' அதீக்**

(கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா -2017 கவியரங்கில் கவிஞர்களால் பாடப்பட்ட கவிதைகளில் ஒரு பகுதி)

மனிதத்தை இழந்து
மந்தையிலும் கேவலமாய்
தறிகெட்டுத் துவேஷத்தை
தலை வணங்கும் காவிகளை
புனிதப்படுத்தி இந்த
பூமியைச் செழிப்பாக்க
நாங்களும் பாடுவோம் - எங்கள்
நாவரண்டு விடவில்லை

இனங்களுக்கிடையினிலே
இடைவளியைத் தோற்றுவித்து
குளிர்காயத் துடிக்கின்ற
கொடூர குணம் படைத்தோர்க்கு
மனிதத்தைப் பாய்ச்சி
மனங்களினைப் பண்படுத்த
நாங்களும் பாடுவோம் - எங்கள்
நாவரண்டு விடவில்லை

பெற்ற சுதந்திரத்தை
பிரித்தெமக்கும் பங்கிடாமல்
ஆளுவோர் மாற்றினத்தை
அடிமையாய் நடாத்துகின்ற
தாழ்நிலையைப் போக்கும்
சூழ்நிலையை உருவாக்க
நாங்களும் பாடுவோம் - எங்கள்
நாவரண்டு விடவில்லை

பெண்ணினத்தைத்
தாய்க்குலமாய்
பேணாது ஹிம்சை செய்யும்
கண்ணிழந்து அறிவிழந்து
காமவேட்டை யாடுகின்ற
வன்மப்பிர கிருதிகளை
வளப்படுத்த வழிப்படுத்த
நாங்களும் பாடுவோம் - எங்கள்
நாவரண்டு விடவில்லை
போதைப் பொருள் தன்னை
புதைபொருளாய் மாயைகாட்டி
பாதைகளில் இளைஞர்களை
பாதிகளாய்த் திரியவைக்கும்
பாவிகளைத் திருத்தி
பயனுள்ளோ ராய்மாற்ற
நாங்களும் பாடுவோம் - எங்கள்
நாவரண்டு விடவில்லை

பத்திரிகைத் தருமத்தை
பணத்துக்காய் விலைபேசும்
உத்தமத்தை இழந்த
ஊடகத் துறையினரை
சுத்தப் படுத்தி
சுதந்திரமாய் எழுதுவிக்க
நாங்களும் பாடுவோம் -எங்கள்
நாவரண்டு விடவில்லை

**- அருட்கவி**
**அக்கரையூர் அப்துல் குத்தூஸ்**

"நாங்களும் கவிதை பாடுவோம் - எங்களின்
நா வரண்டு விடவில்லை" மகுடத்தின் கீழ்
கவியரங்கில் பாடத்தான் பாப்புனைந்து வந்துள்ளேன்.
சவுந்தரியம் கொண்டது தான் - சலிப்பூட்டமாட்டாது.
சிந்தை மகிழ்வோடு செவி தாழ்த்திக் கேளுங்கள் -
சுந்தரத் தமிழ் மொழியால் சபையோரை வேண்டுகிறேன்.
நொந்து போன மனதுக்கும் ஒத்தடமாய் இருக்குமென்றும்
சந்தன வார்த்தைகளால் உங்களிடம் உரைக்கின்றேன்.

எங்களின் தாய் நாடு இலங்கை மண் அல்லவா!
சிங்கக்கொடி கொண்ட எங்களின் தேசத்தில்
சிங்களமும் செந்தமிழும் உறவாடும் மொழியல்லவா!
பங்கமில்லா வாழ்வோடு பரவசமாய் வாழ்வதற்கு
துன்மார்க்கச் சிந்தனைகள் மாண்டழிய வேண்டுமென்று
சன்மார்க்கப் பிரசங்கம் இறையில்லம் அனைத்திலுமே
செம்மையான முறையிலே தான் நிகழ்வதனைக் காணுகின்றோம்
செம்மறியும் நல்லுறவும் நீடித்தால் நலந்தானே!

பரிசுத்த வேத நூலாம் அல் குர் ஆன் சொன்னதையும்
பரிசுத்த கிறிஸ்தவத்தின் விவிலியமும் சொன்னதையும்
சங்கையான நூலான பகவத்கீதை சொன்னதையும்,
சங்கையான பௌத்த மதம் உன்னதமாய் சொன்னதையும்
உதாசீனம் செய்ததனால் மனச் சாந்தி இழந்தோமே
நிதானமும் நேர்மையும் செல்லாக் காசாகினவே
பிரபஞ்சப் பெரும்பரப்பில் கொடுமைகள் வக்கிரங்கள்
பிரமாண்டம் பெற்றனவே! பேரமைதி வாய்ந்ததுவோ!

எங்களின் தாயகமாம் இலங்கை மண்ணிலும் தான்
சிங்கத்தின் பாய்ச்சலாக வன்முறைச் சம்பவங்கள்
உக்கிரமாய் நிகழ்வதனை நாமறிவோம்! மெய்தானே!
துக்கமும் சோகங்களும் சிந்தைக்கும் அடைக்கலமே!
புத்தபிரான் பூதலத்தில் புண்ணியங்கள் செய்தவரே!
முத்தான வார்த்தைகளால் போதனையும் செய்தவரே!
ஆயினும்தான் கவியுடை பௌத்த மகா பிக்குகளோ
ஓயாது அம்மண்ணில் இடர்களையே செய்கின்றார்

மதவாதம் இனவாதம் அமாலயமாய் ஆகிவிட்டால்
இதமான வாழ்வெல்லாம் நாசமாய்ப் போய்விடுமே —
சன்மார்க்கச் சிந்தனைகள் வாழ்வுக்கு வலுவூட்டும்
துன் மார்க்கச் சிந்தனைகள் நரகுக்கு வழிகாட்டும்.
ஆன்மீக வரட்சியினால் அவலங்களே ஏராளம்!
வான்மீதும் வரட்சியினால் மழையுமிங்கே பெய்யவில்லை
எங்களின் நா — வரண்டு விடவில்லை! மகோன்னதங்கள்
பொங்கும்வரை எங்கள் பணி ஓங்கி வரும் நிச்சயமே!

**- மருதமுனை புன்னகைவேந்தன்**
**பாருக்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பா**ல் ஊறும் மார்பு! — கவிதைப்
பால் ஊறும் மார்பு
படைத்தவன் நான்
புடைத்தவன் நான்!

நாள்தோறும் கவிதைப்
பால் ஊறும்
பாக்கியம்
கிடைத்தவன் நான்!
பூரித்து உள்ளம்
புடைத்தவன் நான்!

மார்புப் பால் புதுப் பால்
இரண்டு வகைப் பால்
எனது
மார்பில் ஊறி வரும்
மதுரமான கவிதைப் பால்

காகிதப் பாத்திரத்தில்
கறந்து
கமகமக்கும் வாசமெழக்
காய்ச்சி
கவிதைப் பால் கொண்டுவந்தேன்
கமகமக்கும்
கவிதைப் பால் கொண்டுவந்தேன்!

அப்பாலை உண்டு – நீவிர்
அகம் மகிழ வேண்டாமோ!
முப்பாலை உண்டிருப்பீர் – நீங்கள்
முழுச்சுவையும் கண்டிருப்பீர்
எப்பாலை உண்டாலும்
என் பாலும் உண்ணுவீர்
என்றே
அப்பாலை ஊட்டுதற்கே
அடியேன் வந்துள்ளீர்கள்!

இது
ஆவின் பால் அல்ல
கவிஞர்
அலியின் பால் இப்பால்

மார்பில் ஊறி வரும்
மரமான கவிதைப் பால்
நான் எனது
சார்பில் தரவந்த
சத்தான கவிதைப் பால்!

உண்டு களிப்பீரா!
அன்றேல் உங்கள்
சொண்டு பிதுக்கி
வதனஞ் சுழிப்பீரா

பத்துப்பேர் கவிஞர்கள்
பாக் கொண்டு வந்துள்ளோம்
சற்று ஆர்வமுடன்
சாயுங்கள் உங்கள் செவி
சித்தமினிக்க நாம்
செப்பகிறோம் எங்கள் கவி

நாங்களும் பாடுவோம்
எங்கள்
நாவறண்டு விடவில்லை
ஏன் வறண்டு போகணும்
எங்கள் நா?

மரபு மழை நிற்கவில்லை
இன்னும் பொழிகிறது
தமிழ் வானில் புதிய
வரவு மழையும் வந்து
வெள்ளம் வழிகிறது

தமிழ் வானில் இருமழைகள்!
இரு மழையும் பெருமழைகள்!

கவிதை வயலில்
இரு மழையும் பொழிந்தபடி
இருப்பதனால் – புனல் வீங்கிப்
பெருப்பதனால்

நாவினிலே வந்து
நர்த்தனம் ஆடும் பாவும்
பாவினிலே வஞ்சுவையைப்
பருகும் நாவும்

வறண்டு போவதற்கு
வாய்ப்பே இல்லை! கவிதை
இரண்டு வளர்வதிலும்
தீங்கே இல்லை!

வண்ணத் தமிழ் மொழியை
உருசித்த படியே
இருக்கும் நா! தமிழர்
சிறக்கும் நா!

பாவறண்டு போகாது
நீர்ப்
பாசனஞ் செய்யும் நா!
தமிழின்
பேர்வறண்டு போகாது
ஆசனஞ் செய்ததிலே
அமர்ந்த விரும்பும் நா!

வறண்டு போவதற்கு
வாய்ப்மே இல்லை கவிதை
திரண்டு வளர்வதிலும்
தீங்கே இல்லை!

இந்தியாவிலுஞ் சரி
இலங்கையிலுஞ் சரி

பல்லாண்டு காலப்
பசுந் தமிழர்
சொல்லாண்டு சுவையாண்டு
சோபித்தவர்தம் – தமிழைச்
சோடித்தவர்தம்

வரிசையும் நீண்டது
தமிழின் சீர்
வரிசையும் நீண்டது

- ஏ.எம்.எம்.அலி
கிண்ணியா

**அ**முதினும் சுவைதரு மாதமிழ் வாழ்க!
கொச்சிப் பழமே! கூவுகின்ற குயிலே
உச்சி வெயிலுக்குள் உருகுகிற மயிலே – என
மெச்சும் வகையினிலே மெல்லிசை தந்த
எழுச்சிக் கவிஞன் – எங்கள்
எல்லோர்க்கும் இனிதாக
நாளை வருமுலகை நல்ல விதம் சீர் செய்யும்
சோலைக்கிளி இந்தச் சிறப்புக்
கவியரங்கத் தலைவர்க்கும் மற்றும்
கவிபடைத்து வந்த கவிஞர் குழாத்துக்கும்,
கவிதைச் சுவையுணர வந்தமர்ந்த அவையோர்
விழாக் குழுவினர் அனைவோர்க்கும்
அகம் நிறைந்த வணக்கங்கள், நல்வாழ்த்துக்கள்!

நாங்களும் பாடுவோம் – எங்கள்
நா வரண்டு விடவில்லை
அதர்மங்கள் அழிந்திட
நாங்களும் ஓடுவோம் – எங்கள்
கால் ஒடிந்து போகவில்லை
பாதங்கள் சிதைந்திட
நாங்களும் கூடுவோம் – எங்கள்
நல்லமனம் சாயவில்லை
பேதங்கள் மறந்திட
நாங்களும் நாடுவோம் – இதற்கு
நல்லவர்கள் ஓயவில்லை

இப்பொழுது அவளுக்கு வயது ஐம்பது
இன்னுமவள் திருமதி இல்லை செல்விதான்
அப்பொழுது வனப்புக்கு உவமையான
அழகு குமாரியவள் அறிவுக்கு இமயம்
அன்பின் வடிவமவள் ஒழுக்கமென்றால்
இத்தனைக்கும் சொந்தக்காரி ஆயினும் இன்று
தனக்கென்று ஓர் இல்லற வாழ்வில்லாது
தனிமரமாய் சாயக் கிடக்கின்ற
சாயங்கால பொழுது அவள்

வாழத் துடித்த வயதுக்குள் மணவாழ்வு
வந்து கைக்கூட வில்லை! காரணம்
வீடில்லை, நகையில்லை இன்னும் எவை வேண்டுமோ
இவையெல்லாம் அவளிடம் இல்லை. அதனால்
அவளின்று வெறுஞ்சோலை. வீச வெண்நிலவில்லை
ரீங்காரமிசைக்க வண்டில்லை
மணமில்லாத மலராய், மலர்ந்து வாடிய சருகாய்
சமுதாயச் சாக்கடைக்குள் சல்லடையான
இதயக் குமுறல்கள் பெருகிய அவளிடம்
ஒட்டடை படிந்து கறுப்பான இதயங்களுக்குள்
ஒட்டித் தவித்தது அவள் சிங்கார வாழ்வு.
காரணம் சீதனம், ஏழ்மை எனும் கொடுமை
உள்ளத்தில் நஞ்சும், உதட்டினில் தேனும்
உலவவிட்டு வாழும் உலுத்து போன மானுடமே!
பாரும்...பாரும்....பாழாய்போன ஒரு பெண்ணின்
கடந்து போன காலங்களை,
கேளும்.... கேளும்.....
துண்டுகளாய் சிதறிவிட்ட
வாழ்வின் கோலங்களை.... காரணம் சீதனம்
என் இனிய இளைஞனே! எழுந்து நில்!
துணிந்து செல்.... பகுத்தறிவுச் சூரியனாய்!
உன்னை நோக்கி விரிந்து கிடக்கிறது இவ்வுலகம்
இங்கேயுள்ள வாழ்வின் இருள்களை
எழுச்சி எனும் இருள் பாய்ச்சி அகற்றி விடு
நாளைய உலகின் நாயகன் நீ
தோளை நிமிர்த்தி துடிப்பாய் செயற்படு
புதுமணம் வீசி புதிதாய் புறப்படு
அப்பொழுதுதான் எமது மண்ணில்
அவல வாழ்வுகள் அற்றுப் போகும்
அன்பு மேகங்கள் வெகுவாய் சூழ்ந்து
இன்ப மழை என்றென்றும் பொழியும்!

- பாவாணர்
அக்கரைப்பாக்கியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வி**ண்ணையும், மண்ணையும் வியத்தகு
பிரபஞ்சம் அனைத்தையும் தனக்கான
"குன்" என்ற ஒரு சொல்லால் மேலான
குவலயத்தைப் படைத்தாளும் கோமானே!
உன்னை முதற்கண் உளமாறப் புகழ்ந்த பின்னர்
மீன்பாடும் தேனாடாம் மேன்மை மிகு கிழக்கிலங்கை
மண்ணுக்கு அணி சேர்த்த மாபெரிய கலைஞர்களை
வடித்துத் தெளித்து வரலாற்றுப் புத்தகத்தில்
வித்தக விருதுக்காய் பதித்த நல் முத்துக்களை
வளர்க்கின்ற அரும்புகளை வளமார்க்க இளைஞர்களை
கரும்பாக்கி சமூகத்தில் நல்லவராய், வல்லவராய்
நா வன்மை உள்ளவராய்,
பொன்னாடை பொற்கிளி, புகழாரச் சூட்டுகிற
மண்பாடும் இந்தப் பாராட்டு விழா அமர்வில்
உண்டா விருததனை உண்டு சுவைத்திட்ட
அவணத்தை ஆவணமாய் அள்ளிச் சொரிந்திட்ட
நூல்கள் பலவற்றில் நுண்மாண் நுழைபுலமாய்
கவிதைக்குள் வேரூன்றிக் கடல் கடந்த நாடுகளில்
சோலைக்கிளி என்று சுட்டுகிற பேராலே
பட்டங்கள் பல பெற்றுப் பவனி வரும் இவன்
தலைமைக் கவியரங்கில் கவியாடக்
களம் தந்த அனைவருக்கும்
நன்றிகள் வாழ்த்துக்கள் நவின்றபின் நாமிங்கே
கவியாட வந்துள்ளோம், எங்கள் நா
இன்னும் வரண்டு விடவில்லை என்னும் தலைப்பினிலே
இதயம் திறக்கின்றேன் இதமானால் சோதரர்காள்
கைதட்டிக் கொள்ளுங்கள் கசப்பானால் என்னை
மன்னித்துக் கொள்ளுங்கள் இதோ எந்தன்
மனத்தின் வெளிப்பாடாய் மலர்கிறது கேளுங்கள்.

முன்னே ஒரு கவிக்கு முந்நூறு நானூறு
பொன்னே கொடுப்பர் புலவர்க்கு இந்நாளில்
வாசிக்க அறியாத வம்பர் தலைப்பட்டுக்
காசிக்கு ஐந்நூறு கவி என்ற கவிஞர்
காளமேகத்தின் கணிப்பீட்டில் நாங்களும்
கவிபாட வந்துள்ளோம் இன்னும் எங்கள் நா
வரண்டு விடவில்லை வளம் காண அசைகிறது

இலக்கியச் சோலைக்குள் எத்தனையோ நறுமலர்கள்
பூத்து, இதழ் விரித்து புன்னகைக்கும் அம்மலருள்
மணக்கும் மல்லிகையாய் மகிழ்விக்கும் கவிமலர்கள்
தித்திக்கும் இன் தமிழால் தேனார்ந்த சொற்சுவையால்
புத்திக்கு வித்திட்ட புலவர்கள் வரிசையில் இன்னும்
எத்தனை பேர்கள் எம் இதயத்தில் வாழுகின்றார்
வந்தான் பாரதியார் வளமான கவி தந்தான்
இளங்கோ, காளமேகம், எல்லோரும் நன்கறிந்த
கவிக்கோ அப்துர் றஹ்மான், கவியரசர் கண்ணதாசன்
மேத்தா இவர்களோடு மேன்மை பெற பாகிஸ்தான்
ஆர்த்தெழுந்து கவிபுனைந்த அல்லாமா இக்பாலும்
ஆன்மீகத் தேனொழுகும் அரும்பெரும் பாடல்களால்
கூன் நிமிர்த்தி வைத்திட்ட குணங்குடி மஸ்தானும்
வங்கக்கவி நஸ்குல் இஸ்லாமும், நபி புகழை
சீறாவிற்குள்ளே சிதறாமல் செதுக்கிய
சிற்பியாம் எங்கள் உமறுப்புலவனாரும்
தொட்டனைத் தூறும் மணற்கேணி போலெவர்க்கும்
கற்றிடக் குறையாத கலங்கரையாம் திருக்குறளை
கட்டிச் சமைத்திட்ட கவியேறு வள்ளுவனார்
ஆத்திசூடி, கொன்றை வேந்தன் அளித்திட்ட ஔவைப்
பாட்டியின் பட்டியலுள் பதச்சோறாய் முடிவு பெறா
எத்தனையோ இலட்சிய நாயகர்கள் வரிசையிலே
நாங்களும் இங்கு கவிபாட வந்துள்ளோம்.
எங்கள் நா இன்னும் வரண்டு விடவில்லை...

- கவிப்புனல்
சாய்ந்தமருதூர் கேயெம்ஏ அஸீஸ்

**கா**ப்பிய விழாக் கவியரங்கு
கல்முனையில் நடந்த போது
யாப்பறிந்த கவிஞரோடு
யாப்பறியாக் கவிஞன் நானும்
சேர்ந்து கவிதை பாடியதும்
ஊர் திரும்பி வந்ததெல்லாம்
மூப்படைந்த வேளையிலும்
மிகத் தெளிவாய்த் தெரிகிறது

உள்ளத்தில் இருந்து எழும்
உணர்வுகளைக் கவிதையாக்கி
வெல்லத் தமிழ்மொழியில்
வெழுத்து வாங்கும் காலமது

நல்ல கவிஞனாக கிழக்கு மண்ணில்
நம்மையெல்லாம் எழுதத் தூண்டி
வல்லவர்களாக்கி விட்ட
வாத்தியார் நீலாவணன்
கல்முனையில் இடம்பெற்ற
கவியரங்கின் தலைவராக
வீற்றிருந்தார் அவர் முகத்தை
வேறெங்கும் அதுவரையில் கண்டதில்லை
அன்றுதான் பார்க்கின்றேன் - அந்த
அற்புதக் கவிஞரோடு பேசுதற்கு
என்னுள்ளே பயம் கலந்த
ஆசையொன்று எழுந்ததனால்
"அண்ண" னென்று சொல்லி
அவர் முகத்தைப் பார்கின்றேன்
"என்ன தம்பி" என்று கேட்டு
என்னையவர் பார்க்கின்றார்
"நாளை எனக்குத் திருமணம்
நடைபெற இருக்கின்றது
வேளைக்கே நானெந்தன்
வீட்டுக்கு போக வேண்டும்
ஆனதினால் என்னை முதல்
பாடவைக்கப் பாருங்கள்

ஆகட்டும் என்று அவர்
அரங்கத்தில் எழுந்து நின்று
பாவரங்கைத் தொடங்கி வைத்து
பரிவோடு திரும்பியெனை
பார்த்து முறுவலித்தார்
பதட்டமுடன் நானிருந்தேன்

"நாளை திருமணம் முடிக்கப்போகும்
மாப்பிள்ளையை நாமிங்கு
மேடையிலே வைத்திருந்து
மினக்கெடுத்தல் பாவமதால்
மாப்பிள்ளையை முதலாகப்
பாடவர அழைக்கின்றேன்
என்று எனைப் பாடச் சொன்னார்
இன்று இவர் இங்கில்லை
என்றாலும் அவர் ஆத்மா
நின்று எமை வழிநடத்தும்
இந்நிகழ்வு நடந்தேறி
எத்தனையோ வருடங்கள்
சென்றாலும்
என் மனதில்
செழிப்பாக இருக்கிறது
நீண்ட தூரம் கலையுலக
ஆழிக்குள் விழுந்து நீந்தி
"வேண்டாமினி" என்றலுத்த
வேளையிலே கல்முனையில்
மீண்டுமொரு கவியரங்கு
மனித வாழ்வில் அப்படித்தான்
வேண்டுமென்று நினைத்ததெல்லாம்
வராது போவதுவும்

வேண்டாமென வெறுத்ததெல்லாம்
விருந்தாக மாறுவதும்
வாழ்வாகப் போவதுதான்
வாழ்கையின் விளையாட்டு...

-கவிஞர்.
செ.குணரெத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய
வாலிபத்தின் துடுக்கில் பிறக்கும்
வம்புத்தனத்தைக் கண்டு
ஐம்பதுகளில் நின்று
நான் பாடும் பாடல் இது!

தேசத்தின் புத்திரனே
இன்று சமாதானத்திற்காக
இரத்ததானம் தேவையில்லை
நிதானம் ஒன்றே தேவை!

சூரியன் கிழக்கில்தான் உதிக்கிறது
நேற்றையைப் போல...
மலைச்சாரலிலிருந்து கடற்கரைவரை
நதியும் ஓடிக்கொண்டுதானிருக்கிறது
நாம் மட்டும்
எதற்கு முகத்தை மூடிக்கொண்டு!

நிறத்துக்கும் அறத்துக்கும்
சரித்திரத்தில் தொடர்புண்டு
அதில் ஏது தரித்திரம்?
இளைஞனே,
அறத்தைச் சுவாசித்து
மனிதத்துக்கு கவசம் செய்!

வெளிச்சத்தின் விளம்பரமே இருட்டுத்தான்
குருட்டு விளக்கிலும் இருட்டு விலகும்
ஆதலால்.....
இருட்டு விளக்கல்ல
நீ இருட்டை விலக்கு!

இளைஞனே
பட்டுப் போக நாங்கள் நெடுமரங்கலல்ல
பாடிப்பறக்கும் பட்டாம் பூச்சிகள்
எங்கள் நா வரண்டுவிடவில்லை
உனக்காக
நாங்களும் பாடுவோம்!

- வாழைச்சேனை மயில்
(எச்.எம்.எம்.இஸ்மாயில்)

தாய் சேய்க்கு கொடுக்கும் முத்தம்
பாசமுத்தம்!
தந்தை மகனுக்குக் கொடுக்கும் முத்தம்
நேசமுத்தம் !
ஆசிரியன் மாணவனுக்குக்குக் கொடுக்கும் முத்தம்
அறிவு முத்தம் !
குரு சிஷ்யனுக்குக் கொடுக்கும் முத்தம்
பக்தி முத்தம்!

கணவன் மனைவிக்குக் கொடுக்கும் முத்தம்
ஆசை முத்தம் !
காதலன் கதலிக்குக் கொடுக்கும் முத்தம்
அன்பு முத்தம் !
கணவன் மனைவிக்குத் தெரியாமலும்
மனைவி கணவனுக்குத் தெரியாமலும்
கொடுக்கும் முத்தம்
களவு முத்தம்!

பறவைக்குப் பறவை இடுகின்றது முத்தம்
பாம்புக்குப் பாம்பு கொடுக்கின்றது முத்தம்
மிருகத்திற்கு மிருகம் கொடுக்கின்ற முத்தம்

கடல் அலைகளை முத்தமிடுகிறது
அலைகள் கரையை முத்தமிடுகின்றன
தாளை முத்தமிடுகிறது பேனை
பேனையை முத்தமிடுகிறான் கவிஞன்
கவிஞனை முத்தமிடுகிறான் சுவைஞன்
மலைகளை முத்தமிடுகிறது மேகம்
மேகத்தை முத்தமிடுகிறது காற்று
காற்றை முத்தமிடுகின்றன பூக்கள்
பூக்களை முத்தமிடுகின்றன வண்டுகள்

ஆக
முத்தமில்லாமல் உலகம் இல்லை
உலகமில்லாமல் முத்தமில்லை
உலகம் முத்தத்தின் மொத்தம்

- கலாபூஷணம்
ஆசுகவி அன்புடீன்

"வானம் பெருவெளியில் வண்ணநிலா ஊர்ந்துவர
ஆனா பழக்கியதோடல்லாமல் - பேனாவை
வாழ்வின் துணையாக்கி வைத்திட்ட தாய்தந்தை
தாழ்களிலே வைத்தேன் தலைவா"

கற்பார்ந்த காலம் முதல் கவினார் நடம்புரியும்
பொற்பார்வை தமிழணங்கு புன்சிரிப்பால் தலை நிமிர்ந்து,
இப்பாரில் தனித்திருக்கும் இலட்சியத்துப் பாவலர்கள்
ஓப்புவித்த செய்தியிதே ஓயாமல் சிந்திக்கும்
நாங்களும் பாடுவோம்! எங்கள் நா, வரண்டு விடவில்லை!

தண்மைமிகு நிலவுவர, தாரகைகள் கண்சிமிட்டும்
வண்ணம்தரு அல்லிமலர் வாகாக மொட்டவிழும்!
பொன்னுலகம் என்றுமுன்னர் புலவோர்கள் பாடிவைத்த
எம்முலகம் கற்பனையில் என்றும் விழித்திருக்கும்,
நாங்களும் பாடுவோம்! எங்கள் நா, வரண்டு விடவில்லை!

சாதிமதம் இனமென்ற சாயங்கள் பூசாமல்,
நீதிதனை மறவாமல் நிலையான கொள்ளையுடன்,
சோதிதனைத் தோற்றி சுபீட்சமதை உண்டாக்கும்
சாதனையில் மிக்கவர்தம் சத்தியமே வெல்லுமென்று,
நாங்களும் பாடுவோம்! எங்கள் நா, வரண்டு விடவில்லை!

போட்டி, பொறாமை, பொல்லாங்கு எல்லாமும்
நாட்டின் சிறப்பினுக்கு நவிவூட்டும் என்ற புதுப்
பாட்டை, பாருள்ளோர் பாராட்டும் விதமாகச்
சாட்டை தருகின்ற சந்ததிகள் வரும்வரையில்,
நாங்களும் பாடுவோம்! எங்கள் நா, வரண்டு விடவில்லை!

தாய்ப்பால் மிகத்தகைமை தாய்மைப் பேறடைந்தோர்கள்
வாய்ப்பான முன்னழகின் வனப்புக்கு குறையுமென்று,
புட்டிப்பால் ஊட்டி, புதல்வர் - புதல்வியரை
இட்டமுடன் நோயாளர் என்றாக்கும் துயர்நிலையை
நாங்களும் பாடுவோம், எங்கள் நா, வரண்டு விடவில்லை!

பள்ளிச் சீருடையாம் பால்வண்ண நிறமுடைய
வெள்ளைச் சட்டையுடன் பள்ளிசென்ற மாணவியை
உள்ளத்தில் ஈரமில்லா இரணியர்கள் வல்லுறவுக்(கு)
உள்ளாக்கும் துயர் நிலைமை இவ்வாறு ஒழிக்கும்வரை
நாங்களும் பாடுவோம்! எங்கள் நா, வரண்டு விடவில்லை!

ஆலயத்தில் பள்ளிதனில் அறநெறியைப் போதிக்கும்
சீலஞ்சேர் பற்றாளர், செய்பணிகள் நேர்த்தியுடன்
காலத்தின் தேவையது கருதி, ஒப்புவிக்கும் -
மாளாத திட்டத்தின் மகத்துவங்கள் காணும்வரை,
நாங்களும் பாடுவோம்! எங்கள் நா, வரண்டு விடவில்லை!

காசு வாழ்வுக்குத் தேவை காசதுவே வாழ்க்கையில்லை
மாசுமனம் கொண்டவர்தம் மாடி, மனை, வயல் நிலங்கள்,
கூடிவர மாட்டாதே குவலயத்தை விட்டு உயிர்
ஓடிவிடம் போதினிலே! உண்மையினை உணரும்வரை
நாங்களும் பாடுவோம்! எங்கள் நா, வரண்டு விடவில்லை!

ஆனாவை முதன் முதலில் அரிவரியில் எழுதுகையில்,
பேனா துணையென்று பெருங்கணவு காணவில்லை!
வானம் பெருவெளியில் வட்டநிலா கால்பதிக்கும்
காணரிய எழில் வழங்கும் காட்சியினைக் கண்டவர்கள்,
நாங்களும் பாடுவோம்! எங்கள் நாஈ வரண்டு விடவில்லை!

ஓடும் சிறுவண்டும், உயர்வானச் செம்பருந்தும்,
பாடும் பறவைகளும், பாய்ந்தோடும் முயலினமும்
காலை எழுங்கதிரும் காணுகின்ற கவின் மலையும்
மாலைக் குளிர்காற்றும், மனம் மகிழச் செய்யும்வரை
நாங்களும் பாடுவோம்! எங்கள் நா, வரண்டு விடவில்லை!

முப்புறமும் சிற்றாறு முடியாத பசும் வயல்கள்
உப்பாற்றுப் பல்ஓடை உயர் விருதும் கண்ணாக்கள்!
ஏறி இறங்கும் நீர் இசைக்கும் சில் வண்டு
தாழை மடல் விரியத் தருமணத்தை நுகருகையில்
நாங்களும் பாடுவோம் எங்கள் நாவறண்டு விடவில்லை

- அ.கௌரிதாசன்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

2017 கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா - 2017

# சிறப்புக் கட்டுரைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சிக்குடிச்சாற்றில் மலையிற் கடைந்த நாகர் கோட்டங்கள்

**எஸ் பத்மநாதன்**
தகைசார் வாழ்நாள் பேராசிரியர், வேந்தர் - யாழ் பல்கலைக்கழகம்

அம்பாறை மாவட்டத்திலே புராதன காலம் முதலாகத் தமிழர் வாழ்ந்த கிராமங்களிலொன்று கஞ்சிக்குடிச்சாறு, "வெயில் நுழையாக் குயில் நுழைப்பந்தர்" என்று சொல்லக் கூடிய அடர்த்தியான காடுகள் நிறைந்த ஊர். அங்கு சிறிய மலைத் தொடர்களும் இயற்கையில் அமைந்த காடுகளும் உண்டு. நாகர் ஆட்சி புரிந்தமைக்கு ஆதாரமான தொல்பொருட் சின்னங்கள் அங்குள்ளன.

கஞ்சிகுடிச்சாற்றில் நாகர் மலையினை வெட்டி நான்கு நாகர் கோட்டங்களை அமைத்துள்ளனர். அவர்கள் வணங்கும் தெய்வமான மணிணாகனின் கோட்டங்களாக அவை குடையப்பட்டுள்ளன. அங்குள்ள சிற்பங்களில் ஒன்று உயரமானதும் ஒடுக்கமான அகலம் கொண்டதுமான, செதுக்கு வேலைப்பாடாகும். அது புறத் தோற்றத்தில் முகலிங்கம் போன்றது உட்புறமாகச் செதுக்கப்பட்டுள்ளது கற்பனாபூர்வமான மணிணாகனின் கோலம். உச்சியில் மனிதத்தலை வடிவம் தெரிகின்றது. அதன் கீழே பாம்பின் உடலின் உருவம் வெட்டப்பட்டுள்ளது. அது கருமை நிறமான வரிகளையுடைய கொடிய விஷங்கொண்ட நாகத்தின் அடையாளம். தலைப்பாகத்தின் மேல் பெரிய பாம்பொன்றின் தலை படிந்துள்ளது.

இலிங்கம் போன்ற வடிவத்தின் இடப்பக்கத்திற் பாம்பு வடிவங்கள் தெரிகின்றன. மணிணாகன் என்னும் பெயர் பல இடங்களிற் காணப்படுகின்றது. அதன் வரிவடிவங்கள் கி.பி. முதலாம் நூற்றாண்டுக்கு உரியனவாகலாம்.

இங்கு கல்லிற் குடையப்பட்டுள்ள வடிவம் நாகரின் வழிபாட்டிற்கு உரியது. அது வெட்டப்பட்டுள்ள காலத்திற் சைவ சமயத்தின் செல்வாக்கு ஏற்பட்டு விட்டதா? என்ற வினா இயல்பாகவே எழுகின்றது. கிழக்கிலங்கையின் வேறு இடங்களில் அந்த மாற்றம் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடற்குரியது.

இம்மலையில் அமைக்கப்பட்டுள்ள வேறொரு கோட்டத்தின் கோலம் விசித்திரமானது. அது மலையின் ஒரு பக்கத்திலே குகையினை வெட்டிக் குடைந்து அமைக்கப்பட்ட கோட்டம் இது போன்ற மலையிற் குடைந்து உருவாக்கப்பட்ட வழிபாட்டு நிலையமொன்றை இதுவரை இலங்கையில் வேறெங்கும் காணமுடியவில்லை. நூற்றுக்கணக்கிற் பிராகிருத மொழிச் சாசனங்கள் காணப்படும் குகைகள் யாவும் குடையப்படாதவை. அவை இயல்பாக மலைப்பாறைகள் சந்திக்கும் இடங்களில் அமைந்தவை.

கஞ்சிகுடிச்சாற்றிலே குடபோகமாக, வெட்டப்பட்டுள்ள குகையின் மேற்பாகம் வில்வளைவு போன்ற தோற்றங் கொண்டது. அது அளவிற் சிறியது, தூண்களற்றது. பிற்சுவரில் மணிணாகன் பள்ளி என்னும் பெயர் வெட்டப்பட்டுள்ளது. இலங்கையில் நாகர் அமைத்த மணிணாகன் பள்ளிகள் பலவிதமானவை. அவற்றுள் இது ஒரு தனிவகைக்குரியது.

குகையின் உள்ளே அடி மட்டத்திற் பாம்புகள் படுத்திருக்கின்றன. ஒன்றன் முகத்தோடு மற்றதன் முகம் முட்டும் கோலத்தில் இரு சோடிப் பாம்பு வடிவங்கள் தெரிகின்றன. குகையின் முன்னாற் படிக்கல் போன்ற ஒரு அரைவட்டக் கல் வைக்கப்பட்டுள்ளது. அது விசாலமானது் பளிங்கு போன்று பளபளப்பானது. இலங்கையிலுள்ள நாகர் கோட்டங்களில் இது வழமையாக வைக்கப்படுவது. நாகர்களின் கட்டுமான முறையின் ஓரம்சம் என்று கொள்ளத் தக்கது.

நாகரின் முறையினைப் பின்பற்றி இந்துக் கோயில்களிலும் வாயிற்புறத்தில் அரை வட்ட வடிவிலமைந்த கற்களைப் பதிக்கும் வழக்கம் ஏற்பட்டது. நாகர் உருவாக்கிய அரை



கஞ்சிக்குடிச்சாறு - மலையிற் குடைந்த மணிணாகன் பள்ளிகள்

வட்டக் கற்கள் பௌத்தப் பள்ளிகளுக்குச் சிறப்பானவை என்று கொள்ளப்படும் சந்திர வட்டக் கற்களுக்கு மூலமானவை என்று கருதலாம்.

குகையின் மேற்புறத்திலே பேரளவு கொண்ட பாம்பின் வடிவம் தெரிகின்றது. அது உடலை நீட்டிய கோலத்திலும் தலையினைக் குகையின் வலப்பக்கத்தில் வைத்திருக்கின்ற கோலத்திலும் செதுக்கப்பட்டுள்ளது. குகையின் இடப்பக்கத்தில் மணிணாகன் என்னும் பெயர் பெரிய எழுத்துக்களில் வெட்டப்பட்டுள்ளது.

மலையின் வேறொரு பகுதியில் நிலமட்டத்திற்கு மேற் குகை போன்ற அமைப்புகள் குடையப்பட்டுள்ளன. ஆழமற்ற கோலத்தில் வட்ட வடிவில் உட்புறமாகக் குடைந்துள்ளனர். அவற்றின் நடுவே சதுரமான குழிகள் வெட்டப்பட்டுள்ளன. நடுவிலமைந்த குடைவிலிருந்து பாம்பொன்று வெளிவரும் காட்சி சிற்பம் போலச் செதுக்கப்பட்டுள்ளது. இவை மணிணாகன் பள்ளி என வழங்கிய நாகர் கோட்டங்களில் இன்னொரு வகையானவை. இவற்றைப் போன்ற அமைப்புக்கள் வேறெங்கும் காணப்படுவதில்லை. பொதுவாகக் கல் மூடிகளோடு கூடிய வட்டமான கல்லறைகள் பாறைகளின் மேல்வெட்டப்பட்டிருக்கும். ஆனால் இங்கு மலையின் ஒரு பக்கத்தில், அதன் அடியிலே திசைநோக்கிய கோலத்தில் மணிணாகன் பள்ளி குடையப்பட்டிருக்கின்றமை ஒரு புதுமையான முறையாகும். இது வேறெங்கும் காணப்படாத ஒன்றாகும். இவற்றில் மணிணாகன் (பள்ளி) என்ற பெயர் விசாலமான எழுத்துக்களிற் பொறிக்கப்பட்டுள்ளது. எழுத்துக்களின் வடிவங்கள் பெருமளவிற் காணப்படும் அருகில் அமைந்துள்ள கற்பாறையிலும் மணிணாகன் என்னும் பெயர் மீண்டும் மீண்டும் எழுதப்பட்டுள்ளது.

மலையின் வேறொரு பாகத்தில் ஆழமற்ற வில்வளைவான தோற்றமுடைய குடைவின் ஒரு புறத்திலே கோரமான மிருகமொன்றின் தலை தெரிகின்றது. மற்றப் புறத்திலே பாம்பின் தலை தெரிகின்றது. மணிணாகன் என்ற சொல்லைப் பல விடங்களிற் காணமுடிகின்றது. முன்புறத்தில் உடைந்த கற்றுண்டங்கள் பல தெரிகின்றன. அவற்றுளொன்றில் வேள்ணாகன் மகன் வேள் கண்ணன் என்ற பெயர்களின் அடையாளங்கள் தெரிகின்றன.

இலங்கையிற் கிடைத்துள்ள நாகர் பண்பாட்டுச் சின்னங்களிற் கஞ்சிக்குடிச்சாற்றில் உள்ளவை மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. வேறெங்கும் காணமுடியாத நாகர் வழிபாடு பற்றிய அம்சங்களையும் நாகர் கோட்டம் பற்றிய அம்சங்கரைளயும் அங்கு காணலாம். இலங்கை வரலாறு, தொல்லியல் என்பன பற்றிய ஆய்வுகளில் அவற்றைப் பரிசீலனை செய்வது அவசியமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைதீவில் 2000 வருடங்களுக்கு முற்பட்ட தமிழர் பண்பாட்டுச் சின்னங்கள்

சென்ற வருடம் ஒரு சமயம் (15.10.2015) காரைதீவிற்குச் செல்ல நேர்ந்தது. நாவற்குடாவிலுள்ள இந்துப்பண்பாட்டு நிறுவனத்தின் பொறுப்பதிகாரியான எழில்வாணி பத்மகுமார் அங்கு மிகவும் புராதனமான பண்பாட்டுச் சின்னங்கள் இருப்பதாகவும், அவற்றை நேரிலே சென்று பார்த்து ஆராய வேண்டும் என்றும் வலியுறுத்திச் சொன்னார். எனவே இந்து சமய கலாசார திணைக்களத்தின் புதிய பணிப்பாளர் உமாமகேஸ்வரன் செய்த ஏற்பாட்டின் மூலம் காரைதீவுக்குச் சென்றோம்.

எழில்வாணியும் இவ்விடயங்களில் ஆய்வலராகிவிட்ட வன்னமணி குணபாலசிங்கமும் எம்மோடு கூடி வந்தனர். எமது பார்வைக்கும் ஆய்விற்கும் உரியவனாகிய அரும்பொருள்கள் கிழக்கிலங்கையில் மிகப் பிரசித்தமான, காரைதீவில் அமைந்துள்ள கண்ணகை அம்மன் கோவில் வளாகத்தில் உள்ளன. அங்குள்ள தொல்பொருட் சின்னங்களைக் கண்டதும் வியப்புற்றோம். இதுவரை வேறெங்கும் காணப்படாத மிகவும் புராதனமான அரும் பொருள்கள் அங்குள்ளன. அவை நாகரின் பண்பாட்டுச் சின்னங்கள். கல் உரல்கள் என்னும் வகைக்குரியவை. அவை எல்லாவற்றிலும் தமிழ்ப் பெயர்கள் எழுதப்பட்டுள்ளன. அதுவும் 2000 வருடங்களுக்க முற்பட்ட தமிழ் பிராமி வரிவடிவங்களில் எழுதப்பட்டுள்ளன.

### யானைக் கன்றுகள் நீர்வார்த்து அபிஷேகம் செய்யும் மணிணாகனின் படிமம்.

முதலாவதாக மணிணாகனின் சிற்பமொன்றைக் காண முடிந்தது. அது ஆலய வளாகத்தின் தென்கிழக்கு மூலையில் வேறு சில கற்களோடு வைக்கப்பட்டுள்ளது. அதன் அருமை பெருமைகளை எவரும் அறிந்திருக்கவில்லை. அதனால் அது கவனிப்பாரற்றுக் கிடக்கின்றது. அது அருங்காட்சியகம் ஒன்றிலே பாதுகாப்பாக வைத்துப் பேணப்பட வேண்டியது.

இச்சிற்பம் வடிவத்தில் கஜல'சுமியைப் போன்றது. ஆசனக் கோலமான கடவுட் படிமத்திற்கு இரு பக்கங்களிலும் ஒவ்வொரு யானைக் கன்று நிக்கின்றது. அவை மணிநாகனை நீரால் அபி'ேகம'ம் பண்ணுகின்ற காட்சி வனப்பான கோலத்திலே செதுக்கப்பட்டுள்ளது. மணிணாகன் என்ற பெயர் சிற்பத்தில் எல்லாப் பகுதிகளிலும் பொறிக்கப்பட்டுள்ளது.

வேறிரு கற்கள் இச்சிற்பத்துக்கு அண்மையற் காணப்படுகின்றன. அவற்றுளொன்று வட்ட வடிவமானது, மற்றது நீள்சதுரமானது. அவற்றிலும் பெயர்ச் சொற்கள் எழுதப்பட்டுள்ளன. அவற்றைப் பார்த்து அவதானித்த பின்பு ஆலயத்தின் உள்வீதி, மண்டபத்தின் அருகிலே கிடைக்கின்ற பெரும் கற்றூணொன்றைப் பார்வையிட்டோம். அதன் எல்லாப் பகுதிகளிலும் எழுத்துக்கள் தெரிகின்றன. தூணின் ஒரு பாகத்திலே குழிவு வெட்டப்பட்டுள்ளது. அது வேறொரு தூணை அதிலே பொருத்தியமையின் அடையாளமாகலாம். கதவு நிலைகளை அமைக்கின்ற சமயங்களில் வாயிலின் மேற்புறத்தில் வைக்கப்படும் உத்திரங்கள் அவ்வாறு கொழுவப்படும்.

### நாகரின் கல் உரல்கள்.

கோயில் வளாகத்தின் வேறொரு புறத்தில், அதன் சுவருக்கு அண்மையில் மூன்று கல் உரல்கள் உள்ளன. அவற்றில் இரண்டு மிகப்பெரியவை. ஒரே சமயத்தில் நான்கு பேர் உலக்கை போட்டு நெல்லினைக் குற்றக்கூடிய அளவிலான அகன்ற வாயினையும் ஆழமான உட்குழிவினையும் கொண்டவை. மூன்றாவது உரல் ஒப்பீட்டளவில் சிறியது. அதில் ஒருவர் மட்டுமே றெல்லினைக் குற்ற முடியும். இவ்வுரல்கள் இன்றும் பாவனையில் உள்ளன.கோயிலுக்குத் தேவையான அரிசி இவற்றிலே குற்றப்படுகின்றது. இவற்றில் மணிணாகன் பள்ளியொன்று எழுதப்பட்டுள்ளதால் ஆதியில் நாகரின் வழிபாட்டுத் தலமொன்றின் தேவைகளுக்காக இவற்றை உருவாக்கினார்கள் என்று கருதலாம்.



காரைதீவு - நாகபந்த வடிவம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**காரைதீவு**



**நாகரின் கல் உரல்கள்**



**யானைக்கன்றுகள் நீர்வார்த்து அபிவிஷேகம் செய்யும் மணிணாகனின் படிமமும் தூண் தாங்கு கற்களும்**

அவற்றின் வேலைப்பாடு நுட்பமானது. பெருங்கற்பாளங்களை வலிய இரும்புக் கருவிகளினால் வெட்டி, தேவைக்கேற்ப அவற்றைச் செதுக்கி உரல்களாக உருவாக்கியமை நாகரின் தொழில்நுட்பத்திறனுக்குத் தகுந்த எடுத்துக்காட்டுகளாகும். வேறு சில இடங்களிற் கல்லிலமைந்த உரல்களும் மிகவும் அகலமான மாவரைக்கும் கற்களும் காணப்படுகின்றன. அற்றையும் நாகரே உருவாக்கினார்கள். ஆயினும், காரைதீவிலுள்ள உரல்களின் செதுக்குத்திறன் அவற்றில் உள்ளதைக் காட்டிலும் மேலானது. இன்றுவரை புழக்கத்திலுள்ள மரஉரல்களின் வடிவமைப்பு நாகரால் உருவாக்கப்பட்ட முறையில் அமைந்ததாகும். மேலும் காரைதீவில் இன்றுவரை புழக்கத்திலுள்ள கல் உரல்கள் அங்குள்ள சமுதாயம் 2000 வருடங்களை உள்ளடக்கிய காலத்து இடையறாத தொடர்ச்சியினைக் கொண்டுள்ளமையின் சின்னங்களாகும்.

**போர் வீரன் உருவம் அமைந்த செங்கல்.**

கண்ணகை அம்மன் கோயிலின் தலவிருட்சமான வேப்பமரத்தின் அடியில் ஒரு மிகவும் புராதனமான செங்கலை வைத்து வழிபடுகின்றனர். அதனை கவனமாக அவதானித்த பொழுது அதில் ஒரு கையில் வில்லை ஏந்திய வண்ணமான ஒருவனின் உருவம் தெரிகின்றது. மற்றக் கையில் அம்பை அவன் ஏந்திய வண்ணம் காணப்படுகின்றான்.

இந்த வடிவம் பழந்தமிழகத்து நடுகற்கள், வீரக்கற்கள் என்பவற்றை நினைவுறுத்துகின்றது. பழந்தமிழ் நூல்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்பவற்றில் அவற்றைப் பற்றிய குறிப்புகள் வருகின்றன. ஆயினும் அங்கு நடைபெற்ற அகழ்வாராய்வுகளில் காரைதீவிற் கிடைப்பதைப் போன்ற போர்வீரனின் வடிவம் இதுவரை காணப்படவில்லை. தமிழகத்து முதுமைத் தொல்லியலாளர்களில் ஒருவரான கலாநிதி சு. இராசகோபால் காரைதீவிலுள்ள செங்கல்லிற் காணப்படும் வடிவம் போர்வீரன் ஒருவனின் என்ற கருத்துக்கு முத்திரையிட்டுள்ளமை இங்கு குறிப்பிடற்குரியது.

தமிழர் சமுதாயத்திலே காவல்புரிகின்ற வேளையிற் பட்டு மடிந்தவர்களை வீரராகப் போற்றி வழிபாடாற்றும் வழக்கம் மிகவும் புராதனமானது. பேராசிரியர் ராஜன் சில வருடங்களுக்கு முன்பு புலிமான்கொம்பை என்னுமிடத்திலே கண்டு, அடையாளப்படுத்திய கல்வெட்டில் ஆகோள் பூசலிற் பட்ட ஒருவனைப் பற்றிய குறிப்புண்டு. இதுவே இதுவரை கிடைத்துள்ள தமிழ்க் கல்வெட்டுகளிற் போரின் மடிந்த வீரரைப் போற்றும் மரபினைப் பற்றிய காலத்தால் மிக முற்பட்ட குறிப்பாகும்.

தமிழ் எழுத்துக்களிற் காரைதீவிலுள்ள செங்கல்லிற் காணப்படும் உருவத்தில் மணிணாகன் என்ற பெயரை எழுதியுள்ளனர். அது போரில் இறந்த வீரனைத் தெய்வீக நிலையடைந்தவனாகப் போற்றும் சிந்தனையின் வெளிப்பாடாகும். எனவே தமிழ் மரபிலுள்ள வீரர் வழிபாட்டின் காலத்தால் முற்பட்ட சின்னம் இதுவேயாகும்.

இதுவரை கூறியவற்றின் காரணமாக இலங்கைத் தமிழர் பண்பாட்டுச் சின்னங்களைப் பொறுத்தவரையிலே காரைதீவுக் கண்ணகை அம்மன் கோயிலிற் கிடைப்பவை முதன்மையான சிறப்பம்சங்களைக் கொண்டவை. அவை காரைதீவில் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம் முதலாக தமிழர் சமுதாயம் நிலைகொண்டிருந்தமைக்கான சான்றுகளாகும். அவற்றினால் நாகரின் வழிபாட்டுத் தலம் ஒன்றிருந்தமையினை அறிய முடிகின்றது.

யானைகள் நீர்தெளித்து அபிசேகம் செய்கின்ற மணிணாகனின் சிற்பம், போர்வீரனின் செங்கற் படிமம் என்பன சமகாலத்தமிழர் வாழ்ந்த பிராந்தியங்களில் வேறெங்கும் காணப்படாதவை. அதனால் அவை பண்டைக் காலத் தமிழர் பண்பாட்டுச் சின்னங்களில் மிகுந்த சிறப்புடையவை. ஆலய வளாகத்தில் ஒரு சிறிய அரும்பொருள் இல்லத்தை உருவாக்கி அதில் இவற்றைப் பாதுகாப்பாக வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அவற்றின் விநோதங்களை அறிந்து கல்லூரி மாணவர்களும் சுற்றுலாப் பயணிகளும் அங்கு பெருந்தொகையிலே செல்லும் நிலை ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஒரு செம்மொழி

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**
தகைசார் வாழ்நாட் பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

### 1. செம்மொழி என்றால் என்ன?

இன்று உலகத்திலே பேசப்படுகின்ற பல்லாயிரக்கணக்கான மொழிகளுள் ஒரு சில மொழிகளே செம்மொழிகளெனக் கருதப்படுகின்றன. பண்டைக்காலந் தொடக்கம் நீண்ட காலப் பயன்பாடுடையதும், நீண்ட கால இலக்கியப் பாரம்பரியமுடையதும், வேறெந்த மொழியிலுமிருந்து கிளைத்தெழாததுமாகிய மொழியே செம்மொழி எனப்பட்டது. நீண்ட காலமாக கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம், ஹீப்ரு, அரபிக், சீனம் ஆகிய மொழிகளே செம்மொழிகளெனப் போற்றப்பட்டன. இலங்கைப் பல்கலைக் கழகத்தில் செம்மொழித் துறையொன்று உருவாக்கப்பட்டது. சமஸ்கிருத மொழிக்கெனத் தனியாக ஒரு துறை இருந்ததால், செம்மொழித் துறையிலே கிரேக்கம், இலத்தீன், அரபிக், சீனம் ஆகிய மொழிகளும் அவற்றின் பண்பாடுகளும் கற்பிக்கப்பட்டன. செம்மொழி பயிலும் மாணவர்கள் மிகக் குறைவாகவே இருந்தனர். செம்மொழி ஒன்றினைப் பயில விரும்பும் மாணவர் பண்டைய மொழி, பண்டைய இலக்கியம், பண்டைய பண்பாடு ஆகியனவற்றைக் கட்டாயம் கற்க வேண்டியுள்ளதால் பெரும்பாலான மாணவர்கள் இக்கற்கை நெறியினைத் தேர்ந்தெடுப்பதில்லை. பல பல்கலைக்கழகங்களிலே செம்மொழிக் கற்கைநெறி இருந்து வந்துள்ளது.

செம்மொழிகளெனக் கருதப்பட்டனவற்றிற் காணப்படும் தகைமைகள் யாவும் தமிழ் மொழியிலும் காணப்படுகின்றன. எனினும் தமிழ் மொழி ஒரு செம்மொழி எனக் கருதப்பட்டுப் பறைசாற்றப்படவில்லை. அதற்குச் சில காரணங்களும் உள. தமிழ் மொழியின் பண்டைய இலக்கியங்கள் பற்றி ஆங்கிலேயர்களுக்கு 19ஆம் நூற்றாண்டளவிலேயே தெரியவந்தது. சி.வை. தாமோதரம்பிள்ளை, உ.வே.சாமிநாதையர் போன்றோர் சங்க இலக்கியங்களையும் தொல்காப்பிய இலக்கண நூலையும் பதிப்பித்த பொழுதுதான் தமிழ் மொழியில் இத்தகைய பண்டைய நூல்கள் இருக்கின்றன என்னும் உண்மை உலகுக்குத் தெரியவந்தது. 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் (1856இல்) திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை எழுதி வெளியிட்ட டாக்டர் கால்ட்வெல் தமிழ் மொழியின் சிறப்புக்களையெல்லாம் மிகவும் விரிவாகவும் தெளிவாகவும் எழுதியுள்ளார். அவ்வாறு எழுதிய கால்டுவெல்டு ஐயருக்குத் தமிழ் மொழியிலே பண்டைத் தமிழ் இலக்கியத் தொகுதியாகிய சங்க இலக்கியங்கள் இருந்தமை பற்றித் தெரியாது. இதனால் தமிழ் மொழியிலே கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்குப் பின்னரேயே இலக்கியங்கள் தோன்றின எனக் குறிப்பிட்டுள்ளார். உலக அறிஞர்கள் இதை நம்பினார்கள். எடுத்துக்காட்டாக, ஜப்பானிய மொழி இலக்கிய வரலாற்றினை எழுதிய சேம்பர்லெயின் *(Chamberlain)* என்னும் ஆங்கிலேய அறிஞர் தமிழ் மொழியிலே இலக்கியங்கள் தோன்றிய காலத்திலேயே ஜப்பானிய மொழியில் இலக்கியங்கள் தோன்றின எனக் கூறியுள்ளார். தன்னுடைய கூற்றுக்கு டாக்டர் கால்டுவெல்டினைச் சான்று காட்டியுள்ளார். ஜப்பானிய மொழியிலே கி.பி. ஏழாம் நூற்றாண்டளவிலேயே இலக்கியங்கள் தோன்றின என்பது உண்மை. அதனைத் தமிழ் மொழியோடு ஒப்பிட்டமை பிழையானதாகும்.

தமிழருடைய தொன்மை பற்றியும் தமிழருடைய பண்பாடு பற்றியும் பண்டைத்தமிழ் இலக்கியங்கள் பற்றியும் பி.ரி. சிறிநிவாச ஐயங்கார் *(History of the Tamils)*, தி. கனகசுந்தரம்பிள்ளை *(The Tamils Eighteen Hundred Years Ago)*, M.S. பூரணலிங்கம் பிள்ளை *(History of Tamil Literature)* போன்றவர்கள் ஆங்கில மொழியில் எழுதியும் உலகம் தமிழ் மொழியை ஒரு செம்மொழியென உத்தியோக பூர்வமாகத் தெரிவிக்கவில்லை. சமஸ்கிருத மொழியின் ஒரு கிளை மொழியே தமிழ் என்னும் கருத்து வட இந்திய அறிஞர்களிடையே வேரூன்றியிருந்தது. இதனால் சமஸ்கிருத மொழியைச் செம்மொழியென உத்தியோக பூர்வமாக ஏற்றுக்கொண்ட இந்திய அரசு தமிழ் மொழியைச் செம்மொழியாக ஏற்றுக் கொள்ளவில்லை. இரண்டாயிரமாம் ஆண்டிலிருந்து தமிழறிஞர்களும் தமிழ்நாடு அரசும் தமிழ் ஒரு செம்மொழியென உத்தியோக பூர்வமாக ஏற்று அறிவித்தல் செய்யவேண்டுமென இந்திய அரசுக்கு வேண்டுதல்கள் விட்டனர். அவற்றின் பலனாக சென்ற ஆண்டு இந்திய அரசு "தமிழ் ஒரு செம்மொழி" என ஆணை பிறப்பித்தது.

### இந்த ஆணையினாலே பெறக்கூடிய பயன்கள் யாவை?

உலகப் பல்கலைக் கழகங்களிலே தமிழ் மொழியை ஒரு செம்மொழியாகக் கற்பிக்கும் வாய்ப்பு ஏற்படலாம். தமிழ் மொழிக்கான தவிசுகள் *(Chairs for Tamil)* உலகப் பல்கலைக் கழகங்களிலும் இந்தியப் பல்கலைக் கழகங்களிலும் ஏற்படுத்தப்படலாம். இந்திய அரசு செம்மொழி வளர்ச்சிக்கென ஒவ்வோராண்டும் வழங்கும் ஐந்து கோடி ரூபா தமிழ் மொழிக்கும் வழங்கப்படுகின்றது. மைசூரில் தமிழ்ச் செம்மொழி மையம் உருவாக்கப்பட்டது. பின்னர் அது சென்னைக்கு மாற்றப்பட்டுள்ளது.செம்மொழிக்கெனக் கூறப்பட்ட வரைவிலக்கணங்கள் எவ்வாறு தமிழ் மொழிக்குப் பொருந்துகின்றன என்பதை இனி விரிவாக நோக்கலாம்.

### 2. பண்டைக்காலம் தொடக்கம் பயன்பாடுடையது

செம்மொழிகள் என்பவற்றுக்குப் பண்டைய வரலாறு இருக்கின்றது. தமிழ் மொழியும் கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரே வழக்கிலிருந்தது மட்டுமன்றி இலக்கிய மொழியாகவும் இருந்துள்ளது. கி.மு. 2ஆம் நூற்றாண்டுத் திருநாதர்குன்றத்துத் தமிழ்க் கல்வெட்டு ஒரு சான்றாக அமைகின்றது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டளவில் தோன்றியிருக்கக்கூடிய தொல்காப்பியம் தமிழ் எழுத்துக்கும் எழுத்தாலான இலக்கியத்துக்கும் இலக்கணம் கூறுகின்றது. தமிழ் எழுத்து மொழியாக அமைவதற்கு முன்னர் பல நூற்றாண்டுகளாகப் பேச்சு மொழியாக பயன்பட்டிருக்கும். இவ்வாறு பண்டைக்காலந் தொடக்கம் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வந்த தமிழ் மொழி இன்றும் பயன்பாட்டிலே உள்ளது. இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சிக்கு முகங்கொடுக்கும் மொழியாகவும் அமைந்துவருகின்றது.

செம்மொழி எனக் கருதப்பட்ட மொழிகளுள் பண்டைக் கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம் ஆகியவை வழக்கிறந்துவிட்டன. இவை சமயக்கிரியை மொழிகளாக "தேவ பாஷை"களாக இருந்தபடியாலே இயல்புநிலை மக்களுடன் ஒட்டி உறவாட முடியாதனவாக வழக்கிறந்துபோய்விட்டன. இந்த வகையில் பண்டைக் காலந்தொடக்கம் வழக்கிறந்து போகாமல் இன்று வரைக்கும் நின்றுநிலவும் மொழியாகத் தமிழ் விளங்குகின்றது.

### 3. மிகச்சிறந்த உலகுதழுவிய இலக்கியங்களைக் கொண்டது

கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம், ஹீப்ரு, அரபிக், சீனம் ஆகிய மொழிகள் உலகப் புகழ்பெற்ற இலக்கியங்களை எமக்குத் தந்துள்ளன. இந்த வகையில் தமிழ்மொழி உலகப்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புகழ்பெற்ற இலக்கியங்களைத் தந்துள்ளதா? ஒரு நூலினுடைய சிறப்பு அதன் பயன்பாட்டினையொட்டி அமைந்துள்ளது. பண்டைய சமய மறை நூல்களாகிய பைபிளும் திருக்குரானும் உலகெலாமுள்ள கிறிஸ்தவ இஸ்லாமிய மக்களுடைய தேவைக்காகப் பல மொழிகளிலே பெயர்க்கப்பட்டன. சமயப் பயன்பாட்டுக்காக இவை பெருந்தொகையான மொழிகளிலே பெயர்க்கப்பட்டுள்ளன. செம்மொழி இலக்கியங்கள் பல பிற மொழிகளிலே பெயர்க்கப்பட்டன. அவற்றின் பயன்பாடு அம்மொழிகளைச் சார்ந்தவர்களுக்காக மட்டுமன்றி பிறமொழி பேசுபவர்களுக்கும் சென்றடைந்தது. தமிழ் மொழியிலும் திருவள்ளுவர் இயற்றித் தந்த திருக்குறளுக்கு இந்த வாய்ப்புக் கிடைத்துள்ளது. உலகத்திலே எங்கு வாழ்பவர்களுக்கும் எம்மொழி பேசுபவர்களுக்கும் பயன்படக்கூடியதாக திருக்குறள் நூல் இயற்றப்பட்டுள்ளது. அந்நூல் முதன்முதலாக ஆங்கில மொழிக்குப் பெயர்க்கப்பட்டது. 19ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்திலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்த டாக்டர் ஜி.யு. போப் அவர்கள் திருக்குறளை ஆங்கிலத்திலே மொழி பெயர்த்தார். பின்னர் பல ஐரோப்பிய மொழிகளிலும் இந்திய மொழிகள் பலவற்றிலும் தென்னாசிய தென்கிழக்காசிய மொழிகள் சிலவற்றிலும் அது மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. "வள்ளுவன்தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று மகாகவி பாரதி கூறியதை இவ்விடத்திலே நினைவுகொள்ளலாம்.

கம்பன் இயற்றிய இராமாயணமும் இளங்கோவினுடைய சிலப்பதிகாரமும் உலக காவியங்களின் தரமுடையனவாக அமைகின்றன. வால்மீகியினுடைய இராமாயணத்தை அடியொற்றிக் கம்பன் இக்காவியத்தைப் படைத்தபோதிலும் தமிழ் மொழியின் பொருள் செய்யுள் மரபுகளின் செழுமைகளை அதனூடாகப் புலப்படுத்துகிறான். அவனுடைய சொந்தக் கற்பனைத் திறன், காவியக் கட்டமைப்பு, பாத்திர வார்ப்பு ஆகியன அறிஞர்களால் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. சிலப்பதிகாரம் முழுமையான ஒரு தமிழக் காப்பியம். இதனுடைய பிற மொழிபெயர்ப்புகள் அதிகமாக இல்லை. இக்காவியத்தினை பிற மொழிகளிலே முறையாக மொழிபெயர்த்துக் கொடுத்தால் தமிழ் ஒரு செம்மொழி எனக் கூறுதற்கு மிகச் சிறந்த சான்றாக அமையும்.

**4. நீண்டகால இலக்கியப் பாரம்பரியமுடையது**

தமிழ் மொழி கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரிருந்து இன்றுவரை இடையறாத இலக்கியப் பாரம்பரியமுடையதாக அமைகின்றது. இலக்கியச் செழுமையுடையனவாகவும், பண்டைத் தமிழருடைய சமூக, பண்பாட்டு, கலை விவரங்களை வெளிப்படுத்துவனவாகவும் அமையும் சங்க இலக்கியங்கள் தமிழ் மொழியின் தொன்மை வாய்ந்தவையாகும். வள்ளுவனையும் இளங்கோவையும் பெருந்தொகையான அறநீதி நூல்களையும் கொண்ட தமிழ் "பக்தியின் மொழி தமிழ்" என்று கூறக்கூடியதாக அமைந்தது. எலும்பினையே உருகவைக்கும் பாடல்கள் என்று சொல்லத்தக்க பக்திப் பாடல்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. டாக்டர் ஜி.யு. போப் திருவாசகப் பாடல்களை ஆங்கில மொழியிலே பெயர்த்துப் பிற மொழியாளர்களுக்கு அவற்றின் சிறப்புக்களை உணர்த்தினார். காவியங்கள், புராணங்கள, தனிப்பாடல்கள், சிற்றிலக்கியங்கள் என்று பல இலக்கியங்கள் தமிழ் மொழியிலே தோன்றின. நவீன காலத்துக்கேற்ப நாவல், சிறுகதை, நாடகம், கட்டுரையிலக்கியம், மறுமலரச்சியடைந்த கவிதை என்பன பெருவாரியாகத் தோன்றி வளர்ந்துகொண்டிருக்கின்றன.

தமிழ்ச் சமய இலக்கியத்தின் ஒரு தனித்தன்மை இங்கு குறிப்பிடப்படவேண்டியது. எவ்வெச் சமயங்கள் தமிழ் மொழியுடன் தொடர்புற்றனவோ அவ்வச் சமயங்களுக்கெல்லாம் தமிழ் மொழியிலே காவியங்கள் இயற்றப்பட்டுள்ளன. சமணம், பௌத்தம், வைணவம், சைவம், இஸ்லாம், கிறிஸ்தவம், றோமன் கத்தோலிக்கம் என்பன தமிழ் மொழியுடன் தொடர்புற்ற சமயங்களாயின. இந்நிலையில், சமணசமய சீவகசிந்தாமணி, பௌத்தசமய மணிமேகலை, வைணவசமயக் கம்பராமாயணம், சைவசமய பெரியபுராணம், இஸ்லாம் சமய சீறாப்புராணம், கிறிஸ்தவசமய இரட்சணிய யாத்திரிகம், றோமன் கத்தோலிக்க சமய தேம்பாவணி காவியங்களைக் குறிப்பிடலாம்,

தமிழிலே தோன்றிய செவ்வியல் இலக்கியங்களுக்கு ஊற்றாக இருந்துவந்த வாய்மொழி மரபுகளும் நாட்டார் இலக்கியங்களும் சமாந்தரமாக வளர்ந்துவருவதையும் இங்கு குறிப்பிடவேண்டும். செவ்வியல் மரபும் நாட்டார் மரபும் இணைகின்ற போது மிகச் சிறந்த தமிழ் இலக்கியங்கள் உருவாகியுள்ளதைக் காணக்கூடியதாயுள்ளது. சிலப்பதிகாரமும் பக்திப் பாடல்களும் இதற்கு நல்ல எடுத்துக்காட்டுகளாக அமைகின்றன.

**5. வேறெந்த மொழியிலுமிருந்து கிளைத்தெழாதது**

தமிழ்மொழி சமஸ்கிருத மொழியிலிருந்து கிளைத்தெழுந்ததென்பதை நிலைநாட்டப் பல முயற்சிகள் காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, மலையைக் குறிக்க 28 சொற்கள் தமிழிலே இருக்கின்றன. அப்படி அவை இருக்கவும் 27 சொற்கள் வடமொழியிலிருந்து பெறப்பட்டுள்ளன. வடமொழிச் சொற்கள் இருபத்தேழும் வழக்கிலே வர, தமிழ்ச் சொற்கள் இருபத்தெட்டும் வழக்கிழந்து போய்விடலாம். வடமொழி இல்லாமல் தமிழ் மொழி இயங்கமுடியாது என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகிவிடும். இவை யாவற்றுக்கும் முற்றுப்புள்ளி வைப்பதுபோல் டாக்டர் கால்ட்வெல் தன்னுடைய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் நூலில் தமிழ் மொழி திராவிடமொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது என்றும் அது இலக்கண அடிப்படையில் சமஸ்கிருத மொழியைச் சாராதது என்றும் விளக்கமாகவும் தெளிவாகவும் உலகுக்கு எடுத்துக் கூறியுள்ளார்.

**6. முடிவுரை**

தமிழ் செம்மொழி என உலகுக்கு அறிவித்தாயிற்று. இதுவரை தமிழ் ஒரு செம்மொழி அல்ல என்று எவராவது எதிர்ப்புக் குரல் எழுப்பவில்லை. செம்மொழிக்கெனக் கிடைக்கும் சில சலுகைகளைப் பார்த்து வேறு சில இந்திய மொழிகளையும் செம்மொழிகளாக அறிவிக்கவேண்டும் எனக் குரல்கள் எழும்பியுள்ளன. அதுபற்றி இங்கு விளக்கம் எதுவும் கொடுக்கப்படவில்லை. தமிழ் செம்மொழி என்பதற்கு ஊன்றிய அணை கொடுப்பன அதன் பண்டைய இலக்கியங்களேயாகும். இவற்றை இன்றைய தலைமுறையினர்க்கும் இனி வருவோர்க்கும் செம்மையான முறையிலே கையளிப்புச் செய்வதற்கு ஏற்ற வழிவகைகள் செய்ய வேண்டும். சங்க இலக்கியங்களையும் சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்குறள் ஆகிய நூல்களையும் சிறப்பாகக் கற்பதற்கு இளம் மாணவர்களுக்குப் புலமைப் பரிசுகள் வழங்கி ஊக்கம் கொடுக்கவேண்டும். உலகப் பல்கலைக் கழகங்களில் வாய்ப்பு ஏற்படக்கூடிய இடங்களில் செம்மொழித் தமிழ்த் துறையினை அமைக்கவும், பேராசிரியர்ப் பதவிநிலையினை ஏற்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். தமிழ் ஒரு செம்மொழி என்று அறிவித்த பின்னர் அது இன்னும் 50 ஆண்டுகளில் செத்துவிடும் என்று அச்சப்படாமலிருக்க வழிசெய்யவேண்டும். தொலைக்காட்சிகளிலும் வானொலியிலும் ஆங்கிலத் தமிழுக்குப் பதிலாக தனியாகத் தமிழ்மொழியைப் பயன்படுத்த வழிசெய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை மாவட்ட தமிழ் நாவல் புனைவுகள்

கலாநிதி
சத்தார் எம். பிர்தௌஸ்

மொழி, மனித சமுதாயத்தின் தகவல் பரிமாற்ற ஊடகமாக மட்டும் இருந்த நிலைமாறி மனித வாழ்வுப் போக்கை, சமூக உறவுகளை, அரசியல் போக்குகளை, பண்பாட்டுத் தளங்களைத் தீர்மானிக்கும் அதிமுக்கிய சக்தியாகத் தன்னைத் தகவமைத்துக் கொண்டுள்ளது. இதன் வழி தோற்றம் கொள்ளும் இலக்கியமானது மனித சமூகம் தன்னைத்தானே நெறிப்படுத்துதல், சுயபரிசோதனை மூலம் கடந்தவிட்ட பாதையைப் பார்த்தல் என்ற செயற்பாடுகளில் இறங்குவதுடன் அவற்றை ஆவணமாக்குவதிலும் கவனம் குவிக்கிறது. இவ்வகை முயற்சிகளில் கவிதை, சிறுகதை, நாவல், நாட்டாரியல் முதலிய வகைமைகள் முன்நிற்கின்ற போதிலும் அகல வெளியையும் அணுக்கமான தன்மைகளையும் கொண்ட 'நாவல்' என்னும் வாழ்க்கை வடிவமே தற்காலச் சமூகத்திற்கு அருகமைந்த ஊடகமெனக் கூறமுடிகிறது.

மேலைத்தேய இலக்கியக் கோட்பாடுகளை உள்வாங்குதல், அவற்றைச் சார்ந்த படைப்புக்களைத் தருதல், தாங்கள் வேருக்குத் திரும்புதல், தொன்மத்தைப் பரிசீலித்து மறு உருவாக்கத்திற்கு முயல்தல், புலம்பெயர்ந்த நம்மவர்களின் நெருக்கிடைகளைப் பேசுதல், சாதி, சமய, வர்க்க பாகுபாட்டினால் ஒடுக்கப்படுவோரை எடுத்துக்காட்டுதல், அதிகார மேலாதிக்கம், நில ஆக்கிரமிப்பு மற்றும் அரசியல் ஒடுக்கங்கள் முதலிய கருத்தியல்களை தமிழ்நாட்டுப் புனைவுகள் உள்வாங்கிப் பயணிக்கின்ற சமகாலச் சூழலில் அதன் தாக்கத்தின் அதிர்வினை ஈழத்து நாவல் புனைவுகளும் பெற்றிருப்பது ஆரோக்கியமான வளர்ச்சியாகும். அவ்வகையில் ஈழத்தில் அதுவும் கிழக்கு மாகாணத்தில் அதற்குள் அம்பாறை மாவட்டத்திலே தோற்றம் பெற்ற நாவல்களை காலகட்ட அடிப்படையில் இக்கட்டுரை காட்ட முயல்கிறது.

மொழிபெயர்ப்பு, தழுவல் என்ற நிலைகளிலிருந்தும் மாறி சுயமாகப் படைக்கும் நாவல் எழுத்தார்வம் கிழக்கிலங்கையைப் பொறுத்தவரை கொழுகொம்பு (1955) புனைவிலிருந்தே ஆரம்பிக்கின்றது. இலவசக் கல்விமுறையின் அறிமுகமும், இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தோற்றமும், தேசியப் பத்திரிகைகளின் வருகையும் ஈழத்துத் தமிழ் இலக்கியச் சூழலில் ஒரு பொதுவான மாற்றத்தைக் கொண்டு வந்த போது கிழக்கிலும் அது நிகழ்ந்தது. கிழக்கில் சுவாமி விபுலானந்தர் தொடக்கி வைத்த கலை இலக்கியச் செயற்பாடுகள் இலக்கிய ஆர்வத்தை அகலப்படுத்தின. அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை போன்றவை எழுத்தாளர்களை இனங்கண்டு ஊக்குவித்ததோடு மலர்களையும் வெளியிட்டன. இதனால் கிழக்குப் பிரதேசத்தில் சிறுகதைகள் எழுதியவர்கள் நாவல்களையும் புனையத் தலைப்பட்டனர். இதன் அறுவடையாக வீரகேசரி நிறுவனத்தினாலும் ஏனைய தனித்தனி நிறுவன வெளியீட்டு முயற்சிகளாலும் தொடக்ககால நாவல்களைத் தவிர இருபத்தைந்திற்கும் அதிகமான நாவல்கள் 1950 தொடக்கம் 1980 வரை கிழக்கில் வெளிவற்திருக்கின்றன. இவற்றில் அம்பாறை மாவட்டத்திலிருந்து வெளிவந்தவையாக நான்கு நாவல்கள் உள்ளன. இவற்றுள்ளும் முதல் மூன்று புனைவுகளும் குறுநாவல்களாக இருக்க, சம்மாந்துறையை வாழிடமாகக் கொண்ட எம்.பி. முகம்மது ஜலீலின் ஒரு வெள்ளைப்பூ சிரிக்கிறது (1979) புனைவே ஒரு முழு நாவலாக முதலில் வெளிவந்திருக்கிறது. இதற்கு முன்னராக பெருநாள் பரிசு (1969), சூறாவளி (1978) ஆகியன மருதூர் வாணராலும், உறொபின்சன் றூசோ என்ற மொழிபெயர்ப்பு நாவல் பாறுக்காலும் எழுதப்பட்டு மருதமுனையில் வெளியீடுகள் நடைபெற்றன.

தனி மனிதருக்குள்ளும், தனிமனிதன் - சமுதாயத்திற்குள்ளும் நிகழும் பிரச்சினைகளைக் கதைப் பொருளாகக் கொண்டு, அவற்றினையும் அக்கால அரசியலையும் விமர்சனம் செய்யும் வகையில் இக்காலப்பகுதியில் பல்வேறு தரத்திலுமாக கிழக்கில் வெளிவந்த சுமார் இருபத்தைந்து நாவல்களுக்குள்ளே அம்பாறை மாவட்டத்திலிருந்து வெளிவந்த வெள்ளைப்பூ சிரிக்கிறது நாவல் பொதுப்பணி பற்றியதாய் அமைகிறது. அறிவால் மாத்திரம் வாழ்க்கையைக் கொண்டு செலுத்த முடியாது என்பதை தொனியாகக் கொண்ட புனைவு வெள்ளைப்பூ சிரிக்கிறது. தன் அறிவாலும் கற்றுக் கொண்ட கல்வியாலும் உலகின் நியாய தர்மங்களை நியாயப்படுத்திப் பார்க்கிறான் தலைவன், அதுவே உலகம் என்று நினைத்துச் செயற்படும் அவனது கணிப்புத் தவறும் பொழுது அந்த அதிர்ச்சியினை அவனால் தாங்க முடியாமல் இறந்து விடுகிறான். கஸ்ஸாலி, எஸ்ஸதீன், அலிஷப்ரி, உசா, பேராசிரியர் ஆகிய பிரதான பாத்திரங்களைக் கொண்டு இக்கதையைப் பின்னியிருக்கும் ஆசிரியர் கல்முனை, மட்டக்களப்புப் பிரதேசங்களைக் களமாகக் கொண்டிருக்கிறார். தனிமனித உறவுகளைச் சித்தரித்துக்காட்டும் அதேவேளை சமுதாய நோக்கையும் சிறந்த இலட்சியங்களை வெளிக்காட்டும் வகையிலும் அமைந்துவிடும் இப்புதினத்தில் ஆடம்பரமான வர்ணனைகள், ஜோடிப்பான வார்த்தை ஜாலங்கள் இல்லாமல் ஆழம், அடக்கம் நிறைந்த போதிலும் ஆசிரியரே அதிகம் பேசிச் செல்வதைக் காணலாம்.

#### எண்பதுகளில் வெளிவந்த புனைவுகள்

எண்பதுகள் காலப்பகுதியில் முப்பத்திரெண்டு நாவல்கள் கிழக்கிலங்கையில் தோற்றம் பெற்றிருக்கின்றன. இவற்றிலே அச்சுருப்பெற்று நூல்வடிவில் 19 நாவல்கள் வெளிவந்த நிலையில் ஏனையவை வெவ்வேறு பத்திரிகைகளில் தொடர் பிரசுரங்களாகவும், குறுநாவல்களாகவும் பிரசுரிக்கப்பட்டுள்ளன. அவற்றுள்ளும் மூன்று நாவல்கள் தட்டச்சுப் பிரதிகளாக இருக்கின்றன. நூல் வடிவில் வெளிவந்தவற்றுள் நான்கு நாவல்களை மட்டக்களப்பு உதயம் வெளியீட்டாளர்களும் இரண்டு நாவல்களை வீரகேசரி நிறுவனமும் ஏனையவற்றை கண்டி கல்ஹின்னைத் தமிழ் மன்றம், சாய்ந்தமருது இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம், தேசிய நூலக சபை, மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்திச் சங்கம், தேற்றாத்தீவு ஜீவா பதிப்பகம் ஆகிய வெளியிட்டு உதவியிருக்கின்றன.

பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட தொடர் நவீனங்களையும் குறுநாவல்களையும் எடுத்துக் கொண்டால் வீரகேசரியில் நான்கு நாவல்களும், தினகரனில் நான்கு நாவல்களும், மித்திரன் பத்திரிகையில் இரண்டு நாவல்களும், சிந்தாமணி, தினக்குரல், மல்லிகை ஆகியவற்றில் ஒவ்வொரு நாவலுமாக பிரசுரிக்கப்பட்டிருக்கின்றமை தெரிகிறது. தட்டச்சுப் பிரதிகள் தாகம், உதயம் ஆகியவற்றின் பிரதிகளாக உள்ளன. இவற்றைப் பார்க்கும் போது நூலுருப் பெற்றவற்றுள் அதிக நாவல்கள் மட்டக்களப்புப் படைப்பாளிகளாலும் நூலுருப் பெறாத அதிகம் பத்திரிகைத் தொடர்கள் திருகோணமலைப் படைப்பாளிகளாலும் வெளியிடப்பட்டிருக்கின்றமை புலப்படுகிறது.

இந்நிலையில் அம்பாறை மாவட்டத்திலிருந்து எண்பதுகளில் ஆறு நாவல்கள் மாத்திரமே வெளிவந்திருக்கின்றன. இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் ஒரு கோடை விடுமுறை (1981), தில்லையாற்றங்கரை (1987), அ.ஸ. அப்துஸ்ஸமதுவின் பனிமலர் (1982), கனவுப்பூக்கள் (1983),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ.எச்.ஏ. பஷீரின் அவள் செத்துக்கொண்டு வாழ்கிறாள் (1989) இவற்றோடு எம்.பி. முகம்மது ஜலீலின் சரித்திரம் தொடர்கிறது. கஸ்ஸாலி தொடக்கி வைத்த சமூகத் தொண்டுகளை விதவையாக வாழும் அவனது மனைவி கதீஜா தொடர முன்வருவதே நாவல்.

அக்கரைப்பற்றைச் சேர்ந்த அ.ஸ. அப்துஸ் ஸமது பனிமலர் (1982), கனவுப் பூக்கள் (1983), தர்மங்களாகும் தவறுகள் (1997) ஆகிய மூன்று நாவல்களை எழுதியுள்ளார். தென்கிழக்குப் பிரதேசத்தின் முதற் சிறுகதையாளர் என்ற பெருமை பெறும் அ.ஸ., புனைகதைத் துறைக்குப் பங்காற்றிய முஸ்லிம்களுள் எம்.சி. சித்திலெப்பை, இளங்கீரன், பித்தனுக்குப் பிறகு முக்கியத்துவம் பெறுகின்றவரென பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா குறிப்பிடுகிறார் (2002). தினகரன் மூலம் சிறுகதை புனையத் தொடங்கியதிலிருந்து சுமார் எழுபத்தைந்து சிறுகதைகளை எழுதியுள்ளதாகத் தெரிகிறது. ஈழத்துத் தமிழ் உலகில் இவர் பேசப்படக் காரணம் இவரது சிறுகதைகளே என்றும் 1982 இல் வெளிவந்த பனிமலர் நாவல் வீரகேசரி நடத்திய பிரதேச நாவல் போட்டியில் வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது. நிலப்புரபுத்துவ மனப்பாங்கிற்கும் கல்வி அறிவு வளர்ச்சியினால் ஏற்பட்ட மனப்பாங்கிற்கும் இடையே நிகழும் போராட்டத்தினை பனிமலர் சித்தரிக்க முயல்கிறது. அம்பாறைப் பிரதேசத்தில் இஸ்லாமிய மக்கள் எத்தகைய பண்பாட்டுக் கோலங்களை கொண்டுள்ளனர் என்பதைக் காட்டுவதாக, மனித பண்பாட்டுக் கூறுகளில் இஸ்லாமிய, இந்து தர்மங்கள் எவ்விதம் இணைந்தும் பிரிந்தும் செயற்படுகின்றனவென்பதைச் சொல்லாமல் சொல்லுவதாக பனிமலர் படைக்கப்பட்டுள்து. இன்றைய பெண்களுடைய மனோபாவங்கள் புதுமைத்துடிப்புப் பெற்று எவ்வாறெல்லாலம் திசைமாறிப் போய்க் கொண்டிருக்கிறதென்பதை அ.ஸ.வின் கனவுப்பூக்கள் (1983) கதை சொல்கிறது. வாழ்வின் சரிபாதியாக இருக்கும் ஒரு பெண் தாரமாகித் தாயாகி ஒரு இல்லத்தில் அரசியாக விளங்க வேண்டியவள் தன்னை கலைத்துறைக்கே அர்ப்பணித்துக்கொண்டு, அதுவே இன்பமென நிற்பது சிறப்பானதா? அல்லது தனது அழகையும் கலையையும் வாழ்வியலுக்கு வழங்கி இல்லற தர்மங்களை பேணி நிற்பது சிறப்பானதா? என்ற விவாதத்தை தொடுத்துவிட்டு வாசகரைச் சிந்திக்க வைக்கும் வகையில் ஆசிரியர் கதையை நகர்த்திச் செல்கிறார். சமூக அந்தஸ்த்தைப் பெரிதாக நினைக்கையில் எழுகின்ற வர்க்க முரண்களுக்கும், பெண்ணியக் கருத்துக்களுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதாய் இவரது கதைகள் நகர்ந்தபோதும் கூறுமுறையில் பழமை தெரிகிறது.

எண்பதுகளில் நாவல் படைக்க வந்த புதுமுகங்களில் இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் முக்கியமானவர். சுதந்திரத்திற்குப் பின்னர் தமிழ் பேசும் மக்களின் அரசியலில் வஞ்சிக்கப்பட்ட முறையையும், சுரண்டல் தனங்களையும், மரபுகளுக்குள் கட்டுண்ட பெண்களின் வாழ்வியலையும் தனது முதல் நாவலான தில்லையாற்றங்கரையில் (1987) கட்டமைக்கிறார். கோளாவில் மண்ணுக்குரிய வழிவழியாக வந்த மரபுகளையும் வழக்கக்கடிபாடுகளையும் அதன் இயல்பான தடத்தில் நின்று பேசும் இந்நாவலாசிரியர் அரசியலை இடையிடையே துணிவோடு அணுகியிருப்பதிலும் எடுத்துரைப்பதிலும் ஏனையவர்களைவிடவும் வித்தியாசப்படுகிறார். 1957 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரையுள்ள ஐந்து வருட காலத்துள் அக்கரைப்பற்றைச் சேர்ந்த சிறு கிராமமான கோளாவிலையும் அது சார்ந்த சமூகத்தையும் அவ்வூர் அமையப்பெற்ற அம்பாறை மாவட்டம் என்பவற்றையும் பின்னணியாகக் கொண்டது தில்லையாற்றங்கரை. இது கிழக்கிலங்கையின் சமூக அரசியலையும் குறிப்பிட்ட இக்காலப்பகுதியின் தேசிய அரசியலில் தமிழ் பேசும் மக்கள் எவ்வாறெல்லாம் வஞ்சிக்கப்பட்டார்கள் என்பதையும் ஓரளவு காட்ட முயல்கிறது.

இராஜேஸ்வரியின் ஒரு கோடை விடுமுறை யாழ்ப்பாணம் அலை வெளியீடாக 1981 இல் வெளிவந்தது. (1988 இல் மணிமேகலை பிரசுரமாக வந்தது) முதல் பாகத்தில் ஒன்பது பகுதிகளையும் இரண்டாம் பாகத்தில் ஏழு பகுதிகளையும் உள்ளடக்கிய இக்கதை பத்து ஆண்டுகள் இலண்டனில் வசித்த பரமநாதன், மரணத் தறுவாயிலுள்ள தந்தையைக் காண ஒரு மாதகாலக் கோடை விடுமுறையில் இலங்கைக்கு வருகிறான். கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் அவனுக்கு ஏற்படும் அனுபவங்கள், முதல் பாகத்தில் சொல்லப்படுகிறது. இரண்டாம் பாகத்தில் மீண்டும் கொழும்பிலிருந்து இலண்டனுக்குச் சென்றதும் தொடரும் சம்பவங்களும் மனப் போராட்டங்களும் காட்டப்படுகின்றன. புலம்பெயர்ந்து உலகமெல்லாம் வாழும் இலங்கையரின் குறியீடாக பரமநாதன் பாத்திரத்தை ஆசிரியர் சிறப்பாகப் படைத்துக் காட்டியிருக்கிறார். சாய்ந்தமருதைச் சேர்ந்த ஏ.எச்.ஏ. பஷீரின் அவள் செத்துக் கொண்டு வாழ்கிறாள் (1989) குறும்புனைவு மாணிக்கம் சஞ்சிகையில் ஏலவே பிரசுரமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவற்றோடு சமாதானம் சஞ்சிகையில் வெளிவந்த மருதூர் வாணரின் புதியதோர் உலகம் செய்வோம் (1988) குறுநாவலும் இக்காலத்துக்குரியதே.

**தொண்ணூறுகளில் எழுந்த படைப்புக்கள்**

1990 இல் இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கப்படுகிறது. தமிழ் பேசும் மக்கள் மிக மோசமான போர்க்கால வாழ்க்கைக்குள் தள்ளப்படுகின்றனர். புலம்பெயர்வுகள் இலங்கையின் ஏனைய பிரதேசங்களுக்குள்ளும் வெளிநாடுகளை நோக்கியும் இடம்பெற்றன. அகதி முகாம்களுக்குள் அடைக்கலமான மக்கள் சொல்லொண்ணாத் துயரங்களை அனுபவித்தனர். 1995 ஜூலையில் இராணுவத்தினர் தொடங்கிய 'முன்னோக்கிப் பாய்தல்' படையெடுப்பு பாரிய பாதிப்பை உண்டுபண்ணியிருந்தது. வடக்கில் யாழ் முஸ்லிம்கள் புலிகளால் வெளியேற்றப்பட்டமை தமிழ் பேசும் மக்களிடையே நிலவிய உறவைச் சிதைத்தது. கிழக்கில் பலமாக இருந்த தமிழ் முஸ்லிம் இணை இருப்புக்கள் தமிழ்த் தேசியப் போராட்டத்தை நசுக்க முயன்ற பல்வேறு தரப்பினராலும் திட்டமிட்டபடி சிதிலமாக்கப்பட்டன. இரு சமுகத்தினரிடையேயும் ஆத்திரமூட்டும் சம்பவங்கள் திரைமறையில் அரங்கேறியதால் தமிழ் முஸ்லிம் விரிசல்கள் அதிகரித்தன. இவ்வாறானதொரு சூழலில் ஈழத்தமிழ் இலக்கியப் பரப்பிற்கு வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்கின்ற படைப்பாளிகளின் பங்குகள் அதிகமிருந்தன. தமிழ் புனைகதை வெளியைப் பொறுத்தவரை முன் மரபுகளின் வளங்களை உள்வாங்கி அடுத்த பரிமாணத்தை நோக்கிச் செல்லத் தொடங்குவதற்கான நாவல் புனைவுகள் இக்கால கட்டத்தில் இடம்பெற்றன. இவை தமிழகப் புனைவாளர்களிடத்தும் புலம்பெயர் புனைவாளர்களிடத்தும் ஏற்பட்ட நிலையில், அவற்றின் தரிசனங்களை கிழக்குப் புனைவாளர்களிடத்திலும் ஓரளவு சந்திக்க முடிகிறது. அவ்வகையில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் உலகமெலாம் வியாபாரிகள் (1991), தேம்ஸ் நதிக்கரையிலே (1992), பனிபெய்யும் இரவுகள் (1993), வஸந்தம் வந்து போய்விட்டது (1997), அ.ஸ. அப்துஸ்ஸமதுவின் தர்மங்களும் தவறுகள் (1997), விமல் குழந்தைவேலின் மண்ணும் மல்லிகையும் (1999) ஆகிய ஆறு நாவல்கள் மாத்திரமே நூல்வடிவில் வெளி வந்திருக்கினறன.

இதேநேரம் உக்கிரமான போர் நிகழும் இக்காலகட்டத்தில் வன்னி, யாழ் பிரதேசங்களிலிருந்து கணிசமான நாவல்கள் வெளிவந்திருந்தமையும் கவனிக்கத்தக்கதாகும். தாமரைச் செல்வியின் விண்ணில் அல்ல விடிவெள்ளி (1992), தாகம் (1993), பொன் கணேசமூர்த்தியின் தொடுவானம் தூரத்தில் (1995), இயல் வண்ணனின் சுவடுகள் (1994), பொய்மையின் நிழல் (1997), செ. யோகநாதனின் துன்பக்கேணியில் (1997) என்பன போர்க்கால வாழ்க்கையைக் காட்ட, போராளிகளின் அனுபவங்களை மலரவனின் போருலா, புயல்பறவை, இனிஇருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலகும் ஆகியன காட்டுகின்றன. கருத்துவிளக்க நாவல்கள் என்ற வகையில் மரணத்தில் நிழலில் (1994), அந்நியமாதல் (1995) என்பனவும் தனிமனித உணர்வுகளைக் காண்பிக்கும் நாவலாக தெணியானின் காத்திருப்பும் வெளிவந்தன. பெண்ணிலைவாத நோக்குடைய நாவல்களும் வெளிவரத் தவறவில்லை.

தொண்ணூறுகளில் கிழக்கில் வெளிவந்த முப்பது நாவல்களிலும் நூல் வடிவில் வந்த மேற்படி ஆறு நாவல்கள் தவிர, சஞ்சிகைகளில் வெளிவந்த குறுநாவல்களாக மருதூர் வாணரின் கொண்டை வெட்டுவான் காதலி (1996), படுவான்கரைப் போடியார் (1997), சண்முகம் சிவலிங்கத்தின் காலடி (1997) என்பனவும் முக்கியமானவை.

விமல் குழந்தைவேலின் மண்ணும் மல்லிகையும் (1999) அவரது சொந்த அனுபவத்திலிருந்து முகிழ்ந்த கதையாக உள்ளது. ஈழ விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கும் போது அமைதியாக வாழ்ந்து கொண்டிருந்த அழகான ஒரு குடும்பம் போராட்டம் முடிவதற்கு முன்னரே தன் கதையை முடித்துக் கொள்கிறது. எண்பது, தொண்ணூறுகளில் அக்கரைப்பற்றுக்கு அருகில் உள்ள கோளாவில் கிராமத்தையும் அதனை அண்டிய பகுதிகளான தம்பிலுவில், திருக்கோவில், சாகாமம், தம்பட்டைப் பகுதிகளையும் களமாகக் கொண்டு எழுந்த இந்த நவீனத்தில் விடுதலைப் போராட்டப் பதிவுகள் மாத்திரமன்றி இக்கிராமங்களில் இடம்பெற்ற கள்ளங்கபடமற்ற காதலும் இணைந்திருக்கிறது.

கதையில் ஆலமரமாக வேரூன்றி நிற்கும் ஆச்சி, மல்லிகைச் செடியாக மற்றவர்களுக்கு மணம் கொடுத்து பின்னர் இல்லாமல் போகின்ற சதீஸ், ராமு, செந்தில், மல்லிகையைச் செடியைப் போசித்து வளர்க்கும் ஆசிசியின் பேத்தி நவமணி அக்கா ஆகிய மாமன் - மருமக்கள், அக்கா - தங்கைகள் இணைந்தொரு கூட்டுக்குடும்பம் தாய் மண்ணுக்கான விடுதலைப் போராட்டத்தில் சிதறுண்டு போனாலும் மண்ணை மாத்திரம் அழிக்க முடியாது என்பதை விமல் குழந்தைவேல் தனது நாவலின் மூலம் காட்டியிருக்கின்றார். துப்பாக்கிக் குண்டுகள் மனிதனையும் மனிதனால் ஆக்கப்பட்ட வஸ்துக்களையும் அழிக்கலாம் ஆனால் மண்ணை அழிக்க முடியாதென்பது ஆசியரியர் கருத்தாக உள்ளது.

இராஜேஸ்வரியின் உலகமெல்லாம் வியாபாரிகள் (1997) இனக் கலவரத்தின் பின்னர் இலண்டனில் குடியேறிய ஈழத்தமிழர்களின் பிரச்சினைகளைப் பின்னணியாகக் கொண்டு எழுந்திருக்கிறது. ஆண் - பெண் உறவுகளைக் காட்டும் இக்கதையில் கணவன் மனைவிக்குள் எழும் சந்தேகங்கள், முன்னர் காதலித்தவரோடு உறவு பாராட்டுதல், இங்கிலாந்தில் தொடரும் ஈழத்தவரின் அரசியல் முரண்பாடுகள் என்பன கிடைக்கின்றன. தமிழர் கலாசாரம் பற்றிய விவாதங்களும் பெண்ணுரிமை பற்றிய தவிப்பும் இதில் விசேடமாகப் பேசப்படுகின்றன. தேம்ஸ் நதிக்கரையினிலே நவீனம் குடும்பச் சுமைகளோடும் பெற்றோர்களது கனவுகளோடும் புலம்பெயர்ந்து சென்றவர்கள் அங்கு கடுமையாக உடல் வருத்திப் பெறும் சிறிதளவு சம்பளத்தில் படிப்பைத் தொடரவேண்டிய சங்கட நிலை குறித்துப் பேசுகின்றது. தங்குமிடப் பிரச்சினை, உணவு, உடை, அந்நியராக நோக்கப்படும் நிலை, குடியிருப்புச் சொந்தக்காரர்களின் பாலியல் சுரண்டல், காதல் பிரச்சினைகள் என்று அனைத்தையும் விரிவாக அலசுகின்றது. பனிபெய்யும் இரவுகள் பருவகாலத்துக் காதல், தியாகத்துடன் கூடிய காதல், பரஸ்பரம் புரிந்துணர்வு கொண்ட காதல் எனக் காதலை பிரித்துக்காட்டிக் தெளிவுறுத்தும் ஒரு காதல் கதையாக அமைகிறது. வசந்தம் வந்து போய்விட்டது நாவல் புலம்பெயர்வால் தமிழ் மக்களின் மன உணர்வுகள், பழக்க வழக்கங்கள், சமூகப் பெறுமானங்கள் என்பவற்றோடு பன்னாட்டுக் கலாசார மோதல்களால் உண்டாகும் தாக்கங்களையும் காட்டுகின்றது. வாசகர்களை அருகே வைத்து ஆசிரியர் பேசுவது போல இராஜேஸ்வரியின் நவீனங்கள் உணரப்படுவதோடு ஆங்கில மொழியின் வசன அமைப்பு முறையை நாவல்களில் பரடவிட்டிருப்பது தெரிகிறது. சில இடங்களில் யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழை ஆங்கிலம் கலந்து பயன்படுத்துவதும், நிகழ்ச்சிகளின் தொடர்ச்சிகளை வாசகர்களிடமே ஊகித்து அறியும் படி விட்டுச்செல்கின்றமையும் தெரிகிறது. இது ஒற்றைத் தன்மையை விட்டும் விலகி வாசகனிடத்துப் பல் பிரதிகளை உருவாக்குவதற்கான எத்தனமாய் அமைகிறது எனலாம்.

தர்மங்களாகும் தவறுகள் அ.ஸ். அப்துஸ்ஸமதுவின் மூன்றாவது நாவலாகும். தவறுகள் பெரும்பாலும் சந்தர்ப்பவசத்தால் ஏற்படுகின்றன. அவை நியாயங்களோடு கூடியதாகவும் இருக்கலாம். அத்தகைய தவறுகளுக்குப் பிராயச்சித்தம் தேடும் போது மற்றொரு தவறு நிகழ்கிறது. இத்தவறுகளின் தன்மைகளை எடுத்துக்காட்டி விவாதிப்பதாக தர்மங்களாகும் தவறுகள் நாவல் உள்ளது.

சண்முகம் சிவலிங்கத்தின் குறுநாவல்களில் ஒன்று காலடி. இது களம் - எட்டு சிற்றிதழில் மே மாதம் 1997 இல் வெளிவந்தது. கனவு நிலைசார்ந்த பல காட்சிகளின் வெளிப்பாடாக அமையும். இக்கதையில் நிவேதை, நிவேதன், துஷ்றிகி, நாத்மா, இஸ்தாயு, உட்ஸ்றிகி போன்ற பாத்திரங்கள் பின்னப்படுகின்றன. கனவுநிலை உணர்வுச் சித்தரிப்பு, வர்ணணை, உரையாடல் என்பவை கொண்ட வித்தியாசமான குறியீட்டுப் புனைவாக இது உள்ளது, வன்முறைக் கலாசாரத்தின் பேசுபொருளைக் கொண்ட இப்புனைவு துஷ்றிகி சிலுவை ஏற்றப்படுவதையும் கல்வாரி தொடங்கி கல்லிடையாற்றங்கரை வரையான அதன் நீட்சியையும் காட்டுகிறது. ருவண்டா தொடங்கி ஈழம் வரையான விடுதலையும், காட்டிக் கொடுப்பும், ஈழக்கடலில் தொடங்கி கல்லிடையாற்றங்கரை ஊடாக கோயில் வெளிவரை தொடரும் விடுதலையும் காட்டிக் கொடுப்புமெனக் குறியீட்டுப் பாங்கில் கதை சொல்வதைக் கவனிக்க முடிகிறது. தொண்ணூறுகளில் அம்பாறை மாவட்டத்தில் இவ்வாறான புனைவுகள் வெளிவந்த அதேநேரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஜுனைதா ஷெரிப், செ. குணரெத்தினம், திமிலைத் துமிலன் ஆகியோரோடு புதிய நாவல் புனைவாளர்களாக மண்டூர் அசோகா, பங்கேஸ்வரி சங்கரப்பிள்ளை, சுமதி அற்புதராஜா, ஓ.கே. குணநாதன் ஆகியோரும் திருகோணமலை மாவட்டத்தில் கிழக்கிலங்கையின் நாவல் முன்னோடி வ.அ. இராசரெத்தினம், ந. பாலேஸ்வரி, க. அருள்சுப்ரமணியம், வே. தில்லைநாதன், அ.அ. ஜெயராசா, பிரமிள் ஆகியோரும் தங்கள் பங்களிப்புக்களை நல்கியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**இரண்டாயிரங்களில் வெளிவந்த பிரதிகள்**

இரண்டாயிரங்களில் போர்ச் சூழலில் உள்நாட்டு இடப்பெயர்வுகளும், கண்டம் தாண்டிய புலப்பெயர்வுகளும், அகதி முகாம் வாழ்க்கையும் பொருளாதாரத் தடை முதலிய இன்னல்களும் தொடர்ந்துவந்த நிலையில், முள்ளிவாய்க்கால் 2009 முடிவின் பின்னர், இனப்பிரச்சினை என்பது அபிவிருத்திப் பிரச்சினையாகச் சுருக்கப்பட்டமை யாவரும் அறிந்ததே. வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் கட்டுப்பாடுகள் இராணுவத்தினரிடமே தொடர்ந்தும் இருந்ததோடு திட்டங்களும் தீர்வுகளும் இராணுவ அதிகாரிகளின் கைகளிலேயே ஒப்படைக்கப்பட்டிருந்தன. இந்த நாட்களில் பள்ளிவாயல் உடைப்புகள், கலால் உணவுப் பிரச்சினை, முஸ்லிம் பெண்கள் அணியும் பர்தாப் பிரச்சினை, முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்களில் பொருட்கள் கொள்வனவு செய்யக்கூடாது என்ற கோசம் போன்றவற்றைப் பார்க்கும் போது, இலங்கையின் முதலாவது சிறுபாண்மைத் தமிழ் சமூகம் பல்வேறு நெருக்கிடைகளுக்கு முகங்கொடுத்த, கொடுத்துக் கொண்டிருக்கின்ற நிலையிலேயே இரண்டாவது சிறுபாண்மைச் சமூகத்திற்கெதிரான ஒடுக்கங்கள் நேரடியாகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கி விட்டிருந்தமையும் முக்கியமாகக் கவனிக்கத்தக்கது. இதே நேரம் இரண்டாயிரங்களில் நாளேடுகளாகவோ அல்லது வாராந்தப் பத்திரிகைகளாகவோ எதுவும் கிழக்கில் இருந்து வெளிவருவதற்கான சூழ்நிலை அமைந்திருக்கவில்லை. எனினும் இணையத்தளப் பத்திரிகைகளின் வருகை, மூன்று மாவட்டங்களிலிருந்தும் வெளிவந்த சஞ்சிகைகள், இலக்கிய இயக்கங்களின் செயற்பாடுகள், காரைதீவு மண்ணில் நடைபெற்ற தமிழ் செம்மொழி விழா முதலியன எழுத்தாளர்களின் படைப்பாற்றலுக்கு மேலும் விசைகொடுத்தன. அந்த வகையில் இரண்டாயிரத்துப் பத்தை உள்ளடக்கிய காலப்பிரிவுக்குள் 47 நாவல்கள் நூல் வடிவில் வெளிவந்தன. இவற்றில் அம்பாறை மாவட்டத்தில் இருந்து 13 நாவல்கள் வெளிவந்திருக்கின்றன. முன்னர் எழுதிவந்த நாவலாசிரியர்களோடு ஜின்னா ஷரிபுத்தீன், எஸ். நசுறுத்தீன், உமா வரதராஜனின் மூன்றாம் சிலுவை, ஆர்.எம். நௌஷாத் (தீரன்), அப்துல் றஸாக், அஸீஸ் எம். பாயிஸ், எஸ். அரசரத்தினம், ஹிதாயுத்தாஹ் மீர்சாஹ் ஆகியோர் இணைந்து கொண்டனர். அவ்வகையில் இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் அவனும் சில வருடங்களும் (2000), விமல் குழந்தைவேலின் வெள்ளாவி (2004), எஸ். நசுறுத்தீனின் நச்சு வளையம் (2004), ஒலுவில் அமுதனின் நாம் ஒன்று நினைக்க (2000), கரையைத் தொடாத அலைகள் (2002), ஜின்னா ஷரிபுத்தீனின் கருகாத பசுமை (2000), அப்துல் றஸாக்கின் வாக்குமூலம் (2005), ஆர்எம் நௌஷாத்தின் நட்டுமை (2009), அஸீஸ் எம் பாயிஸின் வயலான் குருவி (2008). உமா வரதராஜனின் (2009), எஸ். அரசரத்தினத்தின் சாம்பல் பறவைகள் (2010), ஹிதாயத்துல்லா மீர்சாவின் பிரிவுக்குள் பிணைப்பு (2010) ஆகியவை இக்காலகட்டத்துள் அம்பாறையில் எழுந்திருந்தன. இவை தவிர தினரகன் பத்திரிகையில் நற்பிட்டிமுனை பழீலின் சொந்தமில்லா நினைவுகள் குறுநாவலும், சஞ்சிகையில் ஆகவேஜபாரின் துப்பாக்கிகள் பற்றிய கதையும் வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இராஜேஸ்வரியின் அவனும் சில வருடங்களும் இலண்டனில் உள்ள திரைப்படக் கல்லூரி ஒன்றினை களமாகக் கொண்டு காட்டப்படுகிறது. கலாசார முரண்கள், ஈழத்து அரசியல் நிலைகள், உலக அரசியல் போக்குகள், ஒடுக்குதல்கள், பெண்ணிலை என்பன இராஜேஸ்வரியினால் கேள்விக்குட்படுத்தப்படுகின்றன. அவ்வகையில் இவரது முன்னைய நாவல்களில் இருந்தும் அவனும் சில வருடங்களும் வேறுபடுகின்றது. விமல் குழந்தைவேலின் வெள்ளாவி விளிம்பு நிலை சமூகம் ஒன்றினை ஆதங்கத்தினை எடுத்துக்காட்டும் சிறந்த புனைவாகும். கோளாவிலைச் சேர்ந்த தீவுக்காலைக் கிராமத்து சலவைத் தொழிலாளர்களின் வாழ்வியலைக் காட்டுகின்றது. அச்சமூகத்தில் உயர்நிலை பெற்றிருந்த போடியார் வர்க்கத்தினரால் இத்தொழிலாளர்கள் சுரண்டப்பட்டும், பாலியல் ரீதியில் ஒடுக்கப்பட்டும் வந்திருக்கும் விதத்தினை உயிர்த்துடிப்புடனும், மண் வாசனையுடனும் யதார்த்தம் தொணிக்க ஆசிரியர் காட்டியிருக்கின்றார். இதில் பேச்சு மொழியின் ஆதிக்கம் கிழக்கில் வெளிவந்த எந்த நாவலிலும் இல்லாத அளவுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றமை சிறப்பாகும். இப்புனைவு பற்றி பேராசியர் செ. யோகராசா கூறுகையில் ஈழத்தில் சலவைத் தொழிலாளர்களது வாழ்க்கைப் பிரச்சினைகளையும் இன்ப துன்பங்களையும் முதன் முதலாக யதார்த்தமாகச் சித்தரிக்கும் நாவல் இது என்கிறார்.

ஆர்.எம். நௌஸாத்தின் நட்டுமை கல்முனைப் பிரதேசக் கிராமம் ஒன்றின் பண்பாட்டுக் கூறுகள் சிலவற்றைக் கவினுறுக் காட்டுகின்றது. இதேநேரம் பள்ளிமுனைக் கிராமத்தின் கதை (2003) முஸ்லிம் குரல் பத்திரிகையிலும், வானவில்லே ஒரு கவிதை கேளு (2005), ஈழநாதம் பத்திரிகையிலும், நிற்பதுவே... நடப்பதுவே... பறப்பதுவே... (2006) புனைவு மீள்நிலத்திலும் ஒரு சிற்றெரும்பிற்கும் நிழல் இருக்கிறது (2009) விடிவெள்ளியிலும் வெளிவந்திருக்கின்றன. காலச்சுவடு அறக்கட்டளையின் சுந்தரராமசாமி – 75 இலக்கியப் போட்டியில் முதல் பரிசு பெற்ற நட்டுமை (2009) நூலுருப் பெற்ற இவரது முதலாவது நாவல் ஆகும். ஆங்கிலேயர் ஆட்சி நிலவிய இறுதிக் காலகட்டங்களில் தென்கிழக்கு முஸ்லிம் கிராமமம் ஒன்றின் வாழ்வியல் நிலை இதில் பேசப்படுகிறது. 1930 இற்கு முற்பட்ட கிழக்கிலங்கை முஸ்லிம்களது வாழ்வு பற்றி ஜுனைதா ஷெரிபீன் பெரிய மரைக்கார் சின்ன மரைக்காார் காட்டி நிற்க, அதனைத் தொடர்வதாக ஆர். எம். நௌஷாத்தின் நட்டுமை ஒரு சிறந்த சமூக வரலாற்றுப் புதினம் என்ற பெருமை பெறுகிறது.

எஸ் நசுறுத்தீனின் நச்சு வளையமும், அஸீஸ் எம். பாயிஸின் வயலான் குருவியும் முஸ்லிம் தேசியம், நில ஆக்கிரமிப்பு என்பன பற்றிப் பேசுகின்றன. இலங்கையில் தேசிய இனங்களின் பிரச்சினைகள் பற்றிப் பேசிநிற்கும் அம்பாறை மாவட்டத்தின் முதல் நவீனம் என்ற சிறப்பு நசுறுத்தீனின் நச்சு வளையத்திற்குரியதாகும். கிழக்குப் பல்கலைக்கழகச் சூழல், அக்கரைப்பற்றுப் பிரதேசம் ஆகிய களங்களில் நின்றும் விரியும் இப்பிரதி கலாகலமாக இருந்த வந்த தமிழ் - முஸ்லிம் நெருக்கம் எப்படிப் படிப்படியாக விரிவுபட்டுப் போகிறது என்பதையும், வன்முறைகளின் கொடூரம் மற்றும் மேலாதிக்கம் என்பவற்றையும் எடுத்துக் காட்டுகிறது. கதைப் பின்னணி, கருத்தியல் அறிவுடன் இணைத்து சமூக நடத்தைப் பரிமானங்களை எடுத்தாண்டிருக்கும் நசுறுத்தீனின் வளமான மொழிநடை வாசகப் பிரதியாக்கத்திற்கு வளியெடுத்துக்கொடுக்கும் புதிய படைப்பாக்க முறைமை எனலாம்.

கலாசார சேவைகள் திணைக்கள வெளியீடாக வந்த அஸீஸ் எம். பாயிஸின் வயலான் குருவி நவீனம், சிங்களப் பெரும்பான்மைச் சமூகம் முஸ்லிம் சமூகத்தை ஒடுக்குவது பற்றிப் பேசுகிறது. அம்பாறை மாவட்ட முஸ்லிம் மக்களின் பொன்னன் வெளிப் பிரச்சினையை துணிச்சலோடு காட்டும் வகையில் பாயிஸ் கையாண்ட பாத்திர உருவாக்கம், நம்பிக்கைகள், பேச்சு வழக்கு, காதல் நிகழ்ச்சிகள் என்பவற்றில் யதார்த்தம் தொனிக்கிறது.

ஈழத்தில் பல்கலைக்கழகங்களோடு தொடர்புபட்ட நாவல்கள் என்ற வகையில் கொழும்புப் பல்கலைக்கழகத்தை வைத்து கமலா தம்பிராசாவின் எங்கேயும் எப்போதும், செங்கை ஆழியானின் பிரளையம், பேராதனைப் பல்கலைக்கழகத்தை வைத்து கங்கைக் கரையோரத்தில் முதலில் புனைவுகள் முதலில் வெளிவந்திருக்கின்றன. இதேபோல் கிழக்குப் பல்கலைக்கழத்தை வைத்து இருவர் புதினங்களைத் தந்திருக்கின்றனர். ஒருவர் நற்பிட்டிமுனை பழீல் அடுத்தவர் மைக்கல் கொலின். நற்பிட்டிமுனை பழீலின் கதை தினகரன் தொடராக வெளிவந்திருந்தது. மைக்கல் கொலினுடைய காதல் வெண்ணிலா கையில் சேருமா...? (2003) நாவலும், தென்கிழக்குப் பல்கலைக்ழகத்தை வைத்து எழுந்த அப்துல் றஸாக்கின் வாக்குமூலமும் (2005) இரண்டாயிரங்களில் எழுந்தவையாகும். மஞ்சந்தொடுவாய் தொழில்நுட்பக்கல்லூரியில் இருந்து எழுந்த கிண்ணையடி எஸ். பாண்டியனின் குறுநாவல் ஒன்றும் தென் இலங்கைப் பாடசாலை ஒன்றைக் களமாகக் கொண்டெழுந்த திக்வெல்லை கமாலின் பாதை தெரியாத பயணம் என்ற நாவலும் சமகாலத்திற்குரியன. இவற்றில் அம்பாறை மாவட்டத்திற்குரிய அப்துல் றஸாக்கின் வாக்குமூலம் ஒலுவில் பிரகடணம், மாணவர் பேவைத் தேர்வு, இனக்கலவரம், ஹர்த்தால் ஆகிய இக்காலகட்ட நடப்புக்களை பதிவுக்குள்ளாக்கியதில் முக்கியம் பெறுகிறது. போர்ச்சூழல்கள் பற்றி விளக்கும் நாவல்களுக்குள்ளே நாம் ஒன்று நினைக்க (2000) நாவலைத் தந்த ஒலுவில் அமுதனின் கரையைத் தொடாத அலைகள் (2002) புனைவில் யுத்தத்தின் கெடுபிடிகளையும், இராணுவ நடவடிக்கை களையும், அதற்கெதிரான புலிகளின் தாக்குதல்களையும் எடுத்துக் காட்டியிருக்கும் ஆசிரியர் அம்பாறை மாவட்டத்தின் யுத்த களத்தை ஓரளவிற்கு காட்ட முயன்றிருக்கின்றார். அரசரத்தினத்தின் சாம்பல் பறவைகள் (2010) வன்னிச்சமரின் போது பொது மக்கள் அனுபவித்த அவலங்களின் ஒரு பகுதியை வெளிக்கொண்டு வந்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை ஆசிரியராகவும் விமர்சகராகவும் அறியப்பட்டு வந்த உமா வதராஜனின் மூன்றாம் சிலுவை அவரது முதல் நாவலாக உள்ளது. ஈர்ப்பான எளிய நடையோடும் புனித உடைப்புப் பண்போடும் வந்துள்ள ஒரு காதல் கதை தமிழ் திரைப்படக் காட்சிகளை உருவமாக்கி, சொந்தக் கவிதைகளையும், நாட்குறிப்பு உத்திகளையும் கலந்தவாக்கில் கதை சொல்லியிருப்பது அழகாகும். தன்னிலை நின்று பார்க்கின்ற ஆணாதிக்க சாயலும், பாத்திரங்களாக ஆசிரியரே பேசி கட்டுப்படுத்துவதும் குறைபாடுதான் என்றாலும் வாசிக்கத்தொடங்கியதும் வாசகனை தன்னோடு இழுத்துச் செல்லும் கிழக்கின் சிறந்த கதை சொல்லிகளில் உமா வரதராஜனும் ஒருவர் என்பதை நாவல் மேலும் நிரூபிக்கின்றது.

பாண்டிருப்பைச் சேர்ந்த முகில்வண்ணனின் ஆனந்தக் கன்னீர், நினைத்தது ஒன்று, ஹிதாயத்தாஹ் மீசாவின் பிரிவுக்குள் பிணைப்பு, ஜபாரின் துப்பாக்கிகள் பற்றிய கதை, ஜின்னா ஷரிபுத்தீனிக் கருகாத பசுமை என்பனவும் இரண்டாயிரங்களில் எழுந்த சமூகப் புனைவுகள் ஆகும் இரண்டாயிரத்துப் பத்தின் பின்னர் விமல் குழந்தைவேலின் கசகரணம், ஆர்.எம். நௌஷாத்தின் கொல்வதெழுதல் (2014), ஹிதாயத்துல்லாஹ் மீர்சாவின் நேசவினை (2014), ஏ.எச்.ஏ. பஷீரின் ஒரு பூ மீண்டும் மீண்டும் மலர்கிறது (2014), ஜே. வஹாப்தீனின் கலவன் கட்டிகள் (2016), சாஜித் அஹமட்டின் பஞ்சபூதங்கள் (2016), பர்சானா றியாசின் பதுமராகம் (2016) என்பன வெளிவந்த நிலையில் இறுதியாக வந்துசேர்ந்த புனைவு கலவன் கட்டிகள் புனைவினைத் தந்த கவிஞர் ஜே. வஹாப்தீனின் குலைமுறிசல் (2017) என்ற நாவலாகும். ஈழத்தில் மாற்றுத் திறனாளிகளைப் பற்றிப் பேசுகின்ற முதல் நாவலாக இப்புனைவு அமைந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

1970களில் தொடங்கி இற்றைவரை இருபத்திரண்டு நாவல் ஆசிரியர்களின் சுமார் 35 நாவல்கள் நூல் வடிவில் வெளிவந்திருக்கின்றன. இவற்றிலும் ஏறத்தாளப் பத்துப் புனைவுகள் குறுநாவல்களாக விளங்குகின்றன. அம்பாறை மாவட்டத்தில் அதிக நாவல்களைத் தந்த பெருமை கோளாவிலைச் சேர்ந்த இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தையே சாரும். இவருக்குப் பின்வந்த பெண் புனைவாளர்களாக ஹஸீனா வஹாப், யோகா யோகேந்திரன், பர்சானா றியாஸ் ஆகியோர் உட்பட பலர் முதல் நாவலோடு நின்றிருப்பது தெரிகிறது.

கதைக்கரு, கதை நிகழ்களம் என்பவற்றைக் கருத்திற்கொண்டு கதாபாத்திரங்களைப் படைத்திருக்கும் அம்பாறை ஆசிரியர்கள் தங்கள் நாவல்களில் பொருத்தமான உரைநடையைக் கையாள்வதில் ஓரளவிற்கு வெற்றிகண்டுள்ளனர். அதேநேரம் படைப்புக்கால கட்டங்களுக்குரிய சமூக நிலைகளை சிறப்பாக எடுத்துக்காட்டியிருந்த போதும் அரசியல் நிலைவரங்களை முழுமையாகக் காட்டுவதில் பின்னடித்துள்ளனர். சிலருடைய நாவல்களில் அரசியல் தொட்டம் தொட்டமாகப் பேசப்படுகின்ற நிலையைக் காணலாம். பண்பாட்டையும் அறிவிலையும் கடத்தக்கூடிய வகையில் அமைந்த சிறுவர் புனைவுகளோ, விஞ்ஞானப் புனைவுகளோ இன்னும் அம்பாறை மாவட்டத்தில் தோன்றவில்லை.

கட்டமைப்புச் சார்ந்த, வடிவ மாற்றங்களுடன் கூடிய புதுமை நோக்கிய படைப்புக்கள் இன்னும் வெளிவரவில்லை என்றாலும் இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் சிறந்த படைப்புக்களோடு உமா வரதராஜனின் மூன்றாம் சிலுவை, நசுறுத்தீனின் நச்சு வளையம், விமல் குழந்தைவேலின் வெள்ளாவி, கசகரணம், ஆர்.எம். நௌஷாத்தின் நட்டுமை, கொல்வதெழுதல், அஸீஸ் எம். பாயிஸின் வயலான் குருவி, வஹாப்தீன் கலவன் கட்டிகள், குலைமுறிசல், மஜீதின் கதையாண்டி, சாஜிதின் பஞ்சபூதங்கள், சண்முகம் சிவலிங்கத்தின் காலடி, ஆகவே ஜபாரின் துப்பாக்கிகள் கதை போன்றவை அம்பாறை மாவட்ட நாவல்கள் இன்னொரு திசைநோக்கிப் பயணிப்பதற்கான சமிஞ்சையினைத் தந்திருக்கின்றன என்று துணிந்து கூறமுடியும்.



பட்டினி கிடந்து பசியால் மெலிந்து
பாழ்பட நேர்ந்திடினும்
கடி இழுத்து கால் கை முறித்து அங்கம்
பிளந்து இழந்து டுடிதினும் பொங்கு
தமிழை பேச மறப்பேனோ ....

**- மகாகவி பாரதி**

# தமிழுக்கும்
## அமுதென்று பேர்



தமிழுக்கும் அமுதென்று பேர் ! - அந்த
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு
தமிழுக்கு நிலவென்று பேர் ! - இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்

தமிழுக்கு மணமென்று பேர் ! - இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருபித்த ஊர்
தமிழுக்கு மதுவென்று பேர் !
தமிழுக்கு மதுவென்று பேர் - இன்பத்
தமிழ் எங்கள் உரிமை செம்பயிர்க்கு வேர்

தமிழ் எங்கள் இளமைக்கு பால் - இன்பத்
தமிழ் நல்ல புகழ் மிக்க புலவர்க்கு வேல்
தமிழ் எங்கள் உயர்வுக்கு வான் - இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்கு சுடர்தந்த தேன்
சுடர்தந்த தேன்

தமிழ் எங்கள் அறிவுக்கு தோள் - இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வைரத்தின் வாள்
தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய் - இன்பத்
தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ
தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய் - இன்பத்
தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ

**- பாரதிதாசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விபுலாநந்தரின் நாடக நோக்கு

**கலாநிதி க. இரகுபரன்,**
சிரேஷ்ட விரிரையாளர், தென் கிழக்கு பல்கலைக்கழகம்

தமிழை முத்தமிழ் என்று ஏற்றிப் போற்றுகிற மரபு நம்மத்தியில் உண்டு. ஆனால் தமிழ்ப் புலவர்கள் முத்தமிழ்ப் புலவர்களாகப் போற்றப்படுவது அருமை. சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகளுக்குப் பின்னர் முத்தமிழ்ப் புலவர் எனப் போற்றப் பெற்ற ஒருவர் சுவாமி விபுலாநந்தரே எனலாம். அவரது இயற்றமிழ்ப் புலமைக்கு அப்பால் இசைத்தமிழ்ப் புலமையாளர் என்று அவரைக் கொள்வதற்கு அவரெழுதிய யாழ்நூலும் நாடகத் தமிழ்ப் புலமையாளர் என்று கொள்வதற்கு அவரெழுதிய மதங்க சூளாமணியுமே பெரிதும் காரணமாய் அமைந்தன எனலாம். அவ்வகையில் விபுலாநந்தரின் நாடக நோக்கை அறிவதற்கு மதங்க சூளாமணியே பெரிதும் துணையாகும். அது தவிர நாடகம் பற்றி அவர் ஆங்காங்கே எழுதிய சில குறிப்புக்களும் துணை செய்யலாம்.

**மதங்க சூளாமணி**

1924ஆம் ஆண்டு ஜூன் மாதம் மதுரையிலே, பாண்டித்துரைத் தேவரின் மாளிகையிலே கொண்டாடப்பெற்ற மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் இருபத்து மூன்றாவது ஆண்டு விழாவிலே, உ.வே. சாமிநாதையர் தலைமையிலே ரி.சி. ஸ்ரீநிவாச ஐயங்கார் முதலான அறிஞர்கள் முன்னிலையிலே, சுவாமிகள் நிகழ்த்திய உரையே, அவர்களது வேண்டுகோளுக்கு இணங்க விரித்தெழுதப்பெற்று மேற்படி சங்கத்தின் மாதவெளியீடான 'செந்தமிழ்' இதழில் 1924 ஜூலை முதல், தொடர்கட்டுரையாக வெளிவந்தது. பின் அச் சங்கமே 1926இல் நூலாக வெளியிட்டது. இந்நூலுள் அடங்கியுள்ள விடயங்களனைத்தும் தமது உள்ளத்தில் பல நாளாகப் பயின்று கிடந்தவை என்று விபுலாநந்தர் குறிப்பிடுவது இங்கு கருதத்தக்கது.1

**மதங்க சூளாமணி - பெயர்க்காரணம்**

மதங்க சூளாமணி எனும் பெயரை இந்நூலுக்கு இட்டதன் காரணத்தை விபுலாநந்தரே விளக்குகிறார்: "மதங்கர் - கூத்தர் அன்னாருக்கு ஒரு சிரோரத்தினம் போன்றோரை மதங்க சூளாமணியெனல் பொருத்தமாகும். உலகனைத்தும் ஒரு நாடக மேடையெனவும், ஆடவரும் பெண்டிரும் அந்நாடக மேடையினுள் புகுந்து நடிக்கின்ற கூத்தருங் கூத்தியருமாவரெனவுங் கூறிய ஓர் ஆங்கிலக் கவிவாணர் உளர்.......... இவ்வாறு உலக வாழ்க்கையை நாடகமாகக் கற்பித்துக் கூறிய இக்கவிவாணர் வனப்பின்மிக்க நாடக நூல்கள் பலவற்றை உலகுக்கு அளித்தள்ளார். அஃதன்றி, அரங்கினுட் புகுந்து தாமும் கூத்தருள் ஒருவராக நின்று நடித்துள்ளார். நாடகக் கவிகளுள் இவருக்கு ஒப்பாரும் மிக்காரும் பிறரிலர். ஆதலால் ௌேக்ஸ்பியர் என்னும் இயற்பெயர் பூண்ட இக் கவிவாணரை யாம் மதங்க சூளாமணியென வழங்குவாம். இவரது நாடகங்களுள் அமைந்து கிடந்த வனப்பினுட் சிலவற்றை யாராயப்புகுந்த இவ்வுரைத் தொடரும் மதங்க சூளாமணியென வழங்கப்பெறும்."2

**நூலின் தன்மை**

விபுலாநந்தர் தாம் மதங்க சூளாமணி என இந்திய மயப்பட்ட பட்டத்தைச் சூட்டிச் கௌரவித்த ஆங்கில நாடகக் கவியாகிய ௌேக்ஸ்பியரது நாடகங்களை அழகியல் நோக்கில் அணுகி எழுதியவையே நூற்பொருளாக அமைகின்றன. ஆங்கிலக் கவியை இந்திய அழகியல் நோக்கில் குறிப்பாகத் தமிழ் அழகியல் நோக்கில் அணுகுகிறார் விபுலாநந்தரர்.3

**நூலின் அமைப்பு**

இந்நூல் உறுப்பியல், எடுத்துக்காட்டியல், ஒழிபியல் என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டது. முதலாவதாகிய உறுப்பியல் நாடக உறுப்புக்கள் பற்றிய இந்திய நிலைப்பட்ட விளக்கமாக அமைகிறது. இவ்விளக்கத்துக்கு தொல்காப்பிய பொருளதிகாரச் சூத்திரங்களும் சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரையூடாகக் கிடைக்கப் பெற்ற அழிந்துபோன பழந்தமிழ் நாடக நூல்கள் சிலவற்றின் சூத்திரங்களும் துணையாகின்றன.

இரண்டாவது இயலான எடுத்துக்காட்டியலில் ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் பன்னிரண்டினைத் தேர்ந்தெடுத்து அவற்றை உறுப்பியலிற் கூறப்பட்ட இந்திய – தமிழ் நாடக இலக்கணங்களோடு அமைவு காண்கிறார். சேக்'பியரின் தெரிந்தெடுத்த நாடகங்கள் பன்னிரண்டிலும் முனைப்புற்று நிற்கும் ரசம் – மெய்ப்பாடு எதுவெனக் கண்டு அவ்விரசங்களை விளக்குவதற்கேற்ற நாடகப் பகுதிகளை மாத்திரம் தமிழிற் பெயர்த்து அமைத்தும் ஏனையவற்றைச் சுருக்கமாக விளக்கியும் செல்கிறார்.

ஒழிபியல் விசேடமாக தனஞ்சயனார் இயற்றிய வடமொழி நூலாகிய தசரூபகத்தின் கோட்பாடுகளைத் தொகுத்துத் தருவதாகும். பரதம், நாட்டியசாஸ்திரம் என்னும் முன்னை நூல்களுள் பொதித்த விடயங்களைத் தொகுத்து தனஞ்சயனார் தசரூபகத்தை அமைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. விபுலாநந்தர் தசரூபகக் கருத்துக்களோடு தொல்காப்பியக் கருத்துக்களையும் ஆங்காங்கே பொருத்தி விளக்குவதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியதே.

**நாடகம் பற்றிய விளக்கம்**

ஆங்கிலக் கவிஞர் ஷேக்ஸ்பியரை மையப்படுத்திய நூலாக இருந்தபோதிலும் இந்திய தமிழ் மரபின் அடிப்படையிலமைந்ததே மதங்கசூளாமணி என்பது நூலின் அமைப்பினை நோக்கும்போது தெளிவாகின்றது. அவ்வகையில் நாடகம் என்றால் என்ன என்ற விளக்கத்தையும் விபுலாநந்தர் இந்திய மரபின் அடிப்படையிலேயே தருகின்றார்:

"நாடகம் – கதை தழுவிவரும் கூத்து. சாந்திக் கூடத்தின் வகை நான்கினுள் இஃது ஒன்று என்ப. 'சாந்திக் கூத்தே தலைவ னவிநய மேந்திநின் றாடிய வீரிரு நடமவை, சொக்க மெய்யே யவிநய நாடக, மென்றிப் பாற்படு மென்மனார் புலவர்' என்றமையாற் சாந்திக்கூத்து நால்வகைப்படுமெனவும் அவ்வகைதாம் சொக்கம், மெய்க்கூத்து, அவிநயக்கூத்து நாடகம் என்பனவாமெனவும் அறிகின்றோம்.

சாந்திக் கூத்தின் வகை நான்கினுள் ஈற்றில் நின்ற நாடகம் பல்லாற்றானும் சிறப்புடையது. உள்ளத்து நிகழ்த்த நிகழ்ச்சியைப் பிறர்க்குப் புலப்படுத்துவதற்கு அவிநயம், இசை, மொழிப்பொருள் என்னும் மூன்றும் பயன்படுவன. இம் மூன்றினையும் தழுவி நின்றமையால் நாடகஞ் சிறந்தது. மொழிக்கு இயற்கையாக வமைந்த பொருள் கருவியாக உள்ளத்து நிகழ்ந்த மனக்குறிப்பினைப் பிறர்க்குப் புலப்படுத்துவது இயற்றமிழின் தன்மை, மொழிப் பொருளோடு இசையும் சேர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்க மனக்குறிப்பினை வெளிப்படுத்துவது இசைத்தமிழின் தன்மை. மொழிப்பொருள், இசையென்னும் இரண்டினோடு அவிநயமும் சத்துவமும் சேரவைத்து உள்ளத்தெழுந்த மனக்குறிப்பினைப் பிறருக்குப் புலப்படுத்துவது நாடகத்தமிழின் றன்மை. அங்ஙனமாதலின் குறிப்பு, சத்துவம், அவிநயம் இவற்றோடு கூடிநின்ற ஒன்பது வகைச் சுவையும் நாடகத்துக்கே சிறப்பாகவுரியனவென்பது பெறப்படுகின்றது. இவற்றினை நாடகத்துள் அமைக்குமிடத்துச் சாந்த நெறி தவறாத நீர்மையவாக அமைத்தல் வேண்டும்."4

சுவாமி விபுலாநந்தர் நாடகத்தை நாடகம் என்றும் நாடகத் தமிழ் என்றும் சுட்டுகிறார். அவ்வாறு சுட்டும்போது அவர் கருதுவது அரங்க நாடகத்தை அல்லாமல் நாடக இலக்கியத்தை என்றே கொள்ள வேண்டியுள்ளது. அதுமட்டுமல்லாமல் மதங்க சூளாமணியில் அவர் கூறிய விடயங்கள் பெரும்பாலும் நாடக இலக்கியத்தைக் கருத்திற் கொண்டனவாகவன்றி அரங்கியல் நுட்பங்களைக் கருத்திற் கொண்டனவாகக் காணப்பெறவில்லை.

தமது நூல் தொடர்பாக விபுலாநந்தர் தரும் குறிப்புக்களும் அவர் நாடக இலக்கியத்திற் கொண்ட கரிசனையையன்றி நாடக அரங்கிற் கொண்ட கரிசனையைக் காட்டுவனவாக இல்லை எனலாம். உதாரணமாக தமது நூல்குறித்து, "இவரது (ஷேக்ஸ்பியரது) நாடகங்களுள் அமைந்து கிடந்த வனப்பினுட் சிலவற்றை யாராயப்புகுந்த இவ்வுரைத் தொடர்"5 என்று கூறுமிடத்து கையாளப்படும் வனப்பு என்ற சொல் இலக்கிய அழகையே குறிப்பதை அவதானிக்கலாம். அதுபோலவே "கம்பநாட்டாழ்வார் அகலக்கவிகளுள் முதன்மை பெற்று விளங்குவது போலச் செகசிற்பியர் நாடகக் கவிகளுள் முதன்மை பெற்று விளங்குகிறார்."6 என்னும்போது ஷேக்ஸ்பியரை நாடகக்கவி என்ற நோக்கிலேயே அணுகுகின்றமை புலனாகும். ஷேக்ஸ்பியரின் பன்னிரண்டு நாடகங்களின் கதையோட்டத்தைச் சுருக்கமாக விளக்கிச் செல்லும் விபுலாநந்தர், சில பகுதிகளை மொழிபெயர்த்துத் தருகிறார். அம்மொழி பெயர்ப்புக்கள் செய்யுள் நடையிலே அமையப் பெறுகின்றன. அப்பகுதிகளை மொழிபெயர்த்தமைக்கு – அதுவும் செய்யுள் நடையிலே மொழிபெயர்த்தமைக்கு – காரணம் அவரது இலக்கிய நோக்கே என்பதை, "கவிச்சுவை நிறைந்த பாகங்களை இயன்றவரை செய்யுளுருவமாக மொழிபெயர்த்துத் தருவாம்"7 என்ற அவரது கூற்று உணர்த்தும். இவற்றாலெல்லாம் அவர் நாடக அரங்கிலல்லாமல் நாடக இலக்கியத்தின் மேலேயே அக்கறை காட்டினார் என்பதைத் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம்.

விபுலாநந்தரின் காலத்தில் நாடகத்துறையில் அக்கறை காட்டியவர்கள் – குறிப்பாக ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் ஈடுபட்டவர்கள் – சிலர் இருந்தார்கள். அவர்களுள் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவர் பம்மல் சம்பந்த முதலியார். அவர் ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் சிலவற்றைத் தழுவித் தமிழ்ப்படுத்தி மேடையேற்றினார். இருவரையும் ஒப்பிட்டுக் கூறிய அறிஞரொருவரின் கூற்றினூடாகவும் விபுலாநந்தரின் நாடகநோக்கையும் போக்கையும் நாம் உணர்ந்து கொள்ளலாம்:

"இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஷேக்ஸ்பியரை அணுகி ஆராய்ந்து கற்றோருள் குறிப்பிடத்தகுந்தோர் இருவர். ஒருவர் பம்மல் சம்பந்த முதலியார். பிறிதொருவர் சுவாமி விபுலாநந்தர். இருவரும் சமகாலத்தவரே. தாம் தொடங்கி நடத்திய சுகுண விலாச சபையின் அரங்கேற்றத்துக்கென்று ஷேக்ஸ்பியர் நாடகத்தினுள் குறிப்பிட்ட ஐந்தனைத் தழுவல் நாடகமாக்கித் தமிழில் தந்தவர் சம்பந்த முதலியார். விபுலாநந்தரோ ஷேக்ஸ்பியரை முருகியல் கண்ணோட்டத்தில் அணுகி அவரது ஆங்கில நாடகங்களைத் தமிழின் முதனுலாகிய தொல்காப்பியம் வடநூலாரின் தசரூபகம் ஆகியவற்றோடு ஒப்பிட்டுக் காட்டியவர்."8

இவற்றாலெல்லாம் விபுலாநந்தர் நாடகத்தை அரங்கியல் நோக்கில் அணுகவில்லை என்பதும் இலக்கிய நோக்கிலேயே அணுகினார் என்பதும் பெறப்படும். சமகால நாடகங்கள் பற்றி சுவாமிகள் முன்வைத்த கருத்துக்களும் இங்கு நோக்கத்தக்கன:

"மேலைப்பிரிவினும் குறிப்பிட்ட நூல்களினின்றும் எடுக்கப்பட்ட சூத்திரங்கள் சில அடியார்க்கு நல்லார் உரையால் அறியக்கிடக்கின்றன. அவற்றாலுணரப்படும் இலக்கண மரபுக்கு இலக்கியமாகிய நாடகங்கள் இறந்தொழிந்தன. பிற்காலத்துத் தோன்றிய நாடகங்கள் சந்தி, சுவை, பொருளொருமை யென்னு மிவற்றைத் தெளிவுறக் காட்டாது விரவி நடந்த காரணத்தால் அவற்றை இலக்கணமமைந்த நாடகங்களெனச் சொல்லுவதற்கு இடமில்லை. இனிப் புதுநாடக மமைப்பதற்கு உதவியாகிய கருவி நூலுமில்லை. செஞ்சொற்புலவர் செவ்வி நிறைந்த நாடகங்களை அமைத்துதவாத காரணத்தினாலே கல்வியறிவில்லாதவர் கண்டகண்டவாறு நாடகங்களையமைக்க முற்பட்டு நாடகத்துக்கே ஓர் இழிந்த பெயரை யுண்டாக்கிவிட்டனர். உயிர்க்குறுதி பயக்கு மருந்தினை உண்ணவிரும்பாத ஒரு மகனுக்குச் சர்க்கரையினுள் அம்மருந்தினைப் பொதிந்து வைத்து உதவுகின்ற அன்புடையாளன் போல உயிர்க்குறுதி பயக்கும் உண்மையினை நவரசங்களுட் செறிந்து வைத்து உதவும் நீர்மையது நாடகம். நாடகக்கவி தன்னையோர் வைத்தியன் என அறிதல் வேண்டும். நோயாளியிடத்துப் பொருளினைப் பெறுதல் கருதி பொருந்தாப் பண்டத்தை மருந்தெனக் கொடுக்கும் வைத்தியனுளனாயின் அவனால் விளையுங் கேட்டுக்கோர் அளவில்லை. காமக் கனலை மூட்டுதற் கெண்ணிச் சிற்றின்பச் சரிதைகளை நாடகமாக்கியுதவும் போலி நாடகக் கவிகளால் நாட்டுக்கு விளைகின்ற கேடு மேற்குறித்த போலி வைத்தியனால் விளைகின்ற கேட்டினைப் பார்க்கினும் பல்லாயிரமடங்கு பெரிது. முத்தமிழினுளொன்றாகிய நாடகத்தை வெறுத்தொதுக்காது அதனை யாராய்ந்து சீர்ப்படுத்தி நல்ல நாடகங்களை யமைப்பது கற்றுவல்லோர் கடனாகும்."9

மேற்கோளாகத் தரப்பட்ட இப்பகுதியிலிருந்து விபுலாநந்தரின் நாடக நோக்கினை ஒருவாறு தெளியலாம். விபுலாநந்தரின் காலத்திலே கற்று வல்லவர்கள் நாடகத்தை வெறுத்தொதுக்கினார்கள் என்ற உண்மையும் இங்கு உணரப்படுகிறது.

"செஞ்சொற்புலவர் செவ்விநிறைந்த நாடகங்களை அமைத்துதவாத காரணத்தால்" என்பதனாலும் "நாடகத்தை வெறுத்தொதுக்காது அதனை ஆராய்ந்து செயற்படுத்தி நல்ல நாடகங்களை அமைப்பது கற்றுவல்லோர் கடனாகும்" என்பதனாலும் அவ்வுண்மை உணரப்படுகின்றது. அத்தகைய கற்றுவல்லோர் மத்தியில் நாடகம் பற்றிய உடன்பாடான கருத்து கொண்ட ஒருவராக விபுலானந்தர் விளங்கினார் என்பதும் உணரப்படுகிறது.

ஆனால் சமகாலத்தில் மேடையேற்றப்பட்ட நாடகங்கள் அவருக்கு உடன் பாடானவையல்ல என்பதும் உயிர்க்குறுதி பயக்கும் விடயங்களே நாடகத்துக்கு உரிப்பொருளாக வேண்டும் என்பதே அவர் கொள்கை என்பதும் உணரத்தக்க விடயங்களே. அது போலவே "கல்வியறிவில்லார் கண்டகண்டவாறு நாடகங்களை அமைக்க முற்பட்டமை" பற்றிய அவரது மனத்தாக்கத்திலே நாடகங்களை ஆக்கத் தக்க உரித்துடையோர் கற்றறிந்தவர்களே என்ற அவரது முடிவு உணரப்படுகின்றது. விபுலாநந்தர் தாம் பிறந்த பிராந்தியத்திலும் பிற இடங்களிலும் அக்காலத்தில் பெருமளவில் ஆடப்பெற்றுவந்த கூத்துக்கள் பற்றி எத்தகைய அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தார் என்பதை இதனூடாக நாம் ஊகித்துக் கொள்ளலாம்.

விபுலாநந்தர் "உயிர்க்குறுதி பயக்கும் மருந்தினை உண்ண விரும்பாத ஒரு மகனுக்குச் சர்க்கரையினுள் அம்மருந்தினைப் பொதிந்துவைத்து உதவும்" தன்மைக்கு நாடகத்தினை ஒப்பிட்டார். "ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்" பத்திரிகையில் எழுதிய ஆசிரிய தலையங்கம் ஒன்றிலும் அவ்வாறான வகையில் நாடகம்பற்றி ஒரு குறிப்பினை எழுதியுள்ளார். "நன்னெறி தவறாத நாடக வியப்பு" என்னும் தலைப்பிலமைந்த அக்கருத்துக்களும் இங்கு உடன் நோக்கத்தக்கனவே: "மேலைத்தேசத்திலே புராணபடணம், ஹரிகதாகாலஷேபம், தேவார பாராயணம் இவை முதலிய நன்னெறி மார்க்கங்களில்லை. ஆதலால் அங்குள்ள தொழிலாளர் தம் ஓய்வு நேரத்தைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படக் கழிப்பதற்கு நாடக மேடையையும் சினிமாக் காட்சியையும் நாடிச் செல்வர். சிற்றளவாக உண்ட பொழுது சுகத்தைத் தருகிற மருந்தினைக் கவளங் கவளமாக உண்டால் அம்மருந்தே நஞ்சாவதுபோல நாடகமேடை முதலியன பொதுவாக நஞ்சாய் முடிகின்றன. ஆதலால் புராண படனம், ஹரிகதை முதலிய சற்காலஷேபங்களுள்ள நம் நாட்டில் நாடக மேடையும் சினிமாக் காட்சியும் வேண்டவே வேண்டாம். ஆனால் நன்னெறி தவறா நாடகங்களில்லையோ அவற்றைப் போய்ப் பார்த்தல் கூடாதோ வெனில் ஓர் ஆண்டில் ஒரு முறையோ அல்லது இருமுறையோ பார்ப்பதனால் தீமை நேரிடாது. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு. இழிவுற்ற பாடல்களைப் பாடிக்கொண்டு பெண்களும் ஆண்களும் ஒருங்கு தோன்றி மானங்கடந்த சல்லாப மொழிகளைப் பேசுகிற நாடக மேடை தூய நெறி நின்றோருடைய உள்ளத்தையும் கலைத்துத் தீய நெறியுட் செலுத்துவது. ஆதலினால் அதை முற்றுந் தவிர்ப்பதே முறை."10

மேற்படி ஆசிரியர் தலையங்கத்தின் முற்பகுதியில் எழுதப்பட்ட பகுதியொன்றும் இங்கு அவதானிக்கத்தக்கது. புத்தக வியாபாரியொருவனின் தொழிலும் தமிழ்ப் பணியே என்ற சாராம்சத்தைக் கொண்டது அப்பகுதி. அதில் நாம் விபுலாநந்தரின் நாடக நோக்குத் தொடர்பாக அவதானிக்கத்தக்க பகுதி வருமாறு:

".....புத்தகம் விற்போனொருவன் புத்தகம், புத்தகம், புத்தகம் வாங்கலையோ புத்தகம் என்று கூவிக்கொண்டு வீதிவழியே போனான். 'ஏ புத்தகக்காரா! இங்கு வா. என்ன புத்தகம் உண்டு? காட்டுப் பார்ப்போம்.' என்று சொல்லுதலும் புத்தகக்காரன் உள்ளே நுழைந்து தோளிலிருந்த சுமையை இறக்கி வைத்து 'ஐயாவுக்கு என்ன புத்தகம் வேண்டியது. நல்ல புத்தகம் எல்லாம் இருக்குது. பட்டினத்தார் பாடல் இருக்குது. தாயுமான சுவாமி பாடல் இருக்குது. இராமலிங்க சுவாமி பாடற்றிரட்டு இருக்குது. மூவர் தேவாரத் திரட்டு இருக்குது. நந்தனார் சரித்திரக் கீர்த்தனை யிருக்குது. நாடகத் தினுசு வேணுமானாற் பந்தயங் கூறிய கந்தவேள் சரிதையிருக்குது. பார்சி அல்லி அர்ஜுனா இருக்குது. இன்னும் எத்தனையோ இருக்குது. நாவல்ஸ் இருக்குது. வைத்தியப் புத்தகமும் சோதிடப் புத்தகமும் இருக்குது' என்று முடித்தான். 'நல்லது எனக்கு நாவல்ஸ், நாடகம் வேண்டாம். தோத்திரப் புத்தகங்களை எடுத்துக்காட்டு' என்றேன்....."11

விபுலாநந்தரின் மேற்படி கருத்திலும் செயற்பாட்டிலும் நாடக ஆர்வலரை விட நாம் இராமகிருஷ்ண மடத்துத் துறவி ஒருவரையே தரிசிக்கலாம். ஆனால் அவரது அத் தூய்மை வாதத்துக்கு வழிவகுத்தது அக்காலத்து நிலவிய நாடகச் சூழலே என்றுதான் அமைதி காணவேண்டியுள்ளது.

**சான்றாதாரங்கள்**


1. விபுலாநந்த அடிகள், மதங்க சூளாமணி, பிரதேச அபிவிருத்தி அமைச்சு, கொழும்பு, 1987, ₰. xii.
2. மேற்படி, பக். ix, x.
3. இது தொடர்பான விரிவான விளக்கத்திற்கு, பார்க்க: கலாநிதி பழனி, அரங்கசாமி, 'மதங்க சூளாமணி – ஒரு திறனாய்வு', சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு நினைவு மலர், சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச் சபை, மட்டக்களப்பு, (1995).
4. மேற்படி, ப. i. 5. மேற்படி, ப. x.
6. மேற்படி, ப. x. 7. மேற்படி
8. கலாநிதி பழனி, அரங்கசாமி, மு.கு.நூ., ப. 67. 9. விபுலாநந்த அடிகள், மு.கு.நூ., பக். xi, xii.
10. வித்துவான் சா.இ.கமலநாதன் திரு.வ.சிவசுப்பிரமணியம், (ப.ஆ.), சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்கள் (தொகுதி-1), சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச் சபை, மட்டக்களப்பு, (1995), ப. 240.
11. மேற்படி, ப. 237.


### விவேக சிந்தாமணி 18

ஒருநான்கும் ஈரரையும் ஒன்றே கேளாய் ...
உண்மையாய் ஐயரையும் அரையும் கேட்டேன்
இருநான்கும் மூன்றுடனே ஒன்றும் சொல்லாய்
இம் மொழியைக் கேட்டபடி ஈந்தாய் ஆயின்
பெருநான்கும் அறுநான்கும் பெறுவாய் பெண்ணே
பின்னேஓர் மொழிபுகல வேண்டாம் இன்றே
சரிநான்கும் பத்தும் ஒரு பதினைந் தாலே
சகிக்க முடியாதினி என் சகியே மானே



### தொல்காப்பியம்

ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே
இரண்டு அறிவதுவே அதனொடு நாவே
மூன்று அறிவதுவே அவற்றொடு மூக்கே
நான்கு அறிவதுவே அவற்றொடு கண்ணே
ஐந்து அறிவதுவே அவற்றொடு செவியே
ஆறு அறிவதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே

விடங்கொண்ட மீனைப் போலும்
வெந்தழல் மெழுகைப் போலும்
படங்கொண்ட பந்தழல்வாய்
பற்றிய தேரை போலும்
திடங்கொண்ட இராமன் பாணம்
செருக்களத்துற்ற போது
கடன்கொண்ட நெஞ்சம் போல்
கலங்கினான் இலங்கை வேந்தன்



- கம்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து நாட்டாரிலக்கிய வளர்ச்சியில் கிழக்கிலங்கையின் பங்களிப்பு

கலாநிதி
எம்.ஐ.எம்.ஹனிபா

**1. அறிமுகம்**

உலகில் யூப்பிரட்டீஸ், டைகிரீஸ், நைல்நதி நாகரிக காலந்தொடக்கம் இலக்கிய உருவாக்கம் நிகழ்ந்து வருகிறது. அதன் வகைப்பாடு தொடர்பான அறிதலில் நாட்டார் இலக்கியம் பற்றிய கருத்தியல்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. ஈழத்தில் தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழ்கின்ற யாழ்ப்பாணம், வன்னி, மன்னார், மலையகம், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, புத்தளம் ஆகிய பிரதேசங்களில் தமிழில் அமைந்த நாட்டார் இலக்கியக் கூறுகள் அவதானிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பேணப்பட்டவை போக பேணப்படாதவை ஏராளமாக உள்ளன. சேகரிக்கப்பட்டவை அச்சேற்றப்பட்டுள்ள நிலையில் சில ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை தொகுக்கப்பட்டவற்றுள் கிடைக்கப்பெற்றனவற்றை அடிப்படையாகக் கொண்டு ஈழத்து நாட்டாரிலக்கிய வளர்ச்சிக்கு கிழக்கிழங்கை எத்தகைய பங்களிப்புக்களை வழங்கியுள்ளது என்பது பற்றி விபரிப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

**2. கிழக்கிலங்கையின் புவியியல் கட்டமைவும் தொழில் முறையும்:**

ஈழத்தின் கிழக்கு மாகாணம் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களைக் கொண்ட விரிந்த நிலப்பிரதேசமாக அமைந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டம் ஈழத்தின் கிழக்கே வெருகல் ஆற்றுக்கும் நீலாவணை எனும் ஊருக்குமிடைப்பட்ட பிரதேசமாகிறது. இம்மாவட்டத்தின் இயற்கை அமைவு தனித்துவமான பண்பாட்டு, பழக்கவழக்கங்களுடைய மக்கள் குழுவை உருவாக்கியது. தமிழர்களைப் பெரும்பான்மையினராகவும் முஸ்லிம்களை அடுத்த விகிதத்திலும் கொண்டிருக்கிறது. கிராமங்களில் வாழும் இம்மக்களின் பாரம்பரிய தொழிலாக விவசாயமே இருந்தது. மீன்பிடி, மந்தை வளர்ப்பு, காட்டுத் தொழில் என்பனவும் தொழில் முறைகளாக அமைந்தன.

மட்டக்களப்பின் தென் எல்லையில் அமைந்தது அம்பாறை மாவட்டம். 1961ஆம் ஆண்டில் மட்டக்களப்பிலிருந்து பிரிக்கப்பட்டு தனி மாவட்டம் ஆக்கப்பட்டது. இங்கு முஸ்லிம்களே பெரும்பான்மையாகவும் தமிழர் இரண்டாம் நிலையிலும் உள்ளனர். கவிவளம்மிக்க கிராமங்கள் இங்கு அதிகம் உள்ளன. இக்கிராமிய மக்கள் பிரதான தொழிலாக விவசாயமே அமைந்திருக்கின்றது. "இலங்கையின் நெற்களஞ்சியம்" எனக் கூறுவது இதற்குச் சான்றாகும். மீன்பிடி, சிறுகைத்தொழில் முயற்சிகளும் இக்கிராமத்தில் வாழும் மக்களிடையே காணப்படுகின்றன.மட்டக்களப்பிலும் பார்க்க அதிகளவான நாட்டார் இலக்கியக் கூறுகளை இம்மாவட்டத்தில் காணலாம்.

கிழக்கிலங்கையின் வடகோடியில் அமைந்திருப்பது திருகோணமலை. மட்டக்களப்பிற்கும் முல்லைத்தீவிற்குமிடையே பரந்து கிடக்கின்றது. தமிழ் பேசும் மக்களையே பெரும்பான்மையாக கொண்ட இம்மாவட்டத்தில் கரையோர மக்களின் பிரதான தொழிலாக மீன்பிடி காணப்பட உட்பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் விவசாயத்தைத் தொழிலைக் கொண்டிருக்கின்றனர். இம்மாவட்டத்தின் கிண்ணியா, மூதூர், கந்தளாய், குச்சவெளி, தம்பலகாமம், ஈச்சலம்பற்றை ஆகிய தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதியில் நாட்டார் இலக்கியக் கூறுகள் காணப்படுகின்றன.

**3. ஈழத்து தமிழ் பேசும் மக்களிடையே வழங்கப்படும் நாட்டார் இலக்கியங்கள் :**

ஈழத்தில் தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களில் தமிழர்களும் முஸ்லிம்களும் இணைந்து வாழ்வதால் இரு வேறு வகையான பண்பாட்டியல் கூறுகளை இம்மக்களிடையே எழுந்த நாட்டாரிலக்கியங்கள் பிரதிபலிக்கின்றன. இதனால் ஈழத்து நாட்டாரிலக்கியங்கள் பற்றிய மதிப்பீட்டில் தமிழர், முஸ்லிம் என இருவகை நோக்கினைப் பின்பற்ற வேண்டியது அவசியமாகின்றது.

ஈழத்துத் தமிழ் பேசும் மக்களிடையே நாட்டார் பாடல்கள், நாட்டார் கதைகள், பழமொழிகள், விடுகதைகள் என்னும் நாட்டாரிலக்கிய வகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றுள் பெரும்பாலானவை நாட்டார் பாடலாக அமைவது பொதுமையாகும். இந்நாட்டார் பாடல்கள் அவ்வப்பிரதேச மக்களின் வாழ்வியலுக்கேற்ப உருவாக்கம் பெற்றுள்ள் அவர்களது பண்பாட்டம்சங்களை பிரதி பலிக்கின்றன. ஈழத்தில் அவதானிப்புக்குள்ளாகியிருக்கும் நாட்டார் பாடல்களை,

1. தாலாட்டுப்பாடல்
2. விளையாட்டுப்பாடல்
3. தொழிற்பாடல்
4. காதற்பாடல்
5. வழிபாட்டுப்பாடல்
6. ஒப்பாரிப்பாடல் என வகைப்படுத்த முடியும். இவற்றோடு சிலபகுதிகளில் பள்ளு, சிந்து, தெம்மாங்கு, கும்மி, அம்மானை எனும் பாடல் வகைகளும் தோன்றியுள்ளன.

**3.1. ஈழத்து தமிழ் மக்களிடையே வழங்கிவரும் நாட்டார் பாடல்கள் :**

ஈழத்து தமிழ் மக்களது நாட்டார் பாடல்களைத் தொகுப்பாக்கும் முயற்சிகள் கிழக்கிலங்கையில் அதிகம் இடம்பெற்றுள்ளன. இவ்வகையில் நரேந்திரசிங்கன் வசந்தன் சிந்து (வே.அகிலேசப் பிள்ளை - 1908), மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு (தி.சதாசிவ ஐயர் - 1940), மட்டக்களப்பு நாட்டுப்பாடல்கள் (சு.வித்தியானந்தன் - 1962), ஈழத்து நாடோடிப்பாடல்கள் (எப்.எக்ஸ்.சி.நடராசா - 1962), நாட்டார் பாடல்கள் (கல்வியமைச்சு - 1976) கிழக்கிலங்கை மக்களின் எழுதா இலக்கியங்கள் (ஈழத்துப் பூராடனார் - 2000), திருகோணமலை மாவட்ட கிராமியப் பாடல்கள் (ச. அருளானந்தம் - 2013) ஆகிய தொகுப்புகளிலும் "ஈழத்து நாட்டார் பாடல்கள்" (இ. பாலசுந்தரம் - 1979) எனும் ஆய்வு நூலின் பின்னிணைப்பிலும் தொகுக்கப்பட்டிருக்கின்றன. மட்டக்களப்பு தமிழகம் (வி.சீ. கந்தையா - 1964) எனும் நூலிலும் நாட்டார் பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. கிழக்கிலங்கைக்கு வெளியே வட இலங்கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட இலங்கையர் போற்றும் நாட்டார் பாடல்கள் (மு.இராமலிங்கம் - 1961), கிராமக் கவிக்குயில் ஒப்பாரி (மு.இராமலிங்கம் - 1960), வன்னி வள நாட்டுப்பாடல்கள் (செ.மெற்றாஸ் மெயில் - 1980), மன்னார் நாட்டுப்பாடல்கள் (சு.வித்தியானந்தன் - 1964) முதலான தொகுதிகளும் மலையகத்தில் மலைநாட்டு மக்கள் பாடல் (சி.வி.வேலுப்பிள்ளை - 1983), மலையகத் தமிழர் நாட்டுப்பாடல்கள் (மு. சிவலிங்கம் - 2007) முதலான தொகுதிகளும் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்தொகுப்புகளில் உள்ள பாடல்களை ஒப்பீட்டளவில் அவதானிக்குகையில், ஏனைய பிரதேசங்களில் எழுந்துள்ளவற்றை விட கிழக்கிலங்கையிலேயே அதிகளவு பாடல்களும் அவை பற்றிய தொகுப்புக்களும் தோன்றியுள்ளமை புலனாகும்.

பிற பிரதேசங்களில் வாழுகின்ற ஈழத்து தமிழ் மக்களிடையே வழங்கிவரும் வழிபாட்டுப் பாடல்கள் கரகாட்டம், காவடியாட்டம், மாரியம்மன் வழிபாடு சார்ந்திருக்க மட்டக்களப்புத் தமிழரிடையே பிரபல்யம் பெற்றிருந்த வசந்தன் பாடல்கள் மிகுந்த முக்கியத்துவத்திற்குரியன. இப்பாடல்களைத் தொகுத்த தி.சதாசிவ ஐயர் தனது நூலில் 40 வகையான வசந்தன் கூத்து ஆட்ட முறைகளை வெளிப்படுத்துகின்றார். மட்டக்களப்பு பிரதேச மக்கள் வசந்த காலத்தில் சித்திரை - வைகாசி மாதங்களில் ஆலயங்களிலும் களரிகளிலும் வசந்தன் கூத்துக்களை நிகழ்த்துவது வழக்கமாகும். இப்பாடல்கள் பற்றிய விரிவான விளக்கமொன்றை " மட்டக்களப்பு நாட்டாரியல்" (வ.சிவசுப்ரமணியம் - 2004) எனும் நூல் விரிவாகத் தருகின்றது.

தமிழர்களிடையே வழங்கிவரும் விளையாட்டுப்பாடல்கள் கிட்டியடித்தல், கும்மி, கோலாட்டம், ஊஞ்சல், கொம்பு விளையாட்டு என அமைந்த போதும் கொம்பு விளையாட்டுப்பாடல்கள் ஏனைய பிரதேசங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட வேண்டிய தனித்துவத்திற்குரியதாகும். சு.வித்தியானந்தன் அவற்றைத் தொகுத்திருக்கின்றார். மட்டக்களப்பு தமிழரின் விசேட வழிபாடாக இடம்பெறும் கொம்பு விளையாட்டு நிகழ்வில் மக்கள் வடசேரி தென்சேரி என இரு பிரிவாக பிரிந்து நிகழ்வுகளில் ஈடுபடுவர் பாடல்களைப் பாடுவர். அப்பாடல்களுற் சில வசையும் நையாண்டியும் பொருந்தியனவாக அமையும். வகை மாதிரிக்கு ஒரு பகுதி தரப்படுகிறது.

வடசேரியான் கொம்பு எங்கே எங்கே
மணமுள்ள தாழையின் மேலே மேலே
தென்சேரியான் கொம்பு எங்கே எங்கே
செம்பரப்பற்றைக்கு உள்ளே உள்ளே
தென்சேரியான் கொம்பு எங்கே எங்கே
சித்திரைத் தேருக்கு மேலே மேலே
வடசேரியான் கொம்பு எங்கே எங்கே
வண்ணான்ட சாடிக்கு உள்ளே உள்ளே

இப்பாடல்களில் ஒரே சொற்கள் திரும்பத்திரும்ப வருவதில் ஓசையின்பமும் வெளிப்பட்டு நிற்கின்றமை அவதானிக்கத்தக்கது.

இவற்றை விட தாலாட்டுப்பாடல், தொழிற்பாடல், காதற்பாடல் என்ற வகைமைகளிலும் கிழக்கு தமிழர்களிடையே தனித்துவமிக்கப் பாடல்கள் எழுந்துள்ளன. அவை தனித்தனி இயல்களாக ஆய்வு செய்வதற்கேற்ற வகையில் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இவற்றை இ.பாலசுந்தரம் தனது கலாநிதிப்பட்ட ஆய்வின் பகுதிகளாக்கியிருக்கின்றார்.

ஈழத்து தமிழரிடையே வழங்கும் தாலாட்டுப்பாடல்கள் பெரும்பாலும் ஒரே பொருள் சார்ந்த பொதுமைப்பண்புடையனவாகவே காணப்படினும் கிழக்கில் தோன்றிய சில பாடல்கள் கிழக்கின் தனித்துவ அடையாளங்களை வெளிப்படுத்துகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மகிழடித்தீவு, பண்டாரியாவெளி, கொக்கொட்டிச் சேலை, களுதாவளை ஆகிய பிரதேசங்களில் தாலாட்டுப்பாடல்கள் கணிசமான அளவு சேகரிக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக ஒரு பகுதி

மைந்தனில்லை எண்டு மாமாங்கம் போகையிலே
மாமாங்கச் சாமி வந்து மைந்தன்கலி தீர்த்தாரோ

மக்களில்லாக் கப்பலிலே மாமலடி வாசலிலே மண்டூருச்
சாமி - எங்களோட துணையிருக்க வந்தாரோ
(இ.பாலசுந்தரம் - மட்டக்களப்பு நாட்டார்கள் - 1979)

இங்கு மட்டக்களப்பின் மாமாங்கம், மண்டூர் ஆலயங்கள் பற்றிய செய்திகள் வெளிப்படுத்தப்படுகின்றன.

தொழிற்பாடல் என்ற வகையில் மலையகத்தில் தோன்றியவை தோட்டத்தொழிலோடு சேர்ந்தவை தமிழகத்தின் சாயல் படிந்தவை. "தமிழகத்தின் உழவுத் தொழிலிலும் நெசவுத் தொழிலிலும் ஈடுபட்டவர்கள் பாடிய பாட்டுக்களின் வழி வந்தவை" (சாரல் நாடன் - 1998) மன்னாரில் மீன்பிடியோடு தொடர்புடைய பாடல்கள் வடபுலத்தில் விவசாயத்தொழிலோடு சேர்ந்த பாடல்கள் எனத் தோன்றியுள்ள நிலையில் கிழக்கில் விவசாயம், மீன்பிடி சார்ந்த ஏராளமான பாடல்கள் தோன்றியுள்ளன. விவசாயம் தொடர்புடைய பாடல்கள் பொலிப்பாடல், ஏர்ப்பாடல், ஏற்றப்பாடல், வயல்மிதிக்கும் போது பாடப்படும் பாடல், அரிவி வெட்டும் பாடல், காவற்பரண் கவிகள், நெல் குற்றும் பெண்கள் பாடல் என பல வகைகள் அமைந் துள்ளன. மீனவப்பாடல்கள் வலையிழுத்தல், தண்டு வலித்தல், தோணி தள்ளுதல் முதலிய வகைமையில் காணப்படுகின்றன. இவ்வாறு ஈழத்தில் தமிழ் மக்களோடு தொடர்புடைய நாட்டார் பாடல்கள் பெரும்பாலானவை கிழக்கிலேயே அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு தமிழர்களிடையே பிரபல்யம் பெற்றிருந்த மற்றொரு வகை இசைப்பாடல் எண்ணெய் சிந்து என்பதாகும். இங்கு பாரம்பரியமாக நிலவி வந்த கல்வி முறையை அடியொற்றி இத்தகைய பாடல்கள் எழுந்தன. மாணவர்கள் தமது ஆசிரியர்களுக்காக வீடு தோறும் சென்று பொருட்களைத் சேகரித்து வரும் சந்தர்ப்பங்களில் இத்தகைய பாடல்கள் பாடப்பட்டு வந்தன. இப்பாடல் தொடர்பான விரிவான விளக்கமொன்றை "மட்டக்களப்பு பிரதேச எண்ணெய்ச் சிந்து - ஒரு பன்முக நோக்கு (செ.யோகராசா 2001) எனும் கட்டுரையில் தருகின்றார்.

**3.2 தமிழ் மக்களிடையே வழங்கி வரும் நாட்டார் கதைகள் :**

தமிழ் மக்களிடையே வழங்கிவரும் நாட்டார் கதை தொடர்பாக முதலாவது தொகுப்பு கிழக்கிலங்கையிலேயே தோன்றியது. "மட்டக்களப்பு மாநில உப கதைகள் (1960) எனும் அத்தொகுப்பில் 17 கதைகள் தொகுக்கப்பட்டிருப்பதாக அறிய முடிகின்றது. இதற்குப்பின்பு ஈழத்து தமிழ் நாட்டுப்புறக் கதைகள் (விசாக ரூபன் - 2009) எனும் நூலில் தொகுக்கப்பட்டுள்ள 128 கதைகளுள் 17 கதைகள் கிழக்கிலங்கையிலேயின் மட்டக்களப்பு அம்பாறை ஆகிய மாவட்டங்களுக்குரியதாகின்றன.

**3.3 தமிழ் மக்களிடையே வழங்கும் பழமொழிகள் :**

ஈழத்து தமிழர்களிடையே பழமொழிகள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டு வருகின்றன. எனினும் அவை தொகுக்கப்பட்டதாக அறியமுடியாதுள்ள நிலையில் கிழக்குப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவராகக் கடமையாற்றிய ரூபி வலன்றீனா பிரான்ஸிஸ் "தமிழில் பழமொழிகள்" (2007) எனும் தலைப்பில் இலங்கையில் வழங்கும் பழமொழிகள் குறித்ததான கட்டுரை ஒன்றை எழுதியிருக்கின்றார். தொழில், சமயம், காலம் சார்ந்தவையும் பொதுவானவையுமான ஏராளமான பழமொழிகள் அக்கட்டுரையில் தொகுக்கப்பட்டிருக்கின்றன. வல்வை ந.அனந்தராஜ் வடபுல நாட்டார் வழக்கு எனும் நூலில் "பழமொழிகளும் விடுகதைகளும்" என்ற தலைப்பில் இவ்விரு விடயங்களும் தொடர்பான தகவல்களைத் தந்திருக்கின்றார். யாழ்ப்பாணம், மன்னார், வன்னி ஆகிய பிரதேசங்களின் பழமொழிகள் எடுத்துக்காட்டாகத் தரப்பட்டிருக்கின்றன. எஸ்.முத்துமீரானின் "கிழக்கிலங்கை தமிழ் பேசும் மக்களின் நாட்டார் வழக்காறுகள்" (2009) எனும் கட்டுரையிலும் சில பழமொழிகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

**3.4 தமிழ் மக்களிடையே வழங்கும் விடுகதைகள் :**

ஈழத்தில் வடபுலத்திலிருந்து மு.இராமலிங்கம் "களவுக்காதலர் கையாண்ட விடுகதைகள்" (1962) "பொது அறிவு விடுகதைகள்" (1970) ஆகிய இரு நூல்களை இது தொடர்பாக தந்திருப்பினும் இந்நூல்கள் கிடைக்கப்பெறவில்லை. இவற்றிற்கப்பால் விடுகதைகள் தொடர்பாக இன்று பெறக்கூடிய தொகுப்புக்களும் இல்லாமலுள்ளது. வல்வை ந.அனந்தராஜின் "பழமொழிகளும் விடுகதைகளும்" எனும் கட்டுரையில் சில விடுகதைகள் தரப்பட்டுள்ளன.

**3.5 தமிழ் மக்களிடையே வழங்கும் கதைப்பாடல்கள் :**

கதைப்பாடல்கள் என்ற வகையிலான இலக்கியமும் கிழக்கிலங்கைக்கு வெளியே எழுந்ததாக அறியப்படவில்லை. கிழக்கிலங்கையில் கஞ்சன் அம்மானை முதலிய கதைப்பாடல்கள் எழுந்துள்ளன.

**4. ஈழத்து முஸ்லிம் மக்களிடையே வழங்கி வரும் நாட்டார் இலக்கியங்கள் :**

தமிழ் மக்களிடையே வழங்கிவரும் நாட்டாரிலக்கியங்கள் பற்றிய வெளிப்பாடுகள் இவ்வாறிருக்க முஸ்லிம் மக்களுடையதான நாட்டாரிலக்கியங்கள் பற்றியதான அவதானிப்பும் முக்கியமானதாகின்றது. இத்தகைய இலக்கியங்கள் மன்னார், புத்தளம், தென்னிலங்கை, கிழக்கிலங்கை ஆகிய பிரதேசங்களில் காணப்படுவதாக அறியப்பட்டாலும் கிழக்கிலங்கை மாகாணத்திலிருந்தே அதிகமானவை தொகுக்கப் பட்டிருக்கின்றன.

**4.1. ஈழத்து முஸ்லிம் மக்களிடையே வழங்கி வரும் நாட்டார் பாடல்கள் :**

ஈழத்து முஸ்லிம்களிடேயே வழங்கி வரும் நாட்டார் இலக்கியங்களுள் பாடல் சார்ந்த இலக்கியங்களே பெருமளவினவாகும். மலையகத்தைச் சேர்ந்த எம்.சி.எம். சுபையிர் (கண்ணான மச்சி - 1964), பேராதனை சர்புன்னிசா (கிராமியமணம் - 1996) ஆகியோர் கிழக்கு முஸ்லிம்களின் நாட்டார் பாடல்களையே தமது நூல்களில் எடுத்தாண்டிருக்கின்றனர். சர்புன்னிசா தமது "என்னுரை"யில் 1948, 52களில் எனது தந்தையாரின் பிறப்பிடமான திருகோணமலையில் வாழ்ந்த காலத்தில் இத்தகைய பாடல்களைச் சேகரிப்பதில் ஈடுபாடு கொண்டேன். எனது தந்தை வழி உறவினர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் கிண்ணியா, மூதூர் போன்ற கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள மூதாட்டிகள் மூலம் பல பாடல்களையும், அப்பாடல்களுக்கு வாய்ப்பாகும் கதைகளையும் கேட்டறிந்து எழுதுவது எனது வழக்கம். மிக்க இனிமையான குரலோடு இசைத்துப்பாடும் பாங்கினைக் கண்டு சொக்கி விடுவேன்" எனக் கூறுகின்றார். இது கிழக்கிலங்கையின் கவிகளின் தனித்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது. மட்டக்களப்பு நாட்டார் பாடல் (சு.வித்தியானந்தன்) ஈழத்து நாடோடிப்பாடல்கள் (எப்.எக்ஸ்.சி.நடராசா), ஈழத்து நாட்டார் பாடல்கள் (இ.பாலசுந்தரம்) எனும் நூல்களிலும் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் பாடல்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. வகைமாதிரிக்கு சில பாடல்களை எடுத்துக்காட்டலாம்.

ஓதக்குர் ஆனிருக்க
ஒழுவெடுக்கச் செம்பிருக்க
வேதமும் இங்கிருக்க
வேறு ஹறாம் தின்னலாமோ (மட்டக்களப்பு நாட்டுப்பாடல்கள் ப.42)

ஆராயம் வெள்ளி
அசறாலை தாளுமட்டும்
காத்திருந்து போறேனென்டு
உன்ட கதவுநில சாக்கி சொல்லும் (ஈழத்து நாடோடிப் பாடல்கள் ப.16)

காக்காபொண்டி காக்காபொண்டி கண்கறுத்த காக்காபொண்டி
எட்டுமுழச் சேல - இப்ப இணங்குதுகா காக்காபொண்டி

ஆசைக்கிளியே என்ர ஆசியத்து உம்மாவே
ஓசைக்குரலாலே ஒங்க உம்மாவக் கூப்பிடுகா (ஈழத்து நாட்டார் பாடல்கள்)

1985இல் ஆ.மு.சரிபுத்தீன் வெளியிட்ட கனிந்த காதல் எனும் தொகுப்பு நூலும் இவ்விடத்தில் நினைவுபடுத்தத்தக்கது. 1961இற்கு முன்னரான மட்டக்களப்பு மாவட்டம் அம்பாறையினையும் உள்ளடக்கியிருந்தது என்பதை மனங்கொள்ளுதல் வேண்டும்.

1961இல் அம்பாறை மாவட்டம் தனியாக பிரிக்கப்பட்டதன் பின்னரான கிழக்கிலங்கை நாட்டாரிலக்கிய வளர்ச்சியினை அவதானிக்குகையில் கிழக்கு வாழ் முஸ்லிம்களிடையே வழங்கி வந்த நாட்டார் பாடல்களின் சேகரிப்பும் ஆய்வு முயற்சிகளும் அதிகளவு இடம்பெற்று வந்தமை பற்றி அறியலாம். எஸ்.முத்துமீரான் மூன்று நூல்களை இவைபற்றித் தந்துள்ளார். 'கிழக்கிலங்கை கிராமியக் கவியமுதம் (1991), கிழக்கிலங்கை முஸ்லிம்களின் நாட்டார் பாடல் (1997), இலங்கை கிராமத்து முஸ்லிம்களின் தாலாட்டுப்பாடல் (2007), இவ்வாறே ஏஆர்எம்.சலீமின் கிராமியக் கலைவடிவங்கள் (1995), எஸ்.எச்.எம். ஜெமீலின் கிராமத்து இதயம் (1995) எஸ்.நஜிமுதீனின் "முள்ளில் படுக்கையிட்டு (2000), எம்.வை.உதுமான் சாகிபு அவர்களின் "கிழக்கிலங்கை முஸ்லிம் கிராமியக் கவிகள் (2006)" - இந்நூலில் சுமார் 600 கவிகள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. லரீப் சுலைமானின் இறக்காமத்தூர் பண்பாட்டுப் பாடல்கள் ( 2011), அனாரின் பொடுபொடுத்த மழைத் தூத்தல் ( 2013) ஆகிய தொகுதிகளும் முக்கியமானவை. மருதூர் ஏ. மஜீதின் "தென்கிழக்கு தேசத்தாரின் நாட்டாரியல்" (2004), ரமீஸ் அப்துல்லாவின் கிழக்கிலங்கை கிராமியம் (2000) ஆகிய நூல்களும் குறிப்பிடத்தக் கவையாகின்றன. இவற்றுள் இறுதி இரண்டு நூல்களும் ஆய்வு முயற்சிகளாக அமைந்திருப்பதும் கவனத்திற்குரியது. மருதூர் ஏ மஜீதின் தென்கிழக்கு முஸ்லிம்களின் கவிகளூடாக முஸ்லிம்கள் வரற்ற முனைகிறார்கள். தவிரவும் கவிகளின் வகைபற்றி அடிப்படைகளும் முக்கியமான அம்சங்களாகின்றன. இவர் தன்கள ஆய்வு அனுபவங்களாக வெளிப்படுத்தும் குறிப்புக்களும் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் தனித்துவமான கவிப்பாரம்பரியத்திற்கு சான்றாகின்றது.

எஸ்.முத்துமீரானின் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் நாட்டார் பாடல் என்ற தொகுப்பில் தாலாட்டு, குழந்தைப்பாடல்களும் விளையாட்டுப்பாடல்களும், நகைச்சுவைப்பாடல்கள், நையாண்டிப்பாடல்கள், தொழிற்பாடல்கள், காதல் பாடல்கள், தூதுவிடு பாடல்கள், பிரார்த்தனைப் பாடல்கள், தத்துவப்பாடல்கள், பொல்லடிப்பாடல்கள், வழிநடைச்சிந்து எனும் 12 வகையான பாடல்கள் வகைகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பெரும்பாலானவை கிழக்கிலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்களுக்கு மட்டுமே உரியவையாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது. 'கிழக்கிலங்கை முஸ்லிம் மக்களின் நாட்டார் பாடல்கள் தனிச்சிறப்பு மிக்கனவாகும். அவைகள் செழுமையும், சிறப்பும் பெற்று இளமைப்பொலிவோடு இப்பகுதியில் கோலோச்சிக் கொண்டிருப்பதை இன்றும் காணலாம்' என அவர் கூறுவதும் அவதானிப்பிற்கு உரியதாகிறது.

ஈழத்து முஸ்லிம்களிடையே வழக்கிலுள்ள தாலாட்டுப்பாடல்களுள் கிழக்கிலங்கையைச் சேர்ந்த பாடல்களே அதிகம் உள்ளன. அவை முழுவதும் கிராமிய மணம் கமழுபவை. எஸ். முத்துமீரானின் இலங்கைக் கிராமத்து முஸ்லிம்களின் தாலாட்டுப்பாடல் எனும் தொகுப்பில் உள்ள பாடல்களுள் பெரும்பாலானவை கிழக்கின் பொத்துவில், நிந்தவூர், இறக்காமம், அக்கரைப்பற்று, வாழைச்சேனை ஆகிய பிரதேசங்களிலிருந்து சேகரிக்கப்பட்டவையாகும். பாடல்களைப் பாடியவர், சேகரிப்புக்கு உதவியர்கள் பற்றிய செய்திகளை இந்நூல் தெளிவாக விபரிக்கின்றது. கிழக்கிற்கு வெளியே தென்னிலங்கையிலும் மன்னாரிலும் தாலாட்டுப்பாடல்கள் சில சேகரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக தென்னிலங்கையில் காணப்படும் தலாட்டுப் பாடல்கள் கிராமத்து மக்களாளன்றி கற்றறிந்த மார்க்க அறிஞர்களால் ஆக்கித்தரப் பட்டவையாக அமைகின்றன. இத்தகைய பாடல்களை உபதேச பிள்ளைத் தாராட்டுச் சிந்து என சில வெளியீடுகள் அடையாளப்படுத்துகின்றன. (நாட்டார் பாடல்கள் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம் 1976, கிராமத்து இதயம் 1995)

ஈழத்து முஸ்லிம்களிடையே வழங்கும் விளையாட்டுப் பாடல்களுள் கோலாட்டப் பாடல்களே மிகுந்த முக்கியத்துவத்திற்குரியவை. பொல்லடி /கழிகம்பு எனவும் இதனைக் கூறுவர். இத்தகைய பாடல்களும் கிழக்கிலங்கையிலே பெருமளவு எழுந்துள்ளன. பொத்துவில், அக்கரைப்பற்று, நிந்தவூர், மருதமுனை, ஏறாவூர் முதலிய பிரதேசங்களில் இப்பாடல்கள் காணப்படுகின்றன. பிரதேசத்திற்கு ஏற்றவாறு வேறுபட்டவையாகவும் அமைகின்றன. எஸ்.எச். எம்.ஜெமீல், எஸ்.முத்துமீரான் முதலியோர் இவற்றைத் தொகுத்திருக்கின்றனர்.

முஸ்லிம்களிடையே சிந்து வகை இசைப்பாடல்களுள் வழிநடைச்சிந்து புத்தளம், மன்னார் பகுதிகளின் பிரதான பாடலாகமைந்த போதும் கிழக்கிலங்கை அவை தோன்றியுள்ளன. அத்தகைய ஐந்து பாடல்களை கிராமத்து இதயம் என்ற நூல் தருகின்றது. எண்ணெய்ச் சிந்து வகைப்பாடல்கள் கிழக்கின் மருதமுனையில் காணப்படுவதாக மருதமுனை மஜீத் (எனது கிராமத்தைத் தேடுகிறேன் 2005) எனும் நூலில் கூறுகிறார்.

ஈழத்து முஸ்லிம்களிடையே வழங்கும் காதல் பாடல்கள் என்ற வகைப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கும் கவிகள் அதிக அளவில் கிழக்கில் காணப்படுகின்றன. அவை பற்றிய பல்வேறு வெளியீடுகளைக் காணமுடியும். எம்.வை.உதுமான் சாகிபு சுமார் 600 கவிகள் வரைத் தொகுத்திருக்கின்றார். ஏனைய தொகுப்பாளர்களும் இப்பிரிவிலேயே அதிக கவனம் செலுத்தியுள்ளனர்.

**4.2 ஈழத்து முஸ்லிம் மக்களிடையே வழங்கி வரும் கதைகள் :**

ஈழத்து முஸ்லிம்களிடையே வழங்கிவரும் நாட்டார் கதைகள் என்றவகையிலும் கிழக்கு மாகாணமே முதன்மை பெற்று நிற்கின்றது. எஸ்.முத்துமீரான் இப்பிரதேசத்திலுள்ள ஐம்பது கதைகளைத் தொகுத்து அச்சிற்கு வழங்கியிருப்பது புதிய செய்தியாகும். இதற்கு முன் "கிழக்கிலங்கைக் கிராமியம்" (றமீஸ் அப்துல்லாஹ் 2000) எனும் நூலில் இப்பிரதேசத்தில் வழங்கும் மூன்று கதைகள் தரப்பட்டுள்ளன.

**4.3 ஈழத்து முஸ்லிம் மக்களிடையே வழங்கி வரும் பழமொழிகள் :**

முத்துமீரானின் கிராமத்து முஸ்லிம்களின் பழமொழிகள் எனும் நூல் அதுவரை கவனிக்கப்படாத நாட்டாரியற் கூறு ஒன்றின் தேடலாக புது முயற்சியாக அமைகின்றது. இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ள பழமொழிகள் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவையாகும். "கிழக்கிலங்கைக் கிராமியம்" (றமீஸ் அப்துல்லாஹ் 2000) எனும் நூலில் இப்பிரதேசத்தில் வழங்கும் பழமொழிகள் சில தரப்பட்டுள்ளன.

**4.4. ஈழத்து முஸ்லிம் மக்களிடையே வழங்கி வரும் விடுகதைகள் :**

கிராமத்து முஸ்லிம் மக்களின் வழக்காற்றில் விடுகதைகளைப் பயன்படுத்துவதும் இன்றுவரை காணப்படுகின்றன. அவை தொடர்பான தொகுப்புக்கள் வெளிவரா நிலையில் "கிழக்கிலங்கைக் கிராமியம்" (றமீஸ் அப்துல்லாஹ் 2000) எனும் நூலில் இப்பிரதேசத்தில் வழங்கும் விடுகதைகள் சில தரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**5. ஆய்வு நூல்கள் சார்ந்த பங்களிப்பு :**

**5.1 பல்கலைக்கழகம் சார்ந்தவை :**

நாட்டாரியல் ஆய்வு முயற்சிகள் பல கிழக்கிங்கையில் நடைபெற்றுள்ளமை கவனத்தில் கொள்ளப்படவேண்டியதாகிறது. இந்த வகையில் எமக்குக் கிடைக்கும் மிக முக்கியமான ஆய்வு நூல் 'ஈழத்து நாட்டார் பாடல்கள் (மட்டக்களப்பு மாவட்டம்) - ஆய்வும் மதிப்பீடும் (இ.பாலசுந்தரம் 1979)என்பதாகும். நூலாசிரியர் தமது கலாநிதிப்பட்டத்திற்காக இலங்கைப் பல்கழகத்திற்குச் சமர்ப்பித்த ஆய்வேடே நூலாகியுள்ளது. கோட்பாட்டியல் (அமைப்பியல் கோட்பாடு) சார்ந்த முதல் ஆய்வு முயற்சியாக இந்நூல் அமைகிறது. தமிழகத்திலும் ஈழத்திலும் உள்ள பல்கலைக்கழகங்களில் கடந்த 25 ஆண்டுகளாக இந்நூல் ஆய்வுத் துணை நூலாக பயன்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்நூலின் இரண்டாம் பதிப்பின் முன்னுரையில் ஆய்வாளர் 'தென்னிந்திய மொழிகளில் நாட்டார் வழக்காற்றியல் கழகம், அண்ணாமலை நகர் - இந்திய தமிழ் நாட்டுப்புறவியல் கழகம், பாளையங் கோட்டை நாட்டார் வழக்காற்றியல் மையம், களம் நாட்டுப்புறவியல் ஆய்வாளர் மன்றம், யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியல் கழகம் முதலிய அமைப்புக்கள் நாட்டார் வழக்கியல் ஆய்வுகளையும், நாட்டார் கலை - இலக்கியப் பேணல் முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றன. இத்தகைய ஆய்வாளர்களுக்கு இந்நூல் ஒரு துணை நூலாக அமையும் என்பது எனது நம்பிக்கை.' என்று கூறுவது குறிப்பிடத்தக்கது.

கிழக்கிலங்கையில் இத்துறை சார்ந்ததான மற்றொரு கலாநிதிப் பட்ட ஆய்வும் மேற்கொள்ளப் பட்டுள்ளது. கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் செ.யோகராசாவின் வழிப்படுத்தலில் எம்.ஐ.எம்.ஹனிபா 'கிழக்கிலங்கை தமிழ் பேசும் மக்களிடையே வழங்கிவரும் கவிகள்' பற்றி நாட்டார் பண்பாட்டுக் கோட்பாட்டியல் நோக்கில் ஆய்வு செய்துள்ளார். இவ்வாய்வு 'கவி' எனப்படும் நாட்டார் பாடல் வகையினை அறிமுகப்படுத்துகின்ற வகையிலும் ஒரு குறிப்பிட்ட பிரதேச மக்களின் வாழ்வியல், பண்பாடு பற்றிய பதிவுகளை வழங்குகின்ற வகையிலும் முக்கியமானது. இவற்றிற்கு அப்பால் இளங்கலைமாணி விசேட துறை சார்ந்த மாணவர்களுக்கும் நாட்டுப்புறவியல் கூறுகளை ஆய்வதற்கு இப்பல்கலைக்கழகம் சந்தர்ப்பம் வழங்கி வருவதுடன் தென்கிழக்குப் பல்கலைக்கழகமும் இத்துறைக்கு முக்கியத்துவம் வழங்கி வருகின்றமை கவனிக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5.2. தனிநபர் சார்ந்தவை :**

கிழக்கில் நடைபெற்ற நாட்டாரியல் ஆய்வு முயற்சிகள் பற்றிய இன்னொரு முக்கியமான நூல் 'மட்டக்களப்பு நாட்டாரியல்' (வ. சிவசுப்ரமணியம் 2004) என்பதாகும். ஈழத்து நாட்டாரியல் வளர்ச்சியில் இந்நூலுக்குச் சிறப்பிடம் உண்டு இதனையே இந்நூலின் அணிந்துரையில் செ.யோகராசா "நாட்டாரியல் தொடர்பான எத்தகைய ஆய்வும் முழுமை பெறவேண்டுமெனில் குறிப்பிட்ட பிரதேசம் பற்றிய அறிவு அவசியமே. இவ்வழி, இந்நூலில் மட்டக்களப்பு பிரதேச புவியியல், வரலாறு, சமயம், சமூகம், கல்வி என்பனபற்றி போதுமான அளவு தகவல்கள் தரப்பட்டிருப்பது விதந்துரைக்கப்பட வேண்டியதே. இவற்றூடேயும் புதிய செய்திகள் (எ-டு 'ஆயிரத்தொரு இரவுகள், சுப்ரமணிய பராக்கிரமம்' ஆகிய நூல்கள் குறிப்பிடுபவை.) பளிச்சிடுகின்றமை எமது கவனத்திற்குரியதாகின்றது." எனக்கூறுகிறார். மருதூர் ஏ மஜீதின் 'தென்கிழக்கு நாட்டாரியல்', றமீஸ் அப்துல்லாவின் 'கிழக்கிலங்கை கிராமியம்' எனும் நூல்களும் ஆய்வு நிலையில் எழுதப்பட்டவையாகும்.

**6. கருத்தரங்கு சார் பங்களிப்பு :**

கிழக்குப் பல்கலைக்கழகம் 2000ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23, 24ஆம் திகதிகளில் " வாய்மொழி மரபுகள் வரலாற்று மூலங்களாக" என்ற தலைப்பில் மட்டக்களப்பு நாட்டாரியல் தொடர்பாக நடாத்திய கருத்தரங்கு மிகுந்த கவனிப்பிற்கு உரியதாகும். பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு அவர்களது நெறிப்படுத்தலில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் குறிப்பிட்ட துறை சார்ந்த பல கட்டுரைகள் படிக்கப்பட்டன. அதில் 12 கட்டுரைகளைக் கொண்ட தொகுப்பு " வாய்மொழி மரபுகள் வரலாற்று மூலங்களாக......." 2004 தொகுப்பாகியது. இந்நூலின் பதிப்புரையில் "மட்டக்களப்பு என்ற பகுதியுள் காணப்படும் வித்தியாசங்களையும் பல்தன்மைகளையும் நாம் அங்கீகரிக்க வேண்டும். இதற்கு மாறாகப் பேசப்படும் ஒருமை வாதம் அதன் அழகையும் வளத்தையும் அழித்துவிடுவது அது அதிகார மையங்கொண்டது. மக்களைப் புறந்தள்ளுவது. ஆனால் எமக்கு வேண்டியது பண்மைத்துவமும் கூட்டுவாழ்வும் ஆகும். அதனைச் சாத்தியமாக்குவதற்கான கோட்பாட்டு விளக்கமானது வித்தியாசங்களை அங்கீகரிப்பதில் அடங்கியுள்ளது. இவற்றை மனங்கொண்டே மட்டக்களப்பு நாட்டார் வழக்கியலின் முக்கியமான கூறான வாய்மொழி மரபுகளை வரலாற்று ஆதாரங்களாக மறுவியாக்கியானம் செய்யும் ஆரம்ப முயற்சியாக இக்கருத்தரங்கினை வடிவமைத்தோம்" என பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு கூறுவது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

கிழக்குப் பல்கலைக்கழகம் நடாத்திய மேற்குறிப்பிட்ட கருத்தரங்கின் பின் வடகிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு 2000ஆம் ஆண்டு நாட்டாரியல் ஆய்வு சார்ந்த கருத்தரங்கு ஒன்றை நடாத்தியது அதில் படிக்கப்பட்டிருந்த நாட்டாரியல் தொடர்புடைய ஏழு கட்டுரைகள் நாட்டாரியல் ஆய்வு (2000) எனும் நூலாகத் தொகுக்கப்பட்டிருந்தது. மட்டக்களப்பு பிரதேச எண்ணெய்ச் சிந்து - ஒரு பன்முக நோக்கு (பேராசிரியர் செ.யோகராசா), மட்டக்களப்பில் மறைந்து வரும் கொம்பு விளையாட்டு (க.மகேஸ்வரலிங்கம்) முதலிய கட்டுரைகள் அவற்றுள் மிகுந்த அவதானிப்பிற்குரியனவாகும்.

இவைதவிர இங்கு கடமையாற்றுகின்ற பேராசிரியர்கள், கலாநிதிகள், விரிவுரையாளர்கள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறு நாட்டாரியல் கூறுகள் பற்றியதான கட்டுரைகளை எழுதியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. கிழக்கிலங்கையின் கவிகள் (கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ்), மட்டக்களப்பு பிரதேச பழமொழிகள் (ரூபி வலன்டீனா பிரான்சிஸ்), நாட்டார் இலக்கியமும் பெண்களும் (பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு), கிழக்கிலங்கை நாட்டாரிலக்கிய ஆய்வுகள் ஒரு மதிப்பீடு (பேராசிரியர் செ.யோகராசா) முதலிய கட்டுரைகள் குறிப்பிடத்தக்க தாகின்றன. இவ்விடத்தில் பேராசிரியர் எம்.ஏ. நு்.மானின் 'கிழக்கு நாட்டாரியல் தொடர்பான கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வாழ்க்கை முறையும் - நாட்டார் வழக்குகள் பற்றிய ஆய்வும், கிராமிய இலக்கிய ஆய்வில் சமூக சந்தர்ப்பங்கள்', 'நாட்டாரிலக்கியத்தில் காதல் பாடல்கள் எனும் கட்டுரைகளும் குறிப்பிடத்தக்கவை.

பல்கலைக்கழகங்கள் சார் வெளியீடுகள் தவிர தனிநபர் சார்ந்த ஏராளமான கட்டுரைகள் 'கிழக்கு நாட்டாரியல் தொடர்பாக எழுந்துள்ளன. எனினும் 2011 சர்வதேச எழுத்தாளர் மாநாட்டில் "தென்கிழக்கு முஸ்லிம் தேசத்தாரின் நாட்டாரியலில் பள்ளுப் பாட்டும் பள்ளுக் கவியும்"(மருதூர் ஏ. மஜீத்) எனும் கட்டுரை நாட்டாரியல் தொடர்பான புதிய கருத்தியலை அறிமுகம் செய்கின்றமை கவனிப்பிற்குரியதாகிறது. தென்கிழக்கு நாட்டார் பாடல்கள் என்ற அம்சத்துள் பள்ளுப் பாட்டு, பள்ளுக் கவி எனும் இரு பிரிவுகள் காணப்படுவதாக அவர் நிறுவுகிறார்.

இவற்றிற்கு மேலாக கிழக்கு மாகாண கலாசார அமைச்சு வருடாந்தம் நடாத்துகின்ற கலாசார விழாக்களிலே நாட்டாரியல் தொடர்பான கருத்தியல்களுக்கு முக்கியத்துவம் வழங்கிவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. 2009இன் கலாசார விழா முழுமையும் நாட்டாரியற் கூறுகள் தொடர்பாகவே அமைந்தன. 'கிழக்கிலங்கை தமிழ் பேசும் மக்களின் நாட்டார் வழக்காறுகள்' எனும் பெயரில் ஆய்வரங்கக் கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. பேராசிரியர் செ.யோகராசாவின் 'கிழக்கிலங்கை நாட்டாரிலக்கிய ஆய்வுகள் ஒரு மதிப்பீடு' எனும் கட்டுரை மிகுந்த முக்கியத்துவத்திற்குரியதாகின்றது.

**7. கிழக்கிலங்கையின் நாட்டார் இலக்கிய பங்களிப்பைச் சான்றுப்படுத்தும் சில கூற்றுக்கள்:**

கிழக்கிலங்கையின் நாட்டாரிலக்கிய முயற்சிகளில் ஈடுபட்ட அறிஞர்கள் பலரது கூற்றுக்கள் ஈழத்து நாட்டாரிலக்கிய வளர்ச்சியில் கிழக்கிலங்கையின் பங்களிப்பைச் சான்றுப்படுத்துகின்றன. பின்வரும் கூற்றுக்களை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

1. ஈழத்திலே தமிழ் மக்கள் பெரும்பான்மையோராக வாழும் பகுதிகளில், மட்டக்களப்பு மாவட்டத்திலேதான் நாட்டார் பாடல்கள் மக்களின் அன்றாட வாழ்க்கை முறையிற் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பெரிதும் பயன்பாடுடையனவாக வழங்குகின்றன. இம்மாவட்டத்தின் சகல கிராமப்புரங்களிலும் நாட்டார் பாடல்கள், நாட்டார் கலைகள் ஆகியவற்றின் பயன்பாட்டைத்தினமும் காணலாம். ஈழத்தில் ' நாட்டார் பாடல்கள்' அல்லது 'நாட்டுக்கூத்து' என்றதும் எவரும் முதலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நினைவிற் கொள்ளுதல் வழக்கமுண்டு. (இ.பாலசுந்தரம் - ஈழத்து நாட்டார் பாடல்கள் ப. 30 )
2. நாட்டுப்பாடல்கள் என்றதும் ஈழத்து மக்கள் பெரும்பாலும் மட்டக்களப்பு நாட்டினை உடனே நினைத்துக்கொள்கிறார்கள். ஈழத்தின் பழந்தமிழகமான இம்மட்டக்களப்பு அவ்வளவு அதிகமான உணர்ச்சிக் கவிகள் நிறைந்த ஒரு நாடாக உள்ளதென்பதை இதனால் அறியலாம். கவிதையில் பேசி, கவிதையில் வளர்ந்து, கவிதையிலேயே வாழ்ந்த பழங்காலத்து பரம்பரையைச் சேர்ந்த தமிழ் மக்கள் இங்கு வாழ்ந்து வருகிறார்கள். (வி.சி.கந்தையா - மட்டக்களப்பு தமிழகம் ப. 25 )
3. ஈழ நாட்டிலே கிராமியக் கவிதை நயம் நிறைந்துள்ள பகுதி மட்டக்களப்பு. தேனுக்கும் பாலுக்கும் தமிழர் வீரத்திற்கும் பேர் பெற்ற மட்டக்களப்பு மக்கள் கலைகளைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணிவளர்ப்பதிலும் தலை சிறந்து விளங்குகிறது. உணர்ச்சிக் கவிதை நிறைந்த மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள் பல்வேறு துறைப்பட்டு நிறைந்து வழங்குகின்றன. (சு.வித்தியானந்தன - மட்டக்களப்பு நாட்டுப்பாடல்கள் ப. 13 )

4. கிழக்கிலங்கை, குறிப்பாக அம்பாறை மாவட்டம் இலங்கையிலே நாட்டார் பாடலுக்கு புகழ் பெற்ற பிரதேசமாகும். விவசாயம் முற்றிலும் நிலவுடமை முறைக்கு உட்பட்ட தொழில் துறையாக இருந்த காலத்தில் விவசாயப்பண்பாட்டோடு ஒன்றிணைந்து நாட்டுப்பாடல்கள் பெரு வளர்ச்சியுற்றன. (எம்.ஏ.நு.்மான் - தமிழ் நாட்டார் வழக்காற்றியல் கட்டுரை ப. 257)
5. கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக தென்கிழக்கு முஸ்லிம் தேசத்தாரிடையே பழைய மரபின்வழி தற்காலத்திலும் பாடல்கள் இயற்றும் பாங்கைக் காண முடிகிறது. உடனுக்குடன் கவிபாடும் வல்லமை அவர்களுக்குக் கைவந்த கலையாகும். அதிக அளவிலான கவிகளுக்கும், பாடியவர்கள் யார் என்று அறிய முடியாத கவிகளுக்கும் கிழக்கு மாகாண முஸ்லிம் பிரதேசங்கள் பிரசித்தி பெற்று விளங்குகின்றன. (எஸ்.எம்.எம்.அனஸ் - முஸ்லிம் நாட்டாரியல் தேடலும் தேவையும் ப.27)

மேற்காட்டப்பட்ட வகையில் ஈழத்து நாட்டாரிலக்கிய வளர்ச்சிக்கு கிழக்கிலங்கையின் நாட்டாரிலக்கிய முயற்சிகள் ஒப்பீட்டளவில் மலையகம், வட மாகாணம், புத்தளம், மன்னார், வன்னி ஆகியவற்றைக் காட்டிலும் பாரியளவு முயற்சிகளை கிழக்கு மாகாணம் வழங்கியுள்ளது எனக்கூறினாலும் மேலும் வளர்க்க வேண்டிய விடயங்கள் உள்ளன. திருகோணமலையின் நாட்டாரிலக்கியக் கூறுகள் விரைவாக சேகரிக்கப்படவேண்டியதும் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டியதும் பிரதானமானதாகும். இவ்விலக்கியங்கள் நவீன அணுகுமுறைகளோடு ஆய்வு செய்யப்பட்டு அதனூடே கிழக்கின் பாரம்பரியங்கள் பண்பாட்டம்சங்கள் வெளிக்கொணரப்பட வேண்டும். இங்குள்ள கதைப்பாடல்கள், கதைகள், விடுகதைகள் என்பன தொகுக்கப்பட்டு ஆய்வு செய்யப்படல் வேண்டும்.

உசாத்துணை :


1. தே.லூர்து - நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள் 1997
2. டாக்டர் சக்திவேல் - நாட்டுப்புறவியல் ஆய்வு 1983
3. பாலசுந்தரம். இ - ஈழத்து நாட்டார் பாடல்கள் 1979
4. ஜெமீல்.எஸ்எச்எம் - கிராமத்து இதயம் 1995
5. முத்துமீரான்.எஸ் - கிழக்கிலங்கை முஸ்லிம்களின் கிராமிய கவியமுதம் 1991
6. முத்துமீரான்.எஸ் - கிழக்கிலங்கை முஸ்லிம்களின் நாட்டார் பாடல்கள் 1997
7. முத்துமீரான்.எஸ் - இலங்கைக் கிராமத்து முஸ்லிம்களின் பழமொழிகள் 2005
8. முத்துமீரான்.எஸ் - இலங்கை முஸ்லிம்களின் தாலாட்டுப்பாடல்கள் 2007
9. சரிபுத்தீன்ஆ.மு - கனிந்த காதல் 1985
10. றமீஸ் அப்துல்லாஹ் - கிழக்கிலங்கை கிராமியம் 2001
11. வித்தியானந்தன்.சு - மட்டக்களப்பு நாட்டார் பாடல் 1962
12. நடராசா எப்எக்ஸ்சி - ஈழத்து நாடோடிப் பாடல்கள் 1962
13. நஜிமுதீன்.எஸ் - முள்ளில் படுக்கையிட்டு 2000
14. அம்மன்கிளி முருகதாஸ் - இலங்கை தமிழர்களிடையே வாய்மொழி இலக்கியம் 2007
15. கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் - கிழக்கிலங்கை தமிழ் பேசும் மக்களின் நாட்டார் வழக்காறுகள் 2009
16. உதுமான் சாகிபு.எம்.வை - கிழக்கிலங்கை முஸ்லிம் கிராமியக் கவிகள் 2006
17. ஈழத்துப்பூராடனார் -கிழக்கிலங்கை மக்களின் எழுதாத இலக்கியங்கள் (2000)
18. சிவசுப்ரமணியம்.வ- மட்டக்களப்பு நாட்டாரியல் 2004
19. மருதூர் ஏ மஜீத் - தென்கிழக்குத் தேசத்தாரின் நாட்டாரியல் 2007
20. மெற்றாஸ் மெயில்.செ. - வன்னிவள நாட்டுப்பாடல்கள் 1980
21. அனந்தராஜ்.ந - வடபுல நாட்டார் பாடல்கள் 2002
22. அருணாசலம்.க - மலையகத் தமிழ் இலக்கியம் 1994
23. அனஸ்.எஸ்.எல்.எம் - முஸ்லிம் நாட்டாரியல் 2008
24. சித்திரலேகா மௌனகுரு - வாய்மொழி இலக்கிய மரபுகள் வரலாற்று மூலங்களாக 2004
25. மருதமுனை மஜீத் - எனது கிராமத்தைத் தேடுகிறேன் 2005




யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டுஇங்கு
வாழ்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போ
வள்ளுவர்போல், இளங்கோ வைப்போ
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம், ஒரு சொற் கேளிர்!
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்

**- மகாகவி பாரதி**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்ணகி இலக்கியங்களில் கிழக்கின் பண்பாடு

விபுலமாமணி.
வி.ரி. சகாதேவராஜா (B.A.PGDE.M.Ed)
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**அறிமுகம்**

கிழக்கில் கண்ணகி வழிபாடு பிரசித்தமானது. இது ஒரு புராதன வழிபாடாகும். திராவிடப்பண்பாட்டில் முக்கியத்துவம் பெற்ற சக்தி வழிபாட்டினையே கிழக்கிலங்கையில் பிரசித்திபெற்ற கண்ணகியம்மன் வழிபாட்டில் காண்கிறோம். இலக்கியமானது படைப்பாற்றல் உள்ள தனி மனிதர்களால் படைக்கப்படுவதாயினும் அடிப்படையில் அது ஒரு சமூகசாதனமாகும். அவ்வகையில் கண்ணகி இலக்கியங்கள் கிழக்கின் சமூக பொருளாதார பண்பாட்டு அம்சங்களில் பாரிய தாக்கத்தினைச் செலுத்தியுள்ளது. கண்ணகி இலக்கியங்களில் கிழக்கின் பண்பாடு எத்துணை பேணப்படுகின்றது என்பது தொடர்பில் இக்கட்டுரை ஆராய்கிறது.

**கண்ணகி வழிபாடு**

சிந்துவெளி நாகரிக காலத்திலிருந்தே சக்தி வழிபாடு தமிழர் மத்தியில் முக்கிய வழிபாடாக இருந்து வந்துள்ளது. சக்தி வழிபாட்டில் அம்மன், பராசக்தி, காளி, சரஸ்வதி, இலட்சுமி, துர்க்கை, கண்ணகை முதலிய பெண் தெய்வங்கள் வடிவில் சக்தியை நாம் வழிபட்டு வருகின்றோம். இத்தெய்வங்களுக்கு இந்தியாவிலும் இலங்கையிலும் கோவில்கள் கட்டி திருவிழாக்கள், உற்சவங்கள், குளிர்த்தி முதலிய சிறப்பு நிகழ்ச்சிகளை ஏற்படுத்தி அம்மனை பயபக்தியுடன் வழிபட்டு வருகின்றனர்.

இத்தெய்வங்களில் கண்ணகை அம்மனுக்கு இலங்கையில் குறிப்பாக கிழக்கிலும் வன்னியிலும் ஆலயங்கள் அமைத்து வருடந்தோறும் பொங்கல் படைத்து குளிர்த்தி பாடி வழிபடுவதைக் காணலாம்.

கிழக்கில் காலங்காலமாக வணங்கப்பட்டுவரும் காளி, துர்க்கை, மாரி, பேச்சி முதலிய பெண் தெய்வ வழிபாடுகளில் இறுதியில் வந்து சேர்ந்த தெய்வம் கண்ணகி, கண்ணகை என்றும் அழைக்கப்படுவதுண்டு.

இன்று வைகாசி பிறந்துவிட்டால் கிழக்கின் பட்டிதொட்டியெல்லாம் பறையொலி முழங்க குழல்நய ஓசையெழுப்ப வைகாசிப் பொங்கல் நடைபெறுவது வழமையாகிவிட்டது.

பூம்புகாரைத் தலைநகராகக் கொண்டு சோழ நாட்டிலே பிறந்து பாண்டிய நாட்டிலே அரசியல் புரட்சி செய்து சேரநாட்டிலே தெய்வமாகிய கண்ணகை அம்பாள், சிங்கள மக்கள் மத்தியில் 'பத்தினித் தெய்யோ' என இன்றும் வழிபட்டு வருவதைக் காணலாம்.

கண்டியிலுள்ள தலதா மாளிகையில் கண்ணகி கோயில் இருப்பதும் கயபாகு மன்னன் இந்தியாவின் சேரநாட்டிலிருந்து கொணர்ந்த சந்தனக்கட்டையாலான விக்கிரகமும் சிலம்பும் இன்றுமுள்ளது.

ஈழத்துக் கடைசித் தமிழ் மன்னனின் தலைநகர் கண்டி என்பதுடன் அது கண்ணகி வழிபாட்டின் உறைவிடமுமாகும். இன்று கண்டியில் நடைபெறும் பெரஹரா ஊர்வலமானது பத்தினித்தெய்வமாம் கண்ணகிக்கு எடுக்கப்பட்ட விழாவேயாகும். இவ்வாறாக கண்ணகி வழிபாடு கிழக்கின் பண்பாட்டு விழுமியங்களோடு உணர்வுபூர்வமாக ஆழமாக பின்னிப்பிணைந்துள்ளது.

**தமிழ் இலக்கியங்கள்**

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன், எந்நாட்டவர்க்கும் இறைவன் என்று சிவனைப் பாடுகின்றனர் தமிழர்கள். இச்சிவன்தான் தமிழ்ச்சங்கங்களின் தலைவன் என்று சொல்லலாம். தமிழ்ச்சங்கத்தால் ஒரு நூல் அங்கீகரிக்கப்பட வேண்டுமாயின் அது பல வாதப் பிரதிவாதங்களைத் தாண்டவேண்டும். தமிழர்களுக்கு தங்கள் மொழி மீதிருந்த ஒரு கௌரவத்தையும் தமிழ்ப்படைப்பிலக்கியங்களின் மீதிருந்த நம்பிக்கையையும் காட்டுவதாக இதைக்கொள்ளலாம். சங்கம் தழைத்த காலத்தில் வாழ்ந்த சான்றோர்க்கு ஒரு உலகு தழுவிய பார்வை இருந்தது.

சங்கப்பாடலை எழுதிய கணியன் பூங்குன்றனார், உலகமே நம் உறவு, அதனால் வேற்றூர் என்பது கிடையாது. யாதும் ஊரே யாவரும் கேளீர். வெள்ளப்பெருக்கில் அடித்துச் செல்லப்படும் தெப்பம் போன்றதுதான் வாழ்க்கை என்று குறிப்பிடுகிறார். 2000 வருடங்களுக்குப் பின்னர் நிகழப்போகும் தமிழனின் இடப்பெயர்ச்சியை மனதில் வைத்து எழுதிய தீர்க்கதரிசனமான பாடலாக இதைக்கொள்ளலாம்.

இலக்கியமானது படைப்பாற்றல் உள்ள தனி மனிதர்களால் படைக்கப்படுவதாயினும் அடிப்படையில் அது ஒரு சமூகசாதனமாகும். இன்று ஈழத்திலே இலக்கிய விழிப்பு ஏற்பட்டிருக்கிறது. பல நாவல்களும் சிறுகதைகளும் கவிதைகளும் சஞ்சிகைகளும் புதிதாகப் படைக்கப்பட்டு வருகின்றன. தமிழ் இலக்கியங்கள் பண்பாட்டின் ஆணிவேர்களாகத் திகழ்கின்றன. அவை தமிழனின் இருப்புக்கும் தமிழ்மொழியின் இருப்புக்கும் நிறைய பங்களிப்பைச் செய்து வந்திருக்கின்றன. இவற்றுள் சமயம் சார்ந்த இலக்கியங்கள் முக்கியமாக நோக்கப்பட வேண்டியவை. இதில் சிலப்பதிகாரம் தன்னிகரில்லாக் காப்பியமாகும்.

**சிலப்பதிகாரம்**

தமிழர் பண்பாட்டு வரலாற்றில் குறித்தவொரு காலகட்டத்து வாழ்வியல் இலட்சியங்களை கோவலன் கண்ணகி மாதவி ஆகிய பாத்திரங்களின் வாழ்க்கை அனுபவங்களூடாக சிலப்பதிகாரம் வெளிக்காட்டி நிற்கிறது. மணிமேகலை, சிந்தாமணி, சிலப்பதிகாரம், வளையாபதி, குண்டலகேசி ஆகிய ஐம்பெரும் காப்பியங்களுள் தமிழில் உருவான முதல் பெரும் காப்பியம் சிலப்பதிகாரமாகும். இதனை இளங்கோவடிகள் சிருஸ்டித்திருந்தார்.

சிலப்பதிகாரம் ஒரு சர்வசமய சமரச இலக்கியமான தமிழ்க் காவியமாகும். இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் ஒருங்கே கூறும் தனிச்சிறப்பு வாய்ந்த முத்தமிழ்க்காப்பியமாகவும் இது விளங்குகின்றது.

அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றுவது ஊஉம்
உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினைச் உருத்து வந்து ஊட்டும் என்பதும்
சூழ்வினைச் சிலம்பு காரணமாக சிலப்பதிகாரம்

இளங்கோவடிகள் மேற்படி மூன்று உண்மைகளிலும் தமிழ்ப் பண்பாட்டை நிலைநாட்டியுள்ளார். வேறெந்த தமிழ் இலக்கியத்திலும் இல்லாத வகையில் முடியுடை மூவேந்தரையும் அவர் தம் ஆளுகைக்குட்பட்ட தமிழ் நிலத்தையும் சமநோக்கோடு காண்கிறார். கற்பெனும் திண்மையே பெண்களின் பெரும் வீரம் என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கினை சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும் எனக் கூறுகின்றார். சங்ககாலத்திலே கன்னிப்பெண்கள் மட்டுமே காலிலே சிலம்பு அணிவது வழக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் சற்று பின்வந்த சிலப்பதிகார காலத்திலே திருமணமான பெண்கள் சிலம்பணிந்தார்கள். அச்சிலம்பிலே ஒரு சிலம்பு கழன்றாலோ உடைந்தாலோ கழற்றினாலோ அங்கு விபரீதம் நிகழும் என்பது நம்பிக்கை. அவ்வகையிலே கண்ணகையினதும் கோப்பெருந்தேவியினதும் கழற்றிய ஒற்றைச்சிலம்புகள் சிலப்பதிகாரமாயின என்று கூறலாம்.

கண்ணகி தமிழரிடையே ஒரு புதுத்தெய்வமாக உருப்பெற்ற கதையை சிலப்பதிகாரம் சுவைபடக் கூறுகிறது. வானோர் வடிவில் வந்த கோவலனோடு தெய்வ விமானமேறி கண்ணகி வானகம் சென்ற காட்சியைக் கண்ட வேடுவர்கள் அவளைத் தெய்வமாகப் போற்றினார்கள். சிறு குடியீரே சிறு குடியீரே.... என்ற சிலப்பதிகார குன்றக் குரவைப் பாடலைப் பாடி வேங்கை மரத்தின் கீழ் எடுத்த முதற் சடங்கு கண்ணகி சடங்காகும். அதனையொட்டி கண்ணகி சடங்கு முறை வழக்கிற்கு வந்தது. சேரன்செங்கூட்டுவன் இமயத்திலிருந்து கல்லெடுத்து வந்து கங்கையில் நீராட்டி அக்கல்லிலிருந்து கண்ணகியின் சிலை வடித்து தனது தலைநகராம் வஞ்சிமாநகரில் அமைத்த ஆலயத்தில் பிரதிஸ்டை செய்தான். அங்கு இந்திரவிழா எடுத்தான். இந்த விழாவிற்கு குடகக்கொங்கரும் மாளுவவேந்தனும் கடல்சூழிலங்கை கயவாகு வேந்தனும் வந்திருந்ததாக சிலப்பதிகாரம் கூறிநிற்கிறது. இச் சிலப்பதிகாரத்தையும் பழைய ஏடுகளையும் வைத்து கிழக்கில் பல காப்பியங்களும் நூல்களும் வெளிவந்தன.

## கிழக்கு கண்ணகி இலக்கியங்களில் சிலப்பதிகாரம்

கண்ணகி தேவியைப் பத்தினித் தெய்வமாக முதன் முதல் ஈழநாட்டிற்கு அறிமுகஞ் செய்து வைக்கின்றது சிலப்பதிகாரம். வழக்குரைநூலோ கண்ணகிதேவியை சோழநாட்டின் பெருந்திருமகளாக காவிரிப்பூம்பட்டணத்து நங்கையர் திலகமாக அறிமுகஞ் செய்து வைக்கின்றது. இன்று காணப்படும் கிழக்குக் கண்ணகி இலக்கியங்கள் பல 16ம் 17ம் நூற்றாண்டில் இயற்றப்பட்டிருக்கலாம். அதற்காக அதற்கு முதல் கண்ணகி வணக்கம் இல்லையெனக் கூறமுடியாது. கிழக்கு மக்கள் படித்தவர்கள். சிலப்பதிகாரக் கதையை இற்றைக்கு 5 நூற்றாண்டு களுக்கு முன்னரே அறிந்துள்ளனர். கிழக்கின் கரிகாலன் மோனத்தவமுனி முத்தமிழ் வித்தகன் இப்புண்ணிய பூமியில் அவதரித்த ஆண்டான 1892 இல் தான் சிலப்பதிகாரமும் முதன்முதலில் அச்சிடப்பட்டது. அதன் பின்பே கற்றவர் மத்தியில் அதன் புகழ் பரம்பியது. கயவாகு காலத்தில் அதாவது கி.பி.2ம் நூற்றாண்டில் கண்ணகி வழிபாடு இலங்கைக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. ஆனால் இப்போதுள்ள கண்ணகை அம்மன் ஆலயங்கள் மீது பாடப்பெற்ற காவியங்கள் 15ம் நூற்றாண்டின் பின் தோன்றியவை. எனவே இடைப்பட்ட காலத்தில் வழிபாடு பற்றி ஆய்வு செய்யப்படல் வேண்டும்.

சிலப்பதிகாரம் மானுடப்பெண்ணை தெய்வமகளாகச் செய்து நிற்க வழக்குரைப் பனுவல் தெய்வமகளை மானுடப் பெண்ணாகக் காட்டிச் செல்கின்றது. கிழக்கில் கண்ணகி இலக்கியங்களாக வசந்தன் கவித்திரட்டு, குளுத்திப் பாடல், உடுகுச்சிந்து, ஊர்சுற்றுக்காவியம், மழைக்காவியம், கூவாய்குயில், கண்ணகை அம்மன் ஊஞ்சல், கண்ணகி அம்மன் குழுத்திப் பாடல்கள், ஆகியவற்றை திரு.தி.சதாசிவஜயரும், பண்டிதர் வீ.சீ.கந்தையாவும் வெளியிட்டுள்ளனர். பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை கண்ணகி வழக்குரைப் பாடல்களை பத்திரிகைகளில் நிறையவே எழுதியுள்ளார். வித்துவான் எவ்.எக்ஸ்.சி.நடராசா கண்ணகி வழக்குரை நூலின் முதற் பகுதியினை 1965 இல் வெளியிட்டிருந்தார். பின்பு வித்துவான் பண்டிதர் வீ.சீ.கந்தையா கண்ணகி வழக்குரை எனும் முழு அளவிலான நூலை 1968 இல் எழுதியுள்ளார். காரைதீவு இந்து சமய விருத்திச் சங்கம் இதனை வெளியிட்டுவைத்தது. கண்ணகி வழிபாட்டின் தோற்றம் பற்றி தமிழ் இலக்கிய நூல்கள் மட்டுமல்ல சிங்கள இலக்கிய நூல்களும் காணப்படுகின்றன. ராஜாவலிய ராஜரத்தினாகார பத்தினிக்கத்தாவ முதலிய சிங்கள நூல்கள் அவை. வழக்குரைநூல் சிறிய மணிப்பரல் காரணமாகப் பெரிய போரினைக் கிளப்பிவிட்டுத் தமிழனைத் தமிழன் வென்ற செய்தியினை விரித்துச் செல்கின்றது. ஈழநாட்டிற்கும் சோழநாட்டிற்குமிடையே நடந்தேறிய இச் சண்டையில் தமிழன் தமிழனோடு சமாதானப்பட்டு வாழ்ந்த செய்தியினை ஈற்றில் நமக்குத் தெரிவித்து நம்மை மகிழ்விக்கின்றது.

வழக்குரைநூலில் வருகின்ற அணிகலன்கள் பலவற்றின் பெயர்கள் கிழக்கோடு தொடர்புடையவை. கொப்புவாழி தண்டை காலாழி பீலி உட்கட்டு மேல்வாளி கொப்புவாளி காறை கைக்கட்டு போன்ற நகைகளை அணிகின்ற வழக்கம் இன்றும் நடைமுறையிலிருக்கின்றது. மாதவி அரங்கேற்றுக் காதையிலே சிலப்பதிகாரம் கூறுகின்ற இசை நாடக இலக்கணங்களில் மட்டக்களப்பு நாட்டுக்கூத்தின் சாயல் கலந்துரைக்கப்படுகின்றது. மட்டக்களப்பு வடமோடி நாடகங்களிலே நாடகப் பாத்திரங்கள் கூறுகின்ற தன் மேம்பாட்டுரைகள் பல மாதவியின் பேச்சில் வருவதையும் நாம் காணலாம். தாளக்கட்டுகள் என்கின்ற நாட்டுக்கூத்து சம்பந்தமான நாட்டியக் கலைச்சொல் வரிசைகளும் மாதவி நடனத்தில் இடம்பெற்று வருதலையும் குறிப்பிடலாம். வழக்குரை நூலில் கிழக்கின் பேச்சு வழக்கு சொற்கள் பல வருகின்றன. புணிவிடை, கழிசறை, கிளப்பிவிட்டு, அடிச்செழுப்பினாற் போல, விடுப்புப் பண்ணுதல், அடசல் முதலான சொற்கள் உள்ளன.

மட்டக்களப்புக்கேயுரிய மொண்ணையப்பர் எனும் பெயர் இந்நூலில் வருகின்றது. மொண்ணையப்பர் பரம்பரையினர் மட்டக்களப்புக் காரைதீவில் வாழ்ந்து வருவதாகவும் அவர்களே பின்பு அங்குள்ள கண்ணகி ஆலயத்தை பரிபாலித்துவருவதாகக் கூறப்பட்டுள்ளது.

முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகள் முத்தமிழ் நூலான சிலப்பதிகாரத்தின் தமிழிசை மரபுகளை கோர்த்து தொகுத்து இசைக்களஞ்சியமாம் யாழ்நூலை யாத்தருளினார். நாடுகாட்டுப் பரவணிக் கல்வெட்டில் கண்ணகி வணக்கம் பற்றி முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கண்ணகி வணக்கம் இலங்கையின் இரண்டு இனத்தாரிடையே (தமிழர் சிங்களவர்) வளர்க்கப்பட்டு வந்தது. கண்ணகை அம்மன் என்றும் பத்தினி தெய்யோ என்றும் வழங்கப்பட்டு வந்தது. சிலம்புக்காதை பற்றிய பாடல்களை மட்டக்களப்பிலே 'கண்ணகி வழக்குரை' என்றும் திருமலையிலே 'கோவலன் காதை' என்றும் வவுனியாவிலே 'சிலம்பு கூறல்' என்றும் பாடுவர். ஊர்சுற்றுக்காவியத்தில் கற்பனை உளதான இளங்கோவடிகள் சொற்கொண்டு தாபித்த கருணை மயிலே என்று பத்தினி போற்றப்படுகிறாள். இளங்கோவடிகள் கண்ணகிக்கு வழங்கிய திருமாமணி திருமாபத்தினி என்ற அடைமொழிகள் குழுத்திப்பாடல்களில் மூன்றிடங்களில் வருகிறது. கண்ணகி அம்மன் அகவலில் வரும் பொன்செய் கொல்லன் கோவலன் பட்ட கொலைக்களங்குறுகி என்ற அடிகள் சிலப்பதிகாரத்தில் வருபவை. பட்டிமேட்டுக் கண்ணகியம்மன் காவியத்தில் சிலம்பிங்கு கொண்டுவந்த கயவாகு வாழி என கயவாகு மன்னனும் வாழ்த்தப்படுகிறான்.

குளுத்திப் பாடலில் 91ம் காதையில், தேனாருஞ் செஞ்சொற் சிலப்பதிகாரக் கதையை எந்நாளும் போற்றி இனிது வாழ்வாரே என வாழ்த்துகிறது.

## கிழக்கில் கண்ணகை ஆலயங்கள்

கயவாகு மன்னன் காலத்தில் கண்ணகி வழிபாடு இலங்கைக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இன்று கிழக்கில் 60க்கு மேற்பட்ட கண்ணகை அம்மன் ஆலயங்கள் இருந்திற்ற போதிலும் முதல் ஆலயம் எங்கு எப்போது கட்டப்பட்டது என்பது தொடர்பில் தெளிவில்லை. கயவாகு வேந்தனும் இலங்கையில் முதலில் எங்கு கண்ணகிக்கு கோயில் எடுப்பித்தான் என்பதில் ஐயமிருக்கிறது. அனுராதபுரத்தில் அல்லது யாழ்.கந்தரோடைக்கு அருகிலுள்ள அங்கணாமைக்கடவையில் கட்டப்பட்டது என்று ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை குறிப்பிடுகிறார். மதுரையை எரித்த கண்ணகி சினத்துடன் தென்பகுதியூடாக இலங்கை வந்து வன்னியின் முல்லைத் தீவிலுள்ள வற்றாப்பளை எனுமிடத்தில் குளிர்ந்து சீற்றம் தணிந்ததாக வரலாறு கூறுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிப்பட்டவர்கள் கண்ணகை ஆலயங்களை சிறிய அளவில்கட்டி வழிபட்டு வந்தனர்.இதனை மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் என்ற நூலும் சுட்டிநிற்கிறது. கண்டி அரசன் இரண்டாம் இராசசிங்கன் காலத்தில் *(1629-1637)* பாடப்பெற்ற தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஊர்சுற்றுக் காவியத்தில் மட்டக்களப்புப் பிராந்தியத்தில் 30 கண்ணகை அம்மன் ஆலயங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.அவற்றில் அங்கணாமைக்கடவை (வெளியிலிருந்தும்) முதலூராகக் குறிப்படப்பட்டுள்ளது.எனவே அதுவே முதல் ஆலயமாகக் கொள்ளலாம். தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஊர்சுற்றுக் காவியத்தில் கூறப்படாத ஆறு ஊர்களின் பெயர்கள் பட்டிமேட்டுக் கண்ணகியம்மன் காவியத்திற் காணப்படுகின்றன.

பட்டி நகர் தம்பிலுவில் வீரமுனை காரைநகர்
பவுசுபெறு கல்முனை கல்லாறெருவில் மகிளூர்
செட்டிபாளையம் புதுக்குடியிருப்பு
செல்வமுறு மகிழடித்தீவு முதலைக்குடா
அட்ட திக்கும் புகழும் வந்தாறுமூலை நகர்

மட்டவிழ் பூங்குழல் மண்முனைக் கண்ணகையை மனதில் நினைக்க வினை மாறி ஓடிடுமே. என ஊர்சுற்றுக்காவியம் கூறுகிறது.

நாடுகாட்டுப் பரவணிக் கல்வெட்டுக்குறிப்புகளின்படி பட்டிமேட்டுக் கண்ணகியம்மன் ஆலயம் 18ம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது 19ம் நூற்றாண்டின் முதற்கூற்றில் கட்டப்பட்டிருக்கலாம் என ஊகிக்கமுடிகிறது.

## கிழக்கின் பண்பாடு

சாதாரணமாக பண்பாட்டின் உட்கூறுகள் என நோக்குகின்ற போது மேலோட்டமாக பார்க்கின்ற நடனம், கவிதை, இசை, சடங்குகள் மட்டுமல்ல. பண்பாடு எனும் அமைப்பில் பல ஆயிரமாயிரம் கூறுகள் இடம்பெற்றுள்ளன. அவை பல வடிவங்களில் அமைந்து நிற்கின்றன. ஆனால் பண்பாடு என்பது மனிதனின் நடத்தையோடு தொடர்பினைக் கொண்டிருப்பதனால் அவை இவை எவையெனக் குறித்துக் காட்டுவது கடினமானதாகும்.

அதுபோல கண்ணகி இலக்கியங்களில் கிழக்கின் பண்பாடு பற்றிக் கூறவிளைகின்றபோது பல அம்சங்கள் தொடர்புபட்டு நிற்பதைத் தவிர்க்கமுடியாது. அதில் வழிபாட்டுமுறை சடங்குகள் ஆலயங்கள் விழுமியங்கள் முதலான பல விடயங்கள் உள்ளன.

## வழிபாட்டு முறைமை

இந்து சமயம் பல வழிபாட்டு முறைகளை தன்னகத்தே கொண்டுள்ளது. இவைகள் மானிட படிமுறை வளர்ச்சியில் காலத்திற்குக் காலம் தோற்றம் பெற்றவை. இந்தியாவிலும் இலங்கையிலும் இவை பரவலாகக் காணப்பட்டவையாகும். ஆலயங்கள் தோன்றும் முன்னரே சடங்கு முறையான வழிபாடு தமிழரிடையே தோன்றிவிட்டது. இவ்வழிபாட்டை நடாத்துவதற்கு ஒரு இடத்தை தயார் செய்ய வேண்டும். அதனை களன் இழைத்தல் எனக்கூறுவர். கிழக்கில் தோட்டங்களிலும் நதியோரங்களிலும் வயல்வெளிகளிலும் காட்டோரங்களிலும் இத்தகைய சடங்குகள் நடைபெற்றுவந்தன.

பிற்காலத்தில் நிரந்தரமான ஆலயங்கள் தோன்றிவிட்டதால் இச்சடங்குகள் ஆலயங்களிலேயே நடைபெறத்தொடங்கிற்று. கிழக்கில் வழங்கும் வழிபாட்டு முறைகளில் பாடல்களும் முக்கிய இடம் வகிக்கின்றன. அவை காவியம், அகவல், வழிபாடு, குளுர்த்தி என வெவ்வேறு வகைப்படும். கண்ணகை அம்மன், மாரியம்மன், காளியம்மன், பேச்சியம்மன், கடல்நாச்சியம்மன், திரௌபதையம்மன், வைரவர் நாகததம்பிரான், வதனமார், கிருஸ்ணன், ஐயனார் முதலிய தெய்வங்களின் வழிபாடுகளில் இப்பாடல்கள் இடம்பெறுகின்றன.

கண்ணகி வணக்கம் முதலில் தனிப்பட்ட குடும்பங்களின் சொத்தாக பூசிக்கப்பட்டு வந்த போதிலும் கண்ணகையை வழிபடுவோர் தொகை அதிகமாக கோயில் கட்டி வழிபடத் தொடங்கினர். அதற்கு அருகிலுள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்களும் படையெடுக்கத் தொடங்கினர். உதாரணமாக செட்டிபாளையம் கண்ணகை அம்மன் ஆலயத்தைக் குறிப்பிடலாம். இவ்வாலயத்தில் கிரான்குளம், களுதாவளை, குருக்கள்மடம், மாங்காடு, அம்பிலாந்துறை, பழுகாமம், தேத்தாத்தீவு ஆகிய ஏழு ஊர்களைச் சேர்ந்தவர்களுக்கு உரிமை இருந்தது.

இலங்கையில் குறிப்பாக கிழக்கில் பாரம்பரிய வழிபாட்டு முறைகள் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன. பூசாரி முறை, கட்டாடி முறை, கப்புகனார் முறை, ஆதிக்குடிகள் முறை, சுயமுறை எனப்பல வகை. எத் தெய்வத்திற்கு எவ்வழிபாடு பேணப்பட வேண்டுமென்பதில் பாரம்பரியமான முறையான திட்டங்கள் வரையறைகள் இருந்து வந்துள்ளன. இவை பிற்காலத்தில் பத்ததிகளாக அல்லது பத்தாசிகளாக எழுதப்பட்டன. இவை 18ம், 19ம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கலாம். பத்தாசிகள் இருவகையுண்டு. கண்ணகையம்மன் சடங்கில் வழிபாட்டிற்கு மூன்று இடங்கள் முக்கியமானவை. அவை கருவறை, கல்யாணக்காலடி, குளிர்த்திப் பந்தல் ஆகியன. இங்கு கும்பங்கள் மடைகள் படையல்கள் வைக்கப்பட்டு தெய்வங்களுக்கு வழங்க வேண்டும் என பத்தாசிகள் கூறி நிற்கின்றன. சடங்கு செய்கையில் பல பந்தல்கள் அமைக்கப்படுவதும் இரவுமுழுவதும் நடாத்தப்படுவதும் வழமையாகிவிட்டன. சடங்குகளின் போது மண்டபம் காவல் பண்ணுதல், கும்பம் வைத்தல், மடைகள் வைத்தல், பூசை செய்தல், தேவாதிகளை கட்டுக்கு வைத்தல், குறை வேண்டுவாருக்குக் கட்டுச் சொல்லுதல், பலிகொடுத்தல் இப்படிப் பல நிகழ்வுகளைக் காணலாம்.

## கட்டாடி முறை

கட்டாடி முறை கிழக்கிலே திருமலையில் பெரும்பாலும் காணப்படுகிறது. தமிழில் கட்டாடி என்பது குறி சொல்லுபவன் அல்லது வண்ணான் எனப் பொருள்படும். மட்டக்களப்பிலும் அவ்வழிபாடு உள்ளது. இது தொடர்பாக மன்றாட்டு அகவல் அடிகள் கூறுகின்றது. கட்டாடிமார் பூஜை செய்யும் இடத்தில் தெய்வம் ஆடுபவர் பொதுவாக நிற்பதில்லை. எனினும் துறைநீலாவணை, தாண்டவன்வெளி ஆகிய கண்ணகி ஆலயங்களில் தெய்வம் ஆடுதல் நடைபெற்றாலும் உருக்கொடுத்தல், கட்டுதல், வெட்டுதல், பலிகொடுத்தல் என்பன இடம்பெறுவதில்லை.
கண்ணகியம்மன் ஆலயங்களில் சிலர் சுயஉணர்வில் தெய்வமாடினாலும் அது அங்கீகரிக்கப் படுவதில்லை. இச்சடங்குகளில் குளுத்தி ஆடுதல், விநாயகப் பானை வைத்தல், கலியாணக்கால் வெட்டுதல், கல்யாணக்கால் சுற்றுதல் போன்ற சந்தர்ப்பங்களில் கட்டாடிமார் உருக்கொள்வதுண்டு. ஆனால் மந்திரம் இல்லை. கட்டாடிமார்களுக்கு மானியமாக நெற்காணிகள் வழங்கப்படுவதுண்டு. கட்டாடி பூசை முறையில் பத்ததி முறையில் அல்லது பாரம்பரிய முறையில் கும்பங்களும் மடைகளும் வைக்கப்படுகின்றன. இங்கு தாலாட்டு, அகவல், காவியம் ஆகிய பாவகைகளும் உடுக்கை, சிலம்பு, அம்மானைக்காய், தவில் ஆகியவற்றின் ஒலிகளும் எழுப்பப்படுகின்றன. கொம்பு விளையாட்டிற்கும் கண்ணகையின் சீற்றத்தைத் தணிக்கும் வசந்தன் பாடலுக்கும் இங்கு தொடர்பு இருந்திருக்கிறது. கட்டாடிமார் பயபக்தியுடன் விரதமிருந்து வேண்டிய மழை பொழிந்த வரலாறுமுண்டு. இது செட்டிபாளையத்தில் நடந்ததாக வரலாறு கூறுகிறது. இவ்வாறு இயற்கையையும் வசப்படுத்தி வேண்டியதைச் சாதிக்கும் பாரம்பரிய வழிபாடு பற்றி அட்டப்பள்ளத்தைச் சேர்ந்த சி.கணபதிப்பிள்ளை என்பார் தமது மகமாரித்தேவி திவ்வியகாரணி *(1971)* எனும் நூலில் குறிப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கப்புகன் முறைமை

கப்புகன் முறைமை சிங்களத்தில் கப்புறாளை என அழைக்கப்பட்ட சொல் தமிழில் கப்புகன் என்று சொல்வர். கிழக்கில் அது மௌன இறை வணக்கத்தின்பாற்பட்டதாகும். வாயில் சீலைகட்டி வழிபாடியற்றுவர். கதிர்காமம் மண்டூர் ஆலயங்களைப் போல் காரைதீவுக் கண்ணகையம்மன் ஆலயத்தில் மட்டுமல்லாமல் பட்டிமேடு, தம்பிலுவில் போன்ற இடங்களிலும் இம் முறைமையுண்டு. இதனைத் தேசிய வழிபாட்டு முறையாகவும் கொள்வர்.

கண்ணகி வழிபாட்டு முறைமை இலங்கையில் குறிப்பாக கிழக்கில் வேரூன்ற சான்றுகளுள்ளன. சோழநாட்டிலிருந்து பாண்டிய நாட்டிற்குச் சென்ற கோவலனும் கண்ணகியும் மதுரையில் தங்காது இடைச்சேரியில் தங்கினார்கள் என்பது வரலாறு. அவர்கள் பாடுபட்டுழைக்கும் வர்க்கத்தின் சூழலிலே வாழ்ந்தமை புலனாகிறது. குன்றுதோறாடும் குமரன் போல் கழனிதோறாடும் கண்ணகியைக் குறிப்பிடலாம்.

எனவே இலங்கைக்கு கயபாகு மன்னன் கண்ணகி வழிபாட்டைக் கொணர்ந்த போதிலும் பாடுபட்டுழைக்கும் விவசாயச் சூழலை மையமாகக்கொண்ட கிழக்கிலங்கையில் அவ்வழிபாடு ஆழமாக ஊடுருவிக் காணப்பட்டதில் வியப்பில்லை. கற்புக்கரசியாம் கண்ணகியை பயபக்தியுடன் வழிபட்டுவருவது அங்குள்ள பாரம்பரிய வழிபாட்டு முறைமையின் வெற்றி எனலாம்.

### சடங்கு நிகழ்வுகள்

கண்ணகி மதுரையை எரித்தது கயவாகு மன்னன் பத்தினிக்கு விழா எடுத்தது சிங்கள மக்கள் பெரஹரா ஊர்வலம் நடாத்தி பத்தினியை வழிபடுவதெல்லாம் ஆடி மாதத்திலாகும். ஆனால் தமிழர்கள் இதனைத் தவிர்த்து வைகாசி மாதத்தில் கண்ணகிக்கு சடங்கு செய்து வருகின்றனர். வைகாசித்திங்கள் வருவேனென்று வரிசைக்கியைந்து விடைகொடுத்தாரே... என குளிர்த்திப் பாடல் கூறுகிறது.

இதில் வைகாசித் திங்கள் என்பதில் இருவேறு கருத்துக்கள் நிலவி வருகின்றன. ஒன்று வைகாசிப் பூரணையைக் குறிக்கும். மற்றயது வைகாசிப் பூரணைக்கு அடுத்து வருகின்ற திங்களைக் குறிக்கும். இவை சடங்குகளின் இறுதித் தினமாகக் கொள்ளப்படுகின்றன.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயம், காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயம், செட்டிபாளையம் கண்ணகை அம்மன் ஆலயம், தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஆலயம் போன்ற ஆலயங்களில் ஒரே நாளில் அதாவது வைகாசித் திங்களில் குளிர்த்தி பாடப்படுவது வழமையாகும். இச்சடங்குகள் வைகாசி மாதத்தில் நடப்பதால் வைகாசிப் பொங்கல் என்றும் வைகாசிச் சடங்கு என்றும் வைகாசிக் குளுத்தி என்றும் அழைக்கப்படுவதுண்டு.

### சடங்கு

சடங்கு நடைபெறும் நாட்களின் எண்ணிக்கை ஊருக்கு ஊர் வேறுபடும். சில ஊர்களில் 5 நாட்கள், சில ஊர்களில் 7 நாட்கள், இன்னும் சில ஊர்களில் 9 நாட்களும் நடைபெற்றுவருகின்றன. சடங்கின் ஆரம்பநாள் கதவு திறத்தல் என்று கூறுவர். இதனை கல்யாணக்கால் வெட்டும் சடங்கு என்றும் கூறுவர். அன்று கடல்நீர் எடுத்து வரும் வழியில் ஏலவே பார்த்து வைத்திருந்த இடத்தில் பூவரசு மரம் அல்லது வேம்பு மரக்கிளையை கத்தி பாவிக்காமல் முறித்து ஊர்வலமாக வந்து ஆலயத்தில் அம்மளுக்கு முன்பாக புடவைகள் சுற்றி நடப்படும். இது பக்தியூட்டும் நிகழ்வாக சித்திரிக்கப்பட்டுள்ளது. அதற்கு கப்புகன்மார் பூசை செய்வர். மறுநாள் மாலை 7 மணிக்கு கல்யாணக்காலுக்கும், அம்மனுக்கும் பூசை இடம்பெற்று உடுக்கை அடித்து ஊர்சுற்றுக்காவியம் பக்தர்களால் பாடப்பெறும்.

சில ஆலயங்களில் கல்யாணக்கால் வெட்டும் சடங்கு முதல் நாளில் அல்லாது பிறிதொருநாளில் நடப்பதையும் இங்கு கருத்திற்கொள்ள வேண்டும். புதன்கிழமை முதல் ஞாயிறு வரை பகலும் இரவும் பூசை நடைபெற்று உடுக்கை அடித்து ஊர்சுற்றுக்காவியம் பக்தர்களால் பாடப்பெறும். இவ் ஐந்து தினங்களிலும் பச்சைகட்டல் என்பது பாரம்பரிய நிகழ்வு இடம்பெறும். பகல் பூசையின் போது சோறும் கறியும் படைக்கப்படுதலைக் இது குறிக்கும். மதுரையில் மாதவி வீட்டில் புகுந்த கண்ணகைக்கு சமையல் செய்து கொடுக்கப்பட்டதைக் குறிக்கும். அன்று வழக்குரையில் அடைக்கலக்காதை பாடப்பெறும். இக்கதையிற் கூறப்படும் காய்கறிகளை ஒவ்வொன்றாகச் சொல்ல கட்டாடியார் அவற்றை எடுத்து அம்மன் முன் காணிக்கையாக வைப்பது இதில் முக்கிய அம்சமாகும்.

இறுதிநாள் பகலில் வழக்குரையில் கொலைக் களக்காதை பாடப்பெறும். கோயில் சோகமயமாகவிருக்கும். அன்று மதியச்சடங்கு நடைபெறமாட்டாது. மாலையில் வழக்குரைக் காதை பாடுவர். ஆலயத்தில் உரலில் நெல் இடித்து புத்தரிசி கொண்டு பொங்கல் இடம்பெறும். இறுதியில் குளிர்த்திக் காதை பாடியபின் வைகறைப் பொழுதில் திருக்குளிர்த்தி நடைபெறும். அதன்போது அவ்வவ் ஊர்களிலுள்ள மக்கள் அனைவரும் ஒன்றுகூடி வழிபடுவது இன்றும் வழக்கிலுள்ளது. எட்டாம்நாள் பொங்கல் படைத்து எட்டாம் சடங்கு இடம்பெறுவதும் மரபுரீதியானதாகும். இச்சடங்கு காலகட்டத்தில் கிராமங்களில் மஞ்சள் தட்டக்கூடாது, மாவிடிக்கக் கூடாது, புலால் உண்ணக்கூடாது, வெடி கொழுத்தக்கூடாது, திருமணங்களோ விழாக்களோ நடாத்தக்கூடாது, இப்படி பலத்த பாரம்பரிய கட்டுப்பாடுகள் உள்ளன. அவை இன்றும் பண்பாடு ரீதியாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றமை அம்மனிலுள்ள பயபக்தியைக் காட்டுகிறது எனலாம்.

### முடிவுரை

பாரம்பரிய இலக்கியங்களில் கண்ணகி வழிபாட்டிற்கென தனியிடமுண்டு. அது ஏனைய வழிபாடுகளிலிருந்து பண்பாட்டியல் ரீதியில் வேறுபட்டு நிற்பது அதன் தனித்துவத்திற்குக் காரணமாகும். இன்று சில கண்ணகை அம்மன் ஆலயங்கள் ஆகம முறைக்குட்பட்ட ஆலயங்களாக மாறிவருகின்ற போதிலும் பத்ததி முறையினைக் கைவிட தயங்குகின்றன. பஞ்சாங்கங்கள் இன்று தமிழரின் விழாக்களையும் பண்டிகைகளையும் வேறு தினங்களில் நடாத்த முற்பட்டுள்ளன. அதேபோன்று கண்ணகியம்மன் ஆலயங்களின் குளுர்த்தி சடங்குகளும் வேறு தினங்களில் நடைபெற ஆரம்பித்திருப்பது எதிர்காலத்தில் இறைநம்பிக்கையுள்ள ஆரோக்கியமான பண்பாட்டுச் சமுதாயத்தை உருவாக்குமா? என்பது ஆய்வுக்குரியது. எனவே கண்ணகி இலக்கிய விழாக்கள் பாரம்பரிய வழிபாட்டுமுறையை ஒரு சீராகத் தொடர வைப்பதில் காத்திரமான பங்களிப்பைச் செய்ய வேண்டுமென்பது எதிர்பார்ப்பாகும்.

உசாத்துணை நூல்கள்


1. கந்தையா. வீ.சீ, கண்ணகி வழக்குரை - 1968
2. இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் குன்றக்குரவை – அடி 11-22
3. முத்துத்தம்பிப்பிள்ளை.ஆ, யாழ்ப்பாண சரித்திரம் -1915
4. சிறப்புமலர், இரண்டாவது உலக இந்து மாநாடு. இலங்கை- 2003
5. மருதநிலா, வட - கிழக்கு மாகாண இலக்கிய விழா மலர் - 1996
6. மௌனகுரு .சி, பேராசிரியர், மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப் பண்பாடு - 2003
7. பாரதி P.V, பண்பாட்டு மானிடவியல் சென்னை மாணிக்க வாசகர் பதிப்பகம் -1999
8. *Kroeber, A.L, and Kiuckhohn, c ( eds ) Culture: A Critical Review of Concepts and Definitions ( Newyork : Random House)- 1952*
9. *E.B.Tylor, Primitive Culture, 2 Vols ( New york : Harper & Row) - 1958*
10. *G.H.Peris, Studies on The Press in Srilanka And South Asia ( Srilanka : International Centre for Ethnic Studies - 1997*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முதலாம் நாள்
காலை நிகழ்வுகள்

31.07.2017 திங்கட்கிழமை

காலை 07.00 மணிக்கு

**பண்பாட்டு பேரணி**

மருதமுனை அல்-மனார் பாடசாலையிலிருந்து
ஆரம்பித்து கல்முனை பிரதான வீதி வழியாக
கல்முனை பேருந்து நிலையத்தினைச் சென்றடைந்து
சம்மத் வங்கி வழியாக திரும்பி பிரதான வீதியை அடைந்து
கமு/உ வெஸ்லி உயர்தர பாடசாலை
விழா மண்டபத்தினைச் சென்றடையும்.

முதலாம் நாள்
மாலை நிகழ்வுகள்

31.07.2017 திங்கட்கிழமை
மாலை 04:00 மணிக்கு

புலவர் எம்.ஏ. கபூர் அரங்கு

தலைமை

முதன்மை விருந்தினர்

கௌரவ. ரோஹித்த போகொல்லாகம

கௌரவ விருந்தினர்கள்

சிறப்பு விருந்தினர்கள்

நிகழ்வுகள்

இரண்டாம் நாள்
மாலை நிகழ்வுகள்

01.08.2017 செவ்வாய்க்கிழமை
மாலை 03:30 மணிக்கு

பாண்டியூரான் அரங்கு

தலைமை

முதன்மை விருந்தினர்

கௌரவ விருந்தினர்கள்

சிறப்பு விருந்தினர்கள்

நிகழ்வுகள்

மூன்றாம் நாள்
மாலை நிகழ்வுகள்

02.08.2017 புதன்கிழமை
மாலை 03:30 மணிக்கு

ஏ.எஸ்.எம் பழீல் அரங்கு

தலைமை

முதன்மை விருந்தினர்

கௌரவ. வீ. எஸ் இராதாகிருஷ்ணன்

கௌரவ விருந்தினர்கள்

சிறப்பு விருந்தினர்கள்

நிகழ்வுகள்

கிழக்கு மாகாண
தமிழ் இலக்கிய விழா
2017

கமு/உ.வெஸ்லி உயர்தர பாடசாலை
கல்முனை

ஜூலை 31 மற்றும்
ஆகஸ்ட் 01,02 ஆம் திகதிகள்

அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்

முதலாம் நாள்
31.07.2017 - காலை 9.30

இரண்டாம் நாள்
01.08.2017 - காலை 9.30

மூன்றாம் நாள்
02.08.2017 - காலை 9.30



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழியாத நிலையில் அன்புமணி...



அன்புமணி அரங்கு

நாகலிங்கம் எனும் இயற்பெயர் கொண்ட அன்புமணி அவர்கள் வைரமுத்து இராசயா – தங்கப்பிள்ளை தம்பதியினருக்கு மூத்த புதல்வனாக 06.03.1935 அன்று மட்டக்களப்பு ஆரையம்பதியில் அவதரித்தார். ஆரம்பக் கல்வியை ஆரையம்பதி இ.கி.மி.பாடசாலையிலும், ஆறாம் வகுப்பிலிருந்து எஸ்.எஸ்.சி (S.S.C) வரை ஆங்கில மொழி மூலம் காத்தான்குடி மத்திய கல்லூரியிலும் பயின்று மட்டுநகர் அரசினர் கல்லூரியில் (தற்போதைய இந்துக்கல்லூரியில்) எழுதுவினைஞராக முதல் நியமனம் பெற்றார்.

மட்டக்களப்பு கல்வி அலுவலகத்திலும், அம்பாறை கல்வி அலுவலகத்திலும், களுவாஞ்சிக்குடி உதவி அரசாங்க அதிபராகவும் கடமை ஆற்றினார். மட்டக்களப்பு கச்சேரியில் தலைமையக உதவி அரசாங்க அதிபராக பணி புரிந்தும் வட கிழக்கு மாகாண ஆளுநரின் சிரேஸ்ட உதவிச் செயலாளராக திருகோணமலையில் கடமை ஆற்றியும் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

பார்வதியை (ஆசிரியை) கரம் பிடித்து 07 ஆண் பிள்ளைகளுக்கும், 01 பெண் பிள்ளைக்கும் தந்தையாக இருந்தவர்.

இவரது முதல் சிறுகதை 1953ல் “கிராம போன் காதல்” கல்கியிலும் முதல் கவிதையான “பச்சை வயல்” சுதந்திரன் பத்திரிகையிலும் பிரசுரமானது. ஓவியம், சிறுகதை, விமர்சனம், ஆய்வு நாடகம், நாவல் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டதுடன் மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்கம் உருவாக காலாகி செயலாளராகவும் தலைவராகவும் செயற்பட்டார். 1962 இலிருந்து இலங்கை வானொலியில் இவரது நாடகங்கள் உரைச் சித்திரங்கள் இடம் பெற்றன.

1962 இல் இலங்கை கலைக்கழகம் நடாத்திய நாடக எழுத்துப் போட்டியில் இவரது “திரைகடல் தீபம்” முதல் பரிசு பெற்றது. இந்து சமய கலாசார திணைக்களத்தினால் “தமிழ்மணி” ,“கலாபூசணம்”; பட்டங்களும், வடக்கு கிழக்கு மாகாண சபையால் “ஆளுநர் விருது”, மட்டக்களப்பு எழுத்தாளர் பேரவையின் “இலக்கிய சுடர்” பாராட்டு, மட்டக்களப்பு மாவட்ட கலாசாரப் பேரவை பாராட்டு, காத்தான்குடி சமாதானப் பேரவையின் “சமாதான காவலா”, ஆரையம்பதி பிரதேச கலாசார பேரவை பாராட்டு, “அமுதம்” அறிமுக விழாகுழு பாராட்டு, ஆலையடிவேம்பு இந்து இளைஞர் பேரவை பாராட்டு, மட்டக்களப்பு “தொண்டன்” சஞ்சிகையின் 40 வருட பூர்த்தி விழாவின் போது விருது, கொழும்பு தமிழ்ச்சங்கம் நடாத்திய உலகத்தமிழ் இலக்கிய மாநாட்டில் கௌரவம், மட்டக்களப்பு மறை மாவட்ட சமூகத்தொடர்பு நிலையம் நடாத்திய 46 வது உலகத் தொடர்பு தின விழாவில் கலைஞர் கௌரவம், எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் வழங்கிய தமிழியல் அதியுயர் விருது ஆகியவற்றுக்கு சொந்தக்காரரானார்.

இதுவரை ஒரு தந்தையின் கதை (நாவல்), இல்லத்தரசி (சிறுகதைத் தொகுதி), வரலாற்றுச் சுவடுகள் (சிறுகதைத் தொகுதி), ஒரு மகளின் கதை (குறுநாவல்), தமிழ் இலக்கிய அறிமுகம் ( கட்டுரை), எட்டுத் தொகை பத்துப்பாட்டு (கட்டுரை), பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் (கட்டுரை) ஆகிய நூல்கள் இவரால் வெளியிடப்பட்டுள்ளன

12.01.2014 அன்று மட்டக்களப்பு மாநிலம் சோகம் அப்பிக் கிடந்தது. வேரோடி விழுதுகள் இறங்கிக் கிளைகள் பரப்பிக் காய்த்துக் குலுங்கிய அன்புமணி எனும் பாரிய பழும் பெரும் இலக்கிய விருட்சம் சாய்ந்து விட்ட தினமே அது.

**– தொகுப்பு: செங்கதிரோன்: த. கோபாலகிருஸ்ணன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்முக ஆளுமைகளைக் கொண்டு வாழ்ந்த நற்பிட்டிமுனை பழீல்...

ஏ.எல்.எம்.பழீல் அரங்கு



அறிவும் ஆற்றலும், ஆளுமையும், பண்பும் கொண்ட முன்னாள் கல்முனை பிரதேச செயலாளர், நற்பிட்டிமுனை பெற்றெடுத்த முதலாவது நிர்வாக சேவை உத்தியோகத்தர். மட்டக்களப்பு கிழக்கு பல்கலைக்கழக விஞ்ஞான பட்டப்படிப்பை முடித்துக்கொண்டு வெளியேறிய இவர் 1986 இல் விஞ்ஞான பட்டதாரி ஆசிரியராக கல்முனை கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலையில் முதல் நியமனத்தை பெற்று அரச சேவையில் இனைணந்து கொண்டார். அதனைத் தொடர்ந்து கல்முனை சாகிரா தேசிய பாடசாலையில் தாவரவியல் ஆசிரியராக கற்பித்தார். விஞ்ஞான உயர் கல்வியைக் கற்று பல்கலைக் கழகம் செல்லத்துடிக்கும் மாணவர்கள் மத்தியில் 'பொட்டனி பழீல்' என்ற புனைப்பெயருடன் மதிப்புக்குரிய கல்விமானாக பிரகாசித்தார்.

1990 இல் நடாத்தப்பட்ட பொது நிர்வாக போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து நற்பிட்டிமுனை கிராமத்தின் முதலாவது நிர்வாகசேவை உத்தியோகத்தர் என்ற பெருமையையும் பிறப்பு மண்ணுக்கு பெற்றுக்கொடுத்தார். 1991 இல் கல்முனை உதவி அரசாங்க அதிபராக முதல் நியமனம் பெற்றார். தொடர்ந்து கல்முனை காத்தான்குடி பிரதேச செயலாளராகவும் அம்பாறைக் கச்சேரியில் சில காலம் பதில் காணி ஆனையாளராகவும் கடமை புரிந்தார்.

பிரதேசவாதம், ஊர்வாதம் மற்றும் பலதரப்பட்ட சவால்களுக்கும் மத்தியில் கல்முனை பிரதேச செயலாளராக 12 வருடங்கள் துணிச்சலுடன் இருந்து கடமையாற்றினார். இக்கால கட்டத்தில் கல்முனை மாநகரசபையின் விஷேட மாநகர ஆனையாளராகவும், கல்முனை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆனையாளராகவும் கடமை புரிந்தார். தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் இதழியல் பகுதி நேர விரிவுரையாளராகவும், ஊடகத்துறை விரிவுரையாளராகவும் கடமையாற்றினார். இப் பதவிகள் எல்லாம் அவரது ஆற்றல், அறிவுக்கு கிடைத்த அணிகலன்களாகும்.

மர்ஹூம் பழீலின் சமூகத் தொடர்பு முன்னுரிமைப்படுத்தி குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும். ஒரு பிரதேசத்தின் பொறுப்பு வாய்ந்த நிர்வாக பணிகளுடன் தன்னை மட்டுப்படுத்தி கொள்ளாது தாம் வாழ்ந்த சமூகத்துடன் தன்னை இணைத்துக்கொண்டு சமூக, கலை, கவிதை எழுத்தாளராகவும் தலை சிறந்த இலக்கியவாதியாகவும் நாடறிந்த போட்டிப் பரீட்சை நூல் வெளியீட்டாளராகவும் விளங்கினார். மாணவர்களின் எதிர்கால சவால்களுக்கும் போட்டிப் பரீட்சைகளில் தோற்றி உயர் பதவிகளைப் பெறுபவர்களுக்குமான பல நவீன தகவல்கள் அடங்கிய நூல்களை எழுதி வெளியிட்டார். இந்த வகையில் இலங்கை பொது நிர்வாக சேவை மற்றும் உயர் பதவிகள், பதவி உயர்வுகள் மற்றும் ஆசிரியர், அதிபர் பதவியுயர்வுப் போட்டிப் பரீட்சைக்கான பொது அறிவு, நுண்ணறிவு, கிரகித்தல் மற்றும் 5 ம் தர மாணவர்களுக்கான வழிகாட்டல் நூல்கள் இவரால் எழுதி வெளியிடப்பட்டது.

மர்ஹூம் பழீல் பிரதேச செயலாளராக கடமை புரிந்த இடங்களிலெல்லாம் காரியாலய உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள் கடமை ரீதியாக விடும் தவறுகளை மற்றவர்கள் அறியக்கூடிய அளவு பகிரங்கப்படுத்தாது அவர்களை தனித்தனியாக அழைத்து அவர்களது மனங்கள் பாதிக்கப்படா முறையில் ஆலோசனைகள் வழங்கி வழிநடத்துவார். அலுவலகக் கோவைகள் அவரது மேசையில் தேங்கிக் கிடந்த சரித்திரமே இல்லை. பொது மக்கள் விடயங்களில் உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்வதில் முனைப்பாக செயல்பட்டு வந்தார்.

காத்தான்குடி பிரதேச செயலாளராக கடமை புரிந்துகொண்டிருக்கும் போது 2005.12.04 ஆம் திகதி அன்று வெள்ளிக்கிழமை ஜும்மாத் தொழுகைக்காக ஆயத்தமாகிக் கொண்டிருந்த வேளை இனம் தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டினால் முஸ்லிம் சமூகத்தின் விடி வெள்ளி, கல்விச் சமூகத்தின் கலங்கரை விளக்குக் குடை சாய்ந்தது. அன்றுதான் முஸ்லிம் சமூகத்திற்கு கரி நாளாகும். கல்விச் சமூகம் கண்ணீரால் கழுவிய நாளும் அன்றைய தினமாகும்.

**- தொகுப்பு: தேசகீர்த்தி ஏ. அப்துல் கபூர், நற்பட்டிமுனை**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கவிஞன் மருதூர்வாணர்/ இசைவாணர்...



இசைவாணர் அரங்கு

கிழக்கின் மருதமுனையை பிறப்பிடமாகக் கொண்ட இவர் 1939 ம் ஆண்டு ஆவணி மாதம் 04ம் திகதி பிறந்தார். சாலிஹ் லெவ்வை அப்துல் லத்தீப் என்ற இயற் பெயரைக் கொண்ட இவர் இசைவாணர், மருதூர்வாணர் என்ற புனைப்பெயர்களில் 1960 களில் கவிதை, நாடகம், சிறுகதை, நாவல் என பல இலக்கியத்தளங்களில் பவனி வந்தவர். இலக்கியத்தை நேசித்த பெருமகன், ஒரு பன்முக ஆளுமையின் சொந்தக்காரர்.

இவர் பாடசாலைக் கல்வியை நேரடியாக கற்றவரல்லர். தரம் 04 வரை கல்வி கற்று பின் வந்த நாட்களில் கேள்வி ஞானம் மூலம் இலக்கிய வானில் நுழைந்தவர். பாடசாலைக் காலத்தில் கா.கா. என்று கத்தாதே காகம்.. என்று தொடங்கும் கவிதையை முதலில் எழுதினார். இதற்காக புலவர்மணி ஆ.மு. ஷரிப்தீன் அவர்கள் குட்டிப்புலவன் என்ற பட்டத்தை வழங்கியதாக அறியக் கிடைத்தது.

1951இல் "என் தம்பி" என்ற தனது முதலாவது கவிதைத் தொகுப்பை வெளிக் கொணர்ந்தார். பின்னர் 1956 இல் சுதந்திரனில் இவரது முதலாவது சிறுகதை வெளிவந்தது. 1961 இல் இவரது 'தெளிவு' என்ற நாவலை எழுத்தாளர் செங்கை ஆழியன் வெளியிட்டார்.

தானே முன்னின்று 'தேன்மதி' என்ற நூலகத்தை தனது இல்லத்தில் நிறுவினார். 1970 இல் 'முதலிரவு' என்ற சிறுகதை தொகுதியை வெளியிட்டதுடன் அதே வருடத்தில் 'பெருநாள் பரிசு' என்ற குறுநாவலையும் தந்தார். 'சமாதானம்' என்ற சஞ்சிகையின் தொடர்ச்சியான முறையில் 16 இதழ்களை வெளியிட்டார். ஆரம்ப நாட்களில் சூறாவளி என்ற பத்திரிகையையும் வெளியிட்டார். 1979 இல் 'சூறாவளி' என்ற அதே பெயரில் நாவல் ஒன்றை வெளியிட்டார். சூறாவளியின் தாக்கங்கள், நெசவுத் தொழில் வாழ்வியல் என்பன அதில் சித்திரிக்கப்பட்டன. புதியதோர் உலகம் செய்வோம், 'எம்.ஜீ. ஆரைப் போல்', 'படுவாங்கரைப் போடியார்' ஆகிய குறுநாவல்களும் இவரது சமாதானம் சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டது.

புதியதோர் உலகம் செய்வோம் யுத்தம் தொடர்பானது. இது பின்னர் சமாதானத்தை நோக்கியதாக விரிந்து செல்கின்றது. வடகிழக்கு மண்ணை சிதைத்த போர் விட்டுச் சென்ற தடயங்களை அது சொல்லிச் சென்றது. கொண்டை வெட்டுவான் காதலியில் இவருடைய இளமைக்காலத்தையும் தமிழ் முஸ்லிம் உறவுகளையும் வியந்து பேசுகின்றார். படுவாங்கரைப் போடியார் படைப்பில் பட்டிப்பளை, நாவலாறு, மூங்கிலாறு போன்ற இடங்களின் அழகியலைக் கோடிட்டுக் காட்டுகின்றார்.

'கலாபூஷணம்', 'தந்தை செல்வா விருது', 'ஆளுநர் விருது' என்பவற்றைப் பெற்றுக் கொண்ட இவர் நமக்குள் வாழ்ந்த ஒரு காலக் கவிஞன் அவார்.

**- தொகுப்பு: கவிஞர். எம் விஜிலி, ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் நேசித்த கவிஞர் ஜீவா ஜீவரத்னம்...



ஜீவா ஜீவரத்தினம் அரங்கு

மட்டக்களப்பு மாவட்டத்தில் தெற்கெல்லையில் பல்வகைச் சிறப்புகளும் பெற்று விளங்குவது துறைநீலாவணைக் கிராமமாகும். இங்குதான் கற்றோரும் மற்றோரும் புகழ்ந்தேற்றும் கிறிஸ்தவ குடும்பத்தில், அமரர்களான கா.காத்தமுத்து ஆசிரியருக்கும் நாகப்பன் சின்னத்தங்கத்துக்கும் புதல்வராக 1939 ஆம் ஆண்டு நவம்பர் 23 ஆம் திகதி காத்தமுத்து ஜோஜ் ஜீவரத்னம் அவர்கள் பிறந்தார்.

இவர் ஆரம்பக் கல்வியை மட்/துறைநீலாவனை மெதடிஸ்த மி'ன் தமிழ்க்கலவன் பாடசாலையில் தனது தந்தையான கா.காத்தமுத்து ஆசிரியரிடம் முறையாகக் கற்றார். உயர் கல்வியை மட்டக்களப்பு மெதடிஸ்த கல்லூரியிலும் மட்/அரசினர் மத்திய கல்லூரியிலும் (தற்போது இந்துக் கல்லூரி) ஆங்கில மொழி மூலமான கல்வியை கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையிலும் கற்றுத் தேர்ந்து ஆங்கில உதவி ஆசிரியராக நியமனம் பெற்றார்.

எழுத்துத் துறையில் ஏற்கனவே பரீட்சியம் பெற்றிருந்த ஜீவா - ஜீவரத்தினம் அவர்களுக்கு நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை நல்ல பல வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தது. யாழ் நகரிலிருந்து வெளியான விவேகி, ஆனந்தசாகரம் போன்ற மாதாந்த சஞ்சிகைகளின் உதவியாளராக இருந்து அவற்றின் வளர்ச்சிக்கு பாடுபட்டார். அமரகவிகளான நீலாவாணன், பாண்டியூரான், சண்முகம் சிவலிங்கம், கவிஞர் மு.சடாட்சரன், கலாநிதி.எம்.ஏ.நு·.மான் போன்றவர்களின் தொடர்புகளைப் பெற்றிருந்த அவருக்கு யாழ் நகரிலும் நல்ல கலைஞர்களையும் எழுத்தாளர்களையும், இலக்கிய ஆர்வலர்களையும் தனதாக்கி கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. கவிஞர் விடிவெள்ளி, அம்பிகை பாகன், அமரகவி சிலையூர் செல்வராஜன், எழுத்தாளர் டொமினிக் ஜீவா, பிரசு கர்த்தா எம்.வீ.ஆசிர்வாதம் போன்றோரின் நட்பும் கிடைத்தது.

இலக்கியப் பேரவை போன்ற ஸ்தாபனங்கள் மூலம் பல சாதனைகளைப் படைத்து துறைநீலாவணை மண்ணுக்கு பெருமை சேர்த்தார். அகில இலங்கை ரீதியில் இலக்கியப் போரவை மூலம் கவிதைப் போட்டி ஒன்றினை வெகு விமர்சையாக நடாத்தி வெற்றி கண்டார்.

1956 முதல் கவிதைகளையும் கட்டுரைகளையும் எழுதிய கவிஞர் ஜீவா ஜீவரத்னம் அவர்கள் காலத்துக்கு காலம் பல பரிசில்களையும் பாராட்டுக்களையும் பெற்றவராகவே இருந்தார். இதுவரை எழுநூற்றுக்கு மேற்பட்ட தலைப்புக்களில் கவிதைகளையும், கட்டுரைகளையும், நாடகங்களையும் எழுதியதுடன் ஐம்பதுக்கும் மேற்பட்ட கவியரங்குகளில் பங்கு கொண்டும் வானொலிக் கவியரங்குகளில் கலந்து கொண்டும் அநேக ரசிகர்களின் பாராட்டையும் பெற்றவராவார். 1967 இல் 'மானம்' கவிதை நாடகத்துக்கான சாகித்திய மண்டலப் பரிசு பெற்றமை, 1967 இல் மகாபொல புலமைப் பரிசில் கவிதைப் போட்டியில் வெற்றி பெற்றமை, 1996 இல் அகில உலக ஆசிரியர் தினக் கவிதைப் போட்டியில் முதலாமிடம் பெற்றமை போன்றவை குறிப்பிடத்தக்க முக்கியமான இவரது வெற்றிகளாகும்

'உன்னைப் போல் பிறரையும் நேசி' எனும் வேதவாக்கிற்கு இலக்கணமாய் திகழ்ந்த கவிஞர் அவர்கள் மிகவும் மென்மையான உள்ளம் கொண்டவர். அண்டி வருவோரை அன்போடு அழைத்து உபசரித்து மகிழ்ந்தவர். கோபம், பொறாமை, வஞ்சினம் துளி கூட இல்லாதவர். பாராபட்சம் இல்லாது அனைவரையும் நேசித்தவர்.

**- தொகுப்பு: காத்தமுத்து பாக்கியராஜா,** ஓய்வுநிலை நூலகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சுரம் வாய்ந்த படைப்பாளி கவிஞர். பாண்டியூரான்....



பாண்டியூரான் அரங்கு

கு.கணபதிப்பிள்ளை என்ற ஒரு நெஞ்சுரம் வாய்ந்த படைப்பாளி தனக்குச் சூடிக்கொண்ட புனைபெயரே 'பாண்டியூரான்'. பாண்டிருப்பு கிராமத்தின் பெயரை புனைபெயராக பாவித்துக் கொண்டாலும் ஊரார் கல்லெடுத்துத் துரத்தும்படி சத்தற்ற கவிதைளை அவன் இயற்றவில்லை. கிராமத்தின் பெருமைக்குக் காரணமாக அவன் கவிதைகளும் இருந்ததற்காக அவனுக்கு நன்றி கூறவேண்டும் என்று தோன்றுகின்றது. எனினும் அவர் இன்று எம்மிடையே இல்லை. கவிஞர் அக்கரை மாணிக்கம் ஒரு மேடையில் கம்பன் வீட்டு கதவுகளும் கவிபாடும் என்று கூறும் விதமாய் பாண்டியூரானின் முற்றத்துப் பலாமரமும் கவிபாடும் என்று கூறியிருந்தார். இதுவே அவரின் கவித்திறனுக்குச் சான்று.

பளபளவென்று எண்ணெய் தேய்த்து நடுவகிடு எடுத்து வார்ந்த கேசம், நடுத்தர உயரம், தொய்ந்துபோன நடுத்தர உடம்பு, வெண்ணிற மேனி. வாய்நிறைய வெற்றிலை கொதுப்பலுடன் முகம் மலரச் சிரிக்கின்ற ஒருவர். அடிக்கடி வெளியே போய் இரு விரல்களிடை சிவப்பாய் சுர்.. என்று துப்பிவிட்டு வந்து யாருடனாவது சிவப்பு வாய் திறந்து பேசிக்கொண்டிருப்பார். இடையிடையே கவிதை மழையும் மனம் நனையப் பெய்யும். பொன்னிறப் பலா இலைகள் முற்றத்தில் தூவியபடி கிடக்கும்.

1935இல் பாண்டிருப்பில் பிறந்த இவர் தனது கல்வியை கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையில் கற்றார். இதன் பின்னர் தமிழ் ஆசிரியர் உயர்திரு சரவணமுத்து அவர்களிடமும் மருதமுனை புலவர் ம.ஃறும் சரிபுதீன் ஐயா அவர்களிடமும் தமிழை முறைப்படி கற்றார். பாண்டியூரன் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியர். தமிழ் பற்றும், தமிழ் திறனும் கொண்ட கவிஞர். கிராமத்தின் மண்வாசனையை, சுரண்டல் வர்க்கத்தின் போக்கிரித்தனங்களை, தமிழ் தேசியத்தை, தொழிலாளர் பிரச்சினைகளை, வறுமையை, காதலை, ஆன்மீகத்தை, சுதந்திரத்தை என அவர் எழுதிக் குவித்தவை ஏராளம். ஒரு காலத்தில் கல்யாணப் புறோக்கராகவும், அதே காலத்தில் தெருவில் வீழ்ந்து கிடக்குமளவுக்கு குடிக்கின்ற ஒருவராகவும், பின்னர் ஜோதிடம் பார்க்கும் ஒருவராகவும், அடுக்கு மொழியில் இலக்கிய அறுசுவைகள் சேர்த்து மேடைகளில் பேசத் தெரிந்த ஒருவராகவும் இருந்தார். இவை மட்டுமின்றி ஆங்கிலத்திலும் சரளமாக உரையாடும் திறனையும் கொண்டிருந்தார்.

அவர் காணாமல் போனபின்னர் அவர் உயிராய் மதித்திருக்கக்கூடிய அவரது கவிதைகள் மழை ஒழுக்குகள் கொண்ட கோழிக் கூட்டுக்குள் ஒரு மூட்டையில் பலதும் பத்துடன் கிடந்தன. அவருக்கு நேர்ந்த பரிதாபம் போன்றே அவரது கவிதைகளுக்கும் நிகழ்ந்திருந்தது. அவரது கவிதைகளின் எண்ணிக்கை, வாழ்வில் தொட்டுக்கொண்ட பாடுபொருள்கள், அவற்றின் தரம், அவை எழுதப்பட்ட அடுத்தடுத்த திகதிகள், தமிழ் வெறி, படைப்பாளிகளிடையே பரிமாறிக்கொண்ட கவிதையாகவே எழுதப்பட்ட கடிதங்கள் போன்றவற்றைப் பார்க்கின்றபோது அவர் வாழ்க்கையில் எழுத்தை ஒரு முக்கிய கடமையாக கொண்டு வாழ்ந்திருந்தார் என்பதும், கவிதையும் தமிழுமே அவருக்கு வாழ்வில் முக்கியமாக இருந்து வந்திருக்கின்றதென்றும் கருதமுடியும். அமரர்.பாண்டியூரன் பற்றிய ஒரு முழுமையான மதிப்பீட்டைச் செய்ய எவரும் முன்வராதது மிகவும் வேதனையானது. அக்காலத்தில் அச்சம் மிகுந்த பயங்கரச் சூழலில் இவர்கள் மிக லாவகமாக நழுவியிருக்க வேண்டும்.

அமரர்.பாண்டியூரன் சுவாமி விபுலானந்த அடிகளாரிடம் பெரும் மதிப்பு வைத்திருந்தார். யாழ்நூல் பற்றி பாண்டியூரான் அவர்கள் குறிப்பிடும்போது

கவி வளம் கிடக்கும் மட்டக்
களப்பிலே கதிரோனாகப்
புவிக்கெழில் புகட்ட வந்த
பத்திரன் விபுலானந்தன்
செவிக்குண வாகும் ஞானச்
செந்தமிழ் இசையில் வல்லோன்
தவிப்பவர் நாட்டங் கண்டு
தமிழ்க் கனிச்சாறு தந்தோன்.. எனக் கூறுகின்றார். நடந்தால் கவிதை, இருந்தால் கவிதை, பசித்தால் கவிதை, நோயுற்றால் கவிதை, கரப்புக் குத்துவதற்குக் கவிதை, பாடைகட்டும் முறையை விளக்கக் கவிதை என்று அவர் வாழ்வின் கோலப் புள்ளிகள் ஒவ்வொன்றையும் எழுத்தில் கொண்டுவந்துள்ளர்.

மனத்திலே வளரும் தீயை
மடியிலே கட்டுகின்ற
சனத்திலே ஒருவன்:
என்றன் சாதியோ மனிதசாதி!
இனத்தினால் இணைந்ததாலே இகத்தினுக்கு
உற்ற இன்னல்
எனக்கு நேர்கின்றதாக
இதநோ எடுக்குதிங்கே. என்று எழுதி பெரும் கனவுகளுடன் மரித்துப்போன பாண்டியூரான் என்ற கவிஞனின் நினைவுகளும் இன்று குற்றுயிராகிவிட்டன.

**- தொகுப்பு: கலாபூஷணம் எஸ்.அரசரெத்தினம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யுவன் எம்.ஏ.கபூர் அரங்கு

# இலங்கை வானொலி முஸ்லிம் சேவைப் பகுதிக்கு முதலில் கவிதை எழுதிய கவிஞர் "யுவன்" எம்.ஏ.கபூர்

1935ம் ஆண்டு பொத்துவில் கிராமத்தில் பிறந்தார் கவிஞர் யுவன். இவரது இயற் பெயர் அப்துல் கபூர். 1960களில் எழுத்துத் துறையில் பிரகாசித்தவர்களில் மிக முக்கியமான கவிஞர்களில் இவரும் ஒருவர். கவிதை, சிறுகதை, வானொலி நாடகங்கள், கட்டுரை இப்படி கலைப்பயணம் புரிந்தவர்.

மட்டக்களப்பு மத்திய கல்லூரி மாணவனாக கல்வி கற்ற காலத்தில் "யுவன்" என்ற பெயரில் ஒரு கலை இலக்கிய சஞ்சிகை கல்லூரி மாணவர்களால் வெளியிடப்பட்டது. யுவன் சஞ்சிகைக்கு ஆசிரியராக இருந்த மாணவன் எம்.ஏ.கபூர்தான் பிற்காலத்தில் எழுத்துத் துறையில் தன் பெயரை "யுவன்" என்று சூட்டிக்கொண்டார் என்பது பரகசியம் அல்லாத இரகசியம். ஆரம்பத்தில் ஆங்கில ஆசிரியராக தொழில் புரிந்த இக்கவிஞர் பின்னர் சுகாதார திணைக்களத்தில் சிரேஸ்ட எழுதுவினைஞராக கடமையாற்றினார்.

இலங்கை வானொலி முஸ்லிம் சேவைப் பகுதிக்கு முதன் முதலில் கவிதை, நாடகம் எழுதியவர் இவரே. "அருட்கவி" என்ற பெயரில் இவர் அப்போது வானொலிக்கு எழுதிய கவிதை நாடகம் பெரும் வரவேற்பை பெற்றது. "அழாதே சிரி, தியாகத் திருமகள், வேறு சொர்க்கம் எதற்கு?, திருந்தாத இதயங்கள், கைதிக்கூண்டிலே உமர்" போன்றவை இவருக்கு புகழைத் தேடிக் கொடுத்த வானொலி கவிதை நாடகங்கள் ஆகும். மகா கவி அல்லாமா இக்பாலின் "ஸிக்குவா ஜவாபே ஸிக்குவா" கவிதைகளை தமிழில் மொழிபெயர்த்த பெருமையும் இவருக்குண்டு.

கவிஞர் யுவன் காதல் கவிதைகள், சமூக அவலங்களை சித்தரிக்கும் கவிதைகள், சமூக எழுச்சி கவிதைகள், தமிழுணர்வுக் கவிதைகள் என்று சிந்து, வெண்பா, விருத்தப்பா முதலான யாப்புகளில் அதிகளவில் கவிதைகளை படைத்தவர் 1950 காலப்பகுதிகளில் இலங்கை கவிஞர்களது களமாகவும், சங்கப்பலகையாகவும் அமைந்த சுதந்திரன் பத்திரிகை பண்ணையில் விளைந்தவர் "யுவன்" என்பது குறிப்பிடத்தக்கது.

05.04.1991ல் இறையடி சேர்ந்த கவிஞர் யுவன் 200ற்கு மேற்பட்ட கவிதைகளையும், 50நாடகங்களையும் 100ற்கு மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதியுள்ளதாக அறியமுடிகிறது. இவரது இலக்கிய படையல்களை ஒன்றுபடுத்தி நூலாக்கவேண்டிய கடமைப்பாடு எல்லா இலக்கிய அபிமானிகளுக்கும் இருக்கிறது.

**- தொகுப்பு: கலாபூஷணம் ஆசுகவி அன்புடீன்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# නැගෙනහිර පළාත් දෙමළ සාහිත්‍ය උත්සවය - 2017

නැගෙනහිර පළාත් සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව මගින් වාර්ෂික සංවිධානය කරනු ලබන දෙමළ සාහිත්‍ය උළෙල මෙවර ඉතාමත් උත්කර්ෂවත් අයුරින් අම්පාර දිස්ත්‍රික්කයේ කල්මුනේ ප්‍රාදේශිය ලේකම් කොට්ඨාසය කේන්ද්‍ර කර ගනිමින් අ/කල්මුනේ වෙස්ලි උසස් විද්‍යාලයේ දී 2017 ජුලි මස 31, අගෝස්තු මස 1,2 යන තෙදින පැවැත්වීමට කටයුතු සංවිධානය කර ඇති ගරු අධ්‍යාපන අමාත්‍ය එස් තණ්ඩායුධපානි මැතිතුමාගේ මග පෙන්වීම හා ගරු අධ්‍යාපන ලේකම් ජේ.එස්.ඩී.එම්.අසංක අබේවර්ධන මහතාගේ අධීක්ෂණය යටතේ පැවැත්වෙන මෙම උළෙල මෙවර නව මුහුණුවරක් යටතේ එළි දැක්වීමට කටයුතු සූදානම් කර ඇති

මෙම උළෙල සාහිත්‍යමය කතිකාවන්, සංස්කෘතිමය පෙරහැර මෙන් ම සංස්කෘතික අංගයන් රැසකින් සමන්විත වේ එසේම නැගෙනහිර පළාත තුළ වෙසෙන දමිළ ගත් කතුවරුන් මෙන් ම කලාවට විශේෂ මෙහෙවරක් සිදු කළ විශිෂ්ඨ කලාකරුවන් හා නව යොවුන් පරපුර නියෝජනය කරමින් මේ වන විට පළාත තුළ ක්‍රියාකාරිව සිටින යොවුන් කලාකරුවන් ඇගයීම සඳහා සම්මාන සහතික සහ මුදල් ත්‍යාග ලබා දෙමින් ඔවුන් දිරිමත් කිරීම මෙමගින් සිදු කෙරේ තව ද රාජ්‍ය සේවකයන් වෙනුවෙන් පැවැත් වූ නිර්මාණ තරගාවලියේ සම්මාන සහතික පිරි නැමීම ද මේහා සමගාමීව සිදු කෙරේ

නැගෙනහිර පළාත තුළ වෙසෙන දමිළ සහ මුස්ලිම් යන ජන කොටස් නියෝජනය කරමින් කලාවට මහඟු මෙහෙවරක් සිදු කරන කලාකරුවන් ඇගයීම වස් සංවිධානය කරනු ලබන මෙම උළෙල තුළ සිංහල සංස්කෘතික අංගයන් ද ඒ සඳහා එක් කර තිබීම මගින් බහු සංස්කෘතික අනන්‍යතාවයන් එකම වේදිකාවක දිගහැරීම ජාතින් අතර සහජීවනය වර්ධනය කිරීමට පිටුවහලක් වනු නොඅනුමානයි

නැගෙනහිර පළාත් සභාවේ ගරු ආණ්ඩුකාරතුමන්, මහ ඇමතිතුමන් ඇතුළු පාර්ලිමේන්තු නියෝජිතයන් මෙන් ම පළාත් සභා මන්ත්‍රිවරුන් රාශියක් ද මෙම උත්සවයට සහභාගී වීමට නියමිතයි එසේ ම පළාත තුළ වෙසෙන පාසල් දූදරුවන්, කලාකරුවන් ඇතුළු සාහිත්‍ය රසකාමීන් විශාල පිරිසක් ත්‍රිකුණාමලය, අම්පාර හා මඩකලපුව යන දිස්ත්‍රික්ක නියෝජනය කරමින් මේ වෙනුවෙන් සහභාගි වීමට නියමිත යි සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුවේ අධ්‍යක්ෂිකාවගේ මාර්ගෝපදේශය සහිතව සියළු ම සංස්කෘතික නිළධාරින්ගේ හා අනෙකුත් කාර්ය මණ්ඩලයේ සහයෝගය ඇතිව සංවිධානය කරනු ලබන මෙවැනි දැවැන්ත කලා උළෙලක් වෙනුවෙන් නන් අයුරින් සහය දක්වන සියළු දෙනාටම දෙපාර්තමේන්තුවේ කෘතඥතාවය පළ කර සිටිමි

# Provincial Tamil Literacy Festival - 2017

The Provincial Tamil Festival – 2017 has been organized by Department of Cultural Affairs, Eastern Province for three days in Ampara District, Kalmunai region with the support of artists, authors, art societies, literary enthusiasts, schools and people of the Ampara district. The Provincial ceremony is advised by Hon.S. Thandayuthapani, Minister of Education and guided by Mr. JSDM Asanka Abewardana, Secretary to Ministry of Education, EP.

The festival includes the following:

- Tamil Traditional procession on the first day from Maruthamunai , Al-Manar School to Kalmunai, Wesely High School to show Tamil traditional matters, cultural behaviours, etiquette features, customs and values of eastern province art, etc.
- Two days morning research sessions in the theme of "Contemporary literary attempt of East". Eight researchers submit their papers under two chairpersons.
- One day morning poetry session in an interesting theme. 10 well experienced and well known poets express their feelings.
- Tamil cultural programs – Artists from Eastern province show their talents related to Tamil literacy festival
- A special speech by Indian Writer S. Ramakrishnan, who comes from Tamil Nadu
- Eastern Province Topmost awarding – 'Viththagar' awards
- Best Eastern Province Literary books award.
- Appreciation of young artists
- Presentation to the winners of competition of creative literature for Government servants
- Releasing of 'Souvenior' of festival

This festival is organized and held at KM/Wesley High School, on 31.07.2017, 01.08.2017 and 02.08.2017.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளமார நன்றி நவில்கின்றோம்...

கிழக்கு மாகாணத்தில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களின் பண்பாடு, கலாசாரம் மற்றும் அதன் மேன்மையை எடுத்தியம்பவும், மக்களின் பண்பாட்டியல் சார் செயற்பாடுகளையும், கலைகளையும் ஆவணப்படுத்துவதையும் இத்துறையில் ஈடுபடும் கலைஞர்களை கௌரவிப்பதையும் நோக்காகக் கொண்டு கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வருடாந்தம் நடாத்தி வரும் மாகாண தமிழ் இலக்கிய விழாக்கள் வெவ்வேறு மாவட்டங்களில் நடைபெறுகின்றது. இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழும் இணைந்து சங்கமிக்கும் இவ் விழா இவ்வாண்டு (2017) அம்பாறை மாவட்டத்தில் கல்முனைப் பிரதேசத்தில் கமு/உவெஸ்லி உயர்தர கல்லூரியிலே நடைபெறுகின்றது. தமிழ் மொழியையும், கலைகளையும் செழுமைப்படுத்தும் பல நிகழ்வுகளுடன் பண்பாட்டுபேரணி, ஆய்வரங்கு, கவியரங்கு, இந்திய எழுத்தாளர் எஸ். ராமகிருஸ்ணன் அவர்களின் சிறப்பு சொற்பொழிவு உள்ளிட்ட வித்தகர் விருது, சிறந்த தமிழ் நூற்பரிசு, இளங்கலைஞர் பாராட்டு, அரச உத்தியோகத்தர்களுக்கான ஆக்க இலக்கிய போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான கௌரவிப்பு என்பனவும் விழாவை அலங்கரிக்கின்றன.

இவ் விழாவை அம்பாறை மாவட்டத்தில் நடாத்துவதற்கு அனுமதி வழங்கி, விழாவிற்கு வழிகாட்டலும், ஆலோசனையும் நல்கிய கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் கௌரவ சி.தண்டாயுதபாணி அவர்களுக்கும், ஊக்கமளித்து வழிகாட்டிய கல்வி அமைச்சின் செயலாளர் திரு.ஜே.எஸ்.டி.எம். அசங்க அபேவர்தன அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கின்றோம்.

நிகழ்வுக்கான வாழ்த்துக்களையும் ஆசிகளையும் வழங்கிய கிழக்கு மாகாண கௌரவ ஆளுநர், கௌரவ முதலமைச்சர், பிரதம செயலாளர் ஆகியோருக்கு நன்றிகள்.

சிறப்புச் சொற்பொழிவாற்ற எமது வேண்டுகோளுக்கு இணங்கி இந்தியாவிலிருந்து வருகை தந்து நிகழ்வுக்கு வலுச்சேர்த்து பெருமதியாக்கிய எழுத்தாளர் எஸ். ராமகிருஸ்ணன் அவர்களுக்கு நன்றிகள்.

பண்பாட்டுப்பேரணியை அழகுறவும், நேர்த்தியாகவும் நடாத்துவதற்கு ஒத்துழைப்பு நல்கிய வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கலை இலக்கிய மன்றங்கள், கலைஞர்கள், ஊர்திகளுக்கான அனுசரணை நல்கிய நிறுவனங்கள் பண்பாட்டு பேரணி ஒழுங்கமைப்புக் குழு அனைவருக்கும் நன்றிகள்.

ஆய்வரங்கை நேர்த்தியாக வடிவமைத்த ஆய்வரங்கக் குழு, தலைமை தாங்கி நடாத்தும் ஆய்வரங்கத் தலைவர்கள், ஆய்வாளர்கள், பேராளர்கள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோருக்கு நன்றிகள்.

கவியரங்கை செம்மையாக தலைமை தாங்கி நெறிப்படுத்திய கவியரங்க தலைவர், கவிபாடி களிப்பூட்டிய கவிஞர் பெருமக்கள் ஆகியோருக்கு நன்றிகள்.

வித்தகர் விருது, சிறந்த நூல்பரிசு, இளங்கலைஞர் பாராட்டு, அரச உத்தியோத்தருக்கான படைப்பாக்கப் போட்டி போன்றவற்றிற்கு நடுவர்களாக இருந்து நடுநிலைமை வகித்து பெறுபேறுகளை தந்துதவிய நடுவர்களுக்கு நன்றிகள்.

மாலை நிகழ்வுகளுக்கு தலைமை தாங்கியோர், பிரதம விருந்தினராகவும், கௌரவ, சிறப்பு விருந்தினர்களாக வருகை தந்து சிறப்பித்த அனைவருக்கும் மற்றும் கௌரவ கிழக்கு மாகாண அமைச்சர்கள், கௌரவ மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், கௌரவ மாகாண சபை உறுப்பினர்களுக்கும், திணைக்களத் தலைவர்கள், அனைத்து பிரதேச செயலாளர்கள், அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கலை நிகழ்ச்சியை வழங்கிய அதிபர்கள், கலைமன்றங்கள், கலைஞர்கள் ஆகியோருக்கும் நன்றிகள்.

பல்வேறு வழிகளிலும் மண்டபம் மற்றும் அலுவலக உதவிகளையும், ஆலோசனை களையும் வழங்கிய கல்முனை முஸ்லிம், மற்றும் தமிழ் பிரிவு பிரதேச செயலாளர்கள், பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்களை ஒருங்கிணைத்து விழாவிற்கு பேருதவி புரிந்த கல்முனை, திருக்கோவில், சம்மாந்துறை, அக்கரைப்பற்று வலயக் கல்வி பணிப்பாளர்கள், வலயக்கல்வி பணியக அதிகாரிகள், விழாவினை நடாத்துவதற்கான மண்டபத்தினை வழங்கியதுடன் தேவையான அனைத்து வழிகளிலும் ஒத்துழைப்புகளையும் உதவியும் வழங்கிய கமு/உவெஸ்லி உயர்தர பாடசாலை அதிபர் ஆகியோருக்கும் நன்றிகள்.

தமிழ் இலக்கிய விழா தொடர்பான ஆவண நூலை அழகுற அச்சுருவாக்கம் செய்து தந்த "வணசிங்கா" அச்சகத்தினருக்கும், விழாவை எழிலூட்டும் வகையில் ஒழுங்கமைத்த ஒழுங்கமைப்பு குழுக்கள் மற்றும் இலக்கியவிழா தொடர்பான சகல செயற்பாடுகளையும் திறம்பட ஒழுங்கமைத்து செயற்படுத்திய பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாண பணிப்பாளர், அனைத்து கலாசார உத்தியோகத்தர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**-விழாக்குழுவினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்பாட்டுக் குழு

1. திரு. எம்.எஸ். அப்துல் ஜலில் (வலயக் கல்விப் பணிப்பாளர், கல்முனை)
2. திரு. ஆர். சுகிர்தராஜன் (வலயக் கல்விப் பணிப்பாளர், திருக்கோவில்)
3. திரு ஏ.எல் எம் காஸிம் (வலயக் கல்விப் பணிப்பாளர், அக்கரைப்பற்று)
4. திரு. எம்.எஸ். சகுதுல் நஜீம் (வலயக் கல்விப் பணிப்பாளர், சம்மாந்துறை)
5. திரு. க. பாக்கியராஜா (அக்கரைப்பாக்கியன்)
6. திரு. வி.ரி.சகாதேவராஜா
7. ஜனாப். எம்.ஏ.றமீஸ்

**அனைத்து கலாசார உத்தியோகத்தர்களும்**

1. திரு. வி. குணபாலா
2. திருமதி. எம். சத்தியபாமா
3. திரு. எஸ். சிவஜோதி
4. திரு. ரீ. பிரபாகரன்
5. திரு. ஏ.எல். தௌபீக்
6. திரு ஏ.எச்.ஏ அம்ஜட்
7. திரு. ஏ.எம். தௌபீக்
8. திரு. த. மலர்ச்செல்வன்
9. திரு. ஏ. பிரபாகரன்
10. திரு. வீ. கோணேஸ்வரன்
11. திருமதி. வ. பற்பராசா
12. திரு. எம். சதாகரன்
13. திரு. எம். ஐ.எம். அஸ்ரப்
14. திரு. எஸ். சுரேஸ்குமார்
15. திரு. எம். சிவானந்தராஜா
16. திரு. எம்.ஐ.எம் ஜவாஹீர்
17. திருமதி. தர்ப்பணா ஜெயமாறன்
18. திருமதி. வளர்மதி ராஜ்
19. திரு. எஸ் ருபேசன்
20. திரு. கே.எஸ்.ஆர் சிவகுமார்
21. திரு. ரீ. சிவராம்
22. திரு. எஸ். ஏ. எம். நளீம்
23. திரு. எம். எச். எம் நியாஸ்
24. திரு. எஸ் சோமசுந்தரம்
25. திருமதி. எஸ் சுகுணன்
26. திரு. ஏ. எல் பீர் மொஹமட்
27. திருமதி. என் விக்னேஸ்வரன்
28. திரு. எ.ஃப். பஸீர்
29. திரு. க. அன்பழகன்

திருமதி இந்திராபிரியதர்சினி அனுராஜ் (பிரதம முகாமைத்துவ உதவியாளர்)

திரு. டபிள்யு. எச். சஞ்சீவ கயான் (நிதி உதவியாளர்)

மற்றும் ஏனைய பண்பாட்டலுவல்கள் திணைக்கள உத்தியோகத்தர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org